941

கலைமகள் செந்தமிழ்ச் சோலை

M. நாராயணவேலுப் பிள்ளை
G. அங்கமுத்து

இந்தியா பப்ளிஷிங் ஹவுஸ்
...மபு செட்டித் தெரு, சென்னை-1

T3
031,6 (9)
M65
139700

941/4-65

கலைமகள்

செந்தமிழ்ச் சோலை

ஒன்பதாம் வகுப்பு

MADRAS RECORD OFFICE
MADRAS

ஆசிரியர்கள் :

வித்துவான். M. நாராயணவேலுப் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர்.

G. அங்கமுத்து, B.A.,
துணை ஆசிரியர்,
கழக உயர்நிலைப்பள்ளி, இருகூர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

சௌத் இந்தியா பப்ளிஷிங் ஹவுஸ்
5, தம்பு செட்டித் தெரு, சென்னை-1.

பதிப்புரிமை] [விலை ரூ. 2

முதற்பதிப்பு—அக்டோபர், 1965

14.5 kg. D/Demy வெள்ளைக் காகிதத்தில்
அச்சிடப்பட்டது.

T3
O311,6 N65
ஆவணக்காப்பக
சென்னை-600 008.
139700

ஸ்ரீமதி பிரிண்டர்ஸ், சென்னை-2.

முன்னுரை

"கலைமகள் செந்தமிழ்ச் சோலை" என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் அரசியலார் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தையொட்டி ஒன்பதாம் வகுப்பிற்கெனத் தொகுக்கப் பெற்றதாகும்.

செய்யுட் பகுதியில் சங்க கால முதல் இக்காலம் வரை அரசாங்கத்தார் விதித்துள்ள அடிவரையறையின்படி மாணவர் தகுதிக்கு ஏற்ப செய்யுட்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

உரைநடைப் பகுதியில் இலக்கிய வானில் இணையறு மீன்களெனத் திகழ்கின்ற தமிழகத்துப் பெருமக்களின் கட்டுரைகள் அரசாங்கத்தார் விதித்துள்ள தலைப்புக்களின்படி தொகுக்கப் பெற்றுள்ளன.

செய்யுட் பகுதியிலும், உரைநடைப் பகுதியிலும் ஆசிரியர் குறிப்பு, அருஞ்சொற்பொருள், பயிற்சி வினாக்கள் முதலியவை மாணவரின் நலங்கருதிச் சேர்க்கப்பெற்றுள்ளன.

செய்யுட் பகுதியிலும், உரைநடைப் பகுதியிலும் தங்கள் செய்யுட்களையும் கட்டுரைகளையும் சேர்த்துக்கொள்ள அன்புடன் இசைவு தந்த பெருமக்கள் அனைவர்க்கும், இந்நூலை நன்முறையில் வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக. கல்வித் துறையில் பணியாற்றும் பெருமக்கள் அனைவரும் இந்நூலுக்கு ஆதரவு தந்து, எங்களை இத்துறையில் மேலும் ஊக்குவிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

தொகுப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

செய்யுள்

எண்	தலைப்பு	பக்கம்
I.	வாழ்த்து	
1.	கடவுள் வாழ்த்து	1
2.	மொழி வாழ்த்து	1
3.	நாட்டு வணக்கம்	2
II.	அறவுரை	
1.	திருக்குறள்	3
2.	ஏலாதி	8
3.	சிறு பஞ்ச மூலம்	9
4.	நாலடியார்	9
5.	சிலப்பதிகாரம்	10
III.	தொடர்நிலைச் செய்யுள்	
1.	சிலப்பதிகாரம்	11
2.	மணிமேகலை	13
3.	பெருங்கதை	16
4.	பெரிய புராணம்	19
5.	வில்லி பாரதம்	25
6.	மனோன்மணீயம்	28
7.	பாஞ்சாலி சபதம்	30
IV.	பல்சுவை	
1.	வருணனை	34
2.	சீட்டுக்கவி	35
3.	சிலேடை	36
4.	சிறு பிரபந்தம்	36
5.	வழிபாட்டுப் பாடல்கள்	37

உ ரை ந டை

எண்	தலைப்பு		பக்கம்
1.	நீதி நூல்களில் இலக்கிய நயம் —டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார், M.A., Ph. D.	...	37
2.	கம்பர் —திரு. எம். இராதாகிருஷ்ணப் பிள்ளை, B.A., B.L.	...	48
3.	ஓய்மான் நல்லியக் கோடன் —வித்துவான் திரு. ஆர். பாஸ்கரப் பிள்ளை	...	56
4.	குட்டித் திருவாசகம் —வித்துவான் திரு. எம். டி. பழனி மகாதேவன்	...	62
5.	ஐயம் அகற்றுக —திரு. வி. சுந்தரம், B.Sc., B.T.	...	66
6.	நல்ல பரிசு —பண்டித வித்துவான் தி. இராமானுசன்	...	76
7.	நினைவுக் கோயில் —திரு. G. அங்கமுத்து, B.A.	...	83
8.	சிறு சேமிப்புக்கள் வித்துவான் M. நாராயணவேலுப் பிள்ளை	...	98
9.	சிதம்பரனார் —டாக்டர் R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L.	...	109
10.	மனையியல் —டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ், M.Sc., M.A., Ph.D.	...	116

11. ஐக்கிய நாடுகள் சபை ... 125
—திரு. K. V. குப்புசாமி, B.A.,B.T.

12. நாட்குறிப்புகளிற் சில ... 134
—திரு. ர. தேசிகப்பிள்ளை, B.A.,B.L.

13. ஓவியக்கலை ... 143
—டாக்டர் மா. இராசமாணிக்கனர்,
M.A.,L.T.,M.O.L.,Ph.D.

14. அன்னைக்கு ... 153
—டாக்டர் மு. வரதராசனர், M.A., M.O.L., Ph.D.

15. வனவுயிர் ... 159
—வித்துவான் திரு. எம். நாராயணவேலுப் பிள்ளை

16. ஐந்தாண்டுத் திட்டங்களின்
நோக்கங்களும் பயன்களும் ... 165
—திரு. A. நடராஜன் B.A. (Hons.)

17. வீரர்களும் வீரச்செயல்களும் ... 176
திரு. G. அங்கமுத்து, B.A.

செய்யுட் பகுதி—குறிப்புரை ... 183

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

தேசிய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது ;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது.
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன ; நின் புகழைப்
[பாடுகின்றன ;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி !

செய்யுட் பகுதி

I வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

திருவருட்பா

எத்துணையும் பேதமுறு தெவ்வுயிருந்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ.

—இராமலிங்க அடிகளார்.

2. தமிழ் மொழி வாழ்த்து

மனோன்மணீயம்

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—பேராசிரியர். சுந்தரம் பிள்ளை.

3. நாட்டு வாழ்த்து

செந்தமிழ் நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. 1

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. 2

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

II அறவுரை

1. திருக்குறள்

கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 1

வான் சிறப்பு

விசும்பில் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 2

நீத்தார் பெருமை

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3

அறன் வலியுறுத்தல்

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு? 4

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 5

இல்வாழ்க்கை

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்? 6

வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். 7

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. 8

புதல்வரைப் பெறுதல்

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 9

அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 10

விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 11

இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 12

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 13

செய்ந்நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 14

நடுவு நிலைமை

கெடுவல்யான் என்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீ இ அல்ல செயின். 15

அடக்கமுடைமை

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. 16

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 17

பொறை உடைமை

ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 18

அழுக்காருமை

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 19

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 20

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. 21

ஒப்புரவறிதல்

ஒப்புரவி னுல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 22

ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 23

அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி. 24

புகழ்

ஒன்ரு உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பதொன் றில். 25

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெருஅ விடின். 26

புலால் மறுத்தல்

தன்னுான் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் ? 27

தவம்

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 28

கூடா ஒழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 29

வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 30

வெகுளாமை

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 31

இன்னா செய்யாமை

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்
நோயின்மை வேண்டு பவர். [செய்யார் 32

நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 33

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 34

மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 35

கல்லாமை

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 36

ஊழ்

நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லற் படுவ தெவன்? 37

இறை மாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 38

கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 39

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 40

கல்லாமை

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றுரோ டேனை யவர். 41

கேள்வி

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. 42

அறிவுடைமை

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 43

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 44

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 45

தெரிந்து செயல்வகை

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 46

நன்றுற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர் 47
பண்பறிந் தாற்றுக் கடை.

வலியறிதல்

நுனிக்கொம்பர் ஏறினர் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும். 48

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை. 49

காலம் அறிதல்

அருவினை என்ப உளவோ? கருவியால்
காலம் அறிந்து செயின். 50

2. ஏலாதி

தாயைப் போன்ற தன்மையான்

நிறையுடைமை நீர்மை உடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண்-மறை
[யுடைமை
வேயன்ன தோளாய்! இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்னன் என்னத் தகும். 1

பெரியாற் கியைந்தவை.

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனை
செல்லான் சிறியார் இனஞ்சேரான்—சொல்லும் [மேல்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை. 2

விண்ணோர்க்கு வேந்தன் ஆவான்

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையான் உள்ளனவும் விட்டுரையான்-
[எய்யுரையான்

கூந்தன் மயில்அன்னுய்! குழீஇயவான் விண்ணேர்க்கு
வேந்தனும் இவ்வுலகம் விட்டு.

—கணி மேதாவியார்.

3. சிறு பஞ்ச மூலம்

பொய்வாய்

இம்மை நலனழிக்கும் எச்சங் குறைபடுக்கும்
அம்மை யருநரகத் தாழ்விக்கும்—மெய்ம்மை
அறந்தேயும் பின்னு மலர்மகளை நீக்கும்
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய். 1

இறைமாட்சி

வார்சான்ற கூந்தல்! வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல்
ஓவா துரைக்கும் உலகு. 2

—காரியாசான்.

4. நாலடியார்

கல்வி

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றுல்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றுல்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. 1

ஒழுக்கமுடைமை

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான். 2

அறிவுடைமை

கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று. 3

—சமண முனிவர்கள்.

5. சிலப்பதிகாரம்

வரந்தரு காதை

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை யஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்ம்மின், தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை யஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்.

—இளங்கோவடிகள்.

III தொடர் நிலைச் செய்யுட் பகுதி

1. சிலப்பதிகாரம்

அடைக்கலக் காதை

பத்தினி யொருத்தி படிற்றுரை எய்த
மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
என்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென
நன்னெடும் பூதம் நல்கா தாகி
நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை
ஒழிகநின் கருத்தென உயிர்முன் புடைப்ப
அழிதரும் உள்ளத் தவளொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்
இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பால நீயென வினவக்
கோவலன் கூறுமோர் குறுமகன் தன்னால்
காவல் வேந்தன் கடிநகர் தன்னில்
நாறைங் கூந்தல் நடுங்குதுய ரெய்தக்
கூறைகோட் பட்டுக் கோட்டுமா ஊரவும்
அணித்தகு புரிகுழல் ஆயிழை தன்னொடும்
பிணிப்பறுத் தோர்தம் பெற்றி யெய்தவும்

மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி யறவோன் தன்முன்
மணிமே கலையை மாதவி யளிப்பவும்
நனவு போல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிதீங் குறுமென
அறத்துறை மாக்கட் கல்ல திந்தப்
புறச்சிறை யிருக்கை பொருந்தா தாகலின்
அரைசர் பின்னோர் அகநகர் மருங்கினின்
உரையிற் கொள்வரிங் கொழிகநின் இருப்புக்
காதலி தன்னோடு கதிர்செல் வதன்முன்
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியும் மாமறை முதல்வனும்
கோவலன் தனக்குக் கூறுங் காலை
அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள் மாதரி என்போள்
காவுந்தி ஐயையைக் கண்டடி தொழலும்
ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்றென எண்ணின ளாகி
மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கில் தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்

மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கிங்கு
என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தநா டென்னும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ
தவத்தோர் அடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருமது கேளாய்.

—இளங்கோ வடிகள்.

2. மணிமேகலை

மணிபல்லவத்துத் துயருற்ற காதை

ஈங்கிவள் இன்னணம் ஆக இருங்கடல்
வாங்குதிரை உடுத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீர் அடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமரம் உருட்டும் திரையுலாப் பரப்பின்

ஞாழல் ஓங்கிய தாழ்கண் ணசும்பின்
ஆம்பலும் குவளையும் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுண மலர்ந்த குண்டுநீர் இலஞ்சி
முடக்கால் புன்னையும் மடற்பூந் தாழையும்
வெயில்வர வொழித்த பயில்பூம் பந்தர்
அறல்விளங்கு நிலாமணல் நறுமலர்ப் பள்ளித்
துஞ்சுதுயில் எழூஉம் அஞ்சில் ஓதி
காதல் சுற்றம் மறந்து கடைகொள
வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று,
பண்டறி கிளையொடு பதியுங் காணாள்.
கண்டறி யாதன கண்ணிற் காணா,
நீல மாக்கடல் நெட்டிடை அன்றியும்
காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப,
''உவவன மருங்கினில் ஓரிடங் கொல்லிது !
சுதமதி! ஒளித்தாய்; துயரஞ் செய்தனை;
நனவோ கனவோ என்பதை அறியேன்;
மனம்நடுக் குறூஉம்! மாற்றம் தாராய்;
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும்;
எல்வளை ! வாராய்; விட்டகன் றனையோ ?
விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சஞ் செய்தனள் கொல்லோ ? அறியேன் !
ஒருதனி அஞ்சுவென் திருவே ! வா,'' எனத்
திரைதவழ் பறவையும், விரிசிறைப் பறவையும்,
எழூந்துவீழ் சில்லையும், ஒடுங்குசிறை முழூவலும்,
அன்னச் சேவல் அரசன் ஆகப்
பன்னிறப் புள்ளினம் பரந்தொருங் கீண்டிப்
பாசறை மன்னர் பாடி போல,
வீசுநீர்ப் பரப்பின் எதிரெதிர் இருக்கும்
துறையும், துறைசூழ் நெடுமணற் குன்றமும்,
யாங்கணும் திரிவோள், பாங்கினங் காணாள்,

குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
அரற்றினள் கூஉய் அழுதனள் ஏங்கி,
வீழ்துயர் எய்திய விழுமக் கிளவியில்
தாழ்துயர் உறுவோள், தந்தையை உள்ளி,
''எம்மிதிற் படுத்தும் வெவ்வினை உருப்பக்
கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்(து)
ஐயா வோ!'' என் றழுவோள் முன்னர்,
விரிந்திலங் கவிரொளி சிறந்து, கதிர்பரப்பி
உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்
திசைதொறும் ஒன்பான் முழநிலம் அகன்று,
விதிமாண் ஆடியின் வட்டங் குயின்று,
பதும சதுரம் மீமிசை விளங்கி,
அறவோற் கமைந்த ஆசனம் என்றே
நறுமலர் அல்லது பிறமரம் சொரியாது,
பறவையும் முதிர்சிறை பாங்குசென் றதிராது,
தேவர்கோன் இட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி அறத்தகை ஆசனம்
கீழ்நில மருங்கின் நாகநா டாளும்
இருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி,
''எமதீது'' என்றே எடுக்கல் ஆற்றார்;
தமபெரும் பற்று நீங்கலும் நீங்கார்,
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்
''இருஞ்செரு வொழிமின்; எமதீது'' என்றே
பெருந்தவ முனிவன் இருந்தறம் உரைக்கும்
பொருவறு சிறப்பிற் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை தோன்றிய தாங்கென்.

—சித்தலைச் சாத்தனார்.

3. பெருங்கதை

நருமதை கடந்தது

எய்தி யிகந்த வியற்றமை யிரும்பிடி
கொய்பூங் குறிஞ்சிக் கொழுநிலங் கைவிட்
டைந்நான் கெல்லையொ டாறைந் தகன்றபின்

(நருமதை வருணனை)

மதிய முரைஞ்சு மால்வரைச் சென்னிப்
பொதியவிழ் பூமரம் பொதுளிய சோலை
அகலத் தெல்லையு மாழ்ச்சிய தந்தமும்
உயர்பி னேக்கமு முணர்த்தற் காகா
விஞ்சையம் பெருமலை நெஞ்சகம் பிளந்து
கல்லுட் பிறந்த கழுவாக் கதிர்மணி
மண்ணுட் பிறந்த மாசறு பசும்பொன்
வேயுட் பிறந்த வாய்கதிர் முத்தம்
வெதிரிற் பிறந்த பொதியவி ழருநெல்
மருப்பினுட் பிறந்த மண்ணு முத்தம்
வரையிற் பிறந்த வயிரமொடு வரன்றி
நுரையுட் பிறந்த நொ...லாடை
முடந்தாட் பலவின் குடம்புரை யமிழ்தமும்
நெடுந்தாண் மாவி னெய்படு கனியும்
கருந்தாள் வாழைப் பெருங்குலைப் பழனும்
பெருந்தேன் தொடையலும் விரைந்துகொண் டளைஇ
நறவஞ் சாரற் குறவர் பரீஇய
ஐவன நெல்லுங் கைவளர் கரும்பும்
கருந்தினைக் குரலும் பெருந்தினைப் பிறங்கலும்
பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்
நாகத் தல்லியு மேலத் திணரும்
கட்சா லேகமு முட்கா ழகிலும்

குங்குமத் தாதும் பைங்கறிப் பழனும்
கிழங்கு மஞ்சளுங் கொழுங்காற் றகரமும்
கடுப்படு கனியுங் காழ்த்திப் பிலியும்
சிற்றிலை நெல்லிச் சிறுகாய்த் துணரும்
அரக்கின் கோலொ டன்னவை பிறவும்
ஒருப்படுத் தொழியாது விருப்பி னேந்தி
மலைவயிற் பிறந்த மாண்புறு பெருங்கலம்
நிலைவயின் வாழ்நர்க்குத் தலைவயி னுய்க்கும்
பகர்விலை மாந்தரி னுகர்பொரு ளடக்கிப்
பன்மலைப் பிறந்த தண்ணிய வருவிய
அமலை யருங்கல மடக்குபு தழீஇத்
தன்னிற் கூட்டிய தானைச் செல்வமொ
டிருகரை மருங்கினும் பெருகுபு தழீஇ

(மரங்கள்)

அணிக்குருக் கத்தியு மதிரலு மனுக்கி
மணிச்சையு மயிலையு மௌவலு மயக்கி
ஞாழலும் புன்னையும் வீழ நூக்கிக்
குருந்துங் கொன்றையும் வருந்த வணக்கித்
தடவும் பிடவுந் தாழச் சாய்த்து
முளவு முருக்கு முருங்க வொற்றி
மாவும் மருதும் வேரறப் புய்த்துச்
சேவுங் குரவுஞ் சினைபிளந் தலைந்து
நறையு நாகமு முறைநடு முருக்கி
வழையும் வாழையுங் கழையுங் கால்கீண்
டாலு மரசுங் காலொடு துளக்கிப்
புன்கு நாவலும் புரள வெற்றிக்
கொங்கார் கோடலொடு கொய்யல் குழைஇ
அனிச்சமு மசோகமு மடர வலைத்துப்
பனிச்சையும் பயினும் பறியப் பாய்ந்து

வள்ளியு மரலுந் தன்வழி வணக்கிப்

(விலங்கு முதலியன)

புள்ளி மானும் புல்வாய்த் தொகுதியும்
ஆமா வினமுந் தாமா ரேடி
இடைப்புனற் பட்டவை புடைப்புனற் கிவரப்
பொறிமயிற் பேடை போத்தொடு புலம்ப
எறிமயி ரேனமொ டெண்கின மிரியக்
குரங்கு முசுவு மரந்தொறும் வாவச்
சுரும்புந் தும்பியும் விரும்புபு விரைய
அகத்துறை பல்லுயி ரச்ச மெய்தப்
புறத்துறை பல்லுயிர் புகன்றுவிளை யாடப்
படிவப் பள்ளியொடு பாக்கங் கவர்ந்து
குடிகெழு வளநாடு கொள்ளை கொண்டு
கவ்வை யோதங் கால்கிளர்ந் துராஅய்ப்
பௌவம் புகூஉம் படர்ச்சித் தாகிக்
கருங்காற் குருகுங் கம்புளுங் கழுமிப்
பெரும்பூட் பூணியும் பேழ்வாய்க் கொக்கும்
குளிவையும் புதாவுந் தெளிகயக் கோழியும்
அன்றிலு நாரையுந் துன்றுபு கெழீஇ
வாளையும் வராலு நாளிரை யாக
அயிரையும் பிறவு மல்கிரை யமைத்துப்
பறவைப் பார்ப்பினஞ் சிறுமீன் செகுத்து
வார்மண லடைகரைப் பாவர்லொடு வதியும்
சும்மை யருஅத் தன்மைத் தாகிக்
கயம்பல கெழீஇ யியங்குதுறை சில்கிப்
பெருமத யானையொடு பிடியினம் பிளிற்றும்
நருமதைப் பேர்யாறு நண்ணிய பொழுதில்

(வயந்தகன் வழிகாட்டல்)

தலைப்பெருந் தண்புன ருன்வந் தன்றென

நிலைப்பரு நீணீர் நீத்திற் றாகி
மாக்கடல் வரைப்பின் மன்னுயிர்க் கியன்ற
ஆக்கமுங் கேடுஞ் சாற்றிய தொப்ப
வளமலர்ப் பைந்தார் வயந்தக னிழிதந்
திளமணற் படாஅ தியங்குதுறை நோக்கிக்
கானிலை கொள்வழித் தானிலை காட்ட

(உதயணன் செயல்)

அரிமதர் மழைக்க ணனந்த ரெய்திய
திருமா மேனியைத் திண்ணிதிற் றழீஇச்
செல்விசை கதுமெனச் சுருக்கி மெல்லென
வரையே றரிமாப் போல மற்றதன்
கரையே றினனாற் கார்நீர் கடந்தென்.

—கொங்கு வேளிர்.

4. பெரிய புராணம்

இளையான்குடி மாறநாயனார் புராணம்

இளையான்குடிப்பதி மாறனார்

அம்பொன் நீடிய அம்ப லத்தினில்
ஆடு வாரடி சூடுவார்
தம்பி ரானடி மைத்தி றத்துயர்
சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையின் நீடு வேளாண்
நற்கு லஞ்செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னாரிளை
யான்கு டிப்பதி மாறனார். 1

மாறனாரின் சிவபக்தியும் அடியார் தொண்டும்

ஏரின் மல்கு வளத்தி னால்வரும்
எல்லை யில்லதோர் செல்வமும்

நீரின் மல்கிய வேணி யாரடி
யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை
பெற்ற நீடு பயன்கொள்வார். 2

ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்
அன்பர் என்பதோர் தன்மையான்
நேர வந்தவர் யாவ ராயினும்
நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப்புலத்(து)
ஈர மென்மது ரப்ப தம்பரி
வெய்த முன்னுரை செய்தபின்; 3

கொண்டு வந்து மனைப்பு குந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலுவி தத்தில் ஆறு
சுவைத் திறத்தன ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையின்
அமுது செய்ய அளித்துளார். 4

செல்வ நிலையும் வறுமையின் வரவும்

ஆளு நாயகர் அன்ப ரானவர்
அளவி லாருளம் மகிழவே
நாளு நாளு நிறைந்து வந்து
நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்ப ரப்பு
நெருங்கு செல்வம் நிலாவியெண்
டோளி னாரள கைக்கி ருத்திய
தோழ னாரென வாழுநாள். 5

செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வ தன்றியும் மெய்யினல்
அல்லல் நல்குர வான போதினும்
வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாடொறு மாறிவந்(து)
ஒல்லை யில்வறு மைப்ப தம்புக
உன்னினர் தில்லை மன்னினர். 6

திருப்பணிக் கொள்கையில் முதிர்ச்சி

இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும்
எம்பி ரானினை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல்
இன்றி உள்ளன மாறியுந்
தன்னை மாறி யிறுக்க வுள்ள
கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண்
முதிர்ந்த கொள்கைய ராயினர். 7

இறைவன் வெளிப்படல்

மற்ற வன்செயல் இன்ன தன்மைய
தாக மாலய னுனவக்
கொற்ற ஏனமும் அன்ன முந்தெரி
யாத கொள்கைய ராயினர்
பெற்ற மூர்வது மின்றி நீடிய
பேதை யாளுட. னின்றியோர்
நற்ற வத்தவர் வேட மேகொடு
ஞால முய்ந்திட நண்ணினர். 8

விருந்தெதிர் கொள்ளுதல்

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். 9

மாறனார் மனைவியை நோக்கிக் கூறியவை

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்(து)
ஆர இன்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்என்று, 10

நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென. 11

மனைவியார் கூறிய மாற்றம்

மாது கூறுவாள் மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரிலை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று. 12

செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லர் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்(று)
அல்ல தொன்றறி யேனென் றயர்வுற. 13

கேட்டவர் வயலிடம் நோக்கிச் செல்லல்

மற்ற மாற்ற மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வ மெனப்பெரி துண்மகிழ்ந்(து)
உற்ற காதலி னாலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். 14

இருளில் மாறனார் செல்லுதல்

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்(து)
அருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்(டு)
உருகு கின்றது போன்ற துலகெலாம். 15

எண்ணு மிவ்வுல கத்தவர் யாவருந்
துண்ணெ னும்படி தோன்றிமுன் றேய்ந்திடில்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து, 16

உள்ள மன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினர்
வள்ள லார்இளை யான்குடி மாறனர். 17

நெல்முளையுடன் மீளுதல்

காலி னல்தட விச்சென்று கைகளாற்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். 18

திருவமுது அமைத்தல்

வந்தபின் மனைவி யாரும் வாய்த்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரிற் சேற்றினை யலம்பி யூற்றி
வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை என்னமேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து
வீழ்த்தார். 19

முறித்தவை அடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன்
கொள்ள
வறுத்தபின் னரிசி யாக்கி வாக்கிய வுலையிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி என்செய் கோமென் றிறைஞ்சினர்
கணவ னுரை. 20

வழிவரு மிளைப்பி னோடும் வருத்திய பசியி னலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினிற் பொலிந்து
சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு
நல்க. 21

மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினாற் குறையை நேர்ந்து திருவமுது அமைத்து
நின்று. 22

வந்தவர் துயிலைப் போக்குதல்

கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
இணையிலா தவரை ஈண்ட அமுதுசெய் விப்போம்
என்ன
உணர்வினால் உணர வொண்ணா ஒருவரை உணர்த்த
வேண்டி
அணையமுன் சென்று நின்றங்(கு) அவர்துயில் அகற்ற
லுற்றார். 23

சோதியாய்த் தோன்றல்

"அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட அமுதுசெய் தருள்க"
வென்று
தொழும்பனார் உரைத்த போதிற் சோதியா யெழுந்து
தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து
நின்றார். 24

இறைவன் அருள் புரிதல்

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த்
தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை
நோக்கி. 25

அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரு முலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருப்பீ ராமென் றருள் செய்தான் எவர்க்கு
மிக்கான். 26

—சேக்கிழார்.

5. வில்லிபுத்தூரார் பாரதம்

வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம்

துரியோதனன் கண்ணனை அழைக்கத் தானே செல்லுதல்

தேயமெங் கெங்குஞ் செங்கோல் செலுத்துமத் திகிரி
வேந்தர்
ஆயவர் தம்மைக் கூட்ட அடைவினிற் றூது போக்கிக்
காயமும் உயிரு மாகிப் பொருடொறுங் கலந்து நின்ற
மாயவன் றன்னைக் கூட்ட வளர்மதிற் றுவரை
சேர்ந்தான். 1

துவாரகாபுரிக் கொடிகளின் காட்சி

ஈண்டுநீ வரினும் எங்கள் எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணை யாக
மாட்டான்
மீண்டுபோ கென்றென் றந்த வியன்மதில் குடுமிதோறுங்
காண்டகு பதாகை ஆடை கைகளால் தடுப்ப
போன்ற. 2

கண்ணன் அப்போது பள்ளி கொண்டிருத்தல்

வந்தமை யறிந்து கொற்ற வாயிலோர் தம்மை நோக்கி
அந்தன்மா மதலை வந்தால் அறிவியா தழைமின் என்று
சந்திரன் ஒடுங்கி நிற்பத் தபனனே சரிக்கு மாறு
பந்தனை யிலாதான் யோகத் துயில்வரப் பள்ளி
கொண்டான். 3

துரியோதனன் சென்று தலைப்பக்கமாக வுள்ள இருக்கையைச் சேர்தல்

பொற்புடைப் புனிதன் கோயிற் புறத்தினில் அனிகநிற்பச்
சற்பவெம் பதாகை வேந்தன் தடையறத்
தனிச்சென் றெய்தி
உற்பல வண்ணன் பள்ளி யுணர்தரு காறும் இட்ட
சிற்பவண் தவிசி னேறித் திருமுடிப் பக்கஞ்
சேர்ந்தான். 4

திருவடிப்பக்கமாக இருந்த அருச்சுனனைக் கண்ணன் முந்துறக் காண்டல்

வந்திலன் விசய னென்று வான்றுயில் புரிந்த
அண்ணல்
சிந்தனை செய்யும் வேளைச் சிந்தையிற் கடிய தேரோன்
பந்தனை யறுக்கும் பாத பங்கயம் பணிந்து நிற்ப
முந்துற விழித்து நோக்கி முகமலர்ந் தருள்செய்
தானே. 5

அருச்சுனன் துரியோதனனது வருகையை அறிவிக்கக் கண்ணன் முகமன் கூறுதல்

நின்றவன் இருந்த வேந்தன் வரவினை நிகழ்த்த நேமிப்
பொன்றிகழ் படையோன் அந்தப் பொய்த்துயிற்
பாயல் நீங்கி
மன்றலந் தொடையல் மார்பா ! வரவெமக் குரைசெ
யாதென் ?
என்றுரம் நெருங்கப் புல்லி யின்சொலால் உவகை
செய்தான். 6

இருவரும் வந்த காரணத்தைத் தெரிவித்தல்

இருவரும் வந்த வாறென் இயம்புதி ரென்று வாச
மருவிரி துளவ மாலை மரகத வண்ணன் கேட்பச்
செருவினீ யெமக்கு வெம்போர் செய்துணை யாக
வேண்டும்
பொருவிலோய் ! என்று கொண்டவ் விருவரும்
புகன்ற காலை. 7

கண்ணன் தான் பாண்டவர்க்கே சகாயம் செய்ய வேண்டும் என்றல்

உற்றமர் உதவி செய்வான் உதிட்டிரன் தனக்கு
முன்னே
சொற்றனம் ஆங்கண் நீங்குந் துயிலுணர் பொழுதத்
தின்று
விற்றிறல் விசயன் முந்த விழிக்கிலக் காளுன் என்று
பற்றறத் துணிந்து சொன்னுன் பாண்டவர் சகாய
னுனுன். 8

துரியன் கண்ணனிடம் ஒரு வரம் வேண்டல்

முடைகமழ் முல்லை மாலை முடியவன் றன்னைப் போரில்
படையெடா(து) ஒழிதி என்று பன்னகத் துவசன்
வேண்ட
நெடியமா முகிலு நேர்ந்து நினக்கினி விசய போரில்
அடுபடை யின்றிச் செய்யும் ஆண்மையென் அறைதி
யென்ருன். 9

அருச்சுனனது மாற்றம்

செருமலி யாழி யங்கைச் செழுஞ்சுடர் நின்றென்
றேரிற்
பொருபரி தூண்டின் இந்தப் பூதலத் தரச ரொன்ருே
வெருவரு மியக்கர் விண்ணேர் விஞ்சைய ரெனினு
மென்கை
வரிசிலை குழைய வாங்கி மணித்தலை துமிப்ப
னென்ருன். 10

கண்ணன் தான் படையெடுப்பதில்லை எனத் துரியனுக்கு உறுதி கூறுதல்

அடர்சிலை விசய னிவ்வா றிசைத்தலும் அமலன்
வஞ்சப்
படஅர வுயர்த்த வென்றிப் பார்த்திவன் றன்னை நோக்கி
நடையுடைப் புரவித் திண்டேர் நானிவற்(கு) ஊர்வ
தன்றி
மிடைபடை யேவி நும்மோ டமர்செயேன் வேந்த
வென்ருன். 11

கண்ணன் தன்னை ஒழிய மற்றவரை யெல்லாம் துணையாகக் கொள்ளச் சொல்லுதல்

எம்மையே யொழிய வுள்ள யாதவ குலத்து
ளோர்கள்
தம்மையும் எம்முன் ளுன தாலகே துவையுஞ் சேரச்
செம்மையோ டுதவி யாகக் கொண்டுநீ செல்க வென்று
மும்மையு முணர்ந்த நாதன் முன்னுறப் பின்னுஞ்
சொன்ளுன். 12

தூரியன் பலராமனைக் காண்டல்

கிருதவன் மாவக் குரோணி கிளர்படை யோடு
நின்பால்
வருவனென் றுரைத்து வேண்டு மதுரவாய் மைகள் கூறி
மருது போழ்ந்திட்ட செங்கண் மாயவன் விடுப்ப
வேகிக்
கருதலன் வினய மொன்றுங் கண்ணன்முன் னோனைக்
கண்டான். 13

தூரியன் பலராமனைப் போர்த்துணையாக வருமாறு அழைத்தல்

கண்ணனங் கருளிச் செய்த கட்டுரைப் படியே சங்க
வண்ணனுக் கிளவல் சொன்ன மாற்றமும் அரசன்
சாற்றி
எண்ணருந் தொகைகொள் சேனை யாதவ குமர ரோடே
அண்ணலே வருகென் றோதி அத்தினு புரிபுக்
கானே. 14

அருச்சுனனும் கண்ணனும் தருமபுத்திரனிடம் செல்லுதல்

கூறிய வேக நாகக் கொடியவன் அகன்ற பின்னர்த்
தேறிய விசய னேடுஞ் செழும்புனல் துவரை நீங்கி
ஆறிரு நாமத் தோனும் ஐயிரு நாமத் தோனும்
ஊறிய கருணை நெஞ்சின் உதிட்டிரன் இருக்கை
புக்கார். 15

—வில்லிபுத்தூரார்

6. மனோன்மணீயம்

நாஞ்சில் நாட்டு வளம்

வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன் றுளது; அதன்
அந்தமில் பெருவள மறியார் யாரே?
மருதமு நெய்தலு மயங்கியங் கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும்.

மழலைவண் டானம் புலர்மீன் கவர,
ஓம்புபு நுளைச்சிய ரெறிகுழை தேன்பொழி
புன்னைநுண் தாதாற் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருந் திருஞ்சிறை புலர்த்தும்
அலைகடற் காக்கைக் கலக்கண் விளக்கும்.
கேதகை மலர்நிழ லினமெனக் கருதித்
தாராத் தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடுங் கோங்கலர்த் தாதே.
வால்வளை சூலுளைந் தீன்றவெண் முத்தம்
ஓதிமக் குடம்பையென் றுன்னுபு காலாற்
பருந்தினங் கவர்ந்துசென் றடம்பிடைப் புதைக்கும்.
கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தற் பூந்தளிர் குளிர
மேய்ந்தகல் காரா தீம்பால் துளிக்கும்.
அலமுகந் தாக்குழி யலமரு மாமை
நுளைச்சியர் கணவரோ டிழைத்திடு மூடலில்
வழித்தெறி குங்குமச் சேற்றிடை யொளிக்கும்.
பூஞ்சினை மருதிடை வாழ்ந்திடும் அன்றில்
நளிமீன் கோட்பறை விளிகேட் டுறங்கா.
வேயென வளர்ந்த சாய்குலைச் சாலியில்
உப்பார் பஃறி யொருநிரை பிணிப்பர்.
இப்பெருந் தேயத் தெங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறு.
கொண்மூ என்னுங் கொள்கலங் கொண்ட
அமிழ்தினை யவ்வயிற் கவிழ்த்தபின் செல்வுழி
வடியும் நீரேநம் மிடிதீர் சாரல்.
நன்னீர்ப் பெருக்கும் முந்நீர் நீத்தமும்
எய்யா தென்றும் எதிர்த்திடும் பிணக்கில்
நடுக்கடல் நன்னீர் சுவைத்திடு மொருகால்
மரக்கலம் வந்திடும் வயற்கரை யொருகால்

வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம்
ஓமென வோவிறந் தொலிக்கப் பிரணவ
நாதமே தொனிக்குமந் நாட்டிடை யொருசார்
நறுமலர்க் குவளையும் நானிறத் திரணமும்
படர்தரும் பழனக் கம்பளம் பரப்பித்
தாமரைத் தூமுகை தூமமில் விளக்கா,
நிலவொளி முத்தும் கவடியும் பணமா,
அலவன் பலவிர லாலாய்ந் தெண்ண,
துகிர்க்கால் அன்னமும் புகர்க்காற் கொக்கும்
செங்கட் போத்தும் கம்புட் கோழியும்
கனைகுரல் நாரையுஞ் சினமிகு காடையும்
பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
என்றிவை பலவும் எண்ணில குழீஇச்
சிரஞ்சிறி தசைத்துஞ் சிறகை யடித்தும்
அந்தியங் காடியின் சந்தங் காட்டித்
தந்தங் குழூஉக்குரல் தமைவிரித் தெழுப்பும்
பேரொலி யொன்றுமே யார்தரும் ஒருசார்.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

7. பாஞ்சாலி சபதம்

விதுரன் தூது செல்லுதல்

விதுரனை வரவேற்றல்

விதுரன் வருஞ்செய்தி தாஞ்செவி யுற்றே
        வீறுடை ஐவர் உளமகிழ் பூத்துச்
சதுரங்க சேனை யுடன்பல பரிசும்
        தாளமும் மேளமும் தாங்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து மணிமுடி தாழ்த்தி
        ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி

மதுர மொழியிற் குசலங்கள் பேசி
மன்ன னெடுந்திரு மாளிகை சேர்ந்தார். 1

குந்தி எனும்பெயர்த் தெய்வதந் தன்னைக்
கோமகன் கண்டு வணங்கிய பின்னர்
வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெள்கித் தலைகுனிந் தாங்குவந் தெய்தி
அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததொர் மாமன் அடிக்கண்
வைத்து வணங்கி வனப்புற நின்றாள். 2

தங்கப் பதுமை எனவந்து நின்ற
தையலுக் கையன் நல் லாசிகள் கூறி
அங்கங் குளிர்ந்திட வாழ்த்திய பின்னர்
ஆங்குவந் துற்ற உறவினர் நண்பர்
சிங்க மெனத்திகழ் வீரர் புலவர்
சேவகர் யாரொடுஞ் செய்திகள் பேசிப்
பொங்கு திருவின் நகர்வ லம்வந்து
போழ்து கழிந்திர வாகிய பின்னர். 3

ஐவர் தமையுந் தனிக்கொண்டு போகி
ஆங்கொரு செம்பொன் னரங்கில் இருந்தே ;
மைவரைத் தோளன் பெரும்புக ழாளன்
மாமகள் பூமகட் கோர்மண வாளன்
மெய்வரு கேள்வி மிகுந்த புலவன்
வேந்தர் பிரான்திரி தராட்டிரக் கோமான்
தெய்வ நலங்கள் சிறந்திட நும்மைச்
சீரொடு நித்தலும் வாழ்கென வாழ்த்தி 4

உங்களுக் கென்னிடம் சொல்லி விடுத்தான்
ஓர்செய்தி மற்றஃ துரைத்திடக் கேளீர் !
மங்களம் வாய்ந்தநல் அத்தி புரத்தே
வையக மீதில் இணையற்ற தாகத்

தங்கும் எழிற்பெரு மண்டபம் ஒன்று
தம்பியர் சூழ்ந்து சமைத்தனர் கண்டீர்!
அங்கதன் விந்தை அழகினைக் காண
அன்பொடு நும்மை அழைத்தனன் வேந்தன். 5

வேள்விக்கு நாங்கள் அனைவரும் வந்து
மீண்டு பலதின மாயின வேனும்
வாள்வைக்கும் நல்விழி மங்கை யொடேநீர்
வந்தெங்க ளூரில் மறுவிருந் தாட
நாள்வைக்குஞ் சோதிட ராலிது மட்டும்
நாயகன் நும்மை அழைத்திட வில்லை;
கேள்விக் கொருமிதி லாதிப னொத்தோன்
கேடற்ற மாதம் இதுவெனக் கண்டே. 6

வந்து விருந்து களித்திட நும்மை
வாழ்த்தி அழைத்தனன் என்னரு மக்காள்!
சந்துகண் டேஅச் சகுனிசொற் கேட்டுத்
தன்மை இழந்த சுயோதன மூடன்
விந்தை பொருந்திய மண்டபத் தும்மை
வெய்யபுன் சூது களித்திடச் செய்யும்
மந்திர மொன்றும் மனத்திடைக் கொண்டான்
வன்ம மிதுவும் நுமக்கறி வித்தேன். 7

தருமபுத்திரன் பதில்

என்று விதுரன் இயம்பத் தருமன்
எண்ணங் கலங்கிச் சிலசொல் உரைப்பான்;
மன்று புனைந்தது கேட்டுமிச் சூதின்
வார்த்தையைக் கேட்டுமிங் கென்றன் மனத்தே
சென்று வருத்தம் உளைகின்ற தையா!
சிந்தையில் ஐயம் விளைகின்ற தையா!
நன்று நமக்கு நினைப்பவன் அல்லன்
நம்ப லரிது சுயோதனன் றன்னை, 8

கொல்லக் கருதிச் சுயோதனன் முன்பு
சூத்திர மான சதிபல செய்தான் ;
சொல்லப் படாதவ ஞல்எமக் கான
துன்ப மனைத்தையும் நீஅறி யாயோ ?
வெல்லக் கடவர் எவரென்ற போதும்
வேந்தர்கள் சூதை விரும்பிட லாமோ ?
தொல்லைப் படுமென் மனந்தெளி வெய்தச்
சொல்லுதி நீஒரு சூழ்ச்சிஇங் கென்ருன். 9

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

IV பல்சுவைப் பகுதி

1. வருணனை

கம்பராமாயணம்

மருதநிலவளம்

நீரிடை யுறங்குஞ் சங்கம் நிழலிடை யுறங்கும் மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கும் ஆமை துறையிடை யுறங்கும் இப்பி
போரிடை யுறங்கும் அன்னம் பொழிலிடை யுறங்குந்
தோகை 1

தேனாறு

ஆலைவாய்க் கரும்பின் தேனும் அரிதலைப் பாளைத்
தேனுஞ்
சோலைவாய்க் கனியின் தேனும் தொடையிழி இருலின்
தேனும்
மாலைவாய் உகுத்த தேனும் வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப வுண்டு மீனெலாங் களிக்கு
மாதோ. 2

பண்ணை

சேலுண்ட ஒண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச்
சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும்
பண்ணை. 3

—கம்பர்.

பெரிய புராணம்

நாட்டுவளம்

காடெல்லாங் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாங் கருங்குவளை வயலெல்லா நெருங்குவளை
கோடெல்லா மடவன்னங் குளமெல்லாங் கடலன்னம்
நாடெல்லா நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம் 1

—சேக்கிழார்.

ஈங்கோய் எழுபது : வண்டும் மந்தியும்

வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சி முதுமந்தி—பழகி
எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று. 2

—நக்கீரர்.

2. சீட்டுக்கவி

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்,
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கும் ஓலை
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குல சேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழிய னெதிர்கொண்டு காண்க
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்குஅனற் பண்ணுத கோடைஐம்
படையில் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்து முடியாத சடிலம்

சொன்னசொல் சொல்லாத கிள்ளை யொன்றெங்கணும்
துதிக்க வரவிடல் வேண்டுமே 1

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

3. சிலேடை

பாம்பும் எலுமிச்சம் பழமும்

பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணும் உப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பும் எலுமிச்சம் பழம் 1

—காளமேகப் புலவர்.

பாணனும் விறலியும்

இம்பர்வான் எல்லை யிராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணநீ யென்றாள் பாணி
வம்பதாங் களப மென்றேன் பூசுமென்றாள்
மாதங்கம் என்றேன்யாம் வாழ்ந்தேம் என்றாள்.
பம்புசீர் வேழமென்றேன் தின்னும் என்றாள்
பகடென்றேன் உழுமென்றாள் பழனந் தன்னைக்
கம்பமா என்றேன்நற் களியாம் என்றாள்
கைம்மாஎன் றேன்சும்மா கலங்கி னாளே. 2

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

4. சிறு பிரபந்தம்

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்

அம்மானை

இன்ன திதுஎன் றிறைவன் திறமதனைச்
சொன்ன மறையும் துணிந்திலகாண் அம்மானை;
சொன்னமறை யும்துணியாத் தோன்றாத் துணையினை நம்
கன்னி வனத்திடையே காணலாம் அம்மானை;
கண்டார் பிறிதொன்றும் காணார்காண் அம்மானை 1

மறம்

வரிக்கறையான் அரித்தபனஞ் சருகோ தூதா!
மண்ணரசர் திருமுகமாய் வந்தது? எங்கள்
அரிக்கயல்வாள் விழிக்குயிலைத் தருக வென்ருல்
அவனிதன்மேல் பரிசம்அழ கியதே அன்ருே!
கரிக்கரட வரைபடுத்த கன்னிக் காப்புக்
கருவேடன் மகன்புணர்ந்த பெருவே டன்பெண்
திருக்குலம்என் றறிந்திலனே? நன்று! வென்றிச்
சிலைகொடுவா தலைகொடுவந் திடுவ தற்கே. 2

—தொல்காப்பியத் தேவர்.

5. வழிபாட்டுப் பாடல்கள்

தேவாரம்

அத்தாவுன் னடியேனை அன்பால் ஆர்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானுய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே. 1

—திருநாவுக்கரசர்.

சீவக சிந்தாமணி

ஆதி வேதம் பயந்தோய்நீ
அலர்பெய்ம் மாரி யமைந்தோய்நீ
நீதி நெறியை யுணர்ந்தோய்நீ
நிகரில் காட்சிக் கிறையோய்நீ
நாத னென்னப் படுவோய் நீ
நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாத கமலந் தொழுவேங்கள்
பசையாப் பவிழப் பணியாயே 2

—திருத்தக்க தேவர்.

சீறுப் புராணம்

சிறந்த மெய்ப்பொருளை யழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்ப மற்றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பொன்றி லாதவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினின் மதிமறந் தவரே. 3

—உமறுப் புலவர்.

தேம்பாவணி

அறந்தாய் தந்தை சுற்றமுமற் றனைத்து நீயே கதிநீயே
பிறந்தாய் உலகிற் குயிரன்னேய் பிறந்தெந் துயரும் எம்பகையும்
துறந்தாய் எங்கள் சிறைதீர்த்தாய் துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தா யிவையா வருமறியத் திறன்செய் தருள்செய் திரங்காயோ. 4

—வீரமா முனிவர்.

பெருமாள் திருமொழி

இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
யினத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பொருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை யணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே? 5

—குலசேகரப் பெருமாள்.

உரைநடைப் பகுதி

1. நீதி நூல்களில் இலக்கிய நயம்

டாக்டர். A. சிதம்பரநாதஞ் செட்டியார் M.A., Ph.D., M.L.C.

நீதி நூல்களில் இலக்கிய நயம் என்பதைப் பற்றிக் கூறுவதற்கு முன்னுல், பொதுவாக நீதி நூல்களில் இலக்கிய நயம் மிக்குக் காணப் படுவது இயல்பன்று என்று கூறுதல் வேண்டும். நீதிகளைக்கூற எழுந்தவை நீதி நூல்கள் ஆனதால், இவ்வாறு நடக்க வேண்டும் என்று விதித்தும், இவ்வாறு நடக்கக் கூடாது என்று விலக்கியும் சொல்வது நீதி நூல்களின் இயல்பு ஆனதால், அந் நூல்களிற் சிறந்த கவி நயம் காண்பது அரிதாகத் தான் இருக்கும். நல்ல கவிதையின் நோக்கம் மக்கட்கு நீதி கூறுவதன்று என்று சொல்லத் துணியும் மேனுட்டு ஆராய்ச்சியாளர் சிலர் கருத்திற் கேற்ப, நம் நாட்டிலும் சிலர் இக்காலத்தில் 'காவியத்தில், இலக்கியத்தில் வரும் கருத்தை நோக்க வேண்டா; இன்பத்தை மாத்திரம் கொள்ளுங்கள்' என்கிருர்கள். இது ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. இலக்கியங்கள் சிற்பத்தைப் போல, ஓவியத்தைப் போல, நடனத்தைப் போல, ஒரு நுண்கலையாக மதிக்கப் பட்டு இன்பம் நல்குமென்று எதிர் பார்க்கப்பட வேண்டுவது உண்மை தான். ஆனுல், இவ்வருங் கலைகளுக்கும் இலக்கியமாகிய கலைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அது யாதென்ருல், சிற்பம், சித்திரம் முதலியவற்றினுடைய நோக்கம் இன்பம் பயப்பதொன்றேயாகவும், இலக்கியத்தினுடைய நோக்கம் அதனேடு நில்லாமல் மக்களுடைய வாழ்க்கையைச் சீர்படுத்த உதவுவதாகவும் இருத்தல் வேண்டும் என்பதே.

இதனுல் அறிந்து கொள்ளத் தக்கன இரண்டு உண்மை கள். வாழ்க்கையைச் சீர்படுத்த அமைந்த நீதி நூல்கள் சில இலக்கிய நயம் பெற்றிருத்தல் கூடும் என்பது ஒன்று. நல்ல இலக்கியங்களிற் சில இன்பம் பயப்ப தோடு நில்லாமல் வாழ்க்கையை மேம்படுத்தவும் கூடும் என்பது மற்ருென்று.

தமிழிலுள்ள நீதி நூல்களைப் பற்றிப் பேசத் தொடங் கும் எவரும் திருக்குறளை முதலில் நினைத்தல் இயல்பு. ஈக, இன்சொற் கூறுக, விருந்தோம்புக என விதித்தும், பொய் கூறற்க, கள் உண்ணற்க, கொலை செய்யற்க என விலக்கியும் சொல்லும் இந்த நீதி நூலிலே இலக்கிய நயம் இருக்குமோ என ஐயப்பட வேண்டா. நீதி கூறும் போது நயம் படச் சொல்லுதற்குச் சாதாரண மனிதனுக் குத் தெரியாது. ஆனுல், திருவள்ளுவர்க்குத் தெரியவில்லை யெனின், யாருக்குத் தான் தெரியும்! இரக்கின்ற ஒரு வனுக்கு இல்லையென்று கூருது பொருளுள்ளவர் கொடுக்க வேண்டுமென்று கூற விரும்புகிருர் திருவள்ளுவர். 'ஒரு பொருளை எனக்கு ஈக' என ஒருவன் இரத்தல் இழிவுடைத்து என்பதை அறிவார். ஏதோ ஓர் அவசியம் ஏற்பட்டு, யாசித்தே தீர வேண்டும் என்ற நிலையில், ஒருவன் இரப் பதாக வைத்துக்கொள்வோம். அந்நிலையில், வேருெருவன் வீட்டிற் புகுந்து, தன் குறை இன்னது எனச் சொல்லத் தொடங்கிச் சொல்ல நா எழாமல் அவன் நிற்கின்ருன். அவன் வந்து நிற்கிற நிலையைக் கண்டவுடனே, அவன் தன்னிடம் ஒரு பொருள் வேண்டி வந்திருக்கிருன் என்பதை அறியும் செல்வன் கூசாது 'இல்லை' எனச் சொல்கிருன். இல்லை யென்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில், இரக்கிற வன் உயிர் போய் விடுகிறது. இல்லை யென்ற விடமோ சொல்லுகிறவன் வாய் வழியே வந்தது. ஆனுல், அவனை ஒன்றுஞ் செய்யவில்லையே! என்ன விந்தை!! அந்த நேரத்தில் அப்படிச் சொல் சொன்னவன் உயிர் எங்கே யாவது மறைந்திருக்க வேண்டும். எந்தப் புரையிலே

புகுந்து அந் நேரம் ஒளித்துக் கொண்டதோ தெரியவில்லையே! இல்லை யெனக் கேட்டவன் மாய்ந்தான்; கூறினவன் மாய வில்லையே! பொருளை வைத்துக் கொண்டு வழங்காமற் கெடுகிறவன் இருந்தால் என்ன, இறந்தால் என்ன? இந்தக் கருத்துக்கள் அனைத்தையும் திருவள்ளுவர் கூறக் கருதினார். அவற்றைக் கூறுவதற்குப் பெரிய கட்டுரை எழுதவில்லை. அன்றி, நீளமாக ஆசிரியப்பா பாடவில்லை. பின் என் செய்தார்? இரண்டு அடியிலே, அதிலேயும் ஒன்றே முக்கால் அடியிலே ஒரு குறட்பா இயற்றினார். அது தான் இது.

> ''கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ, இரப்பவர்
> சொல்லாடப் போஒம் உயிர்.''

இல்லையென்று ஒருவர் சொல்லாடவும், இரப்பவர்க்கு உயிர் போகிறது; இல்லையென்று மறைப்பவர் உயிர் எங்கே போய் ஒளித்துக் கொள்ளுகிறதோ தெரியவில்லையே என்ற அளவே இக் குறட்பா சொல்லுவதுபோல மேலெழுந்த வாரியாய்ப் பார்ப்போர்க்குத் தோன்றும். ஆழ்ந்து நோக்கினால், எவ்வளவு சிறந்த நயங்களைத் தன்பால் அடக்கிக் கொண்டிருக்கிறது இச் சிறு செய்யுள் என்பது விளங்கும். அதனால் தான் ''கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என இடைக்காடனார் கூறினார் போலும்!

உலகிற் பலருக்குப் பல தொழிலை இறைவர் பிண்டம் பிடிக்குங்காலே அமைத்திருக்கிறார் என்ற சொல்லைத் திருவள்ளுவர் கேட்டிருக்கிறார். ஒருநாள் அவர் எதிரே ஒருவன் கனவில் வந்தான் போலும்! வந்தவன் ஒரு பிச்சைக்காரன். அவன் நேற்று யாசித்தவன், மூன்றும் நாள் யாசித்தவன், இன்றும் யாசிக்கத்தான் வேண்டுமோ என அஞ்சுகிறான். ஆம், என் செய்வது, தலையில் எழுதிய வண்ணந்தானே நடக்கும், இரந்துதான் ஆக வேண்டுமென்று எண்ணினான். அதற்குள்ளாக இன்னொரு எண்ணம் அவனுக்குத் தோற்றிற்று. யாசிப்பதும் ஒரு தொழிலா?

உலகில் இன்னின்னுர்க்கு இன்னின்னது தொழில் எனப் பிரமன் வகுப்பதாக வைத்துக் கொள்வோம். அத் தொழில் களில் ஒன்ருக யாசித்தலையுஞ் சேர்த்து எண்ணினுை பிரமன்? எண்ணினுன் ஆனுல், அவனே அந்தத் தொழிலைக் கொஞ்சம் பார்க்கட்டும். உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமற் படைத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு இந்த உலகிற்கு வரட்டும். வந்து தெருத் தெருவாக அல்லற்பட்டு அலையட்டும். அப்பொழுதுதான் அறிவான் இரத்தற்ருெழில் எவ்வளவு இழிவானது என்பதை. இழிவானதொன்றை எனக்கும் என் போன்றவர்க்கும் ஒரு தொழிலாகப் பிரமன் வகுத்தான் என்ருல், அவன் ஒரு பாபி. அந்தப் பாபத்தால் அவன் ஒரு பிறவி எடுக்கட்டும். அப் பிறவி மானிடப் பிறவியாய் இருக்கட்டும். மானிடனுய், மானம் விட்டு, யாசகனுய் வந்து சேரட்டும். போகிற இடத்திலே உடனே உணவைக் காசைப் பிச்சையைப் பெருமல், பல வீடுகளில் பல தெருக்களில் அலையட்டும். அலைந்து கெட்டொழியட்டும்! இவ்வாறு அப் பிச்சைக்காரன் கருதியதாய் ஒரு கனுக் கண்டார் போலும் திருவள்ளுவர்! அதன் பயனுய் ஒரு குறள் எழுதினுர். அக்குறள்

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்பதே. எவ்வளவு பெரிய கனுவை எத்துணைக் குறுகிய அடிகளில் தெரிவித்து விட்டார்! இதுதான் இலக்கிய நயம். இவ்வுலகைப் படைத்தவன் யாவனுயினும், அவன் இரத்தலையும் ஒரு தொழிலெனப் படைத்து அத் தொழிலாற் சிலர் உயிர் வாழ்வாராக என விதித்திருப்பானுயின், அவனும் தெருத்தோறும் பரந்து திரிந்து துன்புறுவானுக எனக் கூறுகின்ற இக் குறள், இரப்பினுல் வரும் அச்சத்தை எவ்வளவு கொடுமையுடையதாகப் படம் பிடித்துக் காட்டு கின்றது! இரத்தல் கொடிது என்ற நீதியைக் காட்ட விரும்பும் திருவள்ளுவர் எவ்வளவு சிறந்த இலக்கியமாக இவ்விரண்டடிகளை அமைத்து விட்டார்!!

சில உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் மிக்க நயமுண்டாகக் குறளமைத்திருப்பதைக் காண்கிறோம். உதாரணமாக,

“ அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான் ”

என்பதை நோக்குவோம். கயவர் கீழ்மக்கள். கீழ் மக்களைத் தம்பட்டம் ஆகிய பறைக்குச் சமானமாகச் சொன்னார். சொன்னதற்குக் காரணம் யாது? தப்பினைத் தட்டுகிறான் ஒருவன். தப்பினிடத்திலே அவன் கையினால் ஒன்றை அறிவிக்கிறான். அதை அந்தப் பறை பலர் காதிற் சேர்க்கிறது; பல இடங்களிற் கொண்டு சேர்க்கிறது. அதைப்போல, இரகசியத்தைப் பிறரிடம் போய் கீழ்மக்கள் தெரிவித்து விடுகிறார்கள். யாரோ ஒருவர் ஒரு விஷயம் இரகசியம் என்று ஒருவனிடத்தில் தெரிவித்தார். அவன் என்ன செய்தான் என்பது தெரியுமா? அதனை மூட்டை கட்டிக் கொண்டு பலரிடம் போனான். அந்த இரகசியமாகிய பாரத்தை அவனால் தாங்க முடியவில்லை. அதனால், அதைக் கொண்டுபோய்ப் பலருக்கும் பங்கு போட்டுப் பிரித்து எடுத்து எடுத்துக் கொடுத்தான். இவனை அறைபறை யன்னவன் எனத் திருவள்ளுவர் கூறிய அழகு நோக்கத் தக்கது. அந்த இரகசியம் அவனுக்குப் பாரமாக இருந்தது என்பதும், அதனைக் கொண்டுபோய்ப் பிறர்க்குச் சேர்த்தான் என்பதும் ‘உய்த்து’ என்ற சொல்லினாலே பெறப்படுகின்றன. ‘உய்த்து’ என்ற சொல் இக் குறட்பாவிற்கு உயிர்நிலை. அதனை எடுத்துவிட்டு வேறு எந்தச் சொல்லை அவ்விடத்துச் சேர்த்தாலும், இவ்வளவு சிறந்த நயங்கள் தோன்றமாட்டா. இச் சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தக்க இடம் பார்த்து வைத்த பெருமை திருவள்ளுவருடையது. கயவரிடம் இரகசியம் கூறக் கூடாது என்ற நீதியை எவ்வளவு நயம்படத் திருவள்ளுவர் கூறியுள்ளார்!

இரண்டடி நீதி நூலிலிருந்து இப்பொழுது நாலடி நீதி நூலிற்குப் போவோம். செல்வம் நிலை பேறுடையதன்று, அழிந்து போகுந் தன்மையது என்னுங் கருத்துடைய நாலடியார் பாட்டு ஒன்றை நோக்குவோம் :—

''அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற்று அன்று.''

அறுசுவை யுண்டியை உண்டு களித்த பெருஞ் செல்வரும் ஒரு காலத்திலே கூழை இரந்துண்ண நேர்ந்தாலும் நேரும். ஆதலால், செல்வத்தை ஒரு பெரும் பொருளாக மதிக்க வேண்டா என இச் செய்யுள் செப்புகின்றது. இதனுள், ஒன்றிற்கு ஒன்று மறுதலையாக வைத்துத் தொடுத்திருப்பதில் தான் அழகு திகழ்கிறது. அன்று அறுசுவையுண்டி உண்டவன், இன்று உப்பில்லாக் கூழ் குடிக்கிறான். அன்று ஆசனத்தில் அமர்ந்து உண்டவன், இன்று நடந்து கொண்டே குடிக்கிறான். அன்று மனைவி ஊட்ட உண்டவன், இன்று தனியே ஓரிடத்துக் குடிக்கிறான். அன்று மறுபிடி சோறு வேண்டாம் வேண்டாம் என மறுத்து உண்டவன், இன்று ஒரு பிடியின்றி வறிஞனாகி இரக்கிறான். இப்படி ஒன்றிற்கு ஒன்று முரண்பட வைத்துக் காட்டிய வகையினாலே, எத்துணைச் சிறந்த செல்வனும் மிகவும் இழிந்த வறிஞனாதல் கூடும் ஆதலால், உள்ள போழ்தே அறம் செய்க என்ற கருத்தைத் திறம்பட எடுத்துக் காட்டுகிறது இந் நாலடி. இப்பாட்டிற்கு இவ்வாறு பொருள் கொள்ளாமல் 'அமர்ந்து' என்ற சொல்லை 'இல்லாள்' என்பதோடு சேர்த்து, மனைவி விரும்பி ஊட்டவும் மறுத்துண்டவர்கள் என்றவாறு இயைத்துப் பொருள் சொல்லப்பட்டு வருகிறது. அப்படிச் சொல்வதைக் காட்டிலும், அறுசுவை யுண்டியை மனைவி ஊட்டவும் அமர்ந்து உண்டவர்கள், பிறகு வறிஞராய் இரக்கவும் நேரிடும் என்று இயைத்துக் கூறுவதுதான்

தக்கது எனத் தோற்றுகிறது. அப்படிக் கொண்டால்தான், பாட்டினுடைய முழு அழகும் விளங்கும். அறுசுவை யுண்டிக்கு மாருகக் கூழினைக் கூறினர்; இல்லாள் ஊட்ட உண்டவன் ஓரிடத்து யாசித்து உண்கிருன். மறுசிகை நீக்கி யுண்டவன் ஒன்றுமில்லாது வறிஞனாய்த் திரிகிருன். இவ்வாறெல்லாம் மாறுபட வைத்துக் கூறியதற்கேற்ப, அமர்ந்து உண்டவன் சென்று இரக்கிருன் என்றே கவிஞர் கூறக் கருதியிருப்பார் என நினைக்கிறேன். இத்துணை நயம் பொதியச் செய்யுளைச் செய்த கவிஞர் இன்னர் என்று அறிய வழியில்லை. அவர் இயற்றிய பாட்டு மாத்திரம் 'நாலடியார்' என்ற நீதி நூலிலே காணப்படுகிறது.

உலகிலே இச்சகம் பேசி வாழும் மாந்தருள் ஒருவனைப் புலவர் ஒருவர் நோக்குகிருர். ஒருநாள் ஒருவரும் அறியாமலே அவன் வீட்டினுள் நுழைந்து அவன் செய் பவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிருர். அவன் "போற்றி போற்றி புண்ணியா போற்றி, போற்றி போற்றி பாரியே போற்றி, போற்றி காரி, போற்றி ஓரி, போற்றி கன்ன, போற்றி பேகா" என்று என்னென்னவோ உருப் போட்டபடி இருக்கிருன். இதனை மறைந்திருந்து கவனித்தார் புலவர். பிறகு அவன் வெளியே புறப்பட்டுப் போகிருன். புலவரும் பின் தொடருகிருர். புதுப் பணக்காரன் ஒருவன் வீட்டில் அவன் நுழைந்தான். "போற்றி போற்றி" என்று தொடங்கி, அடியேனைக் காத்தருள வேண்டியது ஆண்டவனுக்குச் சமமான தங்களால்தான் இயலும்; இறைவனே அருள் புரிக. தங்கள் அருள் நோக்கி வாழு கிறேன். பயிருக்கு மழை எப்படியோ, என் போன்ற வறிஞர்க்குத் தாங்கள் அப்படி என்று சொல்லிப் பின்னும் பல அடுக்கத் தொடங்கினன். பார்த்தார் புலவர்; பாடினர் ஒரு பாட்டு.

"போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாம் தொண்டேபோல்—ஆற்றப்

பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு.''

என்பதே அப்பாட்டு. புலவர் தாம் கண்ட பெரிய காட்சியைச் சிறு பாட்டிலே அமைத்துக் கொடுத்தார். அவர் கூறக் கருதியதெல்லாம் ''வயிற்றை வளர்ப்பதற்காக இச்சகம் பேசித் திரிய வேண்டாம்'' என்பதே. அதனை எவ்வளவு அழகாக முனைப்பாடியார் ''அறநெறிச் சார'த்தில் அமைத்து வைத்திருக்கிறார் என நோக்குங்கள். இச்சகம் பேசுவோன் இழிந்தவன் என்று நேரே சொல்லாமல், அவன் வயிற்றினை மகேசுவரனுக்கிப் பெருமைப்படுத்துவதுபோல் சிறுமைப் படுத்திய திறம் வியக்கத்தக்கது. வயிறாகிய தம்பிரான் இருக்கிறாரே, அந்தக் கடவுளைக் காப்பாற்ற எத்தனை பொய்யும் புனைசுருட்டும் செய்து மாந்தர் வாழ்கிறார்கள் என்று கவிஞர் இவ்விடத்தில் இரங்குகிறார். இப்படிப் பொய் சொல்லியாவது வயிறு வளர்க்க வேண்டுமோ எனப் புலவர் கேட்பது போலத் தோற்றுகிறது. வயிற்றுச் சாமியை நம்பி, உண்மைக் கடவுளை மக்கள் விடுகிறார்களே எனப் புலவர் கலங்குவது போலத் தோற்றுகிறது. இத்துணை நயம்பட ''வயிற்றுப் பெருமான் பொருட்டு'' என்ற ஒரு தொடரால் எவ்வளவு அரிய பெரிய நீதிகளை அறநெறிச்சாரச் செய்யுள் காட்டுகிறது!

எனவே, நீதி நூல்கள் சிலவும் மிக்க இலக்கிய நயமுடையனவாகத் திகழ்கின்றன என்பதை ஒருவாறு கண்டோம்.

அருஞ்சொற் பொருள்

நல்குதல் - கொடுத்தல். சீர் - சிறப்பு. இரத்தல் - யாசித்தல். கரப்பவர் - மறைப்பவர். பிண்டம் பிடிக்குங்கால் - உருவம் அமைக்கும் போது. பரந்து கெடுக - எங்கும் அலைந்து கெடுவானாக. உய்த்துரைத்தல் - வழியக் கொண்டு போய்ச் சொல்லுதல். உய்த்துணருதல் - ஆராய்ந்தறிதல். மறுசிகை - அடுத்த கவளம். வறிஞர் - ஏழைகள். வைக்கற் பாற்று - வைக்

கும் தன்மையது. களித்த - மகிழ்ந்த. தோற்றியார் - உண்டாக்கியவர். பயிற்றிப் பயிற்றி - பலகால் கூறி. மகேசுவரன் - வயிறு.

விஞக்கள்

1. நீதி நூல்களின் இயல்பு யாது?
2. நுண்கலைகளுக்கும் இலக்கியக் கலைக்குமுள்ள வேறுபாடு யாது?
3. இரப்போருக்கு இல்லை யென்று கூருது பொருளுள்ளவர் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை வள்ளுவர் எத்தகைய நயத்தோடு கூறுகின்ருர்?
4. இரத்தல் கொடியது எனும் நீதியைக்காட்ட விரும்பிய வள்ளுவர் நமக்களிக்கும் இலக்கிய நயம் யாது?
5. திருவள்ளுவர் கீழ் மக்களை ஏன் தம்பட்டம் ஆகிய பறைக்குச் சமானமாகக் கூறினர்?
6. செல்வத்தின் நிலையாமையைக் கூற வந்த நாலடியார் பாட்டிலுள்ள நயத்தை விளக்குக.
7. 'வயிற்றை வளர்ப்பதற்காக இச்சகம் பேசித்திரிய வேண்டாம்' எனும் கருத்தை வலியுறுத்தும் அறநெறிச்சாரப் பாடலில் பொதிந்துள்ள நயத்தை விளக்குக.

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—
மேலெழுந்தவாரியாய், தெருத்தெருவாக, திகழ்கிறது, காத்தருள வேண்டும், வியக்கத் தக்கது.
2. சேர்த்து எழுதுக :—
கூறுவது + அன்று, அருமை + கலை, பயப்பது + ஒன்றே, பொருள் + உள்ளவர், கருதி + இருப்பார்.
3. "நீதி நூல்களில் இலக்கிய நயம்." எனும் பொருள் பற்றி இப்பாடத்தின் துணை கொண்டு 40 வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

2. கம்பர்

உயர்திரு. M. ராதாகிருஷ்ணப் பிள்ளை, B.A.,B.L. அவர்கள்,
முன்னாள் மேயர், சென்னை.

உலக மகா காவியங்களுள் இராமாயணம் போல் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் காவியம் வேறு ஒன்றுமில்லை. இதற்கு முக்கிய காரணம் ஒருபால் காவியத் தலைவனும், மற்றொருபால் அக்காவியம் இயற்றிய புலவரும் ஆவர். மக்களுக்கு இருக்கவேண்டும் எல்லா நலன்களும், பெருமைகளும் திரண்ட ஒருருவமே காவியத் தலைவனாய இராமபிரான். அவனிடம் மனிதத் தன்மை மட்டுமன்றித் தெய்வத் தன்மையும் உள்ளது. காவியம் என்றும் அழியாது நிலைபெறுவதற்கு இராமன் எங்ஙனம் இன்றியமையாதவனோ அங்ஙனமே வால்மீகி முனிவரும் இன்றியமையாதவர் ஆவார்.

வடமொழிப் புலவர்களுள் மேம்பட்ட வால்மீகியார் எல்லோருடைய உள்ளத்தையும் செவியையும் எக்காலத்தும் கொள்ளை கொள்ளும்படி எளிய இனிய கம்பீரமான நடையில் இராம கதையைப் பொறித்துள்ளார். இக்காவியம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, பக்தி சிரத்தையோடு பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. துளசிதாசரும் கம்பரும் வடமொழி இராமாயணத்தை மொழி பெயர்க்குங் கால் பிறநூல்களில் காணாத பல புதுமையான கருத்துக்களைக் காவியத்துள் புகுத்தியிருக்கின்றனர். இவர்களுடைய மொழி பெயர்ப்பு ‘‘மொழி பெயர்த்து அதர்ப்படயாத்தல்’’ உடைய வழி நூலாகத் தோன்றாமல் முதல் நூலாகிய கலையோவியமாகவே திகழ்கின்றது.

வால்மீகியார் ஒரு முனிவர். இயற்கைக் காட்சிகள் நிறைந்த காடுகளில் திளைத்தவர். எனவே இயற்கைப் பொருள்கள், மலைகள், ஆறுகள், வனப்பு மிக்க இடங்கள் ஆகியவற்றைப் பற்றிய அவருடைய வருணனைகள் மிகவும் பாராட்டற்குரியன. கம்பர், நாட்டில் வளர்ந்தவர்; எனவே நாடுகளைப் பற்றியும் அவற்றின் ஆட்சியைப் பற்றியும் அவற்றில் வாழ்ந்த மக்களின் இன்ப வாழ்க்கையைப் பற்றியும் வருணிப்பதில் அவர் ஒப்புயர்வற்றவரானார்.

தமிழ் நூல்களுள் கம்ப ராமாயணம் தலை சிறந்து விளங்குவதால் அதன் ஆசிரியருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்ற சிறந்த பட்டப்பெயர் ஏற்படலாயிற்று. திருவள்ளுவர், திருத்தக்கதேவர், இளங்கோவடிகள் போன்ற நூலாசிரியர்கள் இயற்றிய நூல்களால் தமிழ் மொழி வளமும் பெருமையும் அடைந்தது. அது பெருமையின் உச்சியை எட்டியது கம்ப ராமாயணம் பாடப்பட்ட பிறகேயாம். காவியப் பண்பிலும் கவிதைச் சிறப்பிலும் கம்ப ராமாயணம் ஈடு எடுப்பு அற்ற ஒரு பெரு நூலாகும். பல்வேறு மொழிகளின் காவியங்களை எல்லாம் பயின்ற காலஞ்சென்ற வ. வே. சு. ஐயர் அவர்கள் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்துக் கம்ப ராமாயணம் தலை சிறந்த காவியங்களுள் ஒன்றாக வைத்து எண்ணும் மதிப்புடையது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்.

கம்பர் காலத்தில், இராம கதை மக்களெல்லாரிடையிலும் பெரிதும் வழங்கி வந்தது. வால்மீகி ராமாயணம் வட மொழியில் இயற்றப்பட்டதாதலால் அதைத் தென்னிந்தியாவில் ஒரு சிலரே அறிந்திருக்க முடிந்தது. தொல்காப்பியம் போன்ற நூல்களின் உரைகளில் வரும் எடுத்துக்காட்டுகளால் கம்பர் காலத்துக்கு முன்பே, பல்வேறு ஆசிரியர்கள் இராமாயணத்தைத் தமிழில் இயற்றியுள்ளார்கள் என்பது வெளிப்படை. ஆனால் அவைகள் முற்றும் கிடைக்கவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில

பாடல்களே கிடைக்கின்றன. கம்பர் காலத்திலேயே அந்த நூல்களெல்லாம் மறைந்து போயின.

கம்பர் ஓர் இராம பக்தர். ஆழ்வார்களின் அடித் தொண்டர். இராமாயணத்தைத் தமிழில் இயற்றவேண்டும் என்று அவருடைய உள்ளம் நெடுநாட்களாக அவரைத் தூண்டிவந்தது. தமிழ் மக்களும் இராமாயணத்தைத் தமிழில் படித்து இன்புற விரும்பினர். எனவே கம்பர் தம்முடைய உள்ளத்தையும் பிறருடைய கருத்தையும் இன்புறுத்த வேண்டி இராமாயணத்தைத் தமிழில் பாடினார். தம்முடைய நூலுக்கு ஆதி கவியான வால்மீகியார் இயற்றிய இராமா யணமே முதல் நூலென்று கம்பர் உடன்படுகிறார். ஆனால் முதல் நூற் கருத்தோடு இன்றியமையாத தம்முடைய தமிழ் நாட்டு நாகரிகமும் பிறவும் கலந்தும், வேண்டாதனவற்றை நீக்கியும் செப்பம் செய்து கம்பர் காவியம் இயற்றியது அவருடைய பேரறிவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு கூட்டியும், குறைத்தும் திருத்தி அமைத்தது அந்நூலை ஒரு சிறந்த முதல் நூலாகவே செய்துவிட்டது.

முதல் நூலிலிருந்து மாறுபடும் இடங்களிலெல்லாம் அவர் முதல் நூலிலுள்ள கதையிலிருந்து மாறுபடவில்லை என்பதைப் படிப்போர் அறியுமாறு மிகவும் விழிப்போடு நூலை இயற்றி இருக்கிறார். என்றாலும், புதுக் கருத்துக்களையும் கற்பனைகளையும் மிக்க துணிவுடன் தம் நூலில் ஆண்டுள்ளார். கம்ப ராமர் வால்மீகி ராமரைவிட வேறுபட்டவர். வால்மீகி ராமர் சர்வ இலட்சண சம்பன்னரான ஒரு தலைமகனார். கம்பராமர் தெய்வீகமும் நிறைந்த ஒருவர். கம்பருக்கு அகலிகையும் மாசிலாக் கற்புடையவள். கும்பகருணன் போன்ற அரக்கர்களையும் மக்கள் தன்மையுடைய வர்களாகக் கம்பர் நமக்குச் சித்தரித்துக் காட்டுகிறார். அவர் களுங்கூட நம்முடைய பரிவிற்கும் பாராட்டிற்கும் உரிமை யுடையவர்களாகின்றனர். விபீடணன் அவர் கருத்திற்குத்

தன்னலமுடையவனாகத் தோன்றவில்லை ; அறவேட்கை யுடையவனாகத் தோன்றுகிறான். சுயம்வர மணத்தை அறி யாதவர்களான தமிழர் வழக்கத்திற்கு ஏற்ப, இராமனையும் சீதையையும் சுயம்வரத்திற்கு முன்பே, ஒருவரையொருவர் காணுமாறு கம்பர் செய்கிறார். யுத்த காண்டத்தில் வரும் மாயா ஜனகப் படலமும் இரணியன் வதைப் படலமும் கம்பருடைய நவீனப் படைப்புகள் ; முதல் நூலில் காணப் படாதவை. அவைகள் கம்ப ராமாயணத்தில் சுவையுடைய சிறந்த பகுதிகளாக யாவராலும் பாராட்டப் பெறுகின்றன.

கம்பரைப் பற்றி வழங்கும் வரலாறுகளுள் பெரும் பான்மையானவை பொய் வரலாறுகளே. அவை முரண் பட்டனவாகவும் பொருத்தமற்றனவாகவும் உள்ளன. அவ ருடைய வாழ்க்கையின் முற்பகுதியைப் பற்றிய உண்மை வரலாறு அறியவே முடியாததாக உள்ளது. அவர் உவச்ச மரபினைச் சேர்ந்தவரென்றும், காளிகா தேவியிடமிருந்து ஆசுகவி பாடும் பேரறிவு பெற்றவரென்றும் வழங்குவர். அவர் வறியவர். அங்ஙனம் இருந்தும் அவருடைய பேரறிவு அவரை யாவரும் அறிந்து போற்றுமாறு செய்துவிட்டது. திருவெண்ணெய் நல்லூர்ப் பெருஞ் செல்வரான சடையப்ப வள்ளல் அவரை அன்போடும் ஆதரவோடும் காப்பாற்றி வந்தார்.

அக்காலத்தில் கம்பர் தமிழில் இருந்த நூல்களையெல் லாம் நன்கு பயின்று தெளிவு பெற்றார். ஐயந்திரிபறக் கற்ற நூல்களுள் தலை சிறந்ததான திருக்குறளுக்கு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அவர் விரிவுரை நிகழ்த்தி இருக்கிறார். இங்ஙனமே, பிற நூல்களுக்கும் அவர் உரை கண்டிருக்கிறார். அவை எல்லாம் பல பல பாடல்களாகக் கம்பராமாயணத்தில் இடம் பெற்றுத் திகழ்கின்றன. சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்க தேவர், கம்பர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந் தவர். ஆழ்வார்களுடைய நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள் அவரைத் தம் வசப்படுத்திவிட்டன.

ஆழ்வார்களுள் நம்மாழ்வாரிடம் கம்பருக்குத் தனிப்பட்ட பயபக்தி உண்டு. அவர்மீது சடகோபரந்தாதி என்ற ஒரு பிரபந்தம் கம்பரால் பாடப்பெற்றுள்ளது. கம்பர் வடமொழி யையும் நன்கு பயின்றவர். கல்வி அறிவுள்ள ஒரு சிலரி டத்து மாத்திரம் அடைபட்டுக் கிடவாது எல்லோரிடத்திலும் சென்று நிலவுமாறு எளிய நடையில் இயற்றப்பட்டுள்ளது அவர் நூலுக்குள்ள ஒரு சிறந்த பண்பாம். அவர் நூலை அறிவதற்கு விரிவுரைகள் வேண்டா. தாம் பாடலை இயற்றுவதற்குக் கம்பர் சொற்களுக்காகத் தயங்கி நின்று ரில்லை. ''யானே முன் ; யானே முன்'' என்று ஒவ்வொரு சொல்லும் ஏற்ற இடத்தில் வந்து பொருந்தி அவருடைய கருத்தை மிக எளிதில் நிறைவேற்றியது. சகப்பிரியரைப் போன்று கம்பரும் சொற்களைக் கொண்டு விநோதம் செய்யும் ஓர் இந்திர ஜாலக்காரர்.

கம்பராமாயணம் கி. பி. 887இல் திருவரங்கம் கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. கீர்த்தி மிக்க வைணவ ஆசாரியார் நாதமுனிகள் என்பவர் அது போழ்து தலைமை பூண்டார். கம்பர் தாம் பாடிய பாடல்களைப் படித்து விரிவுரை நிகழ்த்தியபோது, நாட்டின் எல்லாப் பகுதிகளிலு மிருந்து ஆயிரக்கணக்கான தமிழ்ப் புலவர்கள் வந்திருந்து சித்திரப்பாவைபோல் அவருரையைக் கவனித்துக் கேட்க லாயினர். அது போழ்து நிகழ்ந்ததாக ஒரு வரலாறு வழங்குவ துண்டு. இரணியன் வதைப் படலத்திலிருந்து,

'' திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம் ''

என்ற அடியைக் கம்பர் வாசித்தபோது, கோயில் கோபுரத்தின் மேலிருந்த நரசிம்ம சுவாமி உருவம் அம்மண்டபம் முழு வதும் எதிரொலி உண்டாகுமாறு சிரித்ததோடு நில்லாமல், கம்பருடைய பேரறிவுடைமையைப் போற்றுவதாகத் தன் தலையையும் ஆட்டியது என்பர்.

இரணிய வதைப்படலம் வால்மீகி ராமாயணத்தில் இல்லை. கதைக்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லை.

கதையின் தொடர்ச்சிக்கு யாதோர் ஊறுபாடும் நேராதவாறு அதனை அறவே நீக்கிவிடலாம். கம்பர் விபீஷணனைக் கொண்டு இக்கதையை இராவணனுக்குக் கூறுமாறு செய்கிறார். கம்பராமாயணமாகிய ஒரு நவரத்தின மாலையில் முடிமணியாக விளங்குவது இப்படலம். கம்பராமாயணத்தில் துறைபோயவ ரெல்லோரும் இப்படலத்தில், கம்பர் தம் அறிவுத்திறன் முழுவதையும் கையாண்டிருக்கிறார் என்று ஒருமனதாகத் தம் ஆராய்ச்சியின் முடிவாகக் கூறுகின்றனர். கம்பர் நரசிம்ம சுவாமி உபாசகர். கம்பத்திலிருந்து தோன்றியதால் நரசிம்ம சுவாமிக்குக் கம்பர் என்ற பெயர் பொருந்துவதாம். உபாசனையின் சிறப்பால் நரசிம்ம சுவாமியின் பெயரையிட்டுக் கவிச்சக்கரவர்த்தியார் கம்பர் என்று பெயர் வழங்கப்பெற்றார். அந்த உபாசனையே யுத்த காண்டத்தில் இரணியன் வதைப் படலத்தை நிலை பெறுத்தியது என்பது இப்போது நன்கு விளங்கும்.

இன்றைய உலகில் அரசுகளும் அரசாங்கங்களும் ஏதோ ஒருவகையான பலாத்காரத்தைத் துணையாகக் கொண்டு தம்முடைய அதிகாரத்தால் நாடுகளை ஆளுகின்றன. ஆனால் கம்பர் கருத்துப்படி, அரசுகள் ஆளுவதற்காக ஏற்பட்டனவல்ல. குடிகளுக்குத் தொண்டு புரியவே ஏற்பட்டன. அவைகள் யாவருக்கும் தொண்டு புரிவன. ஆதலால் அவற்றினிடத்தில் குடிகளுக்குப் பய பக்தியும் பணிவும் உண்டாகின்றன.

‘‘என் கடன் பணிசெய்து கிடப்பதே; அன்பே கடவுள்’’ என்பன அரசுகள் மேற்கொள்ளும் பொன்மொழிகள். ஒரு மைந்தன் தன்னுடைய பெற்றோர்களுக்குப் பணி புரிதல் போலவும், ஒரு தாய் தன் குழந்தையைக் காப்பதுபோலவும், அறிவு கல்விக்குத்துணை நிற்பது போலவும், ஓர் அரசன் குடிகளுக்குப் பணிபுரிந்தும் காத்தும் துணை நின்றும் நாட்டை ஆளவேண்டும். குடிகளுடைய உரிமைக்கும் அரசர்களுடைய உரிமைக்கும் முரண்பாடு நிகழ்த்தலாகாது. அரசன்

ஒவ்வோர் உயிரையும் தன்னுயிர்போல் பாவித்தல்வேண்டும். அரசன் உடலாகக் குடிமக்களெல்லாம் அவனுடலில் அமைதியுடன் வாழ்தல் வேண்டும். இவையெல்லாம் இலக்கணங்களால் நிறைவுடைய ஓர் அரசனின் இயல்புகள் என்பது கம்பருடைய கருத்து என்று சுருங்கக் கூறலாம்.

என்றும் அழிதலில்லாத கம்பருடைய நூலாகிய கம்பராமாயணம் யாவர் எம்முயற்சி கொண்டு அழிக்க விரும்பினும் அஃது அழியவே அழியாது. அதனை அழித்துவிடுவேன் என்று பேசும் பேச்செல்லாம் உழைப்பையே ஒன்றும் அறியாதவர்கள் பேசும் பேச்சாகும். கம்பர் தம்முடைய நூலில் ஆரியர் உயர்வை நிலை நாட்டி இருக்கின்றார் என்று சிலர் கூறுவது தவறு; பொருந்தாது; மனத்தைப் புண்படுத்துவது ஆகும். கம்பர் இராம கதையைத் துணையாகக் கொண்டு தம்முடைய பேரறிவின் பெருமையைப் புலப்படுத்தியுள்ளார். எனவே, அவர் நூலைச் சிதைக்கவோ அழிக்கவோ செய்ய முற்படாது கலைக் கண்கொண்டு நோக்கி, கலையழகில் ஈடுபட்டு, கலையை ஓதுதல் கலையை உணர்தற்கே என்று அதனைப் பாராட்டுதல் நம் கடமையாகும்.

அருஞ்சொற் பொருள்

பொறித்து – எழுதி, சித்தரித்து. பாராயணம் - சமய நூல்களை முறையாக ஓதுகை. அதர்ப்பட யாத்தல் – நெறிப்பட இயற்றுதல். ஆதி - தொடக்கம். சம்பன்னரான - செல்வரான. ஐயம் - சந்தேகம். திரிவு - வேறுபாடு. முரண்பட்டன—மாறுபட்டன. செங்கட்சீயம் - சிவந்த கண்களையுடைய சிங்கம் (நரசிம்ம அவதாரம்). ஊறுபாடு – இடையூறு, துன்பம். துறைபோயவர் – கற்றுத்தீர்த்தவர். விழைந்தார் – விரும்பினர். ஒறுத்தல் – தண்டித்தல். வண்மை - வள்ளல் தன்மை. ஆண்டு – அவ்விடம்.

வினாக்கள்

1. இராமாயணம் உலக மகா காவியங்களுள் மிக்க சிறப்புடையது என்பதற்குரிய காரணங்கள் யாவை?
2. கம்ப ராமாயணத்தின் சிறப்புக்கள் யாவை?
3. கம்பர் ராமாயணத்தை ஏன் தமிழில் பாடினார்?
4. தமிழ்ப் பண்பிற்கேற்ப கம்பர் தமது பாத்திரங்களை எவ்வாறு படைத்துள்ளார்?
5. கம்பரது வரலாற்றை நீ அறிந்த வரையில் சுருக்கி வரைக.
6. கம்பராமாயண அரங்கேற்றத்தின் போது நடந்த நிகழ்ச்சி யாது?
7. அரசனது இயல்புகளாகக் கம்பர் கூறுவன யாவை?
8. ஆசிரியர் அவர்கள் எதனை நம் கடமையெனக் குறிப்பிடுகிறார்?

பயிற்சி

1. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—
   இன்றியமையாத, பொருத்தமற்றன, ஐயந்திரிபற, அரங்கேற்றம், கையாண்டிருக்கிறார்.
2. பிரித்து எழுதுக :—
   பேரறிவு, ஐயந்திரிபற, அவருரையை, விரிவுரை யாசிரியர்.
3. "கம்பரது கவிநயம்" எனும் பொருள் பற்றி 40 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.
4. சிறு குறிப்பு வரைக.
   ஆழ்வார்கள், நாயன்மார்கள், சடகோபரந்தாதி.

3. ஓய்மான் நல்லியக் கோடன்

(புரவலர்)

வித்துவான் R. பாஸ்கரப்பிள்ளை,

தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, பள்ளிகொண்டா.

சங்க நூல்களில் முடியுடை வேந்தர் மூவரே யன்றி மற்றும் பலர் சிறந்த வீரராகவும், கொடையாளராகவும், காணப்படுகின்றனர். வேள்பாரி, வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி, அதிகமான் நெடுமான் அஞ்சி, பேகன், வேள்ஆய், நள்ளி என்ற எழுவரும் சிறந்த வீரராயும், பெருங் கொடையாளராயும் விளங்கினர். இவர்களைக் கடையெழு வள்ளல்கள் என வழங்குகின்றனர்.

சங்க நூல்களுள் ஒன்றாய் அமைந்துள்ள புற நானூற்றில் பெருங் கொடையாளராயும், வீரராயும் இன்னும் பலர் காணப்படுகின்றனர். எனினும், இவர்களை மட்டும் சேர்த்து "வள்ளல்கள் எழுவர்" எனக் கூறுகின்றனர். ஏனெனில், பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் இவ்வெழுவரையும் சேர்த்துக் கூறி "இவ்வெழுவரும் இறந்த பிறகு இவர்களுடைய வள்ளல் தன்மையை நீயே மேற் கொண்டுள்ளனை", என்று குமணனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஓய்மான் நல்லியக் கோடன் என்னும் சிற்றரசன்மீது நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர் பாடிய சிறுபாணாற்றுப் படையில் மூவேந்தரையும் மேற் கூறப்பட்ட எழுவரையும் எடுத்துக்கூறி, "இவர்கட்குப் பின் வள்ளல் தன்மையை நீயே மேற் கொள்ளனை" என்று நல்லியக் கோடனை நத்தத்தனார் சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

மேற் கூறப்பட்ட இரு புலவர் கூற்றையும் நோக்குமிடத்து, இவ்வெழுவரும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சிறந்த வீரராயும் பெருங் கொடையாளராயும் விளங்கினர் என்ப

தும், அதனுல் இவ்விரு புலவர்களும் இவ்வெழுவரையும் சேர்த்துக் கூறினர் என்பதும், இதனுல் இவ்வெழுவரும் ''வள்ளல்கள் எழுவர் '' என வழங்கப்பட்டனர் என்பதும் புலனுகின்றன.

இவ்வாறு நல்லூர் நத்தத்தனுர் சிறப்பித்துக் கூறிய ஒய்மான் நல்லியக் கோடன் என்ற சிற்றரசன் சங்க கால வள்ளல்களில் ஒருவன். சிறுபாணுற்றுப் படை என்னும் நூலின் தலைவன். கடையெழு வள்ளல்களுக்குக் காலத்தாற் பிந்தியவன். இவன் காலத்தில் இவனினும் சிறந்த வள்ளல் கள் இலர் எனத் தெரிகிறது.

புற நானூற்றில் ஒய்மான் நல்லியக் கோடனையும், ஒய்மான் நல்லியாதனையும், ஒய்மான் வில்லியாதனையும் புறத்திணை நன்னுகனுர் என்ற புலவர் பாடியதாகக் காணப்படு கிறது. நல்லியக் கோடன், ''பெருமா விலங்கைத்தலைவன்'' எனவும், வில்லியாதன், '' இலங்கைக் கிழவன்'' எனவும் குறிப்பிடப்படுகின்றனர். மூவரையும் ஒருவரே பாடியிருப்ப தாலும், இவர் ''இலங்கைக்கிழவன்'' எனக் குறிப்பிடப்படு வதாலும், மூன்று பெயர்களும் ஒருவரையே குறிப்பிடுகின் றன எனக் கொள்ளலாம். அதாவது நல்லியக் கோடனுக்கே நல்லியாதன், வில்லியாதன் என்னும் பெயர்கள் உள்ளன எனக் கொள்ளலாம். நல்லியாதனும் வில்லியாதனும் நல்லியக் கோடனின் பரம்பரையினர் என்று உயர்திரு. வெ. சாமிநாத ஐயர் அவர்கள் கூறியுள்ளார்.

சிறுபாணுற்றுப் படையில் நல்லியக் கோடன் '' உறு புலித்துப்பின் ஓவியர் பெருமகன்'' என்று குறிக்கப்படுகிருன். ஓவியர் பெருமகன் என்பதே ஓய்மான் என்று மருவியிருக்க லாம். அவன் ஆண்ட நாடு ஓய்மான் நாடு எனப்பட்டது போலும். ஓவியர் குடி, நாகர் குடியினுள் ஒரு பிரிவாகும்.

பரிசில் பெற்றுத் திரும்பி வரும் ஒரு பாணன் அது பெறக் கருதிய மற்றெரு பாணனுக்கு நல்லியக் கோடனது நாட்டு

வளத்தையும் அவனது வள்ளல் திறத்தையும் புகழ்ந்துரைக்கின்ருன்.

நாட்டு வளம்: நெய்தற்பகுதி:—கடற்கரையில் உள்ள தாழை அன்னம் போன்ற மலரை வெளிப்படுத்தும்; செருந்தி பொன்னைப் போன்ற நிறமுள்ள மலரைத் தோற்றுவிக்கும்; முள்ளி நீலம் போலப் பூவை மலரச் செய்யும். இம்மலர்கள் நிறைந்த கடற்கரை ஊர்களையும், குளங்களையும் நெய்தற் பகுதியில் காணலாம். அங்கு எயிற் பட்டினம் என்ருெரு சிறந்த நகரம் உள்ளது.

முல்லைப்பகுதி:—அவரை பவளம் போல மலர்ந்திருக்கும்; மயிலின் கழுத்தைப் போன்ற நிறத்துடன் காயா மலர்கள் மலர்ந்திருக்கும்; காந்தள் கைவிரல் போலப் பூத்திருக்கும்; எங்கும் முல்லைக் கொடிகள் படர்ந்திருக்கும். வெடிப்புக்களில் குதிக்கும் நீரையுடைய அருவிகளைக் கொண்ட மலையையுடையது. அங்கு வேலூர் என்ற நகரம் உள்ளது.

மருதவளம்:—இங்குக் காஞ்சி மரங்கள் மிகுந்துள்ளன. மாலை தொடுத்தாற்போல மலர்கள் மலர்ந்திருக்கும். அவற்றின் கிளைகளில் கிச்சிலிப் பறவை தங்கியிருயிக்கும். அது பொன்னிற வாயினையும் நீலமணி போலும் நிறத்தினையும் உடையது. அப்பறவை நீரில் மூழ்கி மீன்களைப் பிடிக்கும். அப்பறவையின் நகங்களால் தாமரை இலைகள் கிழிக்கப் படும். அவ்விலைகட்கிடையே மலர்ந்துள்ள தாமரை மலரில் தேன் உண்ணுகின்ற கருநிற வண்டுகளின் வரிசை, திங்களைச் சேர்கின்ற கரும்பாம்பை ஒப்பத் தோன்றும். இத்தகைய சிறப்புக்களையுடைய மருத நிலத்தில் உள்ள ஊர்களில் ஒன்று ஆமூர்.

நல்லியக் கோடனது மூதூர்:—அரண்மனை யானைகளின் நாக்குகள் மேல் நோக்கி எரியும் நெருப்புச் சாய்ந்தாற்போன்ற தோற்றத்தின; மருப்புக்கள், பேய்மகள் நிணத்தைத் தின்று சிரிக்கும்போது விளங்கித் தோன்றும்

பற்களை ஒப்பன. அவற்றின் கால் நகங்கள், போர்க் களத்தில் வெட்டுண்ட தலைகளைத் தம் கால்களால் தள்ளுதலால் சிவப்பேறிக் காணப்படும். அக்கரிகளின் மதநீர் மூதூர்த் தெருக்களில் எழும் புழுதியை அடக்கும். அம்மூதூரில் வள்ளலது அரண்மனை உள்ளது. அதன் வாயில், மேரு கண்விழித்துப் பார்த்தாற்போலத் தோன்றும். அதன் வழியாகச் சுற்றத்தோடு வரும் பொருநரும், அறிஞரும், அந்தணரும் அரண்மனையினுட் புகலாம்.

இத்தகைய வளமுடைய நாட்டை ஆளும் நல்லியக் கோடன் புலவர்கள் தம்பால் வந்து பரிசில் பெறக்கருதித் தம்மைப் புகழ்ந்து பாடுவாராயின், அவர்கள் பாடி முடிப்பதற்குள் அவ்வள்ளல் மாசற்ற உடையினைத் தந்து உடுக்கச் செய்வான் ; மயக்கம் தரும் கள்தெளிவை அருந்தத் தருவான் ; முறைப்படி சமைத்த பொற்கலத்தில் இட்டுத் தான் எதிரில் இருந்து உண்ணச் செய்வான் ; பகைவர் நாட்டிற் கைக்கொண்ட பொருளைத் தன்னை விரும்பி வந்த புலவர்களுக்கு வழங்குவான் ; மிக்க வேலைப்பாடு அமைந்த தேரோடு, கரி, பரி அணிவகைகள் முதலியவற்றைப் புலவர்கள் உள்ளம் உவப்ப அளித்துக் களிப்பான் ; பின்னரே புலவர்களைச் செல்ல அனுமதிப்பான் என்று சிறு பாணாற்றுப் படை கூறுகின்றது.

புறநானூற்றில் நல்லியக் கோடனைப்பற்றிக் கூறுவதாவது :—''நீர் வளமுடைய மாவிலங்கை என்ற ஊர்க்குத் தலைவன் ; வறியோர் பலர் பாடிய புகழ்மாலைகளை யணிந்தவன் ; அவனைத் துணையாகக் கொண்டதனால், என் விதியே, நினக்கு ஓர் குறையுமில்லை. அவன் வாழ்க'' என்றும்,

''ஞாயிறு மறைந்த பின் நல்லியக் கோடனின் நன் மனையருகில் நின்று பாடினேன். விரைவில் கிழக்கே மதியமும் எழுந்தது. என் நிலையை அறிய முடியாதவாறு மாறியிருந்த என் உருவத்தையும், நைந்து கிழிந்த என் கந்தல் உடையையும் அவ்வள்ளல் கண்டான். என் கைத் தாளத்தைத் தான்

வாங்கிக்கொண்டு, கள்ளும் சூடான இறைச்சியும் தந்து, என் வறுமை தீரச் செல்வமும் அவ்விரவிலேயே வழங்கி, என் துயர் தீர்த்தான். அவனே என் தலைவன்; வறுமை தீர்த்த தெய்வமாக அவன் விளங்கினான். ஆகவே, அன்றோடு இனியும் பிறர்பாற் சென்று இரப்பதை யான் சிந்தித்தும் அறியேன்'' என வள்ளலின் வள்ளல் தன்மையை நன்னாகனார் என்னும் புலவர் புகழ்ந்துள்ளார்.

மேலும் ''நெல் வயல் நெருங்கிய மாவிலங்கையின் தலைவன் வில்லியாதன். நெய்யிலே பொரித்த பன்றித் தசையும் சோறும் இரவல் மாக்களுக்கு என்றும் தந்து, பசிதீர்ப்பவன் அவன் என்று ஒரு பொருநன் கூற, அதனைக் கேட்டதுமே நின்னைக் காண வேண்டு மென்னும் அவா மிகுந்தேன். தாயினிடத்திலே பாலுண்ணத் தாவி வரும் குழந்தைபோல் நின்பால் பரிசு பெறும் ஆசை ஏவ இங்கு வந்தேன். நின் திருமனைக்கண் இரவலர்க்கு அமுது அளிக்க உணவாக்க எழுந்த புகை மேகம் போல வானை மறைக்கின்றது. எனக்கும் உதவுக பெருமானே'' என நன்னாகனார் நல்லியக் கோடனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இத்தகைய முறையில் வள்ளல்கள் புலவர்களை ஆதரித்து, தமிழை வளர்த்தார்கள். தமிழ்நாட்டிற்கு என்றும் அழியாப் புகழைத் தந்துள்ளார்கள். வாழ்க அவர்கள் வள்ளன்மை.

அருஞ்சொற்பொருள்

வழங்குகின்றனர் - சொல்லுகின்றனர். கொள் - நிரம்ப. கொள்ளனை - நிரம்பப் பெற்றனை. இலர் - இல்லை. மருவியிருக்கலாம் - மாறியிருக்கலாம். செருந்தி - வாட்கோரை. முள்ளி - வாழை. திங்கள் - சந்திரன். மருப்புக்கள் - யானைத் தந்தங்கள். நிணத்தை - மாமிசத்தை. கரி - யானை. பொருநரும் - ஏர்க்களத்தேனும் போர்க் களத்தேனும் சென்று பாடும் கூத்தரும். ஞாயிறு - சூரியன். மதியம் - சந்திரன்.

வினுக்கள்

1. கடையெழு வள்ளல்கள் யாவர்?

2. கடையெழு வள்ளல்களும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆசிரியர் அவர்கள் காட்டும் சான்றுகள் யாவை?

3. ஓய்மான் நல்லியக் கோடனின் சிறப்புக்கள் யாவை?

4. சிறுபாணுற்றுப் படையில் நல்லியக் கோடன் எவ்வாறு குறிக்கப்படுகின்ருன்? அதிலிருந்து நாம் அறிவது யாது?

5. நல்லியக் கோடனது நாட்டு வளத்தைப் பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

6. நல்லியக் கோடனது மூதூரைப் பற்றியும் ஆண்டுள்ள யானைகளைப் பற்றியும் கூறுக.

7. பரிசில் பெறக்கருதித் தம்மைப் புகழ்ந்து பாடும் புலவர்களை நல்லியக் கோடன் எவ்வாறு சிறப்பிப்பான்?

8. நல்லியக் கோடனைப்பற்றிப் புலவர் நன்ஞகனுர் புறநானூற்றில் புகழ்வதைத் தொகுத்து வரைக.

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—
புலஞகின்றன, வளமுடைய, வழங்கி, அவாமிகுந்தேன், தாவி வரும்.

2. சிறு குறிப்பு வரைக :—
நல்லூர் நத்தத்தனுர், நன்ஞகனுர், சிறுபாணுற்றுப் படை, பெரும்பாணுற்றுப் படை, புறநானூறு.

3. கடையெழு வள்ளல்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தறிக.

4. குட்டித் திருவாசகம்

(இலக்கியம் எழுந்த வரலாறு)

வித்துவான் M. D. பழனி மகாதேவன்,

தமிழாசிரியர், ஆம்பூர்.

திருவாசகம் என்பது சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய மணிவாசகப் பெருமானருளிய நூலாகும். அவ்வரிய நூலைக் குறித்துத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பலபடப் பாராட்டிக் கூறியுள்ளார்கள். உள்ளம் நெக்கு நெக்குருக இறைவன் பால் ஈடுபடும் செம்மனச் செல்வராவர் கன்மனத்தவரும். இக்கருத்தை அவர்,

> ''திருவா சகமிங் கொருகா லோதின்,
> கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
> தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய,
> மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர் விதிர்ப் பெய்தி
> அன்பர் ஆகுந ரன்றி
> மன்பதை யுலகின் மற்றைய ரிலரே''

என்றருளிய வாற்றான் உணரலாம். அத் திருவாசகத்தோ டொருங்கு வைத்து எண்ணப்படா விடினும் உள்ளத்தை உருக்கி உணர்வைக் கவர்வதில் சிறந்து விளங்குகின்ற மையால், 'திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி' என்னும் நூல் ''குட்டித் திருவாசகம்'' எனப் பெயர் பெறுவதா யிற்று.

இந்நூல் கருவைமா நகரில் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் சிவபெருமானைக் குறித்து அதிவீர ராம பாண்டியரால் அருளிச்செய்யப்பட்டதாகும்.

அந்தாதியாவது, முன் நின்ற பாடலின் இறுதி எழுத் தேனும், அசையேனும், சீரேனும், அடியேனும் பின்வரும் பாடலின் முதலாக வருமாறு தொடுக்கும் ஒருவகைப் பிர

பந்தம் ஆகும். அந்தத்தை ஆதியாக வுடைமையின் அந்தாதி எனப் பெயர் பெற்றது. ஒரே வகைச் செய்யுளால் நூறு பாடல்கள் அந்தாதியாகத் தொடரப் பாடுவதே பெரும்பாலும் அந்தாதி யெனப்படும். சந்த வேறுபாட்டால் பத்து வகையான செய்யுளால் நூறு பாடல்கள் அந்தாதியாகத் தொடர அமைந்தது ஆதலின் இது ''பதிற்றுப் பத்தந்தாதி'' எனக் கூறப்பட்டது.

கருவையென்னும் ஊர் பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் செல்லும் சாலையில் சங்கர நயினர் கோயிலுக்கு வடக்கேயும், திருநெல்வேலி நகருக்கு வடமேற்கேயுமுள்ள ஒரு சிவத்தலமாகும். இது கரிவலம் வந்த நல்லூர் எனப்படும். குலசேகர பாண்டியனென்னும் அரசனொருவன் ஓரமயம் வேட்டையாடச் சென்றனுக, அவனெதிர்ப்பட்ட யானையொன்று அவன் அம்புக் கஞ்சி, சிவாலய மொன்றினை நாடி, இறைவனிருந்தருளிய புதரை வலம்வர, இத்தலம் இப்பெயர் பெற்ற தென்பர். கரிவலம் வந்த நல்லூர், கருவை என மருவி, மேன்மையை உணர்த்தும் திருவெனும் அடை பெற்றுத் திருக்கருவை என்றாகியது.

இந்நூலாசிரியர் விருத்தப் பாக்களான் நைடதமென்னும் நூலைத் தமிழ் மொழியிலியற்றினர். நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலாராம் வரதுங்கராம பாண்டியர் மனைவியாரிடம் அதனைப் படித்துக் காட்ட, அப்பெண் மணியார், ''இந்நூல் வேட்டைக்குச் சென்ற நாய் திரும்பி வருதல் போன்று, 'சென்று தேய்ந்திறுதல்' என்னும் குற்றத்தின்பாற் பட்டுள'' தென்று குறிப்பிட்டார். அப்பெருமாட்டியின் இழித்துரையைப் பொருத அதிவீர ராம பாண்டியர், அந்நூலைக் கிழித்தெறிய முற்பட்டார். அதைக் கண்ட அவ்வம்மையார் அவரைத் தடுத்து அந்நூலுக்கு, ''நிலவுபொழி தனிக்கவிதை'' எனத் தொடங்கும் சிறப்புப் பாயிரச் செய்யுளை யளித்து நிலை பெறச் செய்தனர்.

மேலும், அப்பெண்மணியார், அதிவீர ராம பாண்டியரைப் பார்த்து, "நீவிர் நும் நூலில் பெண்களின் கவினைப் புனைந்துரைத்துள்ளீர். அச்செயலால் நுமக்கு இம்மை, மறுமைகளில் விளையப்போகும் பயன் யாதேனுமுண்டோ? ஒன்றுமின்று. ஆகையின், பிறவா யாக்கைப் பெரியோனை மறவா துருகச் செய்யுளியற்றுமின்" என அறிவுரை பகர்ந்தார். அதனை அறவுரையாகக் கொண்ட அதிவீர ராம பாண்டியர், கருவைப் பெருமானைக் கனவிலும் கருதும் கருத்தராகலின் அப் பரனை நினைந்து நினைந்து கசிந்துருகிப் பாடுவா ராயினர். இந்நூலின் 63ஆம் பாடலாகிய

"சிந்தனை உனக்குத் தந்தேன்,
திருவருள் எனக்குத் தந்தாய்;
வந்தனை உனக்குத் தந்தேன்
மலரடி எனக்குத் தந்தாய்;
பைந்துணர் உனக்குத் தந்தேன்
பரகதி எனக்குத் தந்தாய்;
கந்தனைப் பயந்த நாதா;
கருவையி லிருக்கும் தேவே!"

என்பதில் இறைவனை வணங்குதற்கும் அவன் திருவருளே காரணம் ஆதலினாலும், அடியார் வணங்குதற் குரியது இறைவன் திருவடியே ஆதலினாலும் இறைவன் திருவருள் பெற்றபின்,

"வந்தனை உனக்குத் தந்தேன், மலரடி எனக்குத் தந்தாய்" என்று கூறுவாரானார்.

"அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்ற திருவாதவூரடிகளின் திருவாக்குப்படி இறைவனருள் பெற்றவருக்குத்தான் அவன் திருவடிகளை வணங்கும் நற்பேறு கிட்டும் என்பதும் உணரப்பெறும்.

அருஞ்சொற்பொருள்

குரவர் - சான்றோர். நெக்கு நெக்குருக - மனம் நெகிழ. கன் மனம் - கல் மனம். கேணி - கிணறு. பொடிப்ப - புளகித்தல். விதிர் விதிர்த்தல் - நடுங்குதல். எய்தி - அடைந்து. மன்பதை - உலகம், மக்கட் பரப்பு. கவிகை - குடை. கவின் - அழகு. புனைந்துரைத்தல் - அழகுபட உரைத்தல். யாக்கை - உடம்பு. பகர்ந்தார் - சொன்னார்.

வினாக்கள்

1. குட்டித் திருவாசகம் என்பது யாது? இந்நூல் யாரால் யாரைப் பற்றி அருளிச் செய்யப்பட்டது?
2. அந்தாதி எனப்படுவது யாது?
3. கருவை என்னும் தலம் எங்கு உளது? இத்தலம் எப்படி கரிவலம் வந்த நல்லூர் என்னும் பெயரைப் பெற்றது?
4. அதிவீரராம பாண்டியர் நைடதத்தை ஏன் கிழித்தெறிய முற்பட்டார்?
5. அதிவீரராம பாண்டியர்க்கு வரதுங்கராம பாண்டியர் மனைவி கூறிய அறிவுரை யாது?

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுது :—
   நெக்கு நெக்குருக, ஒருங்கு வைத்து, எழுந்தருளியுள்ள, எதிர்ப்பட்ட, பொருத.
2. தேவாரம், திருவாசகம் போன்ற தெய்வ மணம் கமழும் நூல்களால் உலகம் அடையும் நன்மைகளை ஆராய்க.
3. குட்டித் திருவாசகத்தைப் பற்றி 30 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

5. ஐயம் அகற்றுக !

(உரையாடல்)

திரு. V. சுந்தரம் B.SC., B.T.

விஞ்ஞான ஆசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி,

கள்ளபாளையம்.

(கொட்டாவி — 'டிரான்சிஸ்டர்' — 'ரேடியம்' — மின்மினிப் பூச்சி—கடல் நீர் — ரஃப்ளீசியா — 'கோக்கோ' — 'ஹெலி காப்டர்')

ஆசிரியர் : எண்ணுகின்ற போதெல்லாம் இனிக்கின்ற மாணவர்களே, நீங்கள் படிக்கின்றவர்கள் ; படிக்கின்ற கருத்துக்களையும் கேட்கின்ற கொள்கைகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியவர்கள். சில உங்கட்கு விளங்கும்; சில விளங்கா ; இன்னுஞ் சில மயக்கந் தரும்; வேறு சில ஐயத்தைக் கிளப்பும். ஐயம் தோன்றுகின்ற இடம் அறிவு மலர்கின்ற இடம் ; ஆராய்ச்சி வளர்கின்ற இடம். இதனை உணர்ந்த ஆசிரியராகிய எங்கள் கடன், உங்கள் ஐயங்களையும் திரிபுகளையும் அகற்றுதல் ஆகும். எனவே இன்றைய வகுப்பை ஐயங்களை அகற்றுகின்ற வகுப்பாக நடாத்த விரும்புகின்றேன். நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பும் எதைப்பற்றி வேண்டுமானாலும் வினவுங்கள் ; உங்கள் மனதைக் குடையும் ஐயங்களைத் தெரிவியுங்கள், விளக்கங்கூற முயல்கின்றேன்... என்ன ? இளமுருகா, கொட்டாவி வருகிறதா ? நேற்றிரவு இரண்டாம் காட்சிக்குச் சென்றாயாக்கும் ?

இளமுருகன் : இல்லை ஐயா...

மணவழகன் : கொட்டாவி ஏன் வருகிறது, ஐயா ?

ஆசிரியர் : நன்ருகக் கேட்டாய்... கொட்டாவி நமக்கு எப்போது வருகிறது? சோர்வாகவோ, தூக்கக் கலக்க மாகவோ அல்லது உற்சாகமின்றியோ இருக்கும்போதுதான். அச்சமயங்களில் நாம் சாதாரணமாக மூச்சுவிடுகின்ற அளவு மூச்சு விடுவதில்லே. ஆகவே நமது குருதியில் 'ஆக்சிஜன்' அல்லது உயிரகம் போதுமான அளவில் இராது. அந்த 'ஆக்சிஜன்' குறைவை ஈடுகட்ட ஆழமாக மூச்சுவிடும்படி, மூச்சுவிடுதல் சம்பந்தப்பட்ட உறுப்புகட்கு மூளே ஆணையிடு கின்றது ; எனவே கொட்டாவி வருகின்றது.

கொட்டாவி விடும்போது அதிகமான உயிரகத்தை உள்ளிழுத்து, அதிகமான அளவில் 'கார்பன் டை ஆக்சைடு' அல்லது கரியிரகத்தை வெளியிடுகின்ருேம். சில சமயங் களில் நாள் முழுவதும் கொட்டாவி வந்து கொண்டே இருக்கும். அதன் காரணம் சோர்வோ, தூக்கமோ அன்று; ஒருவகை நோயாகும். நுரையீரல்கள் சரிவர இயங்காமை யால் விளேவது அது.

நாவுக்கரசன் : ஐயா, 'டிரான்சிஸ்டர்' ரேடியோவுக் கும் சாதாரணமாகக் காணும் ரேடியோவுக்கும் வேறுபாடு உண்டா, ஐயா ?

ஆசிரியர் : நிறைய உண்டு, சாதாரண வானெலியும் 'டிரான்சிஸ்டர்' வானெலியும் உருவத்தில் மாறுபட்டவை ; அமைப்பிலும் வேறுபட்டவை. சாதாரண வானெலிப் பெட்டியில் உள்ள சில குறைபாடுகளேப் போக்க வழி யாது என்று ஆராய்ந்தபோது, 'டிரான்சிஸ்டர்' வானெலியைக் கண்டறிந்தார்கள்.

'டிரான்சிஸ்டர்கள்' உருவத்தில் சிறியவை. தீப்பெட்டி யளவிலும் பென்சில் அளவிலும் 'டிரான்சிஸ்டர்கள்' உள்ளன. ஒரு முட்டைக்குள் அடங்கும் அளவில்கூட அவை உண்டு. தோளில் போட்டுக் கொள்ளும் அளவு அமைந்

துள்ள டிரான்சிஸ்டரைத் தோளில் சுமந்து கொண்டு சுற்றுதல் நகரங்களில் நாகரிகமாகக்கூட ஆகிவிட்டது.

இந்த வானொலிப் பெட்டிகள் பலவகையில் சிறந்தவை. இவைகளுக்கு நீண்ட 'ஏரியல்' கம்பிகள் தேவையில்லை. குறைந்த ஆற்றலுள்ள மின்னூக்கிகளே (Batteries) போதும். இவ்வகை வானொலிகள் மிகக் குறைந்த அளவு வெப்பத்தையே வெளியிடுகின்றன. மேலும் சாதாரண வானொலியில் உள்ள 'வால்வு'களைவிட டிரான்சிஸ்டரில் உள்ள வால்வுகள் நன்கு உழைக்கக் கூடியன; நீடித்து நிற்கக் கூடியன.

சாதாரண வானொலிகளை நாம் பொழுது போக்குக்கோ அல்லது கல்வி அறிவு பெறுதற்கோதான் பயன்படுத்து கிறோம். ஆனால் 'டிரான்சிஸ்டரி'ன் பணிகள் பலதிறத்தன. வானவெளியாராய்ச்சி, நிலத்தினடியில் உள்ள உலோ கங்கள் - தண்ணீர் பற்றிய ஆராய்ச்சிகள் முதலியவற்றுக்கு 'டிரான்சிஸ்டர்'கள் பயன்படுத்தப்படுகின்றன என்றறிய வியப்பாக இருக்கிறதல்லவா?

கார்வண்ணன்: 'டிரான்சிஸ்டர்' வானொலியின் விலை குறைவுதானே, ஐயா?

ஆசிரியர்: அதுதானில்லை. அதில் பல நுண்ணிய வேலைப்பாடுகள் உள்ளன. ஆகவே விலை அதிகந்தான். மேலும் அவை சீர்கெட்டால் செப்பனிடல் எளிதன்று; செய்யப்பட்ட தொழிற்சாலைக்கனுப்பித்தான் செப்பனிட முடியுமாம்.

நக்கீரன்: ஐயா, நேற்று எங்கள் அண்ணா ஒரு கைக் கடிகாரம் வாங்கிவந்தார். அதில் இருட்டில்கூட மணி பார்க்க முடிகிறது; 'ரேடியம்' அதில் இருக்கிறதென்று அண்ணா சொன்னார். அது என்ன, ஐயா?

ஆசிரியர்: 'ரேடியம்' என்பது மேசை உப்பைப் போன்ற வெண்ணிறத் தூளே. ஒரு பவுண்டு 'ரேடியம்' ஆயிரம் பவுண்டு தங்கத்துக்குச் சமம் என்ருல், அதன் மதிப்பை மதிப்பிடுங்களேன்! 'ரேடியம்' கிடைப்பது மிக மிக அரிது. உலகத்தில் உள்ள ரேடியத்தின் அளவு வெகு சில தேக்கரண்டிகளே என்ருல் அதன் மதிப்பை மதிப்பிடலும் எளிதோ? இத்தகு ரேடியத்தின் ஆற்றல் வியப்புக்குரிய தாகும்.

ஒரு பவுண்டு அல்லது இரண்டு பவுண்டு ரேடியத்தை ஓரிடத்தில் சேர்த்து வைத்தால், அருகில் வரும் மக்களை யெல்லாம் கொன்றுவிடும் ஆற்றல் உடையது. அதனைத் தொட்டுக் கையாள்கின்றபோது எந்தவித வலியும் தெரியாது. ஆனுல் ஓரிரண்டு வாரங்களில் அதுபட்ட இடத்தில் தோலுரியும்; பார்த்த கண்கள் குருடாகும்; சாவும் தொடரும். 'ரேடியம்' இருட்டில் மிகப் பிரகாசமாக ஒளிரும். இதில் விந்தை என்னவென்ருல் ஒளி விடுவதால் அதன் ஆற்றல் அழிவதில்லை; எடையும் குறைவதில்லை.

'இவ்வளவு விலையுயர்ந்த—ஆற்றல் வாய்ந்த—ரேடி யத்தை, சிறிய நூறு ரூபாய்க் கடியாரத்தில் எப்படிப் பயன் படுத்த முடிகிறது?' என்று வியப்பாக இருக்கிறதா? உண்மை என்னவென்ருல் இருட்டில் ஒளிர்வது தனியான ரேடியமன்று; ரேடியத் துகள் கலந்த துத்தநாக சல்பேட்டே யாகும். ஒரு குண்டூசித் தலையளவுள்ள ரேடியத்தைக் கொண்டு பல்லாயிரக் கணக்கான கடியாரங்களை ஒளிர வைக்க முடியும். ரேடியத்தின் ஆற்றல் அழியாது என்று முன்பே கூறினேன். ஆனுல் கடிகாரத்தில் உள்ள ஒளி இரண்டு மூன்று ஆண்டுகளில் மங்கி மறைந்துவிடுதலைக் காண்கின்ருேம். இதற்குக் காரணம் ரேடியத்தின் ஆற்றல் குறைவதன்று; துத்தநாக சல்பேட்டின் ஆற்றல் அருகி அழி வதுதான்.

மருத்துவத் துறையிலும் ரேடியம் பெரும்பயன் விளைக்கின்றது. புற்று நோய்ச் சிகிச்சையிலும், சிலவகைக் கட்டிகளைக் குணமாக்குவதிலும் ரேடியம் பயன்படுகின்றது. ரேடியத்தைக் கண்டறிந்தவர்களில் கியூரி அம்மையார் என்ற ஃபிரெஞ்சு மாது குறிப்பிடத்தக்கவராவர்.

முல்லை: ஐயா, மின்மினிப்பூச்சி இரவில் மின்னுகின்றதே, அதன் உடலிலும் 'ரேடியம்' உள்ளதா?

ஆசிரியர்: இல்லை முல்லை, இல்லை. அதன் உடலில் தோன்றும் ஒருவகைப் பொருளே அங்ஙனம் மின்னுகின்றது.

மின்மினிப்பூச்சி ஒருவகை வண்டு. அது கோடையில் கூட்டங் கூட்டமாகப் பறந்து செல்லும்; செடி கொடிகளில் வசிக்கும். இருள் பரவியதும் மஞ்சளும் பச்சையுங் கலந்த ஒளியோடு மின்னிக் கொண்டிருக்கும். பெண் மின்மினிக்குச் சிறகில்லையெனினும் அதற்குத்தான் ஒளி அதிகம். முன் காலத்தில், அமெரிக்காவின் காட்டு மனிதர்களில் சிலர் இப் பூச்சிகளைப் புட்டிகளில் அடைத்து அவை பரப்பிய ஒளியினைப் பயன்படுத்தினர்கள் என்றறிய வியப்பாக உள்ளதல்லவா?

மின்மினியைப் போன்றே ஒளிவிடுகின்ற பல்வகையான மீனினங்கள் உள்ளன. ஆழ்ந்த கருங்கடலின் அகத்தே வாழ்கின்ற மீன்களே ஒளியை உண்டாக்குகின்றன. சிலவற்றின் ஒளி 'டார்ச்' விளக்கின் ஒளியைவிடப் பிரகாசமாக இருக்குமென்று சொல்கிருர்கள். ஒருவகை மீன்களில் இருபுறமும் இரண்டு ஒளிப்புள்ளிகள் இருக்கும்; ஒன்று, பச்சையொளியை உமிழும்; மற்றது செவ்வொளி பரப்பும். வேறு சில மீன்களின் இருபுறமும் ஒளிப்புள்ளிகள் வரிசையாக இருக்கும். அவை நீந்திச் செல்கின்றபோது வழங்கும் காட்சி, இரயில் தொடர் இரவில் செல்கின்றபோது காண்கின்ருேமே கண்கொள்ளாக் காட்சி, அது போன்றிருக்கும். இன்னுஞ் சில மீன்கள் மின்சாரத்தை உண்டாக்கும். அம்

மின்னாற்றலால் தம்மைவிடப் பெரிய மீன்களைக் கூடச் செயலறச் செய்து உணவாக்கிக் கொள்ளக் கூடியன அவை. உப்புக் கடலில் இத்தகு ஒளிக் கோலங்களைக் காணுதல், உவகைதரும் ஒப்பற்ற காட்சியன்றோ ?

மணிவண்ணன் : ஐயா கடல் நீர் மட்டும் ஏன் அவ்வளவு உப்பாக இருக்கவேண்டும் ?

ஆசிரியர்: மணியான கேள்வி... கடலுக்குத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது?... மூன்று வழிகளிலிருந்து கடல், நீரைப் பெறுகின்றது; அவை ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர். எனவேதான் கடலை 'முந்நீர்' என்றுகூட இலக்கியங்களில் கூறுகிறார்கள். இம்மூவகை நீர்களில் மழை நீர் தவிர மற்றிருவகை நீர்களும் நிலத்தின் வழியாகத்தான் கடலை அடைகின்றன. ஆகவே நிலத்திலுள்ள 'நைட்ரேட்டு'கள், 'சோடியம் குளோரைடு' போன்ற பலவகை உப்புக்கள் நீரோடு கலக்கின்றன; கலந்த வண்ணம் கடலை அடைகின்றன. கடலில் உள்ள நீர்மட்டும் ஆவியாகின்றது; உப்பு தங்கிவிடுகின்றது. ஆகவே நாட் செல்ல நாட் செல்ல கடலிலுள்ள உப்பு அதிகமாகின்றது. இதன் காரணம் வெறும் நீர் மட்டும் ஆவியாவதுதான். ஆகவேதான் கடல் நீர் மிகமிக உப்பாக இருக்கிறது.

இன்றைய அறிவியலின் ஆற்றலால் உப்புநீரைக் குடிநீராக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; எளிதாக்கப்பட்டு வருகின்றது சாக்கடை நீரைக்கூடத் தூய தண்ணீராகவும் குடிநீராகவும் மாற்ற முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன... என்ன, பொன்னி? முகக்தைச் சுளிக்கின்றாய்! சாக்கடை நீரைக் குடிப்பதா என்று அருவருக்கிறாயா ? சாக்கடை நீரைப் பயன்படுத்துவதன் தலையாய நோக்கம், ஆய்வுச் சாலைகளில் பயன்படுத்தத்தான் ஆய்வுச் சாலைகளில் பயன்படுத்தப்படும் நீர், குடிநீரைவிடத் தூயதாயிருக்க வேண்டும் என்பதை மறவாதே. அறிவியல்

மாணவர்கள் இதில் அருவருப்புக் கொள்ளுதலில் பொருளே இல்லை. இல்லையா, தாமரை ?

தாமரை : ஆம், ஐயா !... எனக்கொரு ஐயம், ஐயா. உலகிலேயே பெரிய பூ தாமரைப் பூ தானே ?

ஆசிரியர் : இல்லை. என்றாலும் உன் பெருமைக்கும் குறைவு இல்லை. ஏனென்றால் இந்தியாவிலேயே அழகிய—பெரிய—பூ என்று தாமரையைச் சொல்லலாம்.

உலகிலேயே மிகப் பெரிய பூ ரஃப்ளீசியா (Rafflesia) என்பதாகும். இம்மலரின் விட்டம் பதினெட்டு அங்குலங்கள் எனவும், எடை சில சமயங்களில் பதினெட்டுப் பவுண்டுகள் எனவும் கணக்கிட்டுள்ளனர். இதில் விந்தையென்னவென்றால், இவ்வளவு பெரிய மலரையுடைய செடியின் தண்டு நூல்போன்றிருப்பதுதான். இந்தச் செடி ஓர் ஒட்டுண்ணி (Parasite) ஆகும். இதன் தண்டு, மற்ற மரங்களின் வேர்களை ஊடுருவி அங்கிருந்து உப்புச்சத்துக்கள் முதலியவற்றைப் பெறுகிறது. சுமத்திரா, சாவா போன்ற கீழை நாடுகளில் காணப்படும் இம்மலர் வகையைக் கண்டறிந்தவர் சர். ஸ்டாம்போர்டு ராஃப்ள்ஸ் (Sir Stamford Raffles) என்பவராவர். இவர் பெயராலேயே அப்பூவும் அழைக்கப்படுகின்றது.

திருமாறன் : ஐயா, கோக்கோ குடிப்பது கெடுதல் இல்லையா ?

ஆசிரியர் : கோக்கோவில் காப்பி, தேநீர் இவற்றில் உள்ளது போன்ற நச்சுப் பொருள் எதுவும் இல்லை. கோக்கோவில் உடம்பை வளர்க்கும் சத்து நிறைய உள்ளது.

கோக்கோ என்பது தென் அமெரிக்காவில் அமேசான் காடுகளில் முதன்முதல் காணப்பட்ட ஒருவகை மரம். இப்போது அதைப் பல நாடுகளில் பயிரிடுகின்றார்கள். அப்பகுதிக்கு முதன் முதல் சென்ற ஸ்பெயின் நாட்டார், 'கக்காகோ' என்று அதைக் கூறினார்கள். ஆங்கிலேயர்

இதனையே 'கோக்கோ' என்றழைத்தனர். 'தாவர நூலின் தந்தை' என்று போற்றப்படுபவர், லின்னேயஸ் (Linnaeus) என்பவர். இவர் இந்தக் கோக்கோ சுவை நீரைப் பருகியதும், ''ஆகா! இதற்குத் 'தியோப்ரமா' என்று பெயரிடுவோம்'' என்றாராம். 'தியோப்ரமா' என்றால் தேவாமுதம் என்று பொருள். இன்றுகூடத் தாவர நூலார் கோக்கோவை 'Theobroma Cocoa' என்றே அழைக்கின்றார்கள்.

கோக்கோ மரம் 40 அடி உயரம்வரை வளரும். அதன் காய் ஒரு அடி நீளம் இருக்கும். அந்தக் காய்களின் கொட்டைகளை வறுத்துத்தான் கோக்கோப் பொடி செய்கிறார்கள். இது உடலுக்கு நலம் பயக்கக்கூடியது; எல்லாரும் பருகலாம்.

கனிமொழியன்: ஐயா, மொட்டை மாடியின் மீதே விமானத்தில் வந்து இறங்க முடியுமாமே! பாதை இல்லாமல் எப்படி ஐயா விமானம் இறங்க முடியும்?

ஆசிரியர்: முடியும், கனிமொழி. 'ஹெலிகாப்டர்' விமானத்தை மொட்டை மாடியின் மீதே இறக்க முடியும். நாம் சாதாரணமாகக் காண்கின்ற போக்குவரவு அல்லது 'சர்வீஸ்' விமானங்களைத் தவிர, 'ஜெட்' விமானங்கள், 'கிளைடர்' விமானங்கள், 'ராக்கெட்' விமானங்கள், 'ஹெலிகாப்டர்' விமானங்கள் என்பனபோன்ற பலவகை விமானங்கள் உள்ளன. இவைகளில் 'ஹெலிகாப்டர்' என்ற விமானம் நேரே மேலே கிளம்பும்; பக்கவாட்டில் பறக்கும்; பின்னோக்கியும் செல்லும். இது மேலெழும்பத் தரையில் பாதைகள் தேவையில்லை.

'ஹெலிகாப்டர்' விமானங்களில் இறக்கைகள் இல்லை. 'Rotors' எனப்படும் 'சுழலிகள்' இறக்கைகள் போன்று வேலை செய்கின்றன எனலாம். காற்றின் விசையை ஒட்டியே சுழலிகளின் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. சுழலிகள் சுழலும்போது காற்றைக் கிழித்துக்கொண்டு மேலெழும்பும்.

ஊர்தியை நிலையாக நிறுத்துதற்கும், திசை மாற்றுதற்கும் வால்புறத்தில் ஒரு சுழலி அமைக்கப்பட்டுள்ளது.

ஹெலிகாப்டரின் பயன்கள் பலதிறத்தன. தீயணைத்தல், பயிர்கட்கு மருந்து தெளித்தல், நிலங்களை அளத்தல், கடலில் விபத்துக்குள்ளான கப்பல் முதலானவற்றைக் காத்தல், தரைவழியே செல்ல முடியாத இடங்கட்குச் செல்லுதல் போன்ற பலவற்றிற்கும் இவ்விமானங்கள் பயன்படுகின்றன. அண்மையில் வடநாட்டில் வந்ததே பெரும் வெள்ளம்! அப்போது வெள்ளத்திற் சிக்குண்ட மக்களைக் காக்கவும், உணவு முதலியன அவர்கட்கு வழங்கவும் ஹெலிகாப்டர்களே பயன்பட்டன.

மனதிற் கினியவர்களே! எப்போதும் போலவே இன்றைய வகுப்பும் பயன் மிகுந்ததாயும் சுவை நிறைந்ததாயும் கழிந்தது. தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பேராவல், உங்கள் இளநெஞ்சங்களை ஆள்கின்றது என்றறிய மகிழ்கின்றேன்; அந்த ஆவலை மெச்சுகின்றேன். எதையும் ஏன், எப்படி, எவ்வாறு என்று துருவித் துருவி எண்ணிப் பார்க்கின்ற அறிவு உங்களிடத்தே மலரக்கண்டு, நம் தாயகத்துக்கு விழுமியதோர் பொற்காலம் அணிமைத்தே உள்ளது என்று உவகை பூக்கின்றேன். இன்றைய வகுப்பை முடிக்கின்றேன்; உங்களுக்கு என்றன் உளங் கனிந்த வாழ்த்துக்கள்.

அருஞ்சொற்பொருள்

ஐயம் - சந்தேகம். திரிபு - வேறுபாடு. குருதி - இரத்தம். செப்பனிடல் - சீர் செய்தல். தேக்கரண்டி - தேயிலைத் தூளை அளந்து போடும் கரண்டி. அருகி - குறைந்து. உமிழும் - வெளிப்படுத்தும். கோலம் - அழகு. ஆய்வாளர் - ஆராய்ச்சியாளர். விழுமிய - சிறந்த அணிமைத்தே - பக்கத்தில்.

வினாக்கள்

1. கொட்டாவி வருவதற்கு ஆசிரியர் அவர்கள் கூறும் காரணங்கள் யாவை?

2 டிரான்சிஸ்டர் ரேடியோவைப்பற்றி பத்து வரிகளில் எழுதுக.

3. ரேடியத்தின் சிறப்பைக் கூறுக.

4. கடியாரங்களிலுள்ள ரேடியத்தைப் பற்றி ஆசிரியர் அவர்கள் குறிப்பிடுவன யாவை?

5. ஒளி உமிழும் மீனினங்களைப் பற்றி உனக்குத் தெரிந்தவற்றைக் கூறுக.

6. கடல் நீர் உப்பாக இருப்பதற்குரிய காரணங்கள் யாவை?

8. சர்வீஸ் விமானங்களைத் தவிர இன்று நாம் காணக் கூடிய வேறு விமானங்கள் யாவை?

9. ஹெலிகாப்டரின் உபயோகங்கள் யாவை?

பயிற்சி

1. சிறு குறிப்பு வரைக :—
கார்பன் டை ஆக்ஸைடு, கியூரி அம்மையார், மின் மினிப்பூச்சி, சர் ஸ்டாம் போர்டு ராஃப்ள்ஸ், லின்னேயஸ்.

2. உரையாடல் கலையின் நன்மைகளை ஆராய்க.

3. விமானங்களின் பயன்களைப் பற்றி இரண்டு பக்கங் களில் ஒரு கட்டுரை வரைக.

6. நல்ல பரிசு

(அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை)

ஆசிரியர்: பண்டித வித்துவான் தி. இராமானுசன்
மதுரை

சிம்ஸன் துரை சென்னையில் பெரிய இஞ்சினீயர்; நல்ல கலையுணர்ச்சி உள்ளவர்; சித்திரக்கலையிலும் சிறந்த நிபுணர். அவர் பிறர் திறமை கண்டு போற்றுவார்; தொழிலை ஆதரிக்கும் தூய உள்ளத்தினர்; விரும்பியதை மகிழ்ந்தளிக்கும் கொடைத்திறமும் மிக்கவர்; குழந்தை அன்பு மிகுதியும் கொண்டவர்.

அவருக்கு ஒரு குழந்தை இருந்தது. அதனை அவர் உயிரினும் இனியதாய்ப் பேணினர். குழந்தையின் அழகும் அவரை மகிழ்வித்தது. திடீர் என அக்குழந்தை நோய் கண்டு இறந்தது. அவர் எய்திய துயருக்கு இறுதி இல்லை. இறுதி நேரத்தில் அவர் படம் எடுக்கவும் இல்லை. நினைவுப் படம் ஒன்று இருந்தால் மனத்துயரை மாற்றும். எடுத்த படமும் சரியாயில்லை. குழந்தையின் மரணவுருவையே அது காட்டிற்று. இறந்த பிறகு எடுத்த அப்படத்தைத் துரை எப்படியும் செப்பனிட முயன்றார். தமது முயற்சியால் பலன் ஏற்படவில்லை. பிறரைக் கொண்டு மூடிய கண்ணைத் திறக்க வழி செய்தார். ஒன்றிலும் கருதிய முடிவு நிறைவெய்தவில்லை. இருந்தாலும் படத்தை எப்படியும் சீர் செய்ய முயன்றார்.

ஒரு முறை சிம்ஸன் துரை, நாமக்கல் வந்திருந்தார். வந்தவர், மாலையில் அவ்வூர் நகர மண்டபத்துள் நுழைந்தார். மண்டப முகப்பிலே பெரிய படம் ஒன்று மாட்டியிருந்

---

*இக்காலக் கவிஞர்கள் என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இப்பகுதி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையைப் பற்றியது.

தது. ஆசிரியர் இலக்குமணையர் என்பாரது உருவப்படம் அது. அதனை வரைந்தவர் நம் கவிஞரே. கவிஞர் பெயரும் கீழே எழுதப்பட்டிருந்தது. இலக்குமணையர் அலுவலினின்று விலகினவர். அவர் நினைவறிகுறியாய் அஃது அங்கு வைக்கப்பட்டது. படம் துரையின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. அது கையினால் வரையப்பட்டது என்பதையும் அவர் அறிந்தார். உடனே இறந்த தம் மகள் நினைவு அவருக்குத் தோன்றிற்று; கவிஞரை அழைத்து வருமாறு ஆள் அனுப்பினார்.

இஞ்சினீயர் அழைக்கக் காரணம் கவிஞர் நெஞ்சிற் படவில்லை. எப்படியும் காண வேண்டும் என்ற நினைவு அவருக்கு எழுந்தது. தந்தையாரும், ''பெரிய துரை தயவு இருந்தால் உயர் பதவி கிடைக்கும்; சென்றுவா,'' என்று ஆசி கூறி அனுப்பினார். கவிஞர் மேனாட்டு உடையினை அணிந்தார். அழைக்க வந்திருந்தவர் ஓவர்சியர். அவரோடு கவிஞரும் விரைந்து சென்றார்.

கவிஞர் வரவுக்குக் காத்திருந்த துரையும் கை குலுக்கிக் கவிஞரை வரவேற்றார். கவிஞருக்கு ஒரு சிறு விருந்தும் நடந்தது. பின்பு துரை தமது கதையினைச் சொன்னார்; இறந்த மகளின் படத்தையும் நீட்டினார். கேட்ட கதையும் பார்த்த படமும் கவிஞர் மனதை உருக்கின. அப்படம் குழந்தை இறந்த பிறகு உட்கார வைத்து எடுக்கப்பட்டது. ''வேறு படம் வீட்டில் இல்லை. இருப்பதில் குழந்தையின் இறுதிக் கால அழகு பொலியவில்லை. இதனையே நீர் எப்படியும் செப்பனிட்டுப் பெரிதாக வரையவேண்டும்,'' என்று துரை கவிஞரை வேண்டினார்; படம் வரைய ரூபாய் ஐம்பது தருதற்குத் துரை இசைந்தார். கவிஞரும் உடன்பட்டு வீடு திரும்பினார்.

தந்தையாரும் செய்தி அறிந்தார்; மைந்தர் துரையிடம் பழகியதில் மகிழ்ச்சி கொண்டார்; துரை தயவால் அலுவல் கிடைக்கும் என்று எண்ணினார்; நல்ல நாளில் கவிஞரைப்

பட வேலையைத் தொடங்கச் செய்தார். கைவண்ணம் எல்லாம் துலங்கக் கவிஞரும் படத்தைச் செவ்வனம் எழுதி முடித்தார்; நற்பெயர் பெறும் நினைவால் பற்பல முறை திருத்தினர்; துரை சொன்ன குறிப்பைப் புரையற எண்ணினர். பத்தே நாட்களில் படம் வரைந்து முடிந்தது. மீண்டும் ஒரு வாரம் ஒப்பு நோக்கினர்; முடிந்த திறமை எல்லாம் அதில் படிந்தபடி கண்டார்; மறுநாளே துரையினைக் காணவும் முடிவு செய்தார்.

சொல்லிய நாளில் துரையும் மறவாது ஆள் அனுப்பினர். கையும் படமுமாகக் கவிஞர் சென்றார். மகிழ்வு கொண்டு துரை விரைந்து வரவேற்றார். அன்று போலவே கவிஞருக்கு விருந்தும் நடந்தது. 'துரைமனப்படி வரைந்திருக்க வேண்டுமே!' என்று கவிஞர் வருந்தினர். பிறகு இருவரும் தாழ்வாரம் சென்றனர். துரை இடையே வந்த ஓவர் சீயரையும் விரைந்து விடைதந்து அனுப்பினர்; கவிஞரை எதிரே இடம் தந்து அமர்த்தினர்; படத்தையும் வாங்கிப் பிரித்தார்; கண்டதும் மகிழ்ச்சி கொண்டார். அவர் அகத்து மகிழ்ச்சி முகத்திலே பொலிந்தது. கவிஞரும் துரையின் செய்கையை அமர்ந்து நோக்கினர்.

துரை படத்தை விடாது பார்த்தார்; முன்னும் பின்னும் கவனித்தார். எட்ட நின்று பார்ப்பதும், கிட்ட நின்று நோக்குவதும் ஆனர். விலகி நின்று முகத்தை அண்ணுந்து நோக்கினர். ஓரிடம் படத்தை வைத்து வேறிடம் நின்று கண்டார். மூலையில் நின்று சாலவும் நோக்கினர். இப்படிக் கால் மணி நேரம் கழிந்தது. துரையோ, வாய்திறந்து எதுவும் பேசவில்லை. கவிஞர் நெஞ்சில் துணுக்கம் கொண்டார். துரையின் முகத்திலே மகிழ்ச்சி இல்லை.

பிறகு துரை கவிஞரின் அருகே வந்தார். வந்ததும் மனம் விட்டுப் பேசினர் அல்லர். கவிஞரின் இடத்தோளில் வலக்கையை இட்டார். மீண்டும் துரையிடம் மலைத்த காட்சியே நிலைத்தது. திறமையின் வியப்பை

மகளின் துயரம் உள்ளடக்கிற்று. வியப்பும் துயரும் துரையிடம் மாறி மாறி வந்தன. கடைசியில் துரை கவிஞரை நோக்கினர்; ''வரைந்த படம் மிகவும் சிறந்தது! குழந்தையை நேரில் காட்டியதுபோலத் தீட்டினீர்! கோணற் சிரிப்பும் கண்ணில் உயிர்க்களையும் தவருது இருக்கின்றன. என் மனைவி காணின் மிகவும் மகிழ்வாள்! சித்திரத்தில் வித்தகர் நீர்! வாழ்வில் வெற்றியும் வளமும் பெறுக!'' என நயந்தும் வியந்தும் பேசினர்.

துரை, ''பேசிய ரூபாய் ஐம்பது அமையாது; மேலும் தரவேண்டும்;'' என்று உள்ளே சென்றார்; நோட்டுக் கட்டுக்களோடு மீண்டார். கட்டு ஒன்றைக் கவிஞரிடம் கொடுத்து, மீண்டும் படம் காணச் சென்றார். கவிஞர் ஆசை மிகுதியால் கட்டைப்பிரித்தெண்ணினர். பார்த்ததும் கவிஞர் உடல் வியர்த்தது. எதிர் பாராத வியப்பு அவரை அதிர்ச்சி அடையச் செய்தது. அறுநூற்று எழுபத்தைந்து ரூபாய்கள் அதில் இருந்தன. 'துரை செய்யும் சோதனையோ!' என்றும் கவிஞர் கருதினர். இவ்வளவு அதிக ஊதியத்தை அவர் எதிர் பார்க்கவே இல்லை. ஆசை ஏற்கத் தூண்டினாலும், அறிவு எடுக்க மறுத்தது. திரும்பிய துரை, கவிஞர் நிலை தெரிந்தார்; கொடுத்த பணத்தைக் கவிஞர் தொடாததன் குறிப்பை எண்ணினர்; 'கொடுத்தது குறைவோ!' என்று அடுத்து மயங்கினர்.

மயங்கிய துரை கவிஞரை அணுகினர்; கவிஞர் நிலைக்குக் காரணமும் கேட்டார். ''பேசிய தொகை ஐம்பது; மெச்சிக்கொடுத்தாலும் கொஞ்சம் கூடலாம். பதின் மடங்கு மேலும் பெற உரிமையில்லை,'' எனத் தமது கருத்தைக் கவிஞர் உரைத்தார். நூற்றிருபத்தைந்தே மிகுதி என்று கூறித் துரை ஏற்கவேண்டினர்; ''அன்பின் காணிக்கை அது; முன்பின் பாராது கொள்ளும்,'' என்று மேலும் மன்றாடினர். பிறகு கவிஞர் காட்டத் துரை கட்டினைச் சோதித்தார். ஐந்து நூறு ரூபாய்கள், பதினேழு

பத்து ரூபாய்கள், ஓர் ஐந்து ரூபாய்—இவ்வளவும் நோட்டாய் இருந்தன. கண்ட துரைக்கு வியப்புண்டாகவில்லை; சிரிப்பே வந்தது. வாய்திறந்து சிரித்தார். உடனே நம் கவிஞரை நோக்கி, 'நீர் நல்ல புண்ணியவான்!'' என்றார்.

கவிஞருக்குப் பேசிய தொகை ரூபாய் ஐம்பது. துரை விரும்பிக் கொடுக்க நினைத்தது நூற்று எழுபத்தைந்து. பின்பு ஐந்நூறு எங்கிருந்து வந்தது? கொடுத்த துரைக்கே விவரம் புரியவில்லை. நெடிது நேர நினைவின் பின் முடிவு தெரிந்தது; மற்றொருவருக்குத் தரவேண்டிய தொகை ஐந்நூறு. அந்தக் கட்டும் இதில் சேர்ந்து விட்டது எனினும், துரை இம்முடிவைத் 'தெய்வக்கட்டளை' என ஏற்றார். 'நீர் முழுமையுமே பெற வேண்டும்' என்று கவிஞரைத் தொழுதார். கவிஞரோ, துரையின் கருத்தை மறுக்க விரும்பவில்லை; வலிய வந்ததை மகிழ்வுடன் ஏற்றார்.

அடங்கா வெற்றியுடன் கவிஞர் வீடு வந்து சேர்ந்தார். வரும் வழியெல்லாம் கவிஞர் செலவிற்குத் திட்டமும் இட்டு வந்தார். சித்திரத் தேவைக்கு வேண்டும் பணம் தந்தையார் தருவதில்லை. மைந்தர் வேலை பாராத வருத்தமே காரணம். படம் எழுதிப் பிழைப்பது மேல் என அவர் நினைக்கவில்லை. வீண்காலக் கழிவு என்பதே தந்தையார் நினைவு. ஆகவே, சித்திரச் செலவிற்குச் சொந்தப் பணம் ஒதுக்கக் கவிஞர் கருதினார்.

அதிக வரவு ஐந்நூற்றையும் அதற்கு என அமைத்தார்; சாயப் பெட்டியும் தூரிகையும் பலகருவிகளும் வாங்கினார். அதிக ரூபாய் ஐந்து நூறு கிடைத்தது தந்தையாருக்குத் தெரியாது.

படம் எழுதிய கூலி நூற்றெழுபத்தைந்து என்பதே தந்தையாரின் நினைவு. அதற்கே அவர் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அவர் முன்பு மைந்தர் மீது கொண்ட வெறுப்பெல்லாம் நீங்கினார். வேலை பாராவிட்டாலும்

கலையிலாவது திறமை வளரும் என எண்ணினர். கவிஞரும் துரையின் பரிசால் தொழிலில் தேர்வு பெற்ருர். சித்திரத் தொழிலின் வித்தகத்தை அப்பரிசு உயர்த்திற்று; தந்தை யார்க்கு மைந்தர் மீதிருந்த வெறுப்பையும் போக்கிற்று; வாழ்விலும் கவிஞரை முன் அணிக்கு ஊக்கிற்று; திறமான புலமையைப் பிற நாட்டினர் போற்றிய குறியும் ஆயிற்று. இத்தனையும் தந்த அதனை 'நல்ல பரிசு' என்று சொல்ல லாம் அல்லவா?

அருஞ்சொற் பொருள்

எய்தவில்லை - அடையவில்லை. அலுவல் - வேலை. பொலிந்தது - மலர்ந்தது. சாலவும் - மிகவும். துணுக்கம் - அச்சம், நடுக்கம். மலைத்த - மயங்கிய. தூரிகை - எழுதுகோல். வித்தகம் - கல்வி, சாமர்த்தியம்.

வினக்கள்

1. சிம்ஸன் துரையின் சிறப்புக்களைக் கூறுக.
2. சிம்ஸன் துரை கவிஞரை அழைத்துவர ஆள் அனுப்பியது ஏன்?
3. துரை கவிஞருக்கு அளித்த சிறப்பு யாது? அவர் கவிஞரிடம் வேண்டிக் கொண்டது என்ன?
4. கவிஞர் வரைந்த படத்தைக் கண்ட துரையின் நிலையையும், செய்கைகளையும் விளக்குக.
5. கவிஞர் ஏன் அதிர்ச்சி அடைந்தார்?
6. "நீர் நல்ல புண்ணியவான்" — இடஞ்சுட்டி விளக்குக.
7. துரை கொடுத்த நல்ல பரிசால் கவிஞர் பெற்ற நன்மைகள் யாவை?

பயிற்சி

1. பிரித்து எழுதுக:-

மகிழ்ந்தளிக்கும், நினைவறிகுறியாய், காத்திருந்த, கட்டைப் பிரித்தெண்ணினர், அகமகிழ்ந்து.

2. சேர்த்து எழுதுக:-

நினைவு+படம், மாட்டி+இருந்தது, உள்+அடக்கிற்று, பிரித்து+எண்ணினர், வியப்பு+உண்டாகவில்லை.

3. ஓவியக்கலையைப் பற்றி இருபக்கங்களில் ஒரு கட்டுரை வரைக.

7. நினைவுக் கோயில்

(நாடகம்)

திரு. G. அங்கமுத்து B.A.,
துணை ஆசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, இருகூர்.

நாடகப் பாத்திரங்கள்

ஷாஜஹான் — மொகலாயப் பேரரசன்.
அபுல் பாஸல் — அமைச்சர்.
உஸ்தாத் — பாரசீகச் சிற்பி.
நஸீம் — உஸ்தாத்தின் மனைவி.
பிரதாபன் — தளபதி.

இன்னும் குடிமக்கள், பறை அறைவோன் முதலியோர்.

[கி. பி. 1643 ஆம் ஆண்டு மொகலாயப் பேரரசன் ஷாஜஹானது அரசவைக்கு உஸ்தாத் ஈஸா மகமது என்ற ஒரு பாரசீகச் சிற்பி வருகின்றான். அவன் கூரிய பார்வையும் சீரிய லட்சியமும் மிக்கவன். கையில் உளி எடுத்துக் கல்லுக்கு உயிர் கொடுத்துப் பெரும்புகழ் படைத்து வாழத் துடிப்பவன். கலைஞரது உள்ளங்களைக் கண்களால் அளந்தறியும் ஆற்றலுடைய ஷாஜஹான், அவனைத் தனது ஆஸ்தானச் சிற்பிகளுள் ஒருவனாக்குகின்றார். மும்தாஜின் அந்தரங்கத்தோழி, அற்புத எழிலரசி மலர்க்கொடியினும் மென்மையுடைய ஒண்தொடியாள் நஸீம் கலைஞனது காதல் மனையாட்டி ஆனாள். தன் அன்பின் பரிசாக ஆசையின் காணிக்கையாக ஒரு நினைவுக் கோயிலை நஸீமுக்குக் கட்ட நினைத்தான் சிற்பி உஸ்தாத். அதற்குமுன் மாதிரியாக களிமண்ணினாலேயே பொம்மை மஹால் ஒன்றை நிர்மாணித்து வைத்திருந்தான். ஒருநாள் உஸ்தாத்தும் நஸீமும்

உல்லாசப் படகில் உலா வந்து கொண்டிருந்தபோது ஷாஜஹானின் இதய கீதமாக விளங்கிய மும்தாஜ் இறந்து விடுகிருள். அதற்குப் பிறகு அரண்மனையில்.....]

காட்சி: 1

காலம்: காலே.

இடம்: அரண்மனையின் ஒரு புறம்.

பாத்திரங்கள்: ஷாஜஹான், அபுல் பாஸல்.

(அரசர் சிந்தித்த வண்ணம் அங்கு மிங்கும் நடந்து கொண்டிருக்கிருர். அப்போது அமைச்சர் வந்து)

அபுல் பாஸல்: மகாராஜா!

ஷாஜஹான்: (நிமிர்ந்து) ஓ! வாருங்கள்! உங்கள் வருகையைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அபுல் பாஸல்: ஏதாவது முக்கியமான....

ஷாஜஹான்: ஆம்! அமைச்சரே! முக்கியமான விஷயந்தான். என்ருல் இராணியின் பிரிவு தரும் பெருந் துயரத்தை இனி ஒரு நிமிடமும் கூடப் பொறுக்க முடியாது. ஆட்சிப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்து விட்டு எங்காவது சென்று மன நிம்மதி பெற விரும்பு கிறேன்.

அபுல் பாஸல்: (கலவரத்துடன்) பிரபு!

ஷாஜஹான்: ஆமாம்! இந்த அரண்மனையிலுள்ள ஒவ்வொரு பொருளும் எனக்கு மும்தாஜின் உருவமாகத் தான் தெரிகிறது! இங்கிருந்து சித்திரவதைப் படுவதை விட எங்காவது சென்று கொஞ்ச நாட்களுக்காவது....

அபுல் பாஸல்: ஆலம்பனு*! செஞ்ஞாயிற்றின் இள ஒளி பெற்று பரவச மூட்டும் பசும்புல் தரையிலே பலநாள்

*மொகலாய அரசர்களே விளிக்கும் முறை.

இன்பம் அனுபவித்தவன் என்றுவதொரு நாள் அனல் கக்கும் பாலைவனத்தில் கால்கடுக்க நடக்கத்தானே வேண்டும்! இன்பத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்தவன் பிறகு இன்பத்தின் எல்லையாகிய துன்பத்தையடைந்து அதன் அடித்தளத்தில் வீழத்தானே வேண்டும்! அளவிடற்கரிய ஆனந்தமளிக்கும் அழகொளியில் திளைக்கின்ற நாம் அப்பொழுதே இருளைத் தழுவவும் தயாராகிக் கொள்வதில்லையா?

ஷாஜஹான் : (கடுமையாக) அமைச்சரே!

அபுல் பாஸல் : இது உலக நியதி பிரபு! பல ஆண்டுகளாக இராணியின் அருகிலிருந்து அழகு இதழ் திறந்து அன்பு மொழி பொழிந்து இன்பத்தின் எல்லையை அடைந்த நீங்கள் என்றுவது ஒரு நாள் அவர்களை இழந்துதான் தீர வேண்டும்; மறந்து தான் ஆகவேண்டும். பிரிந்துதான் வாழ வேண்டும்; இது ஆண்டவனின் ஆணை! அந்நிலை இப்பொழுதே ஏற்பட்டு விட்டது. எல்லாம் அவன் செயல் என நினைத்து மன அமைதி பெறுங்கள்.

ஷாஜஹான்: அமைச்சரே! கடந்த பதினேழு ஆண்டுகளாக அல்லும் பகலும் அனுவிரதமும் அரை நொடியும் என்னை விட்டகலாதிருந்த அன்புருவத்தை எப்படி மறப்பது? என் உள்ளத்தில் தங்கு தடையின்றி பொங்கி எழும் வேதனை வெள்ளத்தை எப்படித் தடுப்பது?

அபுல் பாஸல்: அரசே! இராணியின் வேண்டுகோள்களை மறந்து விட்டீர்களா? அவர்கள் மறைந்த பிறகு இந்த மாதிரி நிலை ஏற்படும் என்பதைத் தெரிந்துதான் என்னவோ தாங்கள் கலைக்கோயில் கட்டும் பணியில் ஈடுபட வேண்டுமென்று அன்புக்கட்டளையிட்டுச் சென்றுர்கள் போலும்!

ஷாஜஹான் : (ஆச்சரியத்துடன்) என்ன ?

அபுல் பாஸல்: ஆம் பிரபு! கவலையைப் போக்கக் கூடிய சிறந்த மருந்து ஓயாத உழைப்பு! அதுவும் கலையுலகத்தில்

நுழைந்து விட்டால் பகலவனைக் கண்ட பனித்துளிகள் போல் துன்பமெல்லாம் சொல்லாது ஓடிவிடும். துயரப் புயல் உள்ளத்தை வெல்லாது ஓய்ந்துவிடும்.

ஷாஜஹான்: வந்த துன்பத்தை நீக்கி இனி எந்தத்துன் பமும் வராமல் காக்கும் பெற்றி மிகு அமைச்சர் பெருந் தகையே! எப்படியோ என் துன்பச் சுமை குறைந்தால் போதும்!

அபுல் பாஸல்: மிக்க மகிழ்ச்சி ஆலம்பனு! கலைக் கோயில் நிர்மாணிக்கும் முழுப்பொறுப்பை யாரிடம் கொடுப் பது?

ஷாஜஹான்: அமைச்சரே! இராணியின் விருப்பத் தின்படி அப்பொறுப்பை உஸ்தாத்திடமே விட்டு விடுவோம்! ஆனால் அதற்கு முன் ஒன்று, நாம் கட்டப்போகும் மஹாலைக் கண்டு உலகமே அதிசயிக்கவேண்டும். ஆகவே ஒவ்வொரு கலைஞனையும் அவரவர் கற்பனைக்கு எட்டியவாறு பொம்மை மஹால்கள் செய்து கொண்டுவரும்படி பறையறையச் செய் யுங்கள்! எந்த உருவம் நமக்குப் பிடிக்கிறதோ அந்த உருவத்தை நாம் உருவாக்குவோம். அதைச் செய்து தருபவனுக்குத் தக்க வெகுமதியும் அளிப்போம்! வெகு விரைவில் வேலையைத் தொடங்குங்கள்!

அபுல் பாஸல்: சரி பிரபு!

(பிறகு இருவரும் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல் கின்றனர்)

திரை

காட்சி 2.

காலம்: காலை.

இடம்: நாற்சந்தி.

பாத்திரங்கள்: பறை அறைவோன், மக்கள் கூட்டம்.

பறை அறைவோன்: (பறையை அடித்து) இதனல் சகலமான பேருக்கும் தெரிவிப்பது என்ன வென்ருல், நமது அரசர், மொகலாயர் குலதிலகம், கட்டடப்பிரியர் ஷாஜஹான் அவர்கள் தன் இதய கீதமாக விளங்கிய இராணி மும்தாஜ் மகாலின் கல்லறை மீது அற்புதமானதொரு கட்டடம் கட்ட இருக்கிருர்! அதற்குரிய சிறந்த மாதிரி மஹாலை யார் செய்து கொடுக்கிருர்களோ அவர்களுக்குத் தக்க வெகுமதி அளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

(கூட்டத்திலிருந்தவர்கள் பிரிந்து செல்கின்றனர்)

திரை

காட்சி 3.

காலம்: பிற்பகல்.

இடம்: அரண்மனையின் ஒருபுறம்.

பாத்திரங்கள்: ஷாஜஹான், அபுல் பாஸல், பிரதாபன்.

(அரசர் சன்னல் வழியாக அரண்மனைப் பூங்காவைப் பார்த்துக் கொண்டிருக்கிருர். பிரதாபன் அருகில் நின்று கொண்டு இருக்கிருன். அமைச்சர் அவர்களை நோக்கி வந்து)

அபுல் பாஸல்: ஆலம்பனு! அழைத்தீர்களாமே?

ஷாஜஹான்: (திரும்பி) ஆம் அமைச்சரே! நீங்கள் அனுப்பிவைத்த அத்தனை மாதிரி—மஹால்களையும் பார்த் தேன்! நான் நினைத்தபடி ஒன்றுகூட அமையவில்லை? என்ன செய்வது?

அபுல் பாஸல்: மஹாராஜா! இந்த வட்டாரத்திலுள்ள கட்டடக் கலைஞர்கள் அத்தனை பேரும் அவர்களது கற்பனைக் கெட்டியவாறு பொம்மை மஹால்களைச் செய்து அனுப்பி யுள்ளனர். இனி ஒருவரும் பாக்கி இல்லை.

ஷாஜஹான்: அமைச்சரே! நம் ஆஸ்தான சிற்பி உஸ்தாத் மாதிரி-மஹால் ஒன்றும் அனுப்ப வில்லையே! கவனித்தீர்களா?

அபுல் பாஸல்: ஆமாம் பிரபு! உஸ்தாத் இதைப் பற்றி இதுவரை எவ்வித அக்கரை செலுத்தியதாகவும் தெரிய வில்லையே!

ஷாஜஹான்: பொறுங்கள் அமைச்சரே! நீங்கள் நினைப்பது தவறு. உஸ்தாத் உண்மையிலேயே சிறந்த கலைஞன். அற்புதமான பொம்மை மஹால் ஒன்றைச் செய்து வைத்திருப்பதாக இப்பொழுதுதான் நான் கேள்விப் பட்டேன்! இதுபற்றிய ஆரவார மெல்லாம் தீர்ந்த பிறகு அமைதியான முறையிலே தன் அரிய படைப்போடு அரசவையினுள் நுழைந்து அனைவருடைய ஆதரவையும், அபிமானத்தையும் பெற்று அகிலம் புகழ வாழ வேண்டும் என இலட்சியக் கனவு கண்டு கொண்டிருப்பான், உஸ்தாத்!

அபுல் பாஸல்: (ஆச்சரியத்துடன்) என்ன! உஸ்தாத்தும் மாதிரி-மஹால் செய்து வைத்திருக்கிறுரா?

ஷாஜஹான்: அமைச்சரே! ஏன் இவ்வளவு ஆச்சர்யப் படுகிறீர்? மணமற்ற மலர்களெல்லாம் மலர்ந்து மக்களை மகிழ்விக்க வேண்டுமென்று நினைக்கின்ற தருணத்தில் நறு மணம் பெற்ற மல்லிகை மொட்டுமட்டும் தானும் கட்டவிழ்ந்து மற்றவர்களுக்குக் களிப்பூட்ட வேண்டும் என்று நினைக்காதா? ஆடும் திறமை இல்லையே என வாடப் பிறந்த பறவை யெல்லாம் சோலையுள் ஆடப் புகுந்த நேரத்திலே, ஆடுவதற் கென்றே ஆண்டவனுல் படைக்கப்பட்ட தோகை மட்டும் மேகத்தைக்கண்ட பிறகு ஆடாமலா இருந்து விடும்? சிறு விண் மீன்கள் எல்லாம் தன் ஒளியைக் காட்டி, காரிருளை ஓட்ட எண்ணுகின்ற நேரத்தில் வெண்ணிலவு மட்டும் தண்ணமுதமூட்ட மறந்தாவிடும்? அமைச்சரே!

அபுல் பாஸல்: அப்போ.........?

ஷாஜஹான் : முகவிலாசம் அற்றவர்களெல்லாம் முன்னுக்கு வர நினைக்கின்ற தருணத்தில் ஒப்புயர்வற்ற கலைஞனாக வாழ வேண்டும் என்பதையே இதயத் துடிப்பாகக் கொண்டுள்ள உஸ்தாத் மட்டும் சும்மாவா இருந்திடுவான்?

பிரதாபன்: ஆலம்பனா! உத்தரவு கொடுங்கள், இப்பொழுதே போய் மஹாலை எடுத்துக் கொண்டு வருகிறேன்!

ஷாஜஹான்: பிரதாபா, பொறு! இமய மலையே மனித உருக்கொண்டு தாக்க வந்தாலும் அதையும் தாங்கும் வன்மையான இதய முடையவர்கள் நம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள்! ஆனால் காற்றிலாடும் பூங்கொடி பட்டாலும் வருந்துகின்ற அளவிற்கு அவ்வளவு மென்மையான இதய முடையவர்கள் கலைஞர்கள்! உன் மீது பட்ட காற்றுக் கூட உஸ்தாத்தின் மீது படக்கூடாது. அவ்வளவு மென்மையான உடலும், உள்ளமும் பெற்றவர் உஸ்தாத்! நாங்களே சென்று வாங்கி வருகிறோம்! வாருங்கள் அமைச்சரே போகலாம்!

(அரசரும், அமைச்சரும் உஸ்தாத்திடம் செல்லுகின்றனர். பிரதாபன் தன் இருப்பிடத்திற்குச் செல்லுகிறான்)

திரை

காட்சி: 4

காலம்: மாலை.

இடம்: உஸ்தாத் வீடு.

பாத்திரங்கள்: ஷாஜஹான், அபுல் பாஸல், நஸீம்.

(நஸீம், உஸ்தாத் செய்து வைத்துள்ள பொம்மை மஹாலை எடுத்துச் சுத்தமாகத் துடைத்துக் கொண்டிருக்கிறாள். யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்டு மஹாலுடன் வெளியில் வருகிறாள். அப்பொழுது அரசரும், அமைச்சரும் உள்ளே நுழைகின்றனர்)

நஸீம்: (மகிழ்ச்சியுடன்) மஹாராஜா! வாருங்கள்! (ஆசனப் பலகையைக் காட்டி) இதோ உட்காருங்கள்!

(இருவரும் அமருகின்றனர். அமைச்சர் நஸீமின் கையில் இருந்த மஹாலைப் பார்த்து விடுகிறார்)

அபுல்பாஸல்: ஆலம்பனு! இதோ நீங்கள் சொன்ன மாதிரி-மஹால்.

ஷாஜஹான்: எங்கே? ஆகா! அழகே உருவெடுத்தாற் போல் அல்லவா இருக்கிறது! நஸீம், அதை இப்படிக் கொடு பார்க்கலாம்!

(நஸீம் கொடுக்கிருள். நன்ருகப் பார்த்துவிட்டு)

ஷாஜஹான்: (மகிழ்ச்சியுடன்) அமைச்சரே பார்த் தீர்களா? இப் பொம்மை–மஹாலே இவ்வளவு கவர்ச்சிகர மாக இருக்கிறதே! இதுவே உருப்பெற்ருல்?

அபுல்பாஸல்: எப்படி இருக்குமென்று சொல்ல நமக்குத் திறமை ஏது ப்ரபு?

ஷாஜஹான்: உண்மைதான்! (நஸீமைப் பார்த்து) உஸ்தாத் எங்கே நஸீம்?

நஸீம்: ஏதோ வேலையாக இப்பொழுதுதான் வெளியே போனுர், ப்ரபு!

ஷாஜஹான்: நஸீம்! தக்க சமயத்தில் உற்சாகமூட் டினுல், உயர்புகழுக்குரிய வழியைக் காட்டினுல், நம் பரம்பரையினர் கட்டிவந்த கலைக்கோயிலுக்கு ஒரு கவினுறு கலசத்தை ஏற்றிக் காசினியே நம்மைப் போற்றும்படி செய்து விடுவார் உன் காதலன் என்று அன்ருெரு நாள் அரசவை யிலே சொன்னுயே! அதற்குரிய வேளை வந்து விட்டதம்மா! உஸ்தாத் வந்ததும் அரண்மனைக்கு வரச் சொல்! மஹாலை நாங்களே கொண்டு போகிருேம்!

நஸீம் : (கலக்கத்துடன்) ஆலம்பனு ! அதை என் கணவர்.........

ஷாஜஹான் : (இடைமறித்து) உன் கணவன் ஒருவனுல்தான் இத்தகைய அழகு உருவங்களை ஆக்க முடியும் என்பது எங்களுக்கும் தெரியும் நஸீம் !

நஸீம் : இல்லை ப்ரபு ! அது என் அன்பின் சின்னமாக.........

ஷாஜஹான் : ஆம் ! உன் அன்பின் சின்னமாக விளங்கிய இராணிக்கு உன் கணவன் செலுத்தும் அன்புக் காணிக்கைதான் அம்மா இது ! இனி கலைப் பணியை விரைவில் தொடங்க வேண்டும். உஸ்தாத் வந்ததும் வரச் சொல் ! (அமைச்சரைப் பார்த்து) வாருங்கள் அமைச்சரே போகலாம் !

(இருவரும் வேகமாகப் போகிருர்கள்)

நஸீம் : (வேதனையுடன்) அய்யோ ப்ரபு !

(என்று கதறுகிருள்)

— திரை —

[உஸ்தாத் வந்ததும் நடந்ததைக் கூறுகிருள் நஸீம். உஸ்தாத் மிகச் சினங்கொண்டு நஸீமைக் கண்டபடி திட்டுகின்றுன். தான் கட்ட நினைத்த ஆசைக் கோட்டையின்—அன்புக் கோட்டையின் அடிப்படைக் கல்லையே பெயர்த்தெடுத்து விட்டதாகக் கதறுகின்றுன். ஆனுல் நஸீம் அரசரது விருப்பத்தின்படி தான் நடக்க வேண்டுமென்று அன்புக் கட்டளையிடுகின்றுள். நஸீமுக்காகக் கோயில் கட்ட எவ்வளவு முயன்றும் முயற்சி முழுப்பயனை அளிக்காத காரணத்தால் உஸ்தாத் வேதனையுடன் அரசவைக்குச் செல்கிருன்.]

காட்சி : 5

காலம் : காலை

இடம் : அரசவை.

பாத்திரங்கள் : ஷாஜஹான், அபுல்பாஸல், பிரதாபன், உஸ்தாத், பணியாட்கள் முதலியோர்.

(அரசவை நடந்து கொண்டிருக்கிறது. உஸ்தாத் அரசவையினுள் நுழைகிறான். அப்பொழுது......)

அபுல்பாஸல் : அதோ உஸ்தாத்தே வருகிறார் !

ஷாஜஹான் : எங்கே ?

உஸ்தாத் : (அருகில் வந்து வணங்கி) ஆலம்பனா !

ஷாஜஹான் : பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரியவரே ! வாரும் ! உம் கலைத் திறமையை எப்படிப் புகழ்வதென்றே எனக்குத் தெரியவில்லை ! என் உள்ளத்தில் எந்த உருவம் பதிந்திருந்ததோ அந்த உருவத்தைத்தான் உம் கற்பனையின்மூலம் வடித்தெடுத்துக் கொடுத்திருக்கிறீர் !

உஸ்தாத் : ப்ரபு! அதை என் மனைவி நஸீமின்.........

ஷாஜஹான் : (இடைமறித்து) உண்மைதான் உஸ்தாத் ! உம் மனைவியின் தூண்டுதலினால்தான் இதை நீர் செய்து முடித்திருப்பீர் ! இராணியின்மீது நஸீம் செலுத்திய அன்பு அளவிடற்கரியதென்று அரண்மனையிலுள்ள எல்லாருமே சொல்லுவார்கள் ! நானுமறிவேன் ! சரி ! இதை உருவாக்கும் முழுப் பொறுப்பையும் உமக்குத்தான் கொடுக்கப் போகிறேன் !

உஸ்தாத் : ஆலம்பனா !

ஷாஜஹான் : ஆமப்பா ! இராணியே இறப்பதற்கு முன் என் கல்லறையின்மீது கட்டப்போகும் '' நினைவுக்

கோயிலை'' அழகுற அமைக்கும் திறமை மிக்கவர் நம் ஆஸ்தான சிற்பி ஒருவர்தான்! அவரிடம்தான் நீங்கள் முழுப் பொறுப்பையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். நானும் அப்படியே செய்வதாக உறுதி கொடுத்துவிட்டேன் உஸ்தாத்!

உஸ்தாத் : (ஒரு முடிவுக்கு வந்தவனாய்) அப்படியானால் முழு மனதுடன் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன்! ஏதாவது நிபந்தனைகள் உண்டா ப்ரபு?

ஷாஜஹான் : ஆம் உஸ்தாத்! தூய வெண்ணிற பளிங்குக் கற்களினாலேயே இக் கட்டிடம் உருவாக வேண்டும். (பொம்மை மஹாலைக் காட்டி) இதேபோல் நாற்புறமும் சிறு சிறு குமடங்களும் நடுவிடத்தே பெரியதொரு மண்டபமும் அமைக்க வேண்டும். அதாவது நம் நாட்டுப் பழங்காலச் சிற்பிகள் அமைத்து வந்த 'பஞ்ச ரத்தினம்' எனும் சிற்ப வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். அடுத்துக் காலைக்கதிரவனின் இள ஒளியில் பார்க்கும்போது கண்களுக்குக் குளிர்ச்சியூட்டும் அழகோடு இது விளங்க வேண்டும்; நண்பகலில் வெங்கதிரோளின் ஒளிபட்டுக் கட்டிடம் வைரம்போல் காட்சியளிக்க வேண்டும்; மாலைக் கதிரவனின் மஞ்சள் ஒளி படும்போது இதன் கண்ணுள்ள சிற்பங்களும், சித்திரங்களும் பொன் ஒளி பொழிய வேண்டும்; முழுநிலவு தண்ணொளியைப் பொழிகின்ற இரவு நேரத்தில் நம் கண்ணொளியைப் பறிக்கின்ற அளவிற்கு இம்மஹால் வெண்ணொளி பொழிய வேண்டும்!

உஸ்தாத் : இன்னும்......?

ஷாஜஹான் : (வேதனையுடன்) உண்டு! என் இதய ராணி மும்தாஜின் பிரிவு காரணமாக உருவாகும் இக் கட்டிடம் சோகத்தைப் பிரதிபலிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் இந் நினைவுக் கோயிலைக்

கண்டவரது கண்ணிமைகள் மூட மறுக்க வேண்டும்; காணுதவர் கண்களெல்லாம் காணத் துடிக்க வேண்டும். இனி ஆண்டவனுலேயே படைக்க முடியாத ஓர் அழகுக் கொள்ளேயாகவும் இது இருக்க வேண்டும்.

உஸ்தாத் : சரி ப்ரபு ! அடுத்த வாரத்தில் நல்ல நாள் பார்த்து வேலையைத் தொடங்கி விடுகிறேன் ! வருகிறேன்.

ஷாஜஹான் : சரி !

(உஸ்தாத் வீடு நோக்கிச் செல்லுகிருன். அரசவை கலைகிறது)

— திரை —

காட்சி : 6

காலம் : காலை

இடம் : அரண்மனைப் பூங்கா. (மும்தாஜ் சிலைக்கருகில்)

பாத்திரங்கள் : ஷாஜஹான், அபுல்பாஸல், பிரதாபன்.
(அரசரும் அமைச்சரும் பேசிக் கொண்டு இருக்கின்றனர். அப்போது பிரதாபன் வந்து வணங்கி)

பிரதாபன் : ஆலம்பனு ! தங்கள் உத்திரவின்படியே சிறையிலிருந்த கைதிகளை விடுதலை செய்துள்ளேன். காந்தாரம், மூல்தான் ஆகிய நகரங்களிலிருந்து பிரபலக் கொத்து வேலைக்காரர்களையும், தச்சர்களையும் வரவழைத்துள்ளேன்.

ஷாஜஹான் : சரி ! மிக்க மகிழ்ச்சி (அமைச்சரைப் பார்த்து) அமைச்சரே ! துருக்கியிலிருந்தும், ஸமரக்கந்தி லிருந்தும் விமான வேலைகளில் தேர்ந்தவர்களை வரவழையுங்கள்; பளிங்குக் கற்களில் பலவிதப் பூக்களைச் செய்ய ஜெய்ப்பூர்க் கலைஞர்களுக்கு ஆள் அனுப்புங்கள் ; விடுதலை செய்த குற்றவாளிகளில் சிலருக்குக் குதிரைகளைக் கொடுத்து, அரபு நாட்டிற்குச் சென்று குறுவிந்தக் கற்களையும், பவழங்களையும் கொண்டுவரச் செய்யுங்கள்.

அபுல்பாஸல் : சரி ப்ரபு !

ஷாஜஹான்: இவை மட்டும் போதா. பஞ்சாபிலிருந்து காந்தக் கற்களும், கருநீலக் கற்களும், பாக்தாத் நகரத்தி லிருந்து வெண் சலவைக் கற்களும், ஈழ நாட்டிலிருந்து இந்திர நீலக் கற்களும், திபெத்திலிருந்து மரகதக் கற்களும், வைடூர்ய மும், மாணிக்கக் கற்களும், பாரசீகத்துக் கோமேதகமும், செவ் வந்திக் கற்களும் வெகு விரைவில் இங்கு வந்து குவிய வேண்டும்.

அபுல் பாஸல்: சரி, ஆலம்பனா!

ஷாஜஹான்: (பிரதாபனைப் பார்த்து) பிரதாபா!

பிரதாபன்: ப்ரபு!

ஷாஜஹான்: பாரசீகம், பாக்தாது, சிரியா ஆகிய அயல் நாடுகளிலிருந்து பளிங்குக் கற்களில் எழுத்தமைப்போரை நீ வரவழைக்கவேண்டும். கற்களுக்குள் உள்ளீட்டுச் சிற்பங் கள் அமைப்பதற்குக் கன்னோசி நகரச் சிற்பிகளையும் முன் புறத்தை அழகு படுத்த காசுமீர நாட்டிலிருந்து தோட்டக் கலைஞர்களையும் வரவழைக்க வேண்டும். இவ்வுலகத்திலுள்ள கட்டடக் கலைஞர்கள் சிற்பிகள் சித்திரக்காரர்கள் அத்துணை பேரும் இங்குதானிருக்க வேண்டும். அடுத்து கும்முடங்களை அமைக்கும் பொறுப்பை பிரபல சிற்பி இஸ்மாயில்கான் ரூபி என்ற கலைஞனிடத்தில் விட்டுவிடும்படி உஸ்தாத்துக்குச் சொல்லிவிடு!

பிரதாபன்: தங்கள் உத்தரவுப் படியே செய்கிறேன்!

ஷாஜஹான்: சரி நீங்கள் போகலாம்! (இருவரும் போகின்றனர். அரசர் சிலையைப் பார்த்துத் துயரத்துடன்) மும்தாஜ்! என் உள்ளத்தில் அன்பு விதை விதைத்து அகங் காரக் களையெடுத்து அருட்பயிர் வளரச்செய்த அழகுச் செல்வி! கொடுமைகளுக்கு இருப்பிடமாக இருந்த என் இளமைக் குணங்களை அடியோடு அகற்றி பெருமைக்குரிய

வணக்கிய எனதருமைக் காதலி! கடுமை பொங்கி வழியும் காடாக இருந்த என் மனதை மாற்றி அன்பும், அருளும் பொங்கி வழியும் எழில் மிகு சோலையாக்கிய அழகுச்சிலையே! நம் மெய்க்காதலை உலகறியச் செய்ய வேண்டுமெனக்கூறிப் பிரிந்தாயே. அப்படியே உன் அன்பின் சின்னமாக என் காதற் காணிக்கையாக ஆக்ராவிலே யமுனை நதிக்கரையிலே ஒரு கலைக்கோயில் எழ இருக்கிறது; உலக அதிசயங்களில் ஒன்ருக இருக்கப் போகிறது, உன்புகழ் பாடும் அக்கலைக் கோயில். இவ்வேலை முடிந்ததும் எனக்கும் இவ்வுலகத்தி லுள்ள வேலை முடிந்துவிடும்! நீ இல்லாமல் எனக்கு வாழ்வேது? மும்தாஜ்! வாழ்வேது?

(எனக்கூறி சிலையோடு சிலையாய் நிற்கிருர்)

— திரை —

அருஞ்சொற் பொருள்

ஒண்டொடி - ஒளிபொருந்திய வளையலையணிந்த பெண்ணே. அனல் - நெருப்பு. அனவரதமும் - எப்போதும். பகலவன் - சூரியன். பெற்றி - இயல்பு வெகுமதி பரிசு. அரிய - அருமையான. அபிமானம் - பற்று, தன்மதிப்பு. அகிலம் - பூமி. தோகை - மயில். விண்மீன்கள் - நட்சத்திரங் கள். தண் - குளிர்ச்சி. தண்ணமுதம் - குளிர்ந்த தேவ அமுதம். கவினுறு - அழகுடைய. கதிரவன் - சூரியன். வெங்கதிரோன் - சூரியன். அகங்காரம் - கர்வம்.

வினக்கள்

1. மும்தாஜின் பிரிவால் வருந்திய ஷாஜஹானுக்கு அமைச்சர் அபுல் பாஸல் கூறியவை யாவை?

2 கலைக்கோயில் கட்டுவதைப் பற்றி முதன் முதலில் அரசர் அமைச்சரிடம் கூறியவை யாவை?

3. உஸ்தாத்தின் மாதிரி மஹாலை எடுத்துவர அனுமதி கேட்ட பிரதாபனிடம் ஷாஜஹான் கூறியவை யாவை?

4. நினைவுக் கோயில் கட்டுவதைப் பற்றி உஸ்தாத்திற்கு ஷாஜஹான் அளித்த நிபந்தனைகள் யாவை?

5. அரண்மனைத் தோட்டத்தில் அரசர் அபுல் பாஸலைப் பார்த்துக் கூறியவை யாவை?

6. பிரதாபனுக்கு ஷாஜஹான் இட்ட கட்டளைகள் யாவை?

7. மும்தாஜின் சிலையைப்பார்த்து ஷாஜஹான் கூறியவை யாவை?

பயிற்சி

1. பிரித்து எழுதுக:-

செஞ்ஞாயிறு, அருகிலிருந்து, அளவிடற்கரிய, அற்புதமான தொரு.

2. நாடகக்கலையின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்க.

3. நாடகக்கலையால் நாமடைந்த நன்மைகளைப் பற்றி இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக.

8. சிறு சேமிப்புக்கள்

(Small Savings)

வித்துவான் M. நாராயணவேலுப் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, இருகூர்.

முன்னுரை

'சிறு துளி பெருவெள்ளம்' என்பது பழமொழி. அது போல, சிறுசிறு தொகைகளாகப் பல பேரிடமிருந்து கிடைக்கும் தொகை பெரிதாகி ஒரு நற்காரியத்திற்குப் பயன்படும். மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பணத்தைப் பல துறைகளில் சம்பாதிக்கின்றனர். அவ்வாறு சம்பாதிக்கும் தொகை முழுவதையும் செலவழித்து விடாமல், பிற்காலத்தில் பயன்படுவதற்காக ஒரு பாகத்தை மிச்சப்படுத்துவது நல்லது. மிச்சப்படுத்தும் பொருளை நம்மிடமே வைத்திருக்காமல் அரசாங்கக் கடன் பத்திரங்களிலோ, பாங்கியில் டிபாசிட்டாகவோ கட்டி வைப்பது அவசியமென்பதை இப்பாடத்தில் காண்போம்.

1. பணம் என்றால் என்ன?

பணம் இல்லாவிட்டால் எந்தப் பொருளையும் எவரும் வாங்க முடியாது. அன்றாட வாழ்க்கைக்குப் பணம் இன்றியமையாததாக உள்ளது. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு பணமோ, காகித நோட்டுக்களோ, நாணயங்களோ கிடையா. மக்கள் பண்டங்களை மாற்றிக் கொள்வது வழக்கம். உதாரணமாக, ஒருவர் தம்மிடமுள்ள நெல்லைக் கொடுத்துவிட்டு, தமக்குத் தேவையான உப்பை வாங்கிக் கொள்வார். இதற்குப் 'பண்டமாற்று' என்று பெயர்.

மாற்றிக்கொள்ள வேண்டியபொருள்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், வியாபாரம் பெருகியதாலும் மாற்றிக் கொள்வதற்கு ஓர் 'அளவு திட்டம்' தேவைப்பட்டது. நாணயங்கள் வழக்கத்தில் கொண்டு வரப்பட்டன. ஆரம்பத்தில்

நாணயங்கள் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டன. நாணயத்தின் எடையே அதன் மதிப்பாகக் கொள்ளப்பட்டது. நாணயங்கள் தாராளமாய் எங்கும் செலாவணியாயின. இவைகளை அடிப்படையாகக் கொண்டே பணத்தையும் சில்லறை நாணயங்களையும் கணக்கிட்டார்கள். முன்பு புழக்கத்திலிருந்த இங்கிலாந்தின் சவரனும், இந்தியாவின் ரூபாயும் அத்தகைய 'அசல் நாணயங்கள்'.

'அடையாள நாணயம்' என்பது அதன் பேரில் குறிக்கப்பட்டுள்ள மதிப்பைக் காட்டிலும் எடையில் குறைவானது. அதாவது, அதன் எடை மதிப்பைக் காட்டிலும், சட்டப்படியிலே மதிப்பு அதிகம் பெற்றது. சாதாரணமாய் அவை நிக்கல், செம்பு முதலியவற்றால் செய்யப்படும். கரன்சி நோட்டுக்களும் இதே போன்று அடையாள நாணயங்களே. முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் கரன்சி நோட்டுக்களே அதிகமாக வழங்குகின்றன. இத்தகைய காகித நாணயத்தால் பல நன்மைகள் இருக்கின்றன. அவை செய்முறையில் சிக்கனமும், கையாள்வதில் சௌகரியமும், எடுத்துச் செல்வதில் எளிமையும் உடையன. கரன்சி நோட்டுக்களை வெளியிடுவதிலும் சில முறைகள் அனுசரிக்கப்படுகின்றன. வெளியிடும் நோட்டுக்களின் மதிப்புக்கு ஏற்றவாறு சர்க்கார் பத்திரங்களும் நாணயங்களும் கைவசம் இருக்கவேண்டும்.

ஒரு சிலர், பண்டங்களை உற்பத்தி செய்து அவைகளை விற்றுப் பொருள் ஈட்டுகின்றனர். உழவர்கள் நெல், கோதுமை முதலிய உணவுப் பொருள்களையும், பருத்தி, புகையிலை போன்ற வியாபாரப் பொருள்களையும் பயிரிட்டு அவைகளை விற்றுப் பணம் சம்பாதிக்கின்றனர். மற்றும் சிலர், உத்தியோக சாலைகளிலோ, தொழிற்சாலைகளிலோ சேவை செய்து சம்பளம் பெறுகிறார்கள். வேறு சிலர், தங்களிடமுள்ள பணத்தை வட்டிக்கு விட்டுப் பொருள் ஈட்டுகிறார்கள். வீடு வைத்திருப்பவர்கள் வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிக்கிறார்கள். வியாபாரம் செய்து இலாபம் பெறுபவர் மற்றும்

சிலர். எனவே செல்வ உற்பத்தியில் நிலம், உழைப்பு, மூல தனம், கைத்தொழில்–நிலையங்கள் முதலியன சம்பந்தப்படு கின்றன. இவை நான்கும் உற்பத்திசாதனங்கள் எனப்படும்.

நமக்குப் பணம் அவசியம் என்று தெரிவதால் அதைச் சம்பாதிப்பதிலும், செலவழிப்பதிலும் கருத்தாய் இருக்க வேண்டுமென்று தெரிகிறது.

2. பண நிர்வாகக் கலை

குறைந்த வருவாயுடையவர்கள் தாராளமாகச் செலவிட முடியாது. உயர்ந்த வருவாய் உடையவர் வசதியாக வாழ முடியும். என்றாலும் அவரும் கவனமாகத்தான் இருக்க வேண்டும். அவர் சம்பாதிப்பதை விடக் குறைவாகத்தான் செலவிட வேண்டும். வருவாய்க்குமேல் செலவானால் கடன் பட்டு, பின்னால் துன்பப்பட நேரிடும்.

ஒரு பொருளை வாங்குவதற்கு முன், அது அவசியம் தானா என்று சிந்திக்க வேண்டும். அவசியமில்லாத பொருள்களை வாங்குவதாலும், ஊதாரித்தனமாகச் செலவிடுவ தாலும் கடன் தொல்லைகள்தாம் அதிகரிக்கும். இது செல விடுகிறவரின் வாழ்க்கையைப் பாதிப்பதோடு முழு சமுதாயத் தையும் பாதிக்கிறது.

ஒரு குடும்பத்தில் மூன்று வகையான செலவுகளுக்குப் பணம் தேவைப்படுகிறது. (1) உடனடியானது, (2) பின் னால் தேவைப்படுவது, (3) எதிர் பாராதது. இவை மூன்றுக்கும் பணம் தேவை. சில அண்மையில் வருபவை; சில சொல்லாமல் வருபவை. கூடுமான அளவு இந்தச் சம்பவங்களை எதிர்நோக்கித் தயாராய் இருக்கவேண்டும். அவைகள் உண்மையாகவே வந்துவிட்டால் அப்போது உதவியில்லாமல் தவிக்கவோ, திடுக்கிடவோ கூடாது.

நாம் நம் பணத்தை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும்? ''துணிக்குத் தக்கவாறு சட்டையைத் தைத்துக் கொள்''

139700

என்ற பழமொழியைக் கேள்விப் பட்டிருக்கிறோம். நாம் சம்பாதிப்பதைவிட அதிகமாகச் செலவு செய்யக்கூடாது. இந்தப் பாடத்தை நாம் நன்கு கற்றுக் கொண்டால் கடன் படவோ எதிர்காலத்திற்கு வகை செய்யத் தவறவோ காரண மிராது. மாதந்தோறும் எவ்வளவு தொகை செலவாகும் என்பதையும், எவ்வளவு தொகை சேமித்து வைக்கலாம் என்பதையும் முடிவு செய்யவேண்டும்.

பணத்தை மிச்சப் படுத்துதல் நல்லொழுக்கமாகும். சேமித்து வைத்தல் நம் எதிர்காலத்திற்குப் பாதுகாப்பளிக் கிறது. நம்மைத் திருப்தியாக இருக்கச் செய்கிறது. இச் செயல் நாடு முன்னேற்றமடையவும் உதவுகிறது.

73
O 3, 6(A)
N65

3. பொதுச் செலவு

குடும்பத்தை நடத்தப் பணம் தேவைப் படுவதைப் போல நமது அரசாங்கத்திற்கும் அது பல பொதுக் காரியங் களை நடத்தத் தேவைப்படுகிறது. உதாரணமாக, பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், வண்டிப்பாதைகள், மருத்துவ நிலையங்கள் கட்டவும், இருப்புப்பாதைகள், பஸ் சர்வீஸ்கள், உல்லாசப் பூங்காக்கள் முதலியன அமைக்கவும், தபால் தந்தி இலாக்காக்களை நடத்தவும், நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய தண்ணீர் அளவை அதிகரிக்கவும், மின்சாரம் உற்பத்தி செய்யவும், ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டவும், கனிவளங்களை வெளியே கொண்டுவந்து புதுத் தொழில்களை நிறுவவும் அரசாங்கத்திற்கு ஏராளமான பணம் வேண்டும். இவை நாட்டு மக்களுக்காக அரசாங்கம் செய்ய வேண்டிய கடமைகளாகும்.

அந்நியர் படையெடுப்பிலிருந்து நாட்டு மக்களைப் பாது காப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இக்கருத்தை உட்கொண்டு அது தரைப்படை, கடற்படை, விமானப் படைகளை நிர்வகிக்க வேண்டும். மேலும் அது துப்பாக்கி கள், வெடி மருந்துகள், டாங்கிகள் (Tanks), யுத்தக்

கப்பல்கள் போன்றவற்றைச் செய்ய, தொழிற்சாலேகளை நிறுவ வேண்டும். இவைகளுக்கு ஆகும் பணத்தை அரசாங்கம் மக்களிடமிருந்தே பெற வேண்டியிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டங்கள்

நமது நாட்டின் அரசியல் சாசனப்படி நமது அரசாங்கம் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதோடு வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும். இந்த நோக்கங்களைச் செய்து முடிப்பதற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951இல் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை அமுலாக்கிய பிறகு நாம் இப்போது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1961—66) இருக்கிரேம்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் அவசியம் என்ன ?

இந்தியா ஒரு விவசாய நாடு. மக்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை நாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். ஆகவே விவசாயத்திற்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

விவசாயிகளின் நிலேயை உயர்த்துவதற்கு அரசாங்கம் அணைகளையும், நீர்ப்பாசன வாய்க்கால்களையும் அமைத்து வயல்களுக்கு அதிக தண்ணீர் கிடைக்கச் செய்கிறது. அநேக கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டு வருகின்றது. நம் நாடு நமக்குத் தேவையான இயந்திரங் களின் தன் நிறைவு பெறுவதற்காக அரசாங்கம் ஆவன செய்துவருகிறது. இவ்வாறு இந்தியா, அதற்குத் தேவை யான இரயில் என்ஜின்கள், இரயில் பெட்டிகள், இயந்திர சாதனங்கள், இதர கைத் தொழில்களுக்கு வேண்டிய கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்துகொள்ள முடிகிறது.

இத்தகைய எல்லா முன்னேற்றங்களும் சுதந்திரத் திற்குப் பின்னுல் ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் நடை

பெற்றவையாகும். இது தேச மக்களுக்கு அளித்த புத்துயி ராகும். பல மக்களுக்கு வேலை வாய்ப்பும் நல்வாழ்க்கைக்குச் சந்தர்ப்பமும் கிடைத்தன.

இந்தத் திட்டங்களை நிறைவேற்ற பெருந் தொகைகள் வேண்டும். முதல் திட்டத்தின் மூலதனம் 3360 கோடி ரூபாய்; இரண்டாவது திட்டத்தின் முதலீடு 6750 கோடி ரூபாய்; மூன்றுவது திட்டத்தின் உத்தேசச் செலவு 11600 கோடி ரூபாய்.

இவைகளுக்கு வேண்டிய எல்லாப் பணத்தையும் அரசாங்கம் வரிகளாகவும், மற்ற நாடுகளிலிருந்து கடன் களாகவும், நமது நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மக்க ளிடமிருந்து பெரிய சிறிய சேமிப்புத் தொகைகளாகவும் பெறு கிறது. சிறு சேமிப்பு வசூல், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவில் 11 சத வீதமாகும்.

4. நாம் மீதப்படுத்தும் பணத்தை என்ன செய்ய வேண்டும்?

நாம் மீதப்படுத்தும் தொகையை நம்மிடமே வைத்துக் கொண்டிருந்தால் அது விருத்தியடையாது; செலவாகி விடும். சில சமயங்களில் அனுவசியமான பொருள்களை வாங்கவும் நம்மைத் தூண்டும். ஆதலால் நாம் தபால் நிலைய சேமிப்புக் கணக்கில் (Savings Bank) பணத்தைக் கட்டிவைக்க வேண்டும். அல்லது இது போன்ற மற்ற சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யவேண்டும். பணம் சர்க்காரிடமிருக்கும் போது பாதுகாப்பாய் இருக்கிறது. வருடா வருடம் விருத்தியாகிக் கொண்டேயிருக்கிறது. ஏனெனில் அரசாங்கம் நமது சேமிப்புத் தொகைக்குக் கவர்ச்சியான விகிதத்தில் வட்டி தருகிறது. மேலும் அரசாங்கம் நமது சேமிப்புத் தொகையை, நாட்டின் அபி விருத்திக்கும் பகைவர்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்கவும் பயன்படுத்தக் கூடும்.

மக்களிடம் சேமிப்புப் பழக்கத்தை உண்டுபண்ணவும் அதை வளரச் செய்யவும் அரசாங்கம் பல சேமிப்புத் திட்டங்களைப் புகுத்தியுள்ளது. அவைகள் வருமாறு :

1. 12 வருஷ தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்கள் (12 Year National Defence Certificates)

இந்தப் பத்திரத்தை, சேவிங்சு பாங்கு வைத்து நடத்தும் எல்லாத் தபாலாபீசுகளிலும் வாங்கலாம். ரூபாய் ஐந்தில் ஆரம்பித்து எல்லா விலைகளிலும் கிடைக்கிறது. அதற்கு $6\frac{1}{4}$ சதவீதம் தனிவட்டி அல்லது $4\frac{3}{4}$ சதவீதம் கூட்டுவட்டி கிடைக்கிறது. இவ்வாறு இந்தப் பத்திரங்களில் ரூபாய் 10 கட்டி வைத்தால், பன்னிரண்டாவது வருஷக் கடைசியில் ரூபாய் 17–50 கிடைக்கும். 18 வயதுக்குட்பட்டவர்களும் ஒரு பத்திரத்தை வாங்கிக் கொள்ளலாம்.

2. சேமிப்புத் தபால் பில்லைகள் (Savings Stamps)

கைச் செலவுக்காக வைத்துள்ள தொகையில் ஒரு பாகத்தை மிச்சப்படுத்த விரும்பும் சிறுவர்களுக்கான சேமிப்புத் தபால் பில்லைகளும் உள்ளன. அவைகள் 25 பை., 50 பை., 1 ரூபாய் விலைகளில் தபாலாபீசுகளில் கிடைக்கும். அவைகளை ஒட்டி வைப்பதற்காக அழகான சேமிப்பு அட்டைகள் இலவசமாகத் தபால் நிலையங்களில் கிடைக்கும். தபால் பில்லைகளின் மொத்த மதிப்பு ரூபாய் 5/- அல்லது ரூபாய் 10/- ஆக இருந்தால் தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்களாகவோ, பரிசுப் பத்திரங்களாகவோ, தபாலாபீசு சேவிங்சு பாங்கு கணக்கு ஆரம்பிக்கவோ அவைகளை மாற்றிக் கொள்ளலாம்.

3. பரிசுச் சீட்டுக்கள் (Gift Coupons)

திருமணம், பிறந்தநாள் முதலிய விசேட காலங்களில் பரிசளிப்பதற்காகக் கவர்ச்சியான பரிசுச் சீட்டுக்கள் தபால் நிலையங்களில் கிடைக்கின்றன. ரூ. 5/- ரூ. 10/- விலைகளில் அவைகள் உள்ளன. பரிசளிப்பதற்கு ஏற்றவாறு

அழகான உறைகளில் போட்டு இந்தச் சீட்டு தபால் நிலையத்தில் தரப்படுகிறது. அதைப் பெறுபவர் தபால் நிலையத்தில் கொடுத்து, 12 வருஷ தேசீயப் பாதுகாப்புப் பத்திரமாக அதே விலைக்கு அதை மாற்றிக்கொள்ளலாம்.

4. தவணைகளாகச் சேமிக்கும் முதலீடு திட்டம் (Cumulative Time Deposit Scheme)

இது ஒரு கவர்ச்சிகரமான திட்டம்; மாதந்தோறும் சிறு தொகைகளாக 5, 10 அல்லது 15 வருஷங்களுக்குத் தொடர்ந்து சேமித்து வைக்கிறவர் குறிப்பிட்ட அந்தக் கால அளவின் முடிவில் வட்டியுடன் முழுத் தொகையையும் பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக, நீ மாதந்தோறும் 5 ரூபாய் வீதம் 5 வருஷங்களுக்குக் கட்டிக்கொண்டு வந்தால் முடிவில் ரூபாய் 325/- திரும்பிப் பெறுவாய்; அதில் ரூபாய் 25/- வட்டியாகும். இத் தொகையைக் கொண்டு நீ ஒரு நல்ல சைக்கிளையும், உனக்கு வேண்டிய வேறு சில பொருள்களையும் வாங்கிக்கொள்ளலாம். சேவிங்சு பாங்கு வைத்து நடத்தும் எந்தத் தபால் நிலையத்திலும் 18 வயதுக்குக் குறைவானவரும் ஒரு கணக்கு ஆரம்பித்துக் கொள்ளலாம். குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு முன்பே உனக்குப் பணம் கொஞ்சம் தேவையாக இருந்தால் அதுவரை கட்டியிருக்கும் தொகையில் பாதி அளவுவரை, திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு வாங்கிய தொகையைப் பின்னால் செலுத்தி விடலாம்.

5. தபால் நிலைய சேவிங்சு பாங்கு (Post Office Savings Bank)

தபால் நிலைய சேவிங்சு பாங்கு கணக்கு சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சிறந்ததாகும். கணக்கை ஆரம்பிக்கக் குறைந்தது 2 ரூபாய் போதும். அடுத்தபடியாகச் செலுத்தும் போது ஒரு ரூபாயாகக்கூட இருக்கலாம். கணக்கு ஆரம்பித்து ஓராண்டிற்குப் பிறகு எந்தச் சமயத்திலும் 5 ரூபாய்க்குக் குறை

யாமல் இருப்பு இருக்க வேண்டும். ஓர் இளைஞனும் தன் பேரில் ஒரு கணக்கு ஆரம்பித்துக் கொள்ளலாம். ஒரு ரூபாய்க்குக் குறைவாகச் சேமித்தால், சேமிப்புப் பில்லைகளை வாங்கி, பிறகு அவைகளைத் தபால் நிலையத்தில் கொடுத்து, கணக்கில் வரவு வைத்துக் கொள்ளலாம். உனக்குப் 'பாஸ்' புஸ்தகம் ஒன்று இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. நீ செலுத்தும் தொகைகளும், திருப்பிப் பெறும் தொகைகளும் அதில் குறிக்கப்படும். உன் கணக்கில் இருக்கும் தொகைக்கு ஆண்டுக்கு 3 சதவீதம் வட்டி கிடைக்கிறது.

6. ஊதியப் பரிசுப் பத்திரங்கள் (Premium Prize Bonds)

இந்தப் பத்திரங்கள் எல்லாத் தபால் நிலையங்களிலும் கிடைக்கின்றன. இருவகையான பத்திரங்கள் ஒன்று 5 ரூபாய்க்கும், மற்றொன்று 10 ரூபாய்க்கும் உள்ளன. இவைகளை வாங்குகிறவர் பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ளத் தகுதியுடையவர் ஆவார். ரூபாய் 5 பரிசுப் பத்திர வரிசையில் முதற்பரிசு ரூபாய் 15,000. 100 ரூபாய் வரிசையில் ரூபாய் 50,000 முதற்பரிசு. 5 ரூபாய் வரிசையில் 567 இதர பரிசுகளும், 100 ரூபாய் வரிசையில் 242 இதர பரிசுகளும் உள்ளன. பரிசு பெறக்கூடிய அதிர்ஷ்டம் உனக்கு இல்லாவிட்டாலும் 5 ஆண்டுகள் கழித்து நீ செலுத்திய பணம் சிறு வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படும். அதன்படி 5 ரூபாய் பத்திரத்தின் மதிப்பு ரூபாய் 5-50; 100 ரூபாய் பத்திரத்தின் மதிப்பு ரூபாய் 110 ஆகும்.

முடிவுரை

மேற்கண்ட திட்டங்களில் ஏதாவது ஒன்றையோ பலவற்றையோ நீ தேர்ந்தெடுக்கலாம். உன் கைச் செலவுப் பணத்திலிருந்து சேமிப்பதாயிருந்தால் நீ சேமிப்புப் பில்லைகளை வாங்க வேண்டும். எவ்வளவு சேமிக்கிறாய் என்பது முக்கியமல்ல. சிக்கனமாய் இருக்கும் பழக்கத்தைக் கற்றுக்

கொள்ள வேண்டும் என்பதே முக்கியம்; நீ பெரியவனுக வளர்ந்த பிறகு அது உனக்கும் துணை செய்யும்; நாட்டிற்கும் உதவும். மிச்சப்படுத்து; முதலீடு செய்.

அருஞ்சொற் பொருள்

இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது. ஈட்டுதல் - சம்பாதித்தல். மூலதனம் - வியாபாரத்திற்கு வைக்கும் முன் பணம். நிர்வகித்தல் - நடத்துதல். கரன்ஸி (currency) - காகித நோட்டுக்கள். தொல்லை - கஷ்டம். சமுதாயம் - மக்கள் இனம். சம்பவம் - நிகழ்ச்சி. கவர்ச்சியான விகித வட்டி - அதிக விகித வட்டி. ஸ்தாபனம் - நிலையம். ஆஸ்பத்திரி - மருத்துவமனை. கனிவளம் - பூமிக்கு அடியில் மறைந்திருப் பவை. பொறுப்பு - கடமை. டாங்கி - யுத்த தளவாடங்களில் ஒன்று கனத்த மோட்டார் போன்றது. சேவை - தொண்டு, உழைப்பு. அரசியல் சாசனம் - அரசியல் நிர்ணயச் சட்டம். சேமித்தல் - சேர்த்து வைத்தல். விருத்தி அடைதல் - அதி கரித்தல். டிபாசிட் (Deposit) - முதலீடு செய்தல், பணம் கட்டி வைத்தல். சர்க்கார் - அரசாங்கம்.

வினுக்கள்

1. பண்டமாற்று என்ருல் என்ன? தற்காலத்தில் பண்ட மாற்றைக் கொண்டு வாழ முடியுமா? முடியாவிட்டால் ஏன் முடியாது?
2. பணம் ஏன் பொது அளவு கருவியாக உள்ளது?
3. பணம் எவ்வாறு சம்பாதிக்கப்படுகிறது?
4. அக்கறையில்லாமல் செலவிடுவதால் உண்டாகிற தீமைகள் யாவை?
5. பொதுச் செலவு என்பது என்ன? சில உதாரணங் கள் கொடு.

6. "மிச்சப்படுத்தி முதலீடு செய்வது நாட்டுக்கு நன்மை" என்பதை நிரூபி.

பயிற்சி

1. ஊதாரி என்பவன் யார்? ஊதாரித்தனமாய் இருப்பது நல்லதா? ஆராய்க.

2. உன் குடும்பத்திற்குஒரு வரவு செலவுத் திட்டம் தயார் செய். உன் பெற்றோர்களையும் கலந்து பார்.

3. ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் உன் மாவட்டத்தில் மேற்கொண்டுள்ள பணிகள் யாவை? அவைகளுக்காக எவ்வளவு தொகை செலவாகும்?

4. மாதம் 10 ரூபாய் வீதம் செலுத்தப்படும் தவணைச் சேமிப்பில் 5 ஆண்டுகள் கழித்து எவ்வளவு கிடைக்கும்?

9. சிதம்பரனார்*

(கற்பனை)

டாக்டர் R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L.

தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி இந் நாளில் எந் நாட்டாரும் அறிந்த துறைமுக நகரம். அந் நகரின் பெருமையைத் தம் பெருமையாக்கிக் கொண்டார் சிதம்பரனார். அவர் தந்நலம் துறந்த தனிப் பெருந் தொண்டர். அன்னார் செய்துள்ள சேவையை நினைத்தால் உடல் சிலிர்க்கும்; உயிர் நிமிர்ந்து உணர்ச்சி பொங்கும்; உள்ளமெல்லாம் நெக்கு நெக்காய் உருகும். 'இந்தியக் கடலாட்சி எமதே' எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறிகலங்கி, நெறிமயங்கக் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார். 'தென்னாட்டுத் திலகர்' எனத் திகழ்ந்தவர் அவர். பாட்டாளி மக்களுக்குப் பரிந்து பேசியதற்காக — நாட்டிலே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியதற்காக — அவரைச் சிறைக் கோட்டத்தில் மாட்டி மகிழ்ந்தது ஆங்கில அரசாங்கம். சிறை வாசம் தீர்ந்த பின்னர்த் தூத்துக்குடிக்குத் திரும்பினார் சிதம்பரனார்; ஒருநாள் மாலைப்பொழுது துறைமுகத்தின் அருகே உலாவச் சென்றார். பழைய நினைவுகள் எல்லாம் அவர் மனத்திலே படர்ந்தன. அக் கடற்கரையிலே நின்று அவர் பேசலுற்றார் :—

"தென்னாட்டுத் துறைமுகமே! முந்நூறு ஆண்டுகளாக நீயே இம் முத்துக் கரையில் முதன்மை பெற்று விளங்குகின்றாய்! முன்னாளில் வளமுற்றிருந்த கொற்கைப் பெருந் துறையின் வழித்தோன்றல் நீயே என்று உணர்ந்து, உன்னை வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன். ஆயினும் அக்காலத் துறைமுகத்தின் மாட்சியையும், இக்காலத்திற்

---

* 'கடற்கரையிலே' என்ற நூலிலே இருந்து எடுக்கப்பட்டது.

காணும் காட்சியையும் நினைத்துப் பார்க்கும்பொழுது என் நெஞ்சம் குமுறுகின்றதே! பார் அறிந்த கொற்கைத் துறை முகத்திலே பாண்டியனுடைய மீனக் கொடி உயர்ந்து பறந்தது. கொற்கைக் கடல் முத்துவளம் கொழித்தது. பழங்குடிகளாகிய பரதவர் மரக்கல வாணிகத்தால் வளம் பெற்று மாட மாளிகைகளில் வாழ்ந்தார்கள். இது, சென்ற காலத்தின் சிறப்பு. இன்று, மீனக்கொடி எங்கே? ஆங்கில நாட்டுக் கொடியன்றோ இங்குப் பறக்கின்றது? பரங்கியர் கப்பலன்றோ எங்கும் பரந்து திரிகின்றது? கொள்ளை லாபம் அடிக்கின்ற வெள்ளையர் கப்பலில், கூலிவேலை செய்கின்றனர் நம்நாட்டு மக்கள்! சொந்த நாட்டிலே வந்தவர்க்கு அடிமை செய்து வயிறு வளர்ப்பது ஒரு வாழ்வாகுமா? பிறந்த நாட்டிலே பிறர்க்கடிமை செய்து பிழைப்பது இளப்ப மல்லவா? 'வசை யொழிய வாழ்வாரே வாழ்வார்' என்ற வள்ளுவர் வாய்மொழியை மறக்கலாமா?

''வளமார்ந்த துறைமுகமே! இந்த வசையை ஒழிப் பதற்காக இந்நகரில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று இருபதாண்டுகளுக்கு முன் உருவாயிற்று. பாரத நாட்டுச் செல்வரும் அறிஞரும் அந்தக் கம்பெனியில் பங்கு கொண் டார்கள். பழங்காலப் பாண்டியரைப்போல், மதுரைமா நகரிலே தமிழ்ச்சங்கம் அமைத்து, புலவர் பாடும் புகழ் உடையவராய் விளங்கிய பாண்டித்துரைத்தேவர் அக் கம்பெனியின் தலைவர் ஆயினார். அதன் செயலாளனாக அமைந்து பணி செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. கம்பெனியார் வாங்கிய சுதேசக் கப்பல் உன் துறைமுகத்தை வந்தடைந்தது. வெள்ளோட்டம் பார்ப்பதற்காக அக் கப்பல் இங்கிருந்து கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்ட நாளில், இன்ப வெள்ளம் என் உள்ளத்திலே பொங்கி எழுந்தது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

''வாணிக மாமணியே! அன்றுமுதல் சுதேசக் கப்பல் வாணிகம் வளர்ந்தது; வெள்ளையர் வாணிபம் தளர்ந்தது.

அது கண்டு அவர் உள்ளம் எரிந்தது. வெறுக்கத் தக்க சூழ்ச்சிகளை அன்னுர் கையாளத் தலைப்பட்டார்; சுதேசக் கம்பெனி வேலையினின்றும் நான் விலகிக்கொண்டால் நூருயிரம் ரூபாய் கையூட்டுத் தருவதாக மறைமுகமாகக் கூறினர். எனக்கு உற்ற துணையாக நின்று ஊக்கம் தந்த நண்பர்களைப் பலவாறு பயமுறுத்தினர்; இவையெல்லாம் பயனற்று ஒழிந்த நிலையிலே அடக்குமுறையைக் கையாளக் கருதி அரசாங்கத்தின் உதவியை நாடினர்.

"பரங்கியர் ஆளும் துறையே! ஆங்கில அரசாங்கம் சர்வ வல்லமையுடையதென்றும், அதை அசைக்க எவராலும் ஆகாது என்றும் அப்போது பொது மக்கள் எண்ணியிருந்தார்கள். அதனல் அடிமைத்தனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்நாட்டு மக்களிடையே வளர்ந்தது. துரைத்தனத்தார் என்ன சொன்னுலும் எதிர்த்துப் பேசாமல், 'சார், சார்' என்று சலாமிட்டுப், 'புத்தி, புத்தி' என்று வாய்பொத்திச், 'சரி, சரி' என்று சம்மதித்துத் தாளம் போடும் போலி அறிஞர், பட்டங்களும் பதவிகளும் பெற்று உயர்ந்தார்கள். அரசாங்கம் ஆட்டுவித்தால் அப் பதுமைகள் ஆடும்; எப்போதும் 'அரசு வாழ்க' என்று பாடும். இத்தகைய சூழ்நிலையிலே எழுந்தது சுதந்திர நாதம்! வந்தேமாதரம் என்ற சுதேச மந்திரம் வங்க நாட்டிலே பிறந்தது; காட்டுக் கனல்போல் எங்கும் பரவிற்று. 'சுதந்திரம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன்' என்று வடநாட்டிலே மார்தட்டி நின்ருர் மராட்டிய வீரர் ஒருவர். அவரே பாரத நாடு போற்றும் பால கங்காதர திலகர். தென்னுட்டிலே தோன்றினுர் நாவீறுடைய நண்பர் பாரதியார். அவர் அஞ்சாத நெஞ்சினர்; செஞ்சொற் கவிஞர்; 'வந்தேமாதரம் என்போம், எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்' என்ற அழகிய பாட்டிசைத்து, நாட்டிலே ஆர்வத்தைத் தட்டி எழுப்பினுர்; 'நொந்தே போயினும், வெந்தே மாயினும்

வந்தேமாதரம்' என்னும் வீரமந்திரத்தை விடமாட்டோம் என்று வீறு பெறக் கூறினர்.

"புதுமை கண்ட துறைமுகமே! அந்நாளில் 'வந்தே மாதரம்' என்றால் வந்தது தொல்லை. அந்த வாசகத்தில் ஒரு வஞ்சகம் இருப்பதாக ஆங்கில அரசாங்கம் கருதிற்று. பொதுக் கூட்டங்களிலும், தொழிலாளர் கூட்டங்களிலும், நான் பேசும்பொழுது 'வந்தேமாதர'த்தை அழுத்தமாகச் சொல்வது வழக்கம். அதைக்கேட்டு நாட்டு மக்கள் ஊக்கமுற்றார்கள்; உணர்ச்சி பெற்றார்கள். உள்ளதைச் சொன்னால் கள்ளமுடையவர் உள்ளம் எரியுமல்லவா? எரிவுற்ற அரசாங்கம் என்னை எதிரியாகக் கருதிற்று; என்மீது பலவகையான குற்றம் சாட்டிற்று. நாட்டின் அமைதியை நான் கெடுத்தேனாம்! நல்ல முதலாளிமாருக்குத் தொல்லை கொடுத்தேனாம்! வெள்ளையர்மீது வெறுப்பை ஊட்டினேனாம்! வீர சுதந்திரம் பெற வழிகாட்டினேனாம்! வெள்ளைக் கோர்ட்டிலே இக் குற்ற விசாரணை விறுவிறுப்பாக நடந்தது. இரட்டைத் தீவாந்தர தண்டனை எனக்கு விதிக்கப்பட்டது. அப்பீல் கோர்ட்டிலே சிறைத் தண்டனை யாக மாறிற்று அத் தீர்ப்பு. ஆறாண்டு கோவைச் சிறை யிலும், கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தேன். என் உடல் சலித்தது; ஆயினும், உள்ளம் ஒருநாளும் தளர்ந்ததில்லை; சிறைச்சாலையைத் தவச்சாலையாக நான் கருதினேன்; கை வருந்த மெய் வருந்தச் செய்த பணிகள் எல்லாம் தாய் நாட்டின் விடுதலைக்காகப் புரிந்த அருந்தவம் என்று எண்ணி உள்ளம் தழைத்தேன்.

"செல்வச் செழுந் துறையே! சிறைச்சாலையில் என்னைக் கண்காணித்தவர் பலர். கடும்பணி இட்டவர் பலர். அவரை நான் எந்நாளும் வெறுத்ததில்லை. ஆனால், முறை தவறி நடந்தவர்களை எதிர்த்தேன்; வரை தவறிப் பேசியவர்களை வாயால் ஒறுத்தேன்; ஒருநாள் மாலைப் பொழுது; உடல் நலிந்து, உள்ளம் தளர்ந்து சிறைக்

கூடத்தில் உட்கார்ந்திருந்தேன். அங்கே வந்தான் ஒரு ஜெயிலர்; அதிகாரத் தோரணையில் நீட்டி நிமிர்ந்து நின்று கொண்டு எனக்குச் சில புத்திமதி சொல்லத் தொடங்கினான். அப்போது என் மனத்தில் கோபம் பொங்கி எழுந்தது. 'அடே மடையா! நீயா எனக்குப் புத்திமதி சொல்பவன்? மூடு வாயை! உனக்கும் உன் அப்பனுக்கும் புத்தி சொல்வேன் நான். உன்னுடைய கவர்னருக்கும், மன்னருக்கும் புத்தி சொல்வேன் நான்' என்று வேகமுறப் பேசினேன். மானமிழந்து, வாயிழந்து மறைந்தான் ஜெயிலர்.

"தமிழ்ப் பெருந் துறையே! என் தாழ்விலும் — வாழ்விலும் — எந்த நாளிலும் — என் தமிழ்த்தாயை நான் மறந்தறியேன்; இந்த நகரத்தில் வக்கீல் வேலை பார்த்து வளமுற வாழ்ந்த நாளில் வள்ளல் பாண்டித்துரைத்தேவரோடு உறவு கொண்டு, தமிழ் நூல்களைக் கற்றேன். அதனால் நான் அடைந்த நன்மைக்கு ஓர் அளவில்லை. சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கடும்பணி புரிந்தபோது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ? தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். இன்னிலையைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன். ஆங்கில மொழியில் ஆலன் என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை, 'மனம்போல் வாழ்வு' என்று தமிழிலே மொழி பெயர்த்தேன். உயர்ந்த நூல்களிற் கண்ட உண்மைகளை இளைஞரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு 'மெய்யறம்', 'மெய்யறிவு' என்ற சிறு நூல்களாக இயற்றினேன். இவற்றை என் தமிழ்த் தாயின் திருவடிகளில் கையுறையாக வைத்தேன். சிறையிலிருந்து நூற்ற என் சிறு நூல்களையும் உவந்து ஏற்றுக் கொள்ளுமாறு செந்தமிழ்த் தாயின் திருவருளை வேண்டுகிறேன்.

"வருங்காலப் பெருவாழ்வே! காலம் கடிது சென்றது. என் சிறை வாழ்வு முடிந்தது. இந் நகரை வந்தடைந்தேன். என் அருமைக் குழந்தைகளைக் கண்டு ஆனந்தமுற்றேன். ஆயினும் என் ஆசைக் குழந்தையை — தேசக் கப்பலை — இத்துறைமுகத்தில் காணுது ஆருத் துயருற்றேன். 'பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போயிற்றே' என்று பரிதவித்தேன். 'என்று வருமோ நற்காலம்' என்று ஏங்கினேன். இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்திரம் வந்தே தீரும். வீர சுதந்திர வெள்ளம் புறப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாரால் ஆகும்? பாரத நாட்டிலே,

"பாயக் காண்பது சுதந்திர வெள்ளம்
பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்"

என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?" என்று உருக்கமாகப் பேசிக் கடற்கரையை விட்டகன்ருர் வீரர் சிதம்பரனுர்.

அருஞ்சொற் பொருள்

இறுமாந்திருந்த - செருக்குற்றிருந்த. இளப்பம் - தாழ்மை. வசை - இகழ்ச்சி, பழிப்பு. வெள்ளோட்டம் - சோதனை பார்க்கு மாறு புது மரக்கலம், தேர் முதலியவற்றை முதன் முதலாக ஓட்டுகை. வீறு - சிறப்பு, பெருமை. பார் - உலகம். பேறு - வாய்ப்பு. கடிது - விரைவாக.

வினுக்கள்

1. சிதம்பரனுரது சிறப்புக்கள் யாவை?
2. கொற்கைத் துறைமுகத்தின் பழங்காலச் சிறப்புக்கள் யாவை?
3. சுதேசக் கப்பல் கம்பெனியின் தோற்றத்தைப் பற்றிக் கூறுக.
4. எந்நிலையில் சுதந்திர நாதம் எழுந்ததாகச் சிதம்பரனுர் கூறுகின்ருர்?

5. ஆங்கில அரசாங்கம் சிதம்பரனுர் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் யாவை?

6. சிதம்பரனுர் சிறை வாழ்க்கையைப் பற்றிக் கூறுவன யாவை?

7. சிதம்பரனுர் சிறைச்சாலையில் இயற்றிய நூல்கள் யாவை?

8. விடுதலை பெற்ற பின்னரும் சிதம்பரனுர் ஏன் ஆருத் துயருற்ருர்?

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—

   வளமுற்றிருந்த; நாவீறுடைய; விறுவிறுப்பாக; கண்காணித்தவர்; கையுறையாக.

2. பிரித் தெழுதுக:—

   இறுமாந்திருந்த; ஆருண்டு; சிறையிலிருந்து; துயருற்றேன்; விட்டகன்ருர்.

3. சிதம்பரனுரது தேசத் தொண்டைப் பற்றி இரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரை வரைக.

10. மனையியல்

(குடும்பக்கலை)

டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ், எம். எஸ். ஸி.,
எம். ஏ., பிஎச். டி.
முதல்வர், பெண்கள் குடும்பக்கலைக் கல்லூரி, கோவை.

இன்று நமது நாட்டுக் கல்வித் திட்டங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலிருந்து, உயர்ந்த பட்டங்கள் தரும் பல்கலைக் கழகம் வரையில், மனை வாழ்க்கை விஞ்ஞானம் அல்லது மனையியல் என்ற துறைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அகில இந்திய உயர்நிலைப்பள்ளிக் கல்விக் குழுவினர் செய்த பரிவுரைகளின் பேரில், எல்லாப் பெண்கள் பள்ளிக்கூடங்களிலும் மனையியலைப் பாடமாக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மனையியல் என்றால் என்ன என்றும், அதன் பொருள், தத்துவம், கல்வியில் அதன் இடம் முதலியன பற்றியும் நாம் ஆராயவேண்டியதவசியம். அத்துறையைப்பற்றிப் போதிய அறிவும், அனுபவமும், நமது நாட்டில் இல்லாதபடியால் அதைப்பற்றிப் பல தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. ''வெறும் சமையலும் தையலும்தானே மனைக்கலை! அவற்றையும், குழந்தை வளர்ப்பைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு ஏன் ஒரு கல்லூரிக்குச் செல்லவேண்டும்? நமது தாய்மார்களும், பாட்டிமார்களும், புத்தகம், ஆசிரியர், பாடசாலைகள் இல்லாமலே தாமாகவே, பட்டறிந்தும் பெண்ணின் நுண்ணறிவு வழியாகவும், இவற்றை உணர்ந்து கொண்டு இல்லறத்தை இனிது நடத்தி, நமது பண்பாட்டை வளர்த்து நிலைக்கச் செய்யவில்லையா?'' என்ற கேள்விகள் எழுகின்றன.

தொன்று தொட்டு மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து, சமூக நலத்திற்கும், வளர்ச்சிக்கும், பெருமைக்கும், இன்பத்திற்கும், அடிப்படையும் ஆதாரமுமாக இருந்து வந்திருப்பன வீடும் அதன் குடும்பமுமே. வீடே கோயில்; அதிலுறையும் தாயே கண்கண்ட தெய்வம். மனிதனுக்குள்ள நற்பண்புகளெல்லாம் தாயிடமிருந்தும், அவள் தரும் சூழ்நிலையிலிருந்தும் வருகின்றன. தியாகம், சகோதரத்துவம், அன்பு, அறம், பொறுமை, அருள், அறிவு, பற்றுக்கள் ஆகிய உயர்ந்த குணங்கள் குடும்பத்தில் பிறக்கின்றன. குடும்பத்தின் குத்து விளக்கு—அணையாத ஒளி, பெண். அன்றும் இன்றும் பெண்ணின் எண்ணமும், பெண்மையின் செல்வாக்கும் வீட்டின் கண்ணே உள்ளன. நம் நாட்டு அற மகளிர், மனைமாட்சியால் தான் மட்டற்ற ஆற்றல் பெற்று, அன்பால் அரிய செயல்கள் ஆற்றினர். இவ்வுண்மையைத் தெய்வப் புலவரும்,

> ''அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது''

என்னும் குறளால் உலகோருக்கு உணர்த்தியிருக்கின்றார்.

இவ்வளவு பழமையும், பெருமையும் வாய்ந்த வீட்டுக் கலையை, இன்று அறிவியல் முறையில், நமது கல்வி நிலையங்களில் கற்பிக்க வேண்டிய இன்றியமையாமை என்ன? வேகமாக முன்னேறிச் செல்லும் இன்றைய நாகரிக வெள்ளத்தில் வீட்டு வாழ்க்கையின் அடிப்படைகளான தெய்வ வழிபாடு, பக்தி, தியாகம் முதலிய அருங்குணங்கள் அடிபட்டு ஒதுக்கப் படாவண்ணம் பாதுகாக்கவேண்டும். நமது பண்பாட்டிலும் ஆன்ம வாழ்க்கையிலுமுள்ள உயர்ந்த கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு ஆண்மையையும், ஆற்றலையும் அளிக்கும் ஒரு கல்வித்திட்டம் அமைய வேண்டும். மாறிக்கொண்டேவரும் வாழ்க்கைத் தரம், கல்வி நிலை, மனித உள்ளப்போக்குகள், சமூக வாழ்க்கை

முதலியனவற்றிற்கு ஏற்றாற்போல் வீட்டுக் குடும்பமும் மாறு படுகிறது. பழைய மரபுகள், கட்டுப்பாடுகள், கடமைகள் முதலியவைகள் பல, புதுமைப் பெண்களின் வாழ்க்கையில் இடம் பெறுவதற்கில்லை. மின்சாரம், பொறிகள், புதுப்போக்கு வரத்து வசதிகள், வெளிநாட்டுப் பண்பாடு, முன்பின் பார்த்திராத புதிய உணவுகள், ஆடைகள், பொம்மைகள், உள்ளத்தின் உண்மைகள், பொருளாதாரம் ஆகியவை குடும்ப வாழ்க்கைக்குக் கல்வியின் தேவையைக் காட்டுகின்றன. இக்காலத்தில் பல பெண்கள் சமூக நலத்திற்காகவும் தம் தேவைகளுக்காகவும் வீட்டிற்கு வெளியே வேலை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் ஆட்சியில், அரசியலில் பெண்களுக்கு ஏராளமான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இத்தனை மாறுதல்களையும் பயன்படும் முறையில் சமாளிக்கப் பெண்களுக்கு மனையியற் கல்வி மிக மிக வேண்டற்பாலது.

மனையியல், கல்வித்துறையில் ஒரு முக்கியமான பாடமாகச் சமீபத்தில் தான் இடம் பெற்றது. 1908ஆம் ஆண்டில் அமெரிக்காவில் டாக்டர். ரிச்சர்ட்ஸ் என்ற அம்மையார், பொருள் நூல் துறையில் பெரும்புலமை அடைந்திருந்தும், அது தம் குடும்ப வாழ்க்கைக்குப் பெரிதும் பயன் படவில்லை என்பதை உணர்ந்து, பெண்கள் கூட்டமொன்று கூட்டி, அமெரிக்க மனையியல் சங்கமென்ற மாபெரும் நிலையத்திற்குக் கால்கோள் நிறுவினர். நமது நாட்டில், 1932ஆம் ஆண்டில், அனைத்திந்தியப் பெண்கள் சங்கத்தின் முயற்சியால், டெல்லி மாநகரத்தில் மனையியல் கற்பிப்பதற்காகவே 'லேடி இர்வின் கல்லூரி' நிறுவப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின்னர், 1952ஆம் ஆண்டில், சென்னையில் நிகழ்ந்த கூட்டத்தில் இந்திய மனையியல் சங்கம் நிறுவப்பெற்றது. இன்று, சென்னை உட்படச் சுமார் 16 பல்கலைக்கழகங்களிலும் ஏராளமான உயர்தரப் பள்ளிகளிலும் மனையியல் பாடமாக இருக்கிறது. ஆதாரக் கல்வியிலும் பல செயல் திட்டத்திலும் மனையியல் சேர்க்கப்பட்டுள்ளது.

மனையியல் என்பது குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்வியை அளிப்பது. வீடும் குடும்பமும் தான் ஒரு நாட்டின் ஆற்றல்களாம்.ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளிப்பது குடும்பவாழ்க்கை. வாழ்க்கையின் குறிக்கோள்களை அமைப்பது வீடு. ஆன்ம வாழ்க்கையைத் தருவது அதன் சூழ்நிலை. எதிர்கால மன்னர்களான குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது வீடு; என்றும் மாருத இன்பத்தையும், சிதைக்கமுடியாத குணத்தையும் அளிப்பது இல்லம். தனி மனிதனுடைய வாழ்க்கைக்கும், சமூகவாழ்க்கைக்கும் இன்றியமையாத பல கூறுகளைக் கொண்ட குடும்பத்தைச் சீர்பெற நடத்தக் கற்பிப்பது மனையியல். கல்வியின் நோக்கங்களில் சிறந்தவையான சமூக உணர்ச்சி, ஒழுக்கம், மனநிறைவு, சுகம், ஒழுங்கான குடும்பவாழ்க்கை, தொழில்திறமை, ஓய்வு நேரத்தை வளமுற அமைத்துக் கொள்ளல் ஆகியவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டது மனையியல்; ஆகவே மனையியலும் கல்வியும் ஒன்றேயாகும்.

வாழ்க்கையின் உயர்ந்த இன்பமே மனையியலின் குறிக்கோள். அதைப் பெறுவதற்காக அது பல கலைகள், அறிவியல் ஆகியவற்றின் அறிவைப் பயன்படுத்தி, மனிதப் போக்கைச் சரிவர வகுக்கிறது; வாழ்க்கைக் குறிக்கோளைத் தந்து, அக் குறிக்கோளைத் தெளிவாக்கி, அதை அடைய வழிகாட்டி உள்ளத்தைப் பண்படுத்திக் குடும்பத்தை மலர வைத்து, சமூகத்தை வனப்புறுத்துகிறது. ஆகவே, அது எக்காலத்திலும், எத்தேசத்தினருக்கும், ஆண், பெண், இளைஞர், முதியோர் ஆகிய பலதரப்பட்டவர்களுக்கும் பயன்படும் செல்வமாவதுடன், மக்கள் நலத்தையே முதலில் வைப்பதால், கல்விக்கு உயிர் நாடி போலாகிறது.

வாழ்க்கையின் அன்ருடத் தேவைகளாகிய உணவு, உடை, வீடு, பணம், உடல் வளர்ச்சி, உடல் நலம், குழந்தைகள் வளர்ப்பு, நோய்ப் பாதுகாப்பு, அழகு செய்தல், சமூகக் கடமைகள் ஆகிய பல துறைகளைக் கொண்டது

மனையியல். அது இசை, வரலாறு, கலையழகு, பண்பாடு, இறைவழிபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, வீட்டழகையும் கற்பிக்கின்றது. ''தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு-ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' என்ற கடமைகளைக் கொண்டது. மேற்கண்ட துறைகளைக் கற்பிப்பதற்கு அறிவியல் இன்றியமையாதது. உணவு, உடை, வீட்டுப் பொருளாதாரம், உடல் நலம் ஆகியவற்றை நன்கு அறிந்து ஆராய்வதற்கு ஆக அவற்றிற்கு அடிப்படையான அறிவியல்கள், பொருளியல்கள், உயிர் உடற் கூற்றியல்கள், உளவியல்,கலை, கட்டிடவியல் முதலியன எல்லாம் மனையியல் கல்வித் திட்டங்களில் சிறந்தவை. இந்த அறிவியற் கலைகளால் ஆன அடிப்படையின்மேல்,மனையியல் துறைகளான உணவு, உடை, வீடு, உடல் நலம்,குழந்தை வளர்ப்பு, சமூகப்பற்றுகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

உணவுத் துறையில், அறிவியல் முறையில் உணவின் தன்மை, பொருளியைபுக் கூறுகள், தேவைகள், உடல் வளர்ச்சிக்கேற்ற உணவுகள், நோயுற்றுழி, என்ன தேவை என்பவற்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். பொருட்குறைவாலும், அறிவுக்குறைவாலும், உணவுக்குறைவாலும் நோய்கள் நமது நாட்டில் மிக்குள்ளன ; அவற்றை எங்ஙனம் தவிர்ப்பது ? கிடைக்கும் உணவைச் சிறந்தவகையில் பயன் படுத்துவது எங்ஙனம்? உணவுக்கு உடலில் ஏற்படும் பொருளியைபு மாறுதல்கள் என்ன என்பவற்றையும் அறிதல் வேண்டும்.

உடையைப்பற்றிக் கல்லூரியில் படிப்பதற்கு என்ன இருக்கிறது என்று நினைக்கலாம். உடையின் தன்மை அதன் பொருளியைபுக் கூறுகள், குணங்கள், நெசவு, நிறத்தின் வன்மை, சுருங்குவது நீள்வது, பலவிதமான பட்டு, கம்பளி, செயற்கைப் பட்டு, பருத்தி, லினன் முதலிய துணிகளின் நிறைகள், குறைகள், உடையை அமைப்பது, தைப்பது,

அந்தந்த வயதினருக்கு ஏற்ற உடைகளை அமைப்பது, நலத்திற்கும் மனமகிழ்ச்சிக்கும், வயதிற்கும் தட்பவெப்பத்திற்கும் அழகுக்கும் தகுந்தபடி உடுத்துவது, உடைகளைப்பேணுவது, அவற்றைச் சிறந்த முறையில் துவைப்பது, உலர்த்துவது, பெட்டிபோடுவது, கம்பளி, பட்டு முதலியவற்றைப் பூச்சிகள் அரிக்காவண்ணம் பாதுகாப்பது, கிழிந்த துணிகளைத் தைப்பது முதலியன அறியவேண்டியவையாம்.

வீட்டைப் புதிதாகக் கட்டுவதானல்-உடல் நலம், வெளிச்சம், நடமாட்டவசதி, அழகு, தொழில் முதலியவற்றை மனத்தில் கொண்டு அதைக் கட்டுவது நல்லது. ஏற்கனவே கட்டியதாகில் வீட்டை வசதிக்கேற்ப ஒழுங்கு செய்து கொள்வது, வீட்டிற்கும், பணத்திற்கும், பண்பாட்டிற்கும் ஏற்ற சாமான்கள் மேசை நாற்காலி முதலியன வாங்குவது, அழகுக்கும், உணவுத்தேவைக்கும் ஏற்பத் தோட்டம் போடுவது முதலியன கவனிக்கப்படவேண்டும். வீட்டுப் பொருளியலில் வரவுக்குத் தக்க செலவு செய்வது, எல்லாச் செல்வங்களையும் பெருக்குவது, தேவைகளின் தகுதிக்கேற்பச் செலவு செய்வது, எதிர்காலத்திற்குப் பொருள் சேர்த்துவைப்பது, வீட்டைத் திறமையாக நடத்திப் பலவிதச் சிக்கன முறைகளைக் கண்டுபிடித்துக் கையாண்டு பேரின்பம் பெறுவது போன்றவற்றைக் கவனிக்க வேண்டும்.

> ''அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள்

என்பதற்கு இலக்காக மனைமாட்சியை அமைக்க வேண்டும்.

நலத்தைப்பற்றி நாம் படிக்கவேண்டியது மிகவுள்ளது. உடல் நலமும், உளநலமும் ஒன்றோடொன்று இயைந்து பொருந்தியவை. நலமுள்ள உடலில் தான் நலமுள்ள உள்ளம் அமையும். ஆகவே, நலத்தைச் சார்ந்த பழக்கவழக்கங்கள், கொள்கைகள், உண்ணும்

உணவு, குடிக்கும் தண்ணீர், உறையும் இடம், அணியும் ஆடை, நோய்க்குக் காரணமான அணுக்களைத் தவிர்க்கும் முறைகள், நோயுற்றபோது எடுத்துக்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், நோயுற்றோரைப் பராமரிக் கும் முறைகள் ஆகியவை சிறப்பாகக் கவனிக்க வேண்டியவை.

வருங்கால மன்னர்களான நம் குழந்தைகள் வீரத்துடன், ஆண்மையுடன், உண்மையுடன் வளர, இளமையிலேயே அவர்களுக்கு நல்ல சூழ்நிலையை வீட்டில் நாம் அமைத்துத் தரவேண்டும். குழந்தைகள் உடல், உள வளர்ச்சியிலுள்ள பருவங்கள், மாறுதல்கள், அவர்களுக்கேற்ற உணவு, உறைவிடம், நல்ல பழக்கங்கள், விளையாட்டு, கல்வி ஆகிய வற்றை எப்படித் தருவது என்பனபற்றிக் குழந்தை வளர்ப் புத் துறையில் அறிவு புகட்டவேண்டும்.

> ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்''
> "தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
> முந்தி இருப்பச் செயல்''

என்ற திருக்குறள்கள் குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள கடமைகளைக் காட்டுகின்றன அல்லவா?

மனிதன் என்றுமே தனியாக வாழமுடியாது. உலகத் தோடொத்து, ஒன்றாகக் கூட்டுறவுடன் காரியங்களைச் செய்ய, பழக்க, கல்வி நிலையங்கள் உதவ வேண்டும்.

குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் தேவைகள் அனைத் தையும் திறம்படச் சமாளிக்கத் தக்க ஆற்றலையும் திறமை யையும் மனையியல் வழியாய்ப் பெறமுடியும்.

> ''இல்லதென் இல்லவள் மாண்பானல், உள்ளதென்
> இல்லவள் மாணுக் கடை''

என்ற பொன்னுரையைத் தற்காலத்தில் உறுதிப்படுத்

தவும் பெண்மையைக் காக்கவும் உதவுகிறது மனையியற் கல்வி.

மனிதனை ஆக்குவதும் அழிப்பதும் அவன் சூழ்நிலை. அதனை ஆக்க முறையில் அமைத்துத் தருவது பெண்ணின் பெருங்கடமை. குழந்தை வளர்வதற்கும், அன்பு அரும்பி மலர்வதற்கும், முதுமையில் ஓய்வும் இன்பமும் கிடைப்பதற்கும், தெய்வ அன்பும் பண்பாடும் சிறந்து ஓங்குவதற்கும் வீடே சிறந்த இடம். அதை அழகுடன் வைத்துப் பாதுகாக்க மனையியற் கல்வி இன்றியமையாதது.

அருஞ்சொற் பொருள்

மனையியல் - குடும்ப இயல். மகளிர் - பெண்கள். அறிவியல் - விஞ்ஞானம். ஆண்மை - வீரம். கால்கோள் - தொடக்கம். ஒக்கல் - சுற்றம். ஓம்பல் - பாதுகாத்தல். ஈனும் - கொடுக்கும்.

வினாக்கள்

1. மனையியலைப் பற்றி மக்களிடையே நிலவும் தவறான கருத்துக்கள் யாவை?
2. குடும்பத்தைப் பற்றியும், குடும்பத் தலைவியாகிய தாயைப்பற்றியும் ஆசிரியை அவர்கள் கூறுவன யாவை?
3. மனையியற் கல்வியின் அவசியங்களைக் கூறுக.
4. மனையியற் கல்வியின் தோற்றத்தைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியும் கூறுக.
5. ''மனையியலும் குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்வியே'' என்பதை உறுதிப்படுத்த ஆசிரியை அவர்கள் கூறும் காரணங்கள் யாவை?
6. மனையியல் துறைகளைப்பற்றி விளக்குக.
7. உணவைப் பற்றியும் உடையைப்பற்றியும் மனையியற் கல்வியால் அறிய வேண்டியன யாவை?

8. வீடுகள் கட்டுவதிலும், பழைய வீடுகளைப் புதுப்பித்த லிலும் மனையியற் கல்வி எவ்வாறு உதவி புரிகிறது?

9. உடல் நலத்தைப் பாதுகாக்க மனையியற் கல்வி எவ் வாறு உதவுகிறது?

10. மனையியற் கல்வியின் இன்றியமையாமையைப் பற்றி ஆசிரியை அவர்கள் இறுதியில் கூறுவன யாவை?

பயிற்சி

1. பிரித்தெழுதுக :— தாயிடமிருந்து; பார்த்திராத; அனைத்திந்தியப்பெண்கள்; பொருளியைபுக் கூறுகள்; நோயுற்றுழி.

2. சேர்த்து எழுதுக :— சூழ்நிலையில் + இருந்து; உடலில் + ஏற்படும்; உடைகளை + பேணுவது; துணிகளை + தைப்பது; ஒன்றோடு + ஒன்று.

3. மனையியற் கல்வியின் நன்மைகளைப் பற்றி 40 வரி களில் ஒரு கட்டுரை வரைக.

11. ஐக்கிய நாடுகள் சபை

திருவாளர் கே. வி. குப்புசாமி பி. ஏ., பி. டி.

சமூக அறிவு ஆசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, சூலூர்.

உலகுக்கு ஏற்படும் துன்பங்களுள் மிகக் கொடியது போர் ஆகும். போர் எவ்வளவு கொடியது என்பது அதனால் ஏற்படும் விளைவுகளைச் சற்று எண்ணிப்பார்த்தால் நனி விளங்கும். சான்றாக 1914 முதல் 1918 வரை நடந்த முதல் உலகப் பெரும் போரின் விளைவுகளைக் கூறலாம். இப் போரில் ஒரு கோடி மக்கள் இறந்தனர் என்றும், 2 கோடி மக்கள் காயமுற்றனர் என்றும் 60 கோடி ரூபாய்கள் செல வாயின என்றும் கூறப்படுகின்றது. பல நகரங்களும், ஊர் களும், தொழிற்கூடங்களும், பாலங்களும், அணைகளும், கழனிகளும் அழிந்து போயின. தவிர பஞ்சத்தாலும், பிணி களினாலும் பலர் பீடிக்கப்பட்டு வருந்த வேண்டியதாயிற்று. அறிவுநலம் சான்ற பெருமக்கள் இப்போரில் சொல்லொணாத கொடுமைகளையும், போர் வருங்காலத்திலேனும் தவிர்க் கப்பட வேண்டியதன் அவசியத்தையும் நன்கு உணர்ந்தனர்.

அவர்கள் போரைத் தவிர்த்து உலகில் நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டுவதற்குரிய வழி வகைகளைப்பற்றி ஆலோசிக்கலாயினர். இத்தகைய ஆலோசனையின் விளை வாகத்தான் 1920ஆம் ஆண்டு சர்வதேச சங்கம் நிறுவப் பட்டது. இச்சங்கத்தின் தோற்றத்துக்கு மூல காரணமாக இருந்தவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவ ராயிருந்த உட்ரோ வில்சன் ஆவார். எனவே உட்ரோ வில்சனைச் ''சர்வதேச சங்கத்தின் சிற்பி'' என அழைப்ப துண்டு. பல காரணங்களால் சர்வதேச சங்கம் சிறந்த சமா

தானக் கருவியாக இயங்க முடியவில்லை. உறுப்பு நாடுகள் சங்கத்தின் கொள்கைகளுக்குப் புறம்பாக நடக்கத் தலைப் பட்டன. சங்கம் அவற்றைக் கண்டித்த பொழுது அவை சங்கத்தினின்றும் விலகிக் கொண்டன. இந்நிலையில் சர்வதேச சங்கம் ஒப்புக்கு உலாவியது. அது உயிருக்கு மன்றாடி இறுதியில் இரண்டாவது உலகப் பெரும் போரின் போது ஊசலாடி மறைந்து போயிற்று.

1939 முதல் 1945 வரை நடந்த இரண்டாவது உலகப் பெரும் போர் முதல் போரினும் கொடியது. எனவே சர்வ தேச சங்கம் அழிவுற்ற போதிலும் சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. இம் முயற்சிகளில் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவராயிருந்த ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்து முதலமைச்சராயிருந்த சர்ச்சிலும் ஈடுபட்டு 1945ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24ஆம் நாள் ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கினர். இச்சபையில் சமாதானத்தை விரும்பும் எந்த நாடும் சேர்ந்து கொள்ளலாம். இதன் தலைமைக் காரியாலயம் நியூ யார்க் நகரில் உள்ளது.

நோக்கங்கள்:—போர்களைத்தடுத்து உலகில் நிரந்தர மான சமாதானத்தை நிலைநாட்டுவது, பன்னாட்டுக் கூட்டு றவை வளர்த்தல், உலகின் சமூக, பொருளாதார, பண்பாட் டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒன்றுபட்டு உழைப்பது, மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு உதவுதல், உரிமை பெருத நாடுகள் உரிமை பெற உதவுதல், உலக மக்களிடையே ஏற்படும் பூசல்களை ஆராய்ந்து நியாயம் வழங்குதல் ஆகியவை ஐ. நா. சபையின் பொதுவான நோக்கங்களாகும்.

உறுப்புக்கள்:—ஐ. நா. சபையின் முக்கியமான உறுப் புக்கள் 6ஆகும். அவற்றைப்பற்றிச் சிறிது கீழே ஆராய் வோம்.

பொதுப் பேரவை :—இப்பொதுப் பேரவையில் ஐ. நா. சபையில் சேர்ந்துள்ள எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் இருப்பர். தற்போது இதில் 114 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலக நாடுகள் அனைத்துக்குமான பொது விஷயங்கள் முக்கியமாக இப்பேரவையில்தான் ஆலோசிக்கப்படுகின்றன. இப்பேரவை குறிப்பாக உலக அமைதிக்கான வழிவகைகளைச் சிந்தித்துச் சிபாரிசு செய்கிறது. மேலும் இப்பேரவைதான் பாதுகாப்பு மன்றம், சமூகப் பொருளியல் மன்றம் முதலியவற்றிற்குரிய உறுப்பினர்களையும் பொதுச் செயலாளரையும் தேர்ந்தெடுக்கிறது. சாதாரணமாக இப்பேரவை ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே கூடுகிறது.

பாதுகாப்பு மன்றம் :— ஐ. நா. சபையின் மிக முக்கியமான உறுப்பு பாதுகாப்பு மன்றமேயாகும். இதில் 11 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் ஐவர் ஐக்கிய அமெரிக்க நாடுகள், இரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு, சீனா (தேசீயச் சீனா) ஆகிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகளாவர். ஏனையோர் பொதுப் பேரவையால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதன் பொருட்டுத் தக்க நடவடிக்கைகளை எடுப்பது இதன் தலையாய பொறுப்பாகும். இம்மன்றம் திங்களுக்கு இரு முறை கூடுகிறது. எந்த ஒரு தீர்மானமும் இம்மன்றத்தில் நிறைவேற 7 பேரின் இசைவு வேண்டும். அதோடு 7 பேரில் 5 பேர் நிரந்தரப் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும். நிரந்தரப் பிரதிநிதிகளுக்கு எந்த ஒரு முக்கிய தீர்மானத்தையும் விரும்பினால் தடை செய்ய ‘இரத்து’ அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே முக்கிய தீர்மானங்கள் பாதுகாப்பு மன்றத்தில் நிறைவேற நிரந்தரப் பிரதிநிதிகளின் ஒன்றுபட்ட இசைவு இன்றியமையாததாகிறது. நிரந்தரப் பிரதிநிதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இரத்து அதிகாரம் இம்மன்றத்திலுள்ள ஒரு முக்கிய குறைபாடாகும்.

சமுதாயப் பொருளியல் மன்றம்: பொதுப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 உறுப்பினர்கள் இதில் இடம் பெறுகின்றனர். உறுப்பு நாடுகளின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலுவது இதன் பொறுப்பாகும். இது சிறு குழுக்களின் வாயிலாக சமூக, பொருளியல் துறைகளை ஆராய்ந்து அவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்களை ஐ.நா.சபைக்கும் உறுப்பு நாடுகளுக்கும் சிபாரிசு செய்கிறது.

காப்பாளர் மன்றம்:- இம்மன்றம் 12 உறுப்பினர்களைக் கொண்டது. இது பின் தங்கிய நாடுகளின் நலனைக் கவனித்து வருகிறது; அவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கிறது; மேலும் அவை உரிமை பெற உதவுகிறது. இதன் மேற்பார்வையில் இருந்த ஆப்பிரிக்க நாடான டாங்கனிக்கா அண்மையில் உரிமை பெற்றது, ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பன்னாட்டு நீதிமன்றம்:- இம்மன்றத்தில் பன்னாடுகளைச் சார்ந்த 15 நீதிபதிகள் உள்ளனர். இந்த நீதிமன்றம் உறுப்பு நாடுகள் கொண்டுவரும் வழக்குகளை விசாரித்து தீர்ப்புக் கூறுகிறது. தவிர, சட்ட சம்பந்தமான விஷயங்களில் ஐ. நா. சபைக்கு ஆலோசனைகள் கூறுவதும் இதன் பொறுப்பாகும். இம்மன்றம் ஹாலாந்து நாட்டிலுள்ள திஹேக் நகரில் இயங்கி வருகிறது.

செயலகம் :—செயலகத்தின் தலைவர் பொதுச்செயலாளர் எனப்படுவார். இவர் பொதுப் பேரவையால் பாதுகாப்பு மன்றத்தின் சிபாரிசின் பேரில் நியமிக்கப்படுகிறார். இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள். இப்பதவி உலகிலேயே மிகக் கௌரவமான பதவியாகக் கருதப்படுகிறது. இதன் இரண்டாவது பொதுச்செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது சமாதான முயற்சி ஒன்றில் ஈடுபட்டு எதிர்பாராத வகையில் உயிர்நீத்த உத்தமர் ஹாமர் ஷீல்ட்டுக்குப் பிறகு, பொதுச் செயலாளர் பதவிக்கு நமது நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜவஹர்லால் நேரு அவர்

களின் பெயர் அடிபட்டது என்பதிலிருந்து பொதுச் செய லாளர் பதவிக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம். பொதுச் செயலாளரே ஐ. நா. சபையின் முக்கிய நிர்வாக அதிகாரியாவார். பொதுச் செயலாளருக்குக்கீழ் பன்னாடுகளைச் சார்ந்தவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். மிகுந்த பொறுப்பு வாய்ந்த பொதுச் செயலாளர் பதவியைத் தற்போது வகித்து வருபவர் பர்மாவைச் சார்ந்த யு தாண்ட் ஆவார்.

மேற்கூறிய உறுப்புகளைத் தவிர குறிப்பிட்ட பணிகளை ஆற்றுவதன் பொருட்டுப் பல கிளை நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை உலகத் தொழிலாளர் நலத் தைக் கண் காணிக்கும் பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் (I.L.O.), மக்களின் வாழ்க்கைத்தரம், உணவு உற்பத்தி ஆகியவை உயர்வதற்கான வழிகளை ஆய்ந்து கூறும் உணவு விவசாயக் கழகம் (F. A. O.), உலக மக்களின் உடல் நலத்தைப் பேணும் உலக சுகாதாரக் கழகம் (W. H. O.), கல்வி, விஞ்ஞானம், பண்பாடு ஆகிய மூன்றையும் கருவிகளாகக் கொண்டு பன்னாட்டு உறவை வளர்த்து வரும் கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் (U. N. E. S. C. O.) முதலியன ஆகும்.

சாதனைகள்: ஐ. நா. சபையின் கடந்த கால வர லாற்றை எண்ணிப் பார்ப்பவர்கள் அது தனது முதன்மை யான நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஓரளவுக்குத்தான் வெற்றி பெற்றுள்ளது என்பதனை உணர்வர். வட கொரி யாவின் ஆக்கிரமிப்பு, இந்தோ சீனாவில் நடந்து வந்த போர், சூயஸ் கால்வாய்த் தகராறு, ஈரான்-கிரீஸ் எல்லைப் புறத்தில் நடைபெற விருந்த போர் ஆகியவை ஐ. நா. சபையால் தடுக்கப்பட்ட போதிலும் மூன்றும் உலகப் பெரும் போர் மூளுமோ என்ற அச்சம் உலகில் நிலவிக் கொண்டுதான் இருக்கிறது.

ஐ. நா. சபை உலக அமைதியையும், உலகப் பாதுகாப்பையும் நிறுவுதல் என்ற தனது முக்கியமான நோக்கத்தை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றி பெறவில்லையாயினும், அது தனது பிற நோக்கங்களை நிறைவேற்றுவதில் நல்ல வெற்றி பெற்றுள்ளது என்பதனை யாரும் மறுக்க முடியாது. சான்றாக, இதன் கீழ் இயங்கிவரும் குழுக்களும், கிளை நிறுவனங்களும் செய்துவரும் பணிகளைக் கூறலாம். கொள்ளை நோய்கள் பரவாமல் தடுப்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது; உணவு உற்பத்தி பெருகியுள்ளது; மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. தொழிலாளர்களின் நிலை உயர்ந்துள்ளது. உரிமை பெறாத நாடுகள் உரிமை பெறுவதற்கான தகுதியைப் பெற்று உரிமை பெற்றுள்ளன. அகதிகள் உதவி பெற்று வருகின்றனர்; சில திட்டங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு உலக பாங்கியிடமிருந்து பல நாடுகள் நிதியுதவி பெற்றுள்ளன. உலக நாடுகள் தங்கள் தேர்ச்சித் திறனைப் பகிர்ந்து கொள்ளுகின்றன; நிபுணர்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு நுட்ப உத்திகளைக் கற்றுக்கொடுப்பதற்கும், செய்து காட்டுவதற்கும், உதவுவதற்கும் செல்கிறார்கள். இதன் மூலம் நல்ல பலன் கிட்டியுள்ளது. ''இதுவரை சுமார் 80 நாடுகளைச் சேர்ந்த 1000 நிபுணர்கள் 90 நாடுகளில் பணி செய்திருக்கிறார்கள். சுமார் 12,000 பேர்கள் சுமார் 100 நாடுகளில் உயர் நுட்பப் பயிற்சிக்காக உதவி பெற்றுள்ளனர்.'' என்று 1957ஆம் ஆண்டு வெளியான ஐ. நா. சபைக் குறிப்பு ஒன்று கூறுகிறது. மேற்கூறிய விவரங்கள் முழு நிலைமையையும் எடுத்து உரைத்தாய்விட்டன என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் மனக்கசப்பு, அபிப்பிராய பேதம் ஆகியவற்றைத் தவிர்ப்பதில் ''யுனெஸ்கோ'' போன்ற நிறுவனங்களின் சேவை கணக்கிட முடியாததாகும்.

குறைபாடுகள் : ஐ. நா. சபை தனது முக்கியமான நோக்கங்களைச் செவ்வனே நிறைவேற்ற

முடியாமல் இருப்பதற்குக் காரணம் அதில் உள்ள குறைபாடுகளேயாகும். பாதுகாப்பு மன்றத்திலுள்ள நிரந்தரப் பிரதிநிதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள 'இரத்து' அதிகாரம், மிகுந்த பொறுப்புக்களை உடைய இந்தச் சபையினிடம் போதிய படைபலம் இன்மை, ஐக்கிய அமெரிக்க நாடுகள், இரஷ்யா ஆகியவற்றிற்கு இடையே யுள்ள பகைமை, சில சமயங்களில் இரஷ்யா தரும் முட்டுக் கட்டை, உறுப்பு நாடுகளின் சுயநலம் ஆகியவை, ஐ. நா. சபையிலுள்ள முக்கிய குறைபாடுகளாகும். தற்பொழுது ஐ. நா. சபையின் முன்புள்ள காங்கோ பிரச்சினையை உற்று நோக்குபவர்கள் மேற் கூறிய குறைபாடுகள் எந்த அளவுக்கு அதில் பிரதிபலிக்கின்றன என்பதனை நன்கு உணரலாம்.

முடிவுரை

இன்றைய நிலையில் ''குறைகள் உடையதாயினும் ஐ. நா. சபைதான் நாகரிகத்தை அழிவுறுமல் காக்கும் ஒரே அரண்'' ஆக உள்ளது. மூன்ரும் உலகப் பெரும்போர் தோன்றுமாயின் அது உலக அழிவிலேயே முடியும் எனப் பலரும் நம்புகின்றனர். எனவே ''உலக மக்களின் பொது நலன்களை முன்னிட்டு'' இயங்கிவரும் ஐ. நா. சபையின் முக்கியத்துவம் முன்பு எப்போதையும் விடத் தற்பொழுது நன்கு உணரப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் நடைபெற்ற பொதுப்பேரவைக் கூட்டத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் சென்று பங்கெடுத்துக் கொண் டனர் என்பது இதற்கு ஒரு நல்ல சான்று ஆகும். இன்று மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற மன வளர்ச்சி இல்லை. சகிப்புத் தன்மையும், பிறர் நலம் நாடுதலும் இன்றைய உலகின் இன்றியமையாத தேவைகளாக உள்ளன. இவற் றையே நம் நாட்டுச் சான்றோர்களும் ''ஒருவர் பொறை, இருவர் நட்பு'', ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தொடர்களில் குறித்தனர். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கணியன் பூங்குன்றனர் கூற்று மெய்யாகும்

நாள் எந்நாளோ! உலக நாடுகள், குறிப்பாக வல்லரசுகள் தன்னலம் அற்றனவாகவும், பிற நாடுகளின் உரிமைகளை மதித்து நடப்பனவாகவும், பலாத்காரத்தைப் போற்றுது பணி புரிவதைத் தங்கள் கடமையாகவும் கொள்ளும் நாள் எந்நாளோ ! !

அருஞ்சொற் பொருள்

விளைவு - பயன். எண்ணி - கருதி, நினைத்து. நனி - மிகுதி. கழனி - வயல். சொல்லொணுத - சொல்ல முடியாத. இசைவு - உடன்பாடு. அடிகோலுவது - ஆயத்தஞ்செய்வது. அண்மையில் - சமீபத்தில். செவ்வனே - சிறப்பாக.

வினுக்கள்

1. முதல் உலகப் பெரும் போரால் விளைந்த தீமைகள் யாவை?
2. சர்வதேச சங்கத்தைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக.
3. ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்தைப் பற்றியும் நோக்கங்களைப் பற்றியும் கூறுக.
4. ஐ. நா. சபையின் முக்கிய உறுப்புக்கள் யாவை?
5. பாதுகாப்பு மன்றத்தைப் பற்றி விளக்குக.
6. ஐ. நா. சபையின் முக்கியமான கிளை நிறுவனங்கள் யாவை?
7. ஐ. நா. சபையின் சாதனைகள் யாவை?
8. ஐ. நா. சபையிலுள்ள குறைபாடுகள் யாவை?
9. ஐ. நா. சபையின் உதவி முன்பு இருந்ததைவிட தற்பொழுது அதிகம் தேவை என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் யாவை?

பயிற்சி

1. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—

பீடிக்கப்பட்டு, சொல்லொணுத, தலையாய, அடி கோலுவது, குறிப்பிடத்தக்க.

2. சிறு குறிப்பு வரைக :—

உட்ரோ வில்சன், ரூஸ்வெல்டு, சர்ச்சில், ஹாமர்-ஷீல்ட், யு தாண்ட்.

3. ஐ. நா. சபை அவ்வப்பொழுது ஆற்றி வரும் பணிகளைப்பற்றி பத்திரிகைகளின் மூலம் படித்தறிக.

12. நாட் குறிப்புகளிற் சில*

(வாழ்க்கை நிகழ்ச்சி)

ஆசிரியர்: ரா. தேசிக பிள்ளை, பி.ஏ.,பி.எல்., புதுச்சேரி

ஆனந்தரங்கப் பிள்ளையின் தினக் குறிப்புகள் எத்தகைய வெற்றி வாய்ந்தனவென்பதை வாசகர் ஒருவாறு அறிந்துகொள்ளும் பொருட்டு அவற்றிற் சிலவற்றை ஆங்கில மொழி பெயர்ப்பினின்றோ, அல்லது பிரெஞ்சுமொழி பெயர்ப்பினின்றோ தமிழாக்கிச் சுருக்கமாகக் கீழே தருகின்றோம். தமிழ் மூலம் இப்போது எளிதில் கிடைக்காமையினால், இவ்விதஞ் செய்ய நேர்ந்ததென்பதை வாசகர் கருத்திலிருத்த வேண்டும்.

1. எலியாஸ் பயணமும் பிள்ளையின் துயரமும்

காளயுத்தி ஞூ சித்திரை மீ 12 உ (21-4-1738) திங்கட்கிழமை:

இன்று காலை கவர்னரைப் பார்க்கச் சென்றேன். அவர் எலியாஸுடன் பேசிக் கொண்டிருந்தார். சிஞ்ஞார் என்பவரும் அவ்விடமிருந்தார். அந்நேரத்தில் சென்னையிலிருந்து வந்த தபாலில் கவர்னருக்கு ஒரு கடித மிருந்தது. அக்கடிதத்தில் பிரின்ஸெஸ் மேரி என்னும் ஆங்கிலக் கப்பல்

* ஆனந்தரங்கப்பிள்ளை என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

சென்னைக்கு வந்திருப்பதாகவும் அக்கப்பலில் பிரான்ஸ் தேசத்துச் சினேகிதரிடமிருந்து கடிதமொன்று 1737ஆம் வருடம் அக்டோபர் மாதம் 13ஆம் தேதியிட்டு வந்திருப்ப தாகவும் குறிப்பிடப் பட்டிருந்தது. சிஞ்ஞார் போன பிறகு கவர்னர் எலியாஸை நோக்கி, ''பிரான்ஸிலிருந்து வந்த செய்திகளெல்லாம் நல்லனவாயிருக்கின்றன,'' என்று கூறினார். பிறகு என் பக்கம் திரும்பினார். நான் சிறிது விலகி உட்கார்ந்து கொண்டேன். கவர்னர் எலியாஸுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்களென்பது எனக்குத் தெரியாது.

பிறகு எலியாஸ், என்னைக் கூப்பிட்டு, ''ரங்கப்பரே, நான் சீனத்துக்குப்போக உத்தேசிக்கிறேன். நூறு கண்டி ஈயம் வேண்டும். நாகூர், பரங்கிப்பேட்டை, மற்றும் கிடைக் கக் கூடிய இடங்களிலிருந்தும் வாங்கி வரவேண்டும். இதற் காக உம் ஆட்களை உபயோகப் படுத்திக்கொள்ளும். அவர் களுக்காகும் கூலியைக் கொடுத்துவிடுகிறேன்,'' என்று கூறினார்.

அவர் போவதாகச் சொன்ன வார்த்தையை நான் கேட்டபோது என் காதில் நாராசம் விட்டது போன்றிருந்தது. அப்போது எனக்கிருந்த கலக்கத்தை ஏட்டில் எழுத முடி யாது. நான் இவ்வளவு மனங் கலங்கினதற்குக் காரணம் என்னவெனில், லெனுவார் போன நாள் முதல் எலியாஸ் என் மீது கனகராய முதலியார் கொண்டிருந்த விரோதத்தை மனத்தில் வைத்து என்பால் எப்போதும் அன்பு பாராட்டி வந்தார். நான் சொல்லும் காரியங்கள் எல்லாவற்றையும் காதுகொடுத்துக் கேட்பதுமன்றி, இன்னது செய்ய வேண்டு

மென்றும் எனக்கு எடுத்துக் கூறுவார்; கவர்னராலோ, அவரது ஆலோசனைச் சபையாராலோ என் பெயர் சொல்லப் படுமானால், எனக்கு அனுகூலமாகவே பேசி வந்தார். எல்லா விதத்திலும் அவர் எனக்கு உதவியாகவே இருந்து வந்ததால், கனகராய முதலியாரின் கோபம் அதிகரித்தே வந்தது. இவற்றையெல்லாம் நினைக்கும்போது என் மனத்தில் மிக்க துன்பம் உண்டாயிற்று. எலியாஸ் சுகமாகப் பிரயாணம் செய்யவும், அவர் காரியங்களெல்லாம் சித்தி பெறவும், அவர் சீக்கிரம் ஊர் திரும்பி வரவும் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். கடவுள் அருளால் இவை யாவும் நிறை வேறும் என்பதில் சந்தேகமில்லை.

2. திருட்டும் தண்டனையும்

சித்தார்த்தி ௵ கார்த்திகை மீ 9 ௳ (21-11-1739) சனிக்கிழமை:

இன்று மாலை 5 மணிக்கு ஒரு முக்கியமான காரியம் நடந்தது. வேலையாட்களின் பழைய தலைவன், தானிருந்த வேலையில் முத்தைய பிள்ளை நியமிக்கப்பட்டு விட்டபடியால், பொருமை கொண்டு, தன் ஆட்களில் ஒருவனை ஊரில் திரு டும்படி ஏவி விட்டான். அவ்வாள் பல நாளாக அக்காரியத் தைச் செய்து வந்து, நாலைந்து மாதங்களுக்கு முன் அகப்பட் டுக் கொண்டான். அவனை அடித்துக் கேட்டபோது அவன் எல்லாச் செய்திகளையும் ஆதியோடந்தமாகக் கூறினதுமன்றி, அவன் திருட்டுகளைப் பார்த்தவர்கள் அல்லது கேள்விப்பட்ட வர்களுடைய பெயர்களையும், திருட்டுப் பொருள்களை வாங்கி வைத்துக் கொண்டவர்களுடைய பெயர்களையும் சொல்லி விட்டான். அவர்களுள் பதினைந்து, பதினாறு பேர் அவனோடு சிறைக்கு அனுப்பப்பட்டனர். ஆலோசனைச் சபை, அவர் களெல்லாரையும் விசாரித்து, திருடனையும், மேற் கூறியவர் களில் அதிக குற்றவாளிகளான ஐந்து பேர்களையும் தவிர, மற்றவர்களை விடுதலை செய்துவிட்டது. அக்குற்றவாளிகள்

ஓடவி வீரப்ப மேஸ்திரி, ஒரு தட்டார், சாந்தி, பிரமன், குமரப்ப நயினுர் என்பவர்கள். திருடன் பகிரங்கமாகத் தூக்கி லிடப்பட்டான். இந்தத் தூக்கு ஊரின் மத்தியில் கடைவீதி யில், நீதி மன்றத்தின் முன், மாலை ஐந்து மணிக்கு இதற் காகத் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட தூக்கு மரத்தில் நிறை வேற்றப்பட்டது. துய்லோரேன்ஸ் இதை நேரிலிருந்து கவ னித்தார். மற்ற ஐவரில் ஓடவி வீரப்பமேஸ்திரி, தட்டார் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐம்பது சவுக்கடி கொடுக் கப்பட்டதோடு இவர்கள் காதுகளையும் அறுத்து, இவர்களைப் புதுச்சேரி எல்லைக்கப்பால் துரத்திவிட்டார்கள். எஞ்சி நின்ற மூவராகிய சாந்தி, பிரமன், குமரப்ப நயினுர் என்பவர்கள் ஒரே வரிசையாக நிறுத்தப்பட்டு, சவுக்காலடிக்கப்பட்டார்கள். அவர்கள் தலைக்கு இருபத்தைந்து அடி வாங்கினுர்கள். அவர்கள் மீதிருந்த வேறு சில குற்றங்களுக்காக மீண்டும் சவுக்கடி தண்டனை விதிக்கப்பட்டுப் பின்பு விடுதலை செய்யப் பட்டார்கள்.

3. போர் விவரம்

ரௌத்திரி ஞு வைகாசி மீ 6 உ (15-5-1740) ஞாயிற்றுக்கிழமை:

40 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் குதிரை வீரர்களைக் கொண்ட மகாராஷ்டிரப் படையொன்று கண்டனூரை நோக்கி வந்தது; குடி மக்களிடத்தில் 60,000 அல்லது 70,000 ரூபாய்க்கு வரிகள் விதித்து வசூலித்துக் கொண்டு கடப்பையை முற்றுகையிட்டது. அங்கு அப்படைக்கும், அப்துல் நபி கான் குதிரைப் படைக்கும் ஒரு நாள் போர் நிகழ்ந்தது. இப்போரில் அப்துல் நபி கான் கெடுதியை எதிர் பார்த்துத் தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக அதை வட பெண்ணையாற்றின் மத்தியில் ஒரு தீவில் கட்டப் பட்டுள்ள ஜெண்டிக் கோட்டைக்கு அனுப்பிவிட்டான். இப் போது, மகாராஷ்டிரர்கள் கணவாயை நோக்கிச் சமபூமியில்

இறங்கிச் செல்லுவதாகத் தெரிகிறது. ஆனால் நவாபு தோஸ் தலிகான், அசன் அலி, சிட்டி ஜுஹுர், மீர் அசத்து இவர்கள் தங்கள் காலாட் படையோடும், குதிரைப் படையோடும் பகைவர்கள் வாராமல் தடுப்பதற்காக எதிர்த்து நின்றார்கள். இந்த இரகசியத்தை மேற்குத் திக்கிலிருந்த ஆதி ஆனந்த செட்டி எனக்குத் தெரிவித்தான். அவன் இதை ஒரு பனை யோலையில் எழுதி, சென்ற வெள்ளிக்கிழமை இரவு அதாவது வைகாசி மீ 4 உ(மே, 13) எனக்கு அனுப்பி வைத்தான். இச்சம்பவங்களைக் குறித்து இமாம் சாகிபும் புதுச்சேரிக் கவர் னருக்குத் தெரிவித்திருந்தார். இதனால் ஊர் முழுவதும் கலக் கம் கொண்டிருந்தது. செஞ்சி, வாலி கொண்டாபுரம், வந்தவாசி முதலிய இடங்களிலிருந்து கோட்டைத்தளகர்த்தர் களும், ஊர்ப் பெரியதனக்காரர்களும் எனக்குக் கடிதங்கள் அனுப்பியிருந்தார்கள். அவர்கள் மகாராஷ்டிரர்களின் துணிவைப் பற்றியும், தங்கள் பெண்டு பிள்ளைகளுக்குப் பாது காப்பு இடங்கள் புதுச்சேரியில் அமைக்க வேண்டுவது பற்றியும் எழுதியிருந்தார்கள். கவர்னரின் உத்தரவு பெற்று இராயலு அய்யனேடு கம்பெனிச் சிப்பாய்கள் இருவரையும், என் சொந்த ஆட்கள் ஐந்தாறு பேர்களையும் ஆர்க்காட்டுக்கு அனுப்பி என்னுடைய ஜவுளி முதலிய சரக்குகளை இங்குக் கொண்டு வந்து விடும்படி செய்தேன்.

4. புயற்காற்று

குரோதன ஸு ஐப்பசி மீ 21 உ (4-11-1745) வியாழக்கிழமை:

கடந்த இரவு சூரியன் மறைந்தவுடனே புதுச்சேரியில் புயற்காற்று ஒன்று அடித்தது. அக்காற்று இரவு முழுவதும் இருந்தது. அதனால் ஏற்பட்ட சேதம், மதிப்பாகக் கூடச் சொல்வதற்கில்லை. இரவில் நகரிலிருந்த வேப்பஞ் சாலையும், பூவரசு சாலையும் வேரோடு பெயர்க்கப் பட்டுவிட்டன. பல மரங்கள் உருவமிழந்து விட்டன. தென்னையும், மாவும்,

வேறு பல மரங்களும் சாலைகளிலும், தோட்டங்களிலும் கீழே சாய்ந்து விட்டன. இதனால், பலர் நட்டமடைந்தனர். உப்பாற்றங் கரைகளில் மக்கள் வீடு கட்டிக் கொண்டு வசித்து வந்தார்கள். இரவில் அந்த ஆறு கரை புரண்டு வரவே மதகு உடைபட்டு விட்டது. இதனால், புதிதாக அமைக்கப்பட்ட பாகத்திலிருந்த மூன்று தெருக்களிலுள்ள வீடுகள் அடித்துக் கொண்டு போகப் பட்டன. அழிந்த கட்டடங்களுக்கு மேல் தண்ணீர் ஒரு முழத்திற்கு ஓடிக் கொண்டிருந்தது. பலர் நீரில் மூழ்கி விட்டனர். ஆடு மாடுகளும் அதிகமாய்ச் சேதமடைந்து விட்டன. புதுச்சேரி, வெள்ளத்தில் கிடந்தது. பள்ளத்தாக்கான இடங்களி லுள்ள தெருக்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. சில இடங்களில் நீர் இடுப்பளவிலும், சில இடங்களில் தொடை யளவிலும் இருந்தது. தெருக்களில் பல வீடுகள் வெள்ளப் பெருக்கால் சேதமுற்றன. காற்றடிக்கும் போது காகம் முதலிய பறவைகள் கணக்கில்லாமல் இறந்து பட்டுத் தெருக்களில் ஓடும் நீரில் மிதந்து கொண்டு போயின. இந்தக் காற்றின் கொடுமை நகரத்தோடு நிற்கவில்லை. வெளிசளிலும் பல வீடுகள் வீழ்ந்து விட்டன. தோப்புகளெல்லாம் அழிந்து விட்டன. கால் நடைகள் பல மரித்தன. இரண்டு நாள் வரையில் மக்கள் தெருக்களில் நடமாடாது அடைபட்டுக் கிடந்தார் கள். கடவுள் அருளால் வெயில் தோன்றிற்று. காற்றும் ஓய்ந்தது. மழையும் நின்றது. மூன்று மணிநேரத்திற்குள் வெள்ளம் வடிந்து விட்டது. புயல் இன்னும் ஒருநாள் அடித்திருக்குமானால், ஊரில் ஒரு கட்டடங்கூட நின்றிராது. மக்கள் செய்த தவப்பயனால், கடவுள் மேற்கொண்டு துன்பத்தை உண்டாக்காமல் நிறுத்தினர்.

5. கடற்போர்

அக்ஷய ஹூ ஆனி மீ 29 உ (9-7-1746) சனிக்கிழமை:

இன்று காலை துறைமுகத்தைப் பார்க்கும்போது நேற்றுப் பகல் வந்த கப்பலும், இரவில் வந்த எட்டுக் கப்பல்களும் ஒன்ருய்ச் சேர்ந்திருந்தன. காலை 8 மணிக்கு லாபுர்தொனே ஏறியிருந்த கப்பலிலிருந்து, 15 குண்டுகள் போடப்பட்டன. கோட்டையிலிருந்தவர்களும் குண்டுகளைப் போட்டார்கள். அக்கப்பல்களில் ஐந்து, பிரான்ஸ் தேசத்திலிருந்து 1745ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் புறப்பட்டவை. அவை, 1746ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 3 ஆம் தேதி மாஸ்கரேஞ் வந்து சேர்ந்தன. அங்கு நாட்டுக் கப்பல்கள் நான்கு இருந்தன. அவை சண்டைக்குச் சித்தஞ் செய்யப்பட்டன. ஆக ஒன்பது கப்பல்களோடு, வங்காளத்து வியாபாரக் கப்பலாக மரிஜொ-ஜேப்பு என்னும் கப்பலும் சேர்க்கப்பட்டது. மதகஸ்கார் தீவுக்குச் சென்று, அங்கு உணவுப் பொருள்கள் சேமிக்கப் பட்டன. வழியில் காற்றும் மழையும் பலமாய் அடிக்கவே, பாய்மரங்களும், சுக்கான்களும் உடைந்துவிட்டன. கப்பல்கள் நீரில் மூழ்குந் தறுவாயிலிருந்தன. தெய்வ சகாயத்தால் காற்று அடங்கிற்று. மழை நின்றது. கடல் ஓய்ந்தது. கப்பல்கள் தப்பின. பாய்மரங்கள் பழுது பார்க்கப்பட்டு, கப்பல்கள் புறப்பட்டன. ஆனால்,மீண்டும் ஒரு முறை காற்றும் மழையும் வரவே, மறுபடியும் பாய்மரங்கள் பழுது பார்க்கப்பட வேண்டியவை ஆயின. ஒருமாதம் அல்லது நாற்பது நாள் தாமதமாய் இலங்கை முனைக்கு வரவேண்டியதாயிற்று. அங்கிருந்து பிரயாணப்பட்டு, நாகப்பட்டினத்திற்குத் தெற்கில் வருங்கால் பெய்ட்டன் என்ற தளபதியால் செலுத்தப்பட்ட ஆங்கில யுத்தக் கப்பல்கள் காணப்பட்டன. நான்காம் நாள் பிற்பகல் 4 மணிக்குப் பிரெஞ்சுக் கப்பல்களுக்கும் ஆங்கிலக் கப்பல்களுக்கும் சண்டை தொடங்கிற்று. இரவு 7 மணி வரையில் போர் நடந்தது. பிரெஞ்சுக்காரர்களில் 700 பேரும், லாபுர்தொனே கப்பலும், தெலாசேல் கப்பலும் ஆங்கிலக் கப்பல்களோடு போர் புரிந்தன. இந்த நேரத்தில் 80,000 குண்டுகள் எறியப்பட்டன. ஆங்கிலக் கப்பல்கள் ஆறிலும் நல்ல போர் வீரர்கள் இருந்தமையால், அவர்கள் நன்ருகச் சமர்

செய்தார்கள். ஆங்கிலேயர்களுக்குக் காற்று, துணை செய்தது. பிரெஞ்சுக்காரர்களுக்குக் காற்று எதிராய் இருந்ததன்றி, நங்கூரம் போடுவதற்கும் வசதியில்லாமலிருந்தது. மேலும், இரண்டு கப்பல்களில் மருந்து பீப்பாய்கள் இருந்ததால், சேதமும் ஏற்பட்டது. அவற்றில் பிரான்ஸ் தேசத்துப் பணப் பெட்டிகளும், துணிகளும், சாராய வகைகளும் இருந்தன. வெற்றியோ தோல்வியோ நிச்சயமாக இல்லாததனால், 15 காத தூரத்திலிருக்கும் புதுச்சேரிக்குப் போய்விடுவதே நன்றென்று பிரெஞ்சுக்காரர்கள் புறப்பட்டுவிட்டார்கள். ஆங்கிலக் கப்பல்களிலும் இரண்டு அதிக சேதமடைந்தன. அவற்றிலிருந்த ஆட்கள் மிகுந்த துன்பமுற்றனர்கள். அவ்விரண்டு கப்பல்களும் பயனற்றனவாய்ப் போய்விட்டன என்று சொல்லப்படுகிறது.

அருஞ் சொற்பொருள்

கண்டி - நிறை அளவு (20 மணங்கு). நாராசம் - இருப்புச் சலாகை. மரித்தன - இறந்தன. சித்தம் - ஆயத்தம். தறுவாய் - உற்ற சமயம். சகாயம் - உதவி. சமர் - போர். நங்கூரம் - கப்பலை நிறுத்தி வைக்கும் கருவி. காதம் - பத்து மைல்.

வினாக்கள்

1. சென்னையிலிருந்து கவர்னருக்கு வந்த தபாலில் இருந்த செய்தி என்ன?
2. எலியாஸின் சீனப் பயணத்தைக் கேட்டு ஆனந்தரங்கப் பிள்ளை ஏன் வருந்தினார்?
3. விடுதலை செய்யப்படாத குற்றவாளிகள் யாவர்? அவர்களுக்குக் கிடைத்த தண்டனைகள் யாவை?
4. கணவாயை நோக்கி வந்த மகாராஷ்டிரப் படையை எதிர்த்து நின்றவர்கள் யாவர்?

5. குரோதன ஆண்டு ஐப்பசித் திங்கள் 21 ஆம் நாள் புதுச்சேரியில் அடித்த புயற்காற்றால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி பதினைந்து வரிகள் எழுதுக.

6. இலங்கையை நோக்கி வந்த கப்பல்களுக்கு வழியில் ஏற்பட்ட இடையூறுகள் யாவை?

7. நாகப்பட்டினத்திற்கருகில் பிரெஞ்சுக் கப்பல்களுக்கும் ஆங்கிலக் கப்பல்களுக்குமிடையே ஏற்பட்ட சண்டையைப் பற்றிக் கூறுக.

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:-

உத்தேசிக்கிறேன், ஆதியோடந்தமாக, பெரியதனக்காரர்கள்.

2. பெருமக்களின் வாழ்க்கைக் குறிப்புகளைப் படிப்பதால் நாம் அடையும் நன்மைகளை ஆராய்க.

3. அண்மையில் வெள்ளத்தால் நம் நாட்டில் ஏற்பட்ட சேதங்களைப்பற்றி இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக.

13. ஓவியக் கலை

(நுண் கலை)

டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A.,L.T., M.O.L., Ph.D.
தமிழ்த் துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

முன்னுரை

நாம் கண்ணுல் காணும் பொருள்களைச் சித்திரித்து எழுதும் கலையே ஓவியக்கலை. பண்டை மனிதன் தான் பார்த்தவற்றையே படமாக எழுதிக்காட்டினுன்; பின்பு அறிவு வளர வளர, தன் மனத்தால் பல உருவங்களையும் காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான்; எண்ணும் ஆற்றலில் சிறந்த புலவர் பெரு மக்களுடைய கருத்து ஓவியங்களுக்கு உருவங்களை அமைத்தான். இவ்வாறு ஓவியக்கலையில் காணும் பொருளிலிருந்து எண்ணும் செய்திகள் வரையிலும் உருவம் தரும் முறை வளர்ச்சிபெற்றது. சுருங்கக்கூறின், ஓவியக்கலை, வீடுகட்ட அறியாத மனிதன் குகையில் வாழ்ந்தபோதே தோற்றமெடுத்தது என்று கூறலாம். பழைய மக்கள் வாழ்ந்த குகைகளில் சிறு சிறு ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளிப் பொருள்களில் ஓவியம் தீட்டப்பெற்ற மட்பாண்டங்கள் பலவாகும்; தாயத்துக்கள் பலவாகும். இவ்வாறே சுமேரியர், எகிப்தியர் புதைபொருள்களிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. எனவே, ஓவியம் வரையும் வழக்கம் மனிதனது தொடக்கத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கிறது என்று கூறுதல் பொருத்தமாகும்.

சங்க காலத்தில்

இன்றுள்ள தமிழ் நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல். போரில் விழுப் புண்பட்டு வீரர்கள் இறந்த இடத்தில் அல்லது அவர்களைப் புதைத்த இடத்தில் அல்லது அவர்களது உடற் சாம்பலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல் நடப்படும் ; அக்கல்லில் இறந்த வீரனது உருவம் செதுக்கப்படும் ; பின்னர் அதற்குப் பூசை நடத்தப்பெறும். அதற்கு 'நடுகல்' என்பது பெயர். அது வீரர்களாலும் இறந்தவன் மரபினராலும் தொழப்படும். கல்லில் இவ்வாறு ஓர் உருவம் செதுக்கப்படுவதற்கு முன் அவ்வுருவத்தை ஓவியமாக வரைந்து கொள்ளுதலே வழக்க மாகும். அந்த ஓவியத்தின் உதவி கொண்டே, கல்லில் உருவம் செதுக்கப்படும். எனவே, தொல்காப்பியர் காலத் திலேயே (ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு முன்பே) ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடம் இருந்து வந்தது என்பது தெளிவாகும்.

சங்ககால நடன மகளிர் நடனக்கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக்கலை ஒன்று என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.

> ''நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை.''

இவ்வடிகளை நோக்க, ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று சங்க காலத்தில் இருந்தது என்பது தெளி வாதல் காண்க. மாதவியின் நடன அரங் கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற்கூரையில் கண்கவர் ஓவியங்கள் பல தீட்டப் பட்டிருந்தன. அக்கூரை ஓவிய விதானம் எனப்பெயர் பெற்றது. உலோ கங்களாலான கேடயங்களில் கண்ணைக் கவரும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனது கோப்பெருந்தேவி படுத்திருந்த கட்டிலின் மேற் கூரையிலும் பலவகை ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. அவற்றுள் திங்களின் பக்கத்தில் உரோகிணி இருப்பது போன்ற ஓவியம் ஒன்றுகும். கணவன் பிரிவால் வாடிய கோப்பெருந்தேவி அவ்வோவியத்தைக் கண்டு. உரோகிணி யைப் போல நானும் என் கணவனோடு என்றுமே இணைந்திருக்க முடியாதோ!' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். இது நெடுநல் வாடை தரும் செய்தியாகும்.

செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும் மாடங் கள் மீதும் தேவர் முதல் எல்லா உயிர்களையும் குறிக்கத் தக்க ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்னும் செய்தி மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது.

> ''வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
> சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறு
> மையறு படிவத்து வானவர் முதலா
> எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி
> வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
> கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்.''

மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெரு மாள் திருக்கோயிலில் மண்டபங்கள் பல இருந்தன. அவற்றில் புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகக் காட்சி யளித்தன. அவற்றுள் கதிரவன், திங்கள், கோள்கள், இரதி, மன்மதன், இந்திரன், அகலிகை, பூனை, கௌதமன் என்னும் உயர்திணை—அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப்பெற்றிருந்தன என்று பரிபாடல் பகர் கின்றது.

காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்கமுடியாத நிலையில் ஒரு துணியில் அவள் உருவத்தை ஓவியமாக வரைந்து கொண்டு மடல் ஏறுதல் வழக்கம் என்று அகப்

பொருள் நூல்கள் கூறுகின்றன. நிறங்கள் தீட்டப்பெருது மேலோட்டமாக வரையப் பெற்ற ஓவியம் 'புணயா ஓவியம்' எனப்பட்டது.

ஓவியங்களை அமைத்து ஆடை நெய்தல் சங்ககாலத் தமிழகத்தில் வழக்கமாயிருந்தது. ஆடைகளில் ஓவியங்களை அமைத்தல் எளிதான செயலன்று. அங்ஙனம் அமைத்தவர் மிகச்சிறந்த ஓவியத்திறனுளராக இருந்திருத்தல் வேண்டுமல்லவா ? காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த உவவனம், சிறந்த ஓவியரால் ஓவியங்கள் அமைத்துச் செய்யப்பெற்ற ஆடை போலக் காட்சியளித்தது என்று மணிமேகலை ஆசிரியர் குறித்துள்ளார்.

> ''வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
> சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
> ஒப்பத் தோன்றிய உவவனம்.''

இவ்வாறு சுவர்களிலும் மண்டபக் கூரைகளிலும் ஆடைகளிலும் கேடயங்கள் மீதும் கண்கவர் ஓவியங்களைத்தீட்ட வல்லவர் மிகச் சிறந்த ஓவியக்காரராக இருக்கவேண்டும் அல்லவா? அக் கலைவாணரைக் 'கண்ணுள் வினைஞர், என்று மதுரைக் காஞ்சி செப்புகிறது. மதுரைக்காஞ்சிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், ''கண்ணுள் வினைஞர் நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்'' என்று கூறியுள்ளார். அஃதாவது, 'பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க ஓவியங்களைத் தீட்டுவோர்' என்பது பொருள். எனவே, சங்க காலத்தில் ஓவியக் கலை சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை இதுகாறும் கூறப்பெற்ற விவரங்களைக் கொண்டு நன்கு தெளியலாம்.

சித்தன்ன வாசல் ஓவியங்கள்

சங்க காலத்திற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் (கி. பி. 300-900) குடைவரைக் கோவிலில் பாறைச்

சுவர்களின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. மாமண்டூர்க் குகைக்கோயில், காஞ்சி கயிலாச நாதர் கோவில் முதலியவற்றின் சுவர்களில் பல நிறங்கள் காணப்படுகின்றன. அங்கு வரையப்பட்ட ஓவியங்கள் காலப்போக்கில் அழிந்து பட்டன. அழியாமல் இன்றளவும் நாம் பார்க்கத்தகும் நிலையில் இருப்பவை சித்தன்னவாசல் ஓவியங்களே யாகும்.

சித்தன்ன வாசல் புதுக்கோட்டைக்கு மேற்கே பத்துக் கல் தொலைவில் இருக்கின்றது. அங்குள்ள குன்றுகள் ஒன்றில் குடைவரைக் கோவில் இருக்கின்றது. அதனைக் குடைவித்தவன் மகேந்திரவர்மன். அதன் முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் இரண்டில் நடன மாதர் இருவரின் உருவங்கள் தீட்டப் பெற்றுள்ளன. அவர்தம் கூந்தல் அமைப்பு, ஆடை அமைப்பு, அணி வகைகள், நடனமாடும் நிலையில் கைகள் வைத்துள்ள முறை முதலியன அவற்றை எழுதிய ஓவியர் திறமையை உலகறியச் செய்கின்றன. அவ்வோவியங்களைக் கொண்டு, அக்காலத் தமிழகத்து நடன மாதர் தம் கூந்தல் அமைப்பு, ஆடை அமைப்பு, அணிவகைகள் முதலியவற்றை நாம் ஒருவாறு அறியலாம்.

வலப்புறத்தூணின் உட்பகுதியில் அரசன் அரசியர் தலைகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. மணிகள் பதிக்கப் பெற்றுச் சிறந்த வேலைப்பாடு கொண்ட மகுடம் ஒன்று அரசன் முடிமேல் காட்சியளிக்கிறது. அவன் காதுகளில் குண்டலங்கள் தொங்குகின்றன. கழுத்தில் மணிகள் பதித்த மாலைகள் காணப்படுகின்றன. அரசியின் தலைமீது ஒருவகை மகுடம் அழகு செய்கின்றது. அவள் காதுகளில் வளையங்கள் காண்கின்றன. இருவர் உருவங்களும் அழகாக எழுதப்பட்டுள்ளன. மேற்கூரையில் பெரிய ஓவியம் ஒன்று காணப்படுகின்றது. அது ஒரு தாமரைக் குளத்தைக் குறிக்கின்றது. தாமரை இலைகள், மலர்கள்,

பேரரும்புகள் என்பன அக்குளத்தை அழகு செய்கின்றன. சமணப் பெரியோர் சிலர் தாமரை மலர்களைப் பறிக்கின்றனர். குளத்தில் எருமைகளும், மீன்களும் காணப்படுகின்றன. கண்ணையும் கருத்தையும் தன்பால் இழுக்கும் அவ்வோவியம் ஏறத்தாழ 1300 ஆண்டுகட்கு முன் எழுதப்பெற்றதாயினும், இன்றும் நாம் கண்டுகளிக்கும் நிலையில் இருக்கின்றது என்பதை எண்ண, அதனை எழுதிய ஓவியர் திறமையை என்னென்பது!

தஞ்சை ஓவியங்கள்

பல்லவர்க்குப் பிற்பட வந்த சோழர் கால ஓவியங்களுள் இன்று நாம் காணுமாறு இருப்பவை தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்களேயாகும். அவை தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் புறச்சுவர்கள் மீது எழுதப் பட்டுள்ளன. பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு அவை மறைக் கப்பட்டு, அவற்றின் மீது நாயக்கர் கால ஓவியங்கள் எழுதப்பட்டன. இன்று இவ்விருவகை ஓவியங்களும் நமக் குக் கிடைத்துள்ளன.

சோழர்கால ஓவியங்கள் கி. பி. 11ஆம் நூற்றுண்டில் வரையப் பெற்றவை. சுந்தரர் சிவபெருமானுல் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாறு, தஞ்சைப் பெரிய கோவிலில் ஓவிய மாகத் தீட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் கிழ வேதிய ராகத் திருமண மண்டபத்தில் வந்து நிற்கிருர். அவரது ஒரு கையில் தாழங்குடையும், மற்ருெரு கையில் பனைஓலையும் காணப்படுகின்றன. மணமண்டபத்தில் மறையவர் பலர் கூடியிருக்கின்றனர். மணமகனுரான சுந்தரர் தமது மணத் தைத் தடுக்க வந்த கிழவரை வியப்போடு பார்க்கின்ற பார்வை அழகாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

அடுத்த ஓவியம் கயிலைக் காட்சியைக் குறிக்கிறது. சிவ பெருமான் புலித்தோல் மீது அமர்ந்திருக்கிருர். அவரைச் சுற்றிலும் தேவரும் பூத கணங்களும் காணப்படுகின்றனர்.

இக்காட்சிக்கு அடியில், சுந்தரர் வெள்ளையானைமீது அமர்ந்து செல்லுதலும், சேரமான் பெருமாள் நாயனார் குதிரைமீது செல்லுதலும் ஓவியங்களாகக் காட்டப்பட்டுள் ளன. யானையின்மீது உள்ள அணிவகைகள் பார்க்கத் தகுந்தவை. சுந்தரர் தலை முடியும் தாடியும் வைத்துள்ளார்; பல அணிகளை அணிந்துள்ளார்; கைகளில் தாளத்தை வைத்துள்ளார். அவரது யானை விரைந்து செல்லுகிறது. அதன் கால் அடியில் கடல் நீர் காணப்படுகிறது. கடலின் அடியில் மீன்கள் காட்சியளிக்கின் றன. சேரநாட்டுத் தலைநகரான கொடுங்கோளூரை விட்டு, அதன் அரசரான சேரமான் பெருமாள் நாயனாருடன் சுந்தரர் கடல் ஓரமாகக் கயிலை நோக்கிச் செல்லும் காட்சியே அங்கு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சேரமான் அணிந்துள்ள அணிகளும் அவரது முடி அழகும் குதிரையின் அணி விசேடமும் பார்க்கத் தகுந்தவை. இவ்வோவியங்கள், இடைக்கால அணிவகைகளையும், ஆடவர் குஞ்சி அமைப்பை யும், பிறவற்றையும் நன்கு உணர்த்துவனவாகும்.

இவ்வோவியங்களை அடுத்துச் சோழர்கால நடன மகளிரைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன. அம் மகளிருடைய கூந்தல் ஒப்பனையும் அணிவகைகளும் உருவ அமைப்பும் அவர்கள் கைகளிலுள்ள இசைக் கருவிகளும் நாம் கவனிக்கத் தக்கவை. இவ்வோவியம் பழுது பட்டி ருப்பினும், மிகச் சிறந்த முறையில் அக்காலத்தில் எழுதப் பட்டிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. துர்க்கை, எருமைத்தலை அசுரனைக் கொல்லும் ஓவியம் அழகானது. இவ்வோவியங்கள் சோழர்கால ஓவியக்கலை வளர்ச்சியை நமக்குத் தெரிவிக்கின்றன. இவை அரசாங்கப் புதை பொருள் அலுவலரால் செப்பனிடப்பட்டும், பாது காக்கப் பட்டும் வருகின்றன.

பிற்காலத்தில் :

மேலே கூறப் பெற்ற சோழர் கால ஓவியங்களுக்கு மேல் சுண்ணும்புப் படை பூசப்பெற்று, அப்படை மீது நாயக்கர்

கால ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. அவையும் மதுரை மீனாட்சியம்மன் கோவில் சுவர்களிலுள்ள ஓவியங்களும் ஏறத்தாழ ஒன்றாக இருக்கின்றன. மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களும், பொற்றாமரைக் குளத்திற்கு எதிரிலுள்ள சுவர்களில் ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன. நாயக்கர் கால மக்களுடைய உடை, கூந்தல், ஒப்பனை, அணிவகைகள், உடை வகைகள் முதலியன பற்றிய விவரங்கள் இவ்வோவியங்களைக் கொண்டு நாம் அறியலாம்.

திருக்குற்றாலத்திலுள்ள சித்திர சபையில் (ஓவிய அரங்கில்) உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை. தில்லையில் சிவகாமியம்மன் திரு முன்பு உள்ள மண்டபக் கூரையில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் நாயக்கர் காலத்தவை. அவற்றுள் திருமால் மோகினிஅவதாரம் எடுத்துத் தாருகவனத்து முனிவரை மயக்கும் காட்சி ஓவியமும், சிவபெருமான் பிட்சாடனராக வருதலையும் அவரைக் கண்டு முனிவர் மனைவியர் உளம் நெகிழ்தலையும் குறிக்கும் ஓவியமும் காணத் தக்கவை.

இக்காலத்தில் :

நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டிலும் ஓவியக்கலை வளர்ந்து வருகிறது. பள்ளிகளில் ஓவியக் கலை வளர்ந்து வருகிறது. பள்ளிகளில் ஓவியக்கலை கற்பிக்கப்படுகிறது. கோவிற் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. தில்லையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள முருகன் கோவிலில் எழுதப் பட்டுள்ள ஓவியங்கள், இக்கால ஓவியக் கலை அறிவிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஓவியக் கலை கண்ணையும் கருத்தையும் ஈர்த்து ஒரு நிலைப்படுத்துவதாகும் ; உள்ளத்துக்கு உணர்ச்சி ஊட்டுவதாகும். இத்தகைய சிறப்புடைமையாற்றான் இது நுண்கலைகளுள் ஒன்று என்று அறிஞரால் பாராட்டப் படுகிறது.

அருஞ்சொற் பொருள்

எண்ணும் - நினைக்கும். உரோகிணி - ஒரு நட்சத்திரம். குஞ்சி - குடுமி. உவவனம் - காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த ஒரு மலர்ச்சோலை. ஒப்பனை - அலங்காரம். தாருகவனம் - ஒரு வனத்தின் பெயர். தில்லை - சிதம்பரம். ஈர்த்து - இழுத்து.

வினாக்கள்

1. ஓவியக்கலை என்றால் என்ன? பண்டைக் கால மனிதன் எவ்வாறு இக்கலையை வளர்த்து வந்தான்?

2. ஓவியம் வரையும் வழக்கம் மனித இனத்தின் தொடக்கத்திலிருந்தே வளர்ந்து வந்துள்ளது என்பதற்குரிய சான்றுகள் யாவை?

3. தொல்காப்பியர் காலத்திலேயே ஓவியக் கலை தமிழரால் வளர்க்கப்பட்டது என்பதற்குரிய சான்று யாது?

4. திருப்பரங்குன்றத்தில் எழுதப்பட்டிருந்த ஓவியங்கள் எவை?

5. நடுகல், புனையா ஓவியம், கண்ணுள் வினைஞர்—சிறு குறிப்பு வரைக.

6. சித்தன்ன வாசல் எங்குள்ளது? அங்குக் காணும் ஓவியங்களைப் பற்றிப் பதினைந்து வரிகள் எழுதுக.

7. தஞ்சைப் பெரியகோவிலில் தீட்டப்பட்டுள்ள ஓவியக் காட்சிகளைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

8. திருக்குற்றாலச் சித்திர சபையில் கண்டு உவகையுற வேண்டிய ஓவியக் காட்சிகள் யாவை?

9. இன்றும் ஓவியக்கலை வளர்ந்து வருகின்றது என்பதற்குரிய சான்றுகள் யாவை?

10. ஓவியக்கலை நுண்கலைகளுள் ஒன்று என்று அறிஞர்களால் ஏன் போற்றப் படுகின்றது?

பயிற்சி

1. தஞ்சைப் பெரிய கோவில் கட்டிய வரலாற்றை ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் எழுதுக.

2 சித்தன்னவாசல் ஓவியங்கட்கும் தஞ்சைப் பெருங் கோவில் ஓவியங்கட்குமிடையே யுள்ள ஒற்றுமைவேற்றுமைகளை ஆராய்க.

3. பண்டைக்கால ஓவியங்களைக் காண்பதால் நாம் பெறும் நன்மைகளை விளக்கி எழுதுக.

4. நுண்கலைகளால் ஒரு நாடு பெருமை அடைகிறது என்பது எவ்வாறு பொருந்துகிற தென்பதை விளக்கி வரைக.

5. சிறு குறிப்பு வரைக:— தொல்காப்பியம், நெடுநல் வாடை, மடல் ஏறுதல், மதுரைக் காஞ்சி.

14. அன்னைக்கு

(கடிதம்)

டாக்டர். மு. வரதராசனுர் M.A., M.O.L., PH.D.,
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்

அன்புள்ள அம்மா,

உன் கட்டளைப்படியே இதுவரையில் நடந்தேன். இன்று நடக்க முடியவில்லை.

''தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள்; இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடையமுடியாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லாமல் தமிழ்நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனுக இருந்து வாயால் மட்டும் விளங்காதே, உணர்வால் மட்டும் உயராதே, செயலாலே சீர்படு'' என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்து விடவில்லை. என் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முற்போக்குத் தமிழன்தான் என்பதைக் காட்டப் போகிறேன். பாடங்களை நன்ருகக் கற்று முதல் வகுப்பில் தேறப் போகிறேன். ஆனுலும் நேற்று வரையில் அமைதியாக இருந்ததுபோல், இன்று இருக்க முடியவில்லை. ஆகையால்தான் சில திங்கள் கழித்து இதுபோல் கடிதம் எழுதுகிறேன்.

அம்மா! நான் எப்படி இன்று அமைதியாக இருக்க முடியும்? உலகமே அழுகின்றதே! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறக்க முடியுமா? உலகம் கண்ணீர் விடுகின்றது; ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லை; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடு தோறும்

இழவு, நகரந்தோறும் சாக்காடு நேர்ந்தது போல் இருக்கின்றதே ! ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கிவிட்டதே!

அம்மா, இமயமலை தலைகீழாகப் புரண்டிருந்தாலும், இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால் உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்து விட்டதே !

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொருவகை மாறுதலை ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒரு சேரக் கலங்கவைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே !

புத்தர் வாழ்ந்தார் ; அவர் வாழ் நாளில் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடிஸ் வாழ்ந்தார்! அவருடைய வாழ்நாளில் பதினையிரக் கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைவிக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனால் வாழ்நாளிலேயே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கினவர் யார் அம்மா ? காந்தியடிகள். இந்தப் பெயரையும் நினைத்து, தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும். அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்து கொள்வார்களே !

எல்லோரும் அரசியல் காந்தியை அறிவார்கள். அரசியலில் அவர் பெருந் தலைவர் என்பதே பெரும்பாலோருக்குத் தெரிந்தது. ஆனால், இது முழு உண்மை அல்ல ; ஓரளவு தான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால், அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர்கள் எங்கும் இருக்கின்றார்கள். அவருடைய அரசியல் கொள்கைகளுக்குச் செல்வாக்கு இருந்தாலும் உடன்படாமல்

புறக்கணித்த தலைவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனாலும், அவருடைய அரசியல் நெறியே இன்று வரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்கள் உயர்வுக்குக் காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலை நிமிர்ந்த வாழ்வுக்குக் காரணம்.

அம்மா, மறக்க முடியவில்லை. நம் வீட்டில் நாம் பல நாள் காந்தியடிகளின் கொள்கைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்த நாட்களை மறக்க முடியவில்லை. அரசியலில் அவர் சொல்வதில் இது மட்டும் சரி, அது சரியல்ல என்று வாதாடினோம். ஆனால், ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ்வையோ, இயற்கை நெறியையோ, சமயக் கொள்கையையோ, அற ஒழுக்கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில் குறிப்பிட்டு அங்கே ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி அடக்கத்தோடு அமைதியடையவில்லையா? அவரை விடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால், அவர் வாழ்ந்த வாழ்வைவிடச் சிறந்த வாழ்வை-தூய வாழ்வைக் குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கி விட்டோம் அல்லவா?

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழன் எழுதிவிட்டுச் சென்றான். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமலிருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் ஒரே எடுத்துக்காட்டாக நின்றது. அன்று திருவள்ளுவர் உண்மையின் பெருமையினை உணர்ந்து உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப்பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது. ஆனால், அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை கற்பனையாகவே

நிற்கவில்லை; ஓர் அரிய வாழ்வாக மலர்ந்தது. அந்த மலர் வாடியது; சாம்பலானது. மதவெறியின் போர்வை போர்த்த அரசியல் வெறி அந்த அருமை மலரைக் கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டும் என்ன? திருவள்ளுவரின் அறத்துப்பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக் காட்டாக வாழ்ந்த வாழ்க்கை அல்லவா அது.

எத்தனையோ நம்பிக்கைகள் எவ்வெவ்வாறோ தடு மாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின் றன. ஆனால், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாக இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக் கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை அன்று மாலை அடங்கிய அந்தப் பெருவாழ்வு!

இன்னொன்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்று கிறது. அடிகள் பெரியவர், ஒப்பற்ற தலைவர் என்பதை உலக மெல்லாம் உணர்ந்து விட்டது உண்மைதான். ஆனால், அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர் கள் எத்தனைபேர் அம்மா? அரசியலில் மட்டுமே அவர் இன்னவர் என்பதைப் பொதுமக்கள் உணர முடிந்திருக்க லாம். இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயன டைந்தவர்கள் மிகச் சிலரே என்று எண்ணுகிறேன். அப்பா ஒருநாள் கூறியது போல், காந்தியடிகளின் உயர்ந்த கொள் கைகள் பொதுமக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில் லாமல் உணவுவிடுதிக்குச் சென்று உண்பதுபோல், கலையு ணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பது போல், அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வது போல், நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கின்றார் கள். அதனால்தான், அந்தத் தூய உடல் வாடிய அன்று

இரவே, கொலையும் கொள்ளையும் தீயிடலும் துன்புறுத்தலும் தொடங்கச் சிலருக்கு மனம் வந்தது. ஆனாலும் அவர்களும் துயரக் கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும்போது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணம் அல்ல, நெடுங்காலமாக நிலவி வரும் வெறியே காரணம் என்று தெரிகின்றது.

அம்மா! என்னென்னவோ நினைவுக்கு வருகின்றன. தென்னாப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாக நின்று அவருடைய அன்பைப் பெற்றார்கள். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்னும் பழமொழியாலும், திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ்மொழி அவருடைய போற்றுதலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாதபோது அவரே தமிழாசிரியராக இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும்போது நெஞ்சம் நெக்குருகுகின்றது. தமிழர்களின் பண்பாடும், தமிழ் மொழியின் கருத்து வளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ் நாட்டு வறுமையும் அவருடைய கோலத்தையே மாற்றி விட்டதே! சேலத்திற்குத் தெற்கே தமிழ் மக்கள் ஆண்களும் பெண்களும் அரை நிர்வாணமாய் முழங்கால் வரையில் அரையாடை உடுத்தி உழைப்பதைக் கண்ணால் கண்ட அன்றுதானே, அடிகளின் தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் அகன்றது! பத்து முழ வேஷ்டியும் அகன்றது! இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை என்று கசிந்துருகித் தமிழ்நாட்டுக் குடியானவன் கோலத்தை அல்லவா அன்று முதல் மேற்கொண்டார்! அந்தக் கோலம் தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்!

அம்மா! ஏதோ எழுதினேன், ஆறுதல் பெற.

அன்புள்ள மகன்,

எழில்.

அருஞ்சொற் பொருள்

அதிரும் - நடுங்கும், கலங்கும். எண்ணி - நினைத்து. தொண்டு - சேவை. பொய்யாது - பொய் பேசாமல். ஒழுகின் - ஒழுகினால். ஞாயிறு - சூரியன். நெக்குருகுகின்றது - மனம் இரங்குகிறது. அங்கி - மேலாடை. கசிந்துருகி - மனமுருகி.

வினாக்கள்

1. எழிலுக்கு அவனது அன்னை எழுதிய கடிதத்தில் உள்ள அறிவுரைகள் யாவை?
2. எழில், உலகத்தார் உள்ள மெல்லாம் அதிரும் அதிர்ச்சி என்று எதைக் குறிக்கின்றான்?
3. உலகைத் திருத்திய உத்தமர்களுள் அண்ணல் காந்தியடிகளே உயர்ந்தவர் என்பதற்கு எழில் கூறும் காரணங்கள் யாவை?
4. அவரது அறிவுரைகளால் நாம் அடைந்த நன்மைகள் யாவை?
5. எழிலின் குடும்பத்தார் காந்தியடிகளின் கொள்கை களுள் எவற்றை வணக்கத்துடன் போற்றினர்?
6. காந்தியடிகள் மறைந்த நேரத்தில் எழிலின் உள்ளத்தில் தோன்றியவைகளாகக் கூறப்படுபவை யாவை?
7. தமிழ்நாட்டு வறுமை நிலை எவ்வாறு அவரது கோலத்தையே மாற்றியது?

பயிற்சி

1. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—

இலட்சச்கணக்கான, பதினாயிரக்கணக்கான, செல் வாக்கு, தலை நிமிர்ந்த வாழ்வு, கசிந்துருகி.

2. ''குறள் வாழ்வு வாழ்ந்த உலகப் பெரியார்கள்'' எனும் தலைப்பில் 40 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

3. கடிதங்களின் மூலம் உலகத்தைத் திருத்த முனைந்த பெருமக்களைப் பற்றிப் படித்தறிக.

15. வனவுயிர்

(வன விலங்குகள்)

வித்வான். M. நாராயண வேலுப்பிள்ளை, இருகூர்

முன்னுரை

நமது இந்திய நாடு பெரிய பரப்பினையும் பலவித மாறு பாடுகளையும் உடையது; 12,60,000 சதுரமைல் பரப் புள்ளது. இது தெற்கு வடக்கில் 2000 மைல் தூரமும், கிழக்கு மேற்கில் 1700 மைல் தூரமும் உள்ளது. இப்பெரிய தேசத்தில் பல்வேறு தட்ப வெப்ப நிலைகள் உள்ளன. இதன் பயனாகப் பலதிறப்பட்ட தாவர வகைகளும் பிராணி வகைகளும் இருக்கின்றன. இந்தியாவில் எண்ணற்ற வனவிலங்கு வகைகள் உள்ளன. இங்குள்ள வனவிலங்கு கள் இந்திய இனத்தை மட்டும் சார்ந்தனவல்ல. இந்தியா, மலேயா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய பிரதேசங்களின் கூட்டு இனமே ஆகும்.

வாழ்விடங்கள்

வன உயிர்கள் என்ருல் என்ன? இச்சொற்ருெடர் தம் உயிர்வாழ்க்கைக்கு மனிதர்களின் உதவியைச் சார்ந் திராமல் வாழ்க்கை நடத்தும் எல்லா வன விலங்குகளையும் குறிக்கும். அவை எங்கு உள்ளன? இந்தியாவில் பரந்த வனப்பிரதேசங்கள் உள்ளமையால் வனவிலங்குகள் ஏராள மாய் உள்ளன. அவை, இமயமலையின் நீண்ட மலைத் தொடர்கள், மேற்குத் தொடர்ச்சி, கிழக்குத் தொடர்ச்சி மலைகள், வடக்கில் கங்கை, பிரமபுத்திரா நதிகளின் கரை களில் உள்ள முட்செடிகள் நிறைந்த காடுகள், தெற்கில் காவிரி, கோதாவரி நதிக்கரைகளில் உள்ள காடுகள் முதலிய னவாம். இந்திய இனத்தைச் சேர்ந்த பிராணிகள் நாட் டின் மத்திய பாகத்தில் காணப்படுகின்றன.

எனினும், நாட்டின் பல பாகங்களுக்கும் அவை இடம் பெயர்ந்து செல்கின்றன.

வகைகள்

சிங்கங்கள், புலிகள், கரடிகள், யானைகள், மான்கள் முதலிய வன விலங்குகளும், திமிங்கிலம், முதலை, நீர்யானை முதலிய நீர்வாழினங்களும், மயில், அன்னம் முதலிய வண்ணப் பறவைகளும் பல வகைகளாகும்.

பயன்களும் முக்கியத்துவமும்

வண்ணத்திற்கும் அழகிற்கும் இந்தியா புகழ்பெற்ற நாடு. நல்ல நிறமும் அழகும் உடைய பறவைகள் இங்கு உள்ளமையே இதற்கு முக்கிய காரணம். மயில் மிக்க அழகும் வண்ணமும் பொருந்திய பறவை. அதனுல்தான் மயில் நம் தேசீயப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மான்கள் அழகானவை; அவைகளின் கண்கள் இதிகாசங்களில் புகழப்படும் அளவுக்குக் கவர்ச்சி யுடையவை. நமது நாடு தைரியத்திற்கும் வல்லமைக்கும் பெயர்பெற்றது; அதற்கேற்ப சிங்கத்தின் உருவை நாணயங்களிலும் கரன்சி நோட்டுகளிலும் அடையாளச் சின்னமாகக் கொண்டுள்ளோம். புலித் தோலும், யானைத் தந்தமும் எல்லோராலும் விரும்பி மதிக்கப்படுகின்றன. நீர்யானை ஓர் அபூர்வமான பிராணி; அது இந்தியா போன்ற ஒரு சில நாடுகளில் தான் காணப்படுகிறது.

காட்சிச் சாலைகள்

சில பறவைகள் பூச்சிகளைக் கொல்லுகின்றன; இவை இத்துறையில் மனிதனுக்குச் சேவை செய்கின்றன. இப் பறவைகளிலும் மிருகங்களிலும் சிலவற்றை மிருகக் காட்சிச் சாலைகளிலும் நந்தவனங்களிலும் வைத்துப் பாதுகாக்கிருர்கள். சென்னை, பூனு, கல்கத்தா, திருவனந்தபுரம், மைசூர் முதலிய இடங்களிலுள்ள காட்சிச் சாலைகள் மிக அழகானவை. அவை சிறுவர், சிறுமியர், ஆடவர், மகளிர் யாவர்க்

கும் பெரிய பொழுது போக்காக உதவுகின்றன. தூர தேசங்களிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகள் குஜராத் ராஜ்ய ஜுனகாட் கிர் காடுகளில் வாழும் சிங்கங்களைக் கண்டு பிரமித்துப் போகிறார்கள். குடகு, திருவாங்கூர் ராஜ்யங்களிலுள்ள வல்லமை வாய்ந்த யானைகள் மிகக் கவர்ச்சியானவை. மைசூர் தசராவின் போது யானைகள் அணிவகுத்துச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பொதுவில் வனவிலங்குகள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை ஈர்ப்பதின் மூலம் அன்னியச் செலாவணியை வெகுவாகச் சம்பாதித்துத் தருகின்றன. 'சர்க்கஸ்' வைத்து நடத்துகிறவர்களுக்கு வனவிலங்குகள் நல்ல வசூலைத் தருகின்றன.

அழிவின் காரணம்

மக்கள் தொகை பெருக்கத்தால் வனவிலங்குகள் வாழ்ந்துவந்த காடுகள் வெட்டப்படுகின்றன ; இவ்விலங்குகள் பெரு எண்ணிக்கையாக அழிக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள ஒன்றிரண்டு பிராணிகளும் தூர இடங்களுக்குத் துரத்தப்படுகின்றன. பழங்காலத்தில் நம் நாட்டில் வன விலங்குகளுக்குப் பெருமதிப்பு இருந்தது. வனவிலங்குகள் பாதுகாப்பை அனுபவித்தன ; மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இடையில் அமைதி நிலவியது. வன விலங்குகளுக்கு ஊறு செய்தல் பாவமெனக் கருதப்பட்டது. ஊறு செய்தோர் தண்டிக்கவும் பட்டார்கள். யானையை நியாய வரம்பின்றிக் கொன்றவர் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர்.

பெரும்பாலான வனவிலங்குகளும் பறவைகளும் உணவின் பொருட்டும், மற்றவை பயிர்களையும் கால் நடைகளையும் அழிப்பதனாலும் வேட்டையாடப் படுகின்றன. சில மிருகங்கள் மனிதருக்கு ஆபத்தை விளைவிப்பதால் தற்காப்புக்காக அவைகளைக் கொல்லுகின்றனர். பழங்காலத்தில் வேட்டையாடுதல் இளவரசர்கள், மகாராஜாக்கள் முதலா

ஞோர்க்குப் பொழுது போக்காய் இருந்தது. எனவே பலதிறப்பட்ட காரணங்களால் இந்தியாவின் வன விலங்குகளில் பல மறைந்து விட்டன அல்லது விரைவில் மறைந்து கொண்டிருக்கின்றன.

பாது காத்தலின் அவசியம்

எனவே நமது நாட்டின் வனவிலங்குகளை அழிவினின்றும் காப்பாற்றுவது பெரும் பிரச்சினையாகி விட்டது. தக்க ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டால் வனவிலங்கு என்பது ஒரு கடந்தகாலப் பொருளாகிவிடும். இயற்கை நியதியில் எல்லா உயிரினங்களுக்கும் அவைகளுக்குரிய இடமுண்டு. நமது வன உயிரினம் உலகப்பொருள்களில் முக்கிய இடத்தை வகிக்கிறது. அதனைப் பாதுகாப்பது மனிதனுடைய கடமையாகும். பழங்காலத்தில் வேட்டையாடுதற்கு வில் அம்புகளைப் பயன்படுத்தினர். துப்பாக்கிகள் போன்ற நவீனக் கருவிகள் உபயோகத்திற்கு வந்ததன் காரணமாக இந்த மிருகங்களையும் பறவைகளையும் கொல்லுவது சுலபமாய்விட்டது. இப்பிராணிகளின் சந்ததியே விரைவில் அற்றுப்போகுமோ என்ற அச்சம் மக்கள் மனதில் இப்போது தோன்றியுள்ளது. இப்பிராணி வர்க்கத்தை நம் நாட்டில் நிலைபெறச் செய்ய வேண்டுமானுல் மனம்போன போக்கில் கொல்வதைத் தடுக்கவேண்டும். இப்பிராணிகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை மக்கள் மனதில் பதியவைக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தியாவெங்கும் வன விலங்கு வாரம் கொண்டாடுவது அத்தகைய ஏற்பாடுகளுள் ஒன்று. இரண்டாவதாக உள்ள ஸ்தாபனம் ஜீவஇம்சை தடுப்புச் சங்கமாகும் (S.P.C.A.) இது பிராணிகளுக்கு இழைக்கப்படும் துன்பங்களைத் தடுக்கிறது.

அரசாங்க நிர்வாகம்

அழிவினின்றும் காப்பாற்ற இப்போது தேவையானது யாதெனில் வன உயிர்களின் நிர்வாகம். இதைத்தான்

இந்திய அரசாங்கமும் ஆதரித்து, நமது நாட்டில் நிலை நிறுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறது. வன உயிர் நிர் வாகத்தின் நோக்கம் யாதெனில் மனித உயிருக்கு நேரும் ஆபத்தையும் பயிர்களுக்கு நேரும் அழிவையும் தடுப்பதா கும். அதோடு அளவில்லாமலும் மனம்போன போக்கி லும் வன விலங்குகளைக் கொல்லாமல் காப்பாற்றுவது மாகும். ஆகவே வன உயிர் நிர்வாகம் என்பது பாது காப்பு, நிலைபெறுத்தல், கட்டுப்படுத்தல் இவைகளுக்காகப் பாடுபடுவதாகும்.

வனவிலங்கு சரணலயம்

தமிழ் நாடு அரசாங்கத்தின் சார்பில் நீலகிரி மாவட்டத் தில் 'வனவிலங்கு சரணலயம்' ஒன்று அமைக்கப்பட்டுள் ளது. இயற்கைச் சூழ்நிலையோடு வனவிலங்குகள் சுதந்த ரமாய் வாழ்வதற்கு ஏற்றவாறு அந்த வனம் அமைந் துள்ளது. வெளி நாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளும், நம் நாட்டுப் பார்வையாளர்களும் நேரில் கண்டு களிக்க வசதியாய் உள்ளது. ஆனால் அங்கு எவரும் வேட்டையாட அனுமதிக்கப் படுவதில்லை. இவ்வாறு குஜராத், பீகார், காஷ்மீர், மத்தியப் பிரதேசம் முதலிய ராஜ்யங்களிலும் ''வன விலங்கு சரணலயங்கள்'' உள்ளன.

முடிவுரை

இந்தியா, வண்ணமும் அழகும் நிறைந்த நாடு என்ற பெயர் நிலைத்திருக்க வேண்டுமானல் நம் நாட்டின் உண் மைச் செல்வமான வனவிலங்குகளை நாம் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

அருஞ்சொற்பொருள்

வனவிலங்கு—காட்டு மிருகம். வண்ணம்—நிறம். கரன்சி நோட்டுகள்—காகித நாணயங்கள். அபூர்வமான—எளிதில் கிடைக்காத. சேவை—தொண்டு. பிரமித்துப் போதல்—செய்வ

தறியாது திகைத்தல். தசரா—மைசூரில் புரட்டாசி மாதம் நடைபெறும் பெரு விழா. ஈர்ப்பது—தன்பால் இழுப்பது. அன்னியச் செலாவணி—வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பண வருவாய். ஊறு செய்தல்—துன்புறுத்தல். மகாராஜாக்கள்—முன்பு சுதேச சமஸ்தானங்களை ஆண்டு வந்தோர். பிரச்சினை—ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய ஒன்று. சந்ததி—வழி முறை. வர்க்கம்—இனம். நிலை பெறுத்தல்—என்றும் இருக்கச் செய்தல். சரணாலயம்—பாதுகாவலான இடம். இன்றியமையாதது—மிகவும் அவசியமானது.

வினாக்கள்

1. இந்தியாவில் பலதிறப்பட்ட விலங்கினங்கள் இருக்கக் காரணமென்ன ?
2. நம் நாட்டில் வன விலங்குகள் வாழும் இடங்கள் யாவை ?
3. வன விலங்குகளால் உண்டாகும் பயன்கள் யாவை ?
4. மயிலும் சிங்கமும் எவ்வாறு போற்றப்படுகின்றன ?
5. காட்சிச் சாலைகளால் நாம் அடையும் நன்மைகள் யாவை ?
6. வன விலங்குகள் ஏன் அழிக்கப்படுகின்றன ?
7. வன விலங்குகளின் பாதுகாப்பிற்குப் பொதுமக்களும் அரசாங்கமும் செய்யவேண்டுவன யாவை ?
8. வனவிலங்கு சரணாலயம்—சிறு குறிப்பு வரைக.

பயிற்சி

1. சர்க்கஸ் காட்சிகளில் வனவிலங்குகள் எவ்வாறு பயன் படுத்தப்படுகின்றன ?
2. அசோக சின்னத்தில் சிங்கங்களின் உருவங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் யாது ?
3. வனவிலங்கு சரணாலயங்கள் எங்கெங்கு உள்ளன ? அவைகளினால் நம் அரசாங்கத்திற்கு ஏற்படும் நன்மைகள் யாவை என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.
4. இப்பாடத்தில் வந்துள்ள ஆங்கிலச் சொற்களையும் வடமொழிச் சொற்களையும் தொகுத்தெழுதுக.

17. ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கங்களும் பயன்களும்

திருவாளர் A. நடராஜன், B. A. (Honours), பூனா.

1. **திட்டங்களின் அவசியம்:** ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு ஜனநாயகம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி. ஆங்கில ஆட்சியிலிருந்து விடுபட்டு, நாம் ஜனநாயக அடிப்படையில் அரசியலைத் தொடங்கி ஏறக்குறைய பதினேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. சுதந்திரம் அடைந்த அன்று நம் நாட்டுப் பொருளாதார நிலை எவ்வாறு இருந்ததைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம். உணவுப் பற்றுக் குறை மக்களை வாட்டியது. துணிப் பஞ்சம் ஒரு புறம். போக்குவரவுச் சாதனங்கள் பின் தங்கியிருந்தன. கொஞ்சம் தலை தூக்கியிருந்த சணல், பஞ்சாலைத் தொழில்கள், கச்சாப் பொருள் குறைவினால் தளர்ந்தன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் பாகிஸ்தானத்திற்குச் சொந்தமாகிய மேற்குப் பஞ்சாப், கிழக்கு வங்காளம் போன்ற இடங்களிலிருந்து ஆயிரக் கணக்கில் அகதிகள் நம் நாட்டில் நுழைந்தனர். பொருள்களின் விலையேற்றம் கட்டுக் கடங்கவில்லை. சமூக வளர்ச்சியின் அடிப்படைகளான கல்வி, தொழில், சுகாதாரம் போன்ற துறைகளில் முன்னேற்றம் மங்கியிருந்தது. மத்திய அரசாங்கம் இக்குறைகளை நீக்கவும், நாட்டின் பொருளாதார நிலையைப் பலப்படுத்தவும் 'திட்டக்குழு' ஒன்றை நம் நாட்டுப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் 1950இல் நிறுவியது.

2. **மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் காலமும் மூலதனமும்:**—'திட்டக் குழுவினர்' இதுவரை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கியுள்ளனர். முதல் ஐந்தாண்டுத்

திட்டம் 1950-51ஆம் வருடத்திலிருந்து 1955–56ஆம் வருடம் வரை செயல் முறையில் கொண்டு வரப்பட்டது. இத் திட்டத்தில் செலவிடப்பட்ட தொகை ஏறக்குறைய 2400 கோடி ரூபாய் ஆகும். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் 1955-56ஆம் வருடத்திலிருந்து 1960-61ஆம் வருடம் வரை அமுலில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் செல விடப்பட்ட தொகை ஏறக்குறைய 4800 கோடி ரூபாய் ஆகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிடப்பட்ட தொகையைக் காட்டிலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் செலவிடப்பட்ட தொகை இரண்டு மடங்கு அதிகம். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் சுமார் 10,800 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். இத்திட்டத்தைச் செயல் படுத்தும் காலம் 1960-61ஆம் வருடத்திலிருந்து 1965–66 ஆம் வருடம் வரை நீடிக்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் சமீபத்தில் திட்டக் கமிஷனுல் உருவாக்கப் பெற்றுள்ளது.

3. ஐந்தாண்டுத் திட்டங்களின் பெருநோக்கங்கள் பின்வருமாறு:—

1. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, நாட்டின் வருமானத்தைப் பெருக்குதல்.

2. அடிப்படைத் தொழில்கள், கனரகத் தொழில்களை விஸ்தரித்து நாட்டின் தொழில் வளர்ச்சியைச் செம்மைப் படுத்துதல்.

3. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கி, மக்களுக்கு வேலை கொடுத்தல்.

4. வருமானத்தினுல் சமூகத்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைப் படிப்படியாகக் குறைத்தல்.

5. பொருளாதார வளர்ச்சியினுல் ஏற்படும் பலன்களை நல்ல முறையில் பங்கிடுதல்.

4. திட்டங்களும் அடிப்படைக் கொள்கைகளும்:—

அமெரிக்கா போன்ற நாடுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தனிப்பட்ட முதலாளிகளும் தொழிலதிபர்களும் பெரும் பங்கு கொள்கிருர்கள். அதாவது அரசாங்கம் தலையிட்டால்தான் உற்பத்தி பெருகும் என்ற நிலை அங்கு இல்லை. இதை முதலாளித்துவக் கொள்கை எனலாம். ரஷ்யா, செஞ்சீன போன்ற நாடுகளில் தனிப்பட்ட முதலாளிகள் இல்லையெனக் கூறலாம். நாடு எல்லோர்க்கும் சொந்தம்; நிலம் எல்லோர்க்கும் சொந்தம் என்ற கொள்கை அங்கு நிலவுகிறது. மக்கள் எல்லோரும் நாட்டின் உழைப்பாளிகள். ஒன்ருகச் சேர்ந்து உழைக்கிருர்கள் என்றும் ஒன்ருக உண்கிருர்கள் என்றும் நாம் கேள்விப் படுகிறேம். மக்கள் எல்லோரும் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். ஏழையென்றும் பணக்காரன் என்றும் அங்கு ஒருவனும் இல்லை. இத்தகைய கொள்கையைக் ''கம்யூனிஸ''க் கொள்கை என்றழைக்கிருர்கள். முதலாளித்துவக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில் திட்டங்களின் அவசியம் தேவைப் படாது. ஏனெனில் பொருளாதார வளர்ச்சி உச்சநிலையில் இருப்பதே அதற்குக் காரணம். கம்யூனிஸக் கொள்கையைக் கடைப்பிடித்த ரஷ்யா, சீன இரண்டு நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சிக்கென திட்டங்களை வகுத்தனர். அத் திட்டங்களின் மூலம் நாட்டின் பொருள் வளர்ச்சியை அதிகப் படுத்தினர். ஆனல் அரசாங்கமே எல்லாவற்றிற்கும் அப்பாற் பட்ட சக்தி என்றும் மக்கள் பணியாட்கள்தான் என்றும் வலியுறுத்தினர்.

மக்கள் சக்திதான் மேன்மையானது என்று நினைக்கும் நம் நாட்டில் பின்னே சொல்லப்பட்ட கம்யூனிஸக் கொள்கை ஒவ்வாதது. அரசாங்கத்தின் உதவியின்றித் தனிப்பட்ட முதலாளிகள் நாட்டின் வளத்தை அதிகரிக்கக் கூடும் என்ற நம்பிக்கையும் இங்கு இல்லை. ஆகவே நம் அரசாங்கம் ''சோஷலிஸம்'' என்ற மத்திய நிலைக் கொள்கையை வர

வேற்றது. அந்த அடிப்படையில்தான் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் உருப் பெற்றன. இந்தச் சோஷலிஸக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் என்னவெனில், மக்கள் எல்லோரும் சம உரிமை பெறல் வேண்டும்; மக்கள் நலன் தான் எல்லாவற்றையும்விட மேலானது; இதற்காக அரசாங்கம் இடை விடாமல் உழைக்க வேண்டும் என்பதே.

5. **திட்டங்களைச் செயல்படுத்தும் முறை:**— *1948* ஆம் வருடம் மத்திய அரசாங்கம் ''இந்தியாவில் தொழில் வளர்க்கும் முறை'' (Iudustrial Policy Resolution) பற்றிய ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. நாட்டின் பல் வேறு தொழில்களைத் தனியார் தொகுதி (Private sector) என்றும், பொதுத் தொகுதி (Public Sector) என்றும் பிரித்தனர். தனியார் தொகுதி என்ற பிரிவின் கீழ் வரும் தொழில்களில் தனிப்பட்டோர் ஈடுபடலாம்; தொழிலைப் பெருக்கலாம்; லாபத்தை அடையலாம் என்ற உரிமைகள் அளிக்கப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வந்தபோது மேற்கண்ட *1948* ஆம் வருடத்திய தீர்மானத்தின்படி, தனிப்பட்டோர் தொகுதிக்குச் சில தொழில்களையும் மற்றவைகளைப் பொதுத் தொகுதியிலும் சேர்த்தனர்.

6. **ஐந்தாண்டுத் திட்டங்களில் தனிப்பட்டோர் தொகுதி:**— துணி உற்பத்தி, சர்க்கரை உற்பத்தி, சணல் உற்பத்தி, சிமெண்ட் உற்பத்தி, விவசாயம், வியாபாரம், பாங்குகள் போன்ற துறைகளில் தனிப்பட்டோர் ஈடுபட லாம்.

பொதுத் தொகுதி:—

மின்சார உற்பத்தி, ரயில்வேக்கள், இரும்பு எஃகு உற் பத்தி, ஆயுள் இன்ஷூரன்ஸ், விமானப் போக்கு வரவு போன்ற துறைகளில் அரசாங்கத்தினர்க்கு மட்டுமே பூரண உரிமை உண்டு.

7. ஐந்தாண்டுத் திட்டமும் வெளிநாட்டுக் கடன்களும் :-

ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற பணம் கோடிக் கணக்கில் தேவைப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டங்கள் துவங்கியபோது அதாவது 1950–51ஆம் வருடத்தில் நாட்டின் சேமிப்பு வருமானத்தில் 5 சதவிகிதமே எனத் திட்டக் குழுவினர் கணித்தனர். இந் நிலையில் செல்வம் கொழிக்கும் மேலை நாடுகளிடமிருந்து நாம் பண உதவி கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பின் தங்கிய பற்றுக் குறை நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக் கென்றே வாஷிங்டனில் நிர்மாணிக்கப் பட்ட 'உலகப் பாங்கு' நம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பெருநிதி உதவியிருக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஹாலந்து போன்ற மேலை நாடுகளும் மகத்தான பொருளுதவி செய்திருக்கின்றன. ''பிலாய்'' இரும்பு எஃகுத் தொழிற்சாலை ரஷ்யாவின் உதவி யால்தான் நிறுவப்பட்டது. துர்க்காபூர் இரும்பு எஃகுத் திட்டம் பிரிட்டிஷ் சர்க்காரின் உதவியால்தான் நிர்மாணிக் கப்பட்டது. இந்த நாடுகள் பொருளுதவி மட்டுமல்லாமல், பொறியியல் வல்லுநர்களையும், விஞ்ஞான நிபுணர்களையும் நம் நாட்டிற்கு அனுப்பி நம் மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளன.

8. ஐந்தாண்டுத் திட்டமும் உள்நாட்டு மூலதனமும் :-

மேல் நாட்டுக் கடன்கள் மட்டும் திட்டங்களைச் செயல் படுத்த போதும் என்று சொல்லிவிட முடியாது. ஆகவே நமது அரசாங்கம் பல வழிகளில் மூலதனத்தைச் சேகரிக்க ஆரம்பித்தது. புது வரிகள் போடப்பட்டன. பழைய வரி களின் சுமை சிறிது அதிகரிக்கப்பட்டது. ''தேசிய சேமிப்புத் திட்டம்'' என்ற மாபெரும் திட்டத்தை ஆரம்பித்தனர். நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தங்களாலான பொருளுதவி செய்யும் வாய்ப்பு இந்தத் திட்டத்தின் மூலம் கிடைத்தது. கடைசியாகப் பற்றுக் குறையை நீக்க, புதிய கரன்சி நோட்டுக்களை அச்சடித்தனர்;

பரிசுப் பத்திரங்கள் அமுலில் வந்தன ; அரசாங்கத்தின் திறமையாலும் மக்களின் ஒத்துழைப்பினுலும் திட்டங்களுக்குத் தேவையான மூலதனம் கிடைக்கப் பெற்று இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல் பெற்றன. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வந்து நான்காண்டுகள் கடந்துவிட்டன.

9. திட்டத்தினுல் விளைந்த நன்மைகள் :—

நாட்டின் பல்வேறு துறைகளில் வியக்கும் அளவிற்கு இந்த ஐந்தாண்டுத் திட்டங்களினுல் முன்னேற்றம் உண்டாகியிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் கண்ட முன்னேற்றத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

(i) விவசாயம் : இந்தியா ஒரு விவசாய நாடு. விவசாயத்தில் 100க்கு 70 பேர் ஈடுபடுகிருர்கள். அவர்கள் முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றம் என்று கூறினுல் மிகையாகாது. இதனுல்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்தியாவின் எல்லா ராஜ்ய சட்ட சபைகளிலும் 'ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா' நிறைவேற்றப்பட்டது. நிலத்தை இழந்த ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடாக அரசாங்கம் இலட்சக் கணக்கில் பணம் கொடுக்க நேரிட்டது. நிலச் சொந்தக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற மசோதாவும் பல்வேறு ராஜ்யங்களின் சட்ட சபைகளில் நிறைவேறிற்று. நாடெங்கும் விவசாயக் கூட்டுறவு பாங்குகள் நிறுவப்பட்டன. சிறு நிலச் சுவான்தாரர்களுக்குத் தங்கள் நிலத்தைப் பண்படுத்தவும், உரம் வாங்கவும், கடனுகக் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுக்கப்பட்டது. நிலம் இல்லாதோரின் நிலையைக் கண்டு வருந்தியவர்களுள் மிகவும் முக்கியமானவர் ஸ்ரீ ஆசார்ய விநோபா பாவே என்ற பெரியார். நிலம் வைத்து இருப்பவர்கள் நிலம் இல்லாதோர்க்குத் தங்களால் முடிந்த அளவுக்கு நிலத்

தைத் தானமாகத் தரவேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொண்டார். இதுவே ''பூதான இயக்கத்தின்'' ஆரம்ப மாகும். அரசாங்கத்தின் முயற்சியினாலும், வினோபாவின் பூதான இயக்கித்தின் மூலமாகவும் நிலம் இல்லாதோர்க்குச் சில ராஜ்யங்களில் நிலம் அளிக்கப்பட்டது. உழவர்களின் நிலை ஐந்தாண்டுத் திட்டங்களினால் சிறிது உயர்ந்திருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இந்திய விவசாயம் ''கூட்டுப் பண்ணை முறை''யைக் கடைப் பிடித்தால் உற்பத்தி பெருகும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றார்கள். அரசாங்கமும் அம்முறையைப் படிப்படியாக நடைமுறையில் கொண்டுவர உத்தேசித்திருக்கிறது.

(ii) **பாசன வசதியும் மின்சார உற்பத்தியும்:** பாசன வசதிகளை அதிகரிக்க முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 395 கோடி ரூபாயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 458 கோடி ரூபாயும் ஒதுக்கினர். மின்சார உற்பத்திக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 366 கோடி ரூபாயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 440 கோடி ரூபாயும் ஒதுக்கினர். இதன் விளைவாக இன்று நம் நாட்டில் பக்ராநங்கல், ஹிரா குட், சாம்பல், மயூராட்சி, நாகார்ஜுனசாகர், கோஸி, துங்கபத்ரா, சாத்தனூர் போன்ற மகத்தான பாசனவசதி மின் சாரத் திட்டங்கள் உருவாகியுள்ளன. மூன்றாவது ஐந்தாண் டுத் திட்டம் முடிவதற்குள் இன்னும் பல புதிய திட்டங்கள் உருவாகும் என்பதில் ஐயமில்லை. மின்சார உற்பத்தி பெரு கியதால் முதல் ஐந்தாண்டுக் காலத்தில் 2500 கிராமங் களுக்கும், இரண்டாவது ஐந்தாண்டுக் காலத்தில் 10,000 கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது.

(iii) **தொழில் அபிவிருத்தி:** இந்தியாவில் தொழில் வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகப் பலமடங்கு உயர்ந் திருக்கிறது எனலாம். சிந்த்ரி (பீஹார்) என்ற இடத்தில் இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. சித்தரஞ்சன் (வங்காளம்) என்ற இடத்தில் இரயில்வே எஞ்சின்கள் உற்

பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவப்பட்டது. டெலிபோன் உற்பத்தி செய்ய பெங்களூரில் டெலிபோன் தொழிற்சாலை நிறுவப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆவடியில் டாங்குகள் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை நிறுவியுள்ளனர். ஏற்கனவே நெய்வேலியில் பழுப்பு நிலக் கரித்திட்டம் ஆரம்பமாகியுள்ளது. பெரம்பூரில் இரயில்வே பெட்டிகள் செய்யும் ஒரு தொழிற்சாலை உள்ளது. பூனாவிற்கு அருகில் உள்ள பிம்பிரி என்ற இடத்தில் 'பென்சிலின்' என்ற அரிய மருந்தைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலை கட்டப் பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தில் கப்பல்கட்டும் தொழில் மேலும் அபிவிருத்தி அடைந்துள்ளது.

(iv) கிராமங்களின் முன்னேற்றம்: சமூக நலத்திட்டங்கள் (Community Projects), தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் (National Extension Service) என்ற இரு திட்டங்களும் 1952ஆம் வருடம் அக்டோபர் மாதம் அமுலில் வந்தன.

சமூக நலத் திட்டங்களின் குறிக்கோள் என்ன வென்றால் மக்களே தங்களுக்கு வேண்டிய தேவைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஸ்தல அபிவிருத்தி அதிகாரிகளிடம் அதைப்பற்றித் தெரிவிக்க வேண்டும். தேவைகளைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் அதிகாரிகளோடு ஒத்துழைத்தல் வேண்டும். அதிகாரிகள் மக்களின் தேவைகளை அறிந்து ஆவன செய்தல் வேண்டும்.

தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள்

(1) கூட்டுறவுப் பணிகளின் முன்னேற்றம்.

(2) கிராமத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான கிராமப் பஞ்சாயத்துக்கள் அதிகரித்தல்.

(3) துண்டு நிலங்களை ஒன்று சேர்த்தல்.

(4) குடிசைத் தொழில், சிறுதொழில்களை வளர்த்தல்.

(5) சிறு விவசாயிகள், நிலமில்லாதோர், கிராமத் தொழிலாளிகள், விவசாயக் கூலியாட்கள், இவர்களுக்கு உதவியளிக்க சிறு சங்கங்கள் நிர்மாணித்தல்.

(6) சிறியோர் நலனையும், பெண்கள் நலனையும் கண்காணித்தல்.

மேற்கூறிய பணிகளை நடைமுறையில் நிறைவேற்ற முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 547 கோடி ரூபாயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 946 கோடி ரூபாயும் செலவிட்டனர். நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் மேற்கண்ட திட்டங்களின் கீழ் வரவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

(v) கல்வி: இந்திய அரசியல் சட்டத்தின் (Indian Constitution) 45வது விதி (Article) சொல்வதாவது:- குடியாட்சி தொடங்கிய 10 ஆண்டுகளுக்குள் நாட்டின் எல்லாக் குழந்தைகளுக்கும் 14வது வயது முடியும் வரை இலவசமாகக் கட்டாயக் கல்வி கற்க அரசாங்கம் வசதி செய்து தர வேண்டும் என்பது. நம்நாட்டில் 1950-51இல் 6 வயதிலிருந்து 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 100க்கு 42 பேர் பள்ளி சென்றனர். முதல் ஐந்தாண்டுத்திட்டம் முடிவடைந்த 1955-56ஆம் வருடத்தில் 100க்கு 51 குழந்தைகள் பள்ளி சென்றனர். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருடமான 1960-61ல் 100க்கு 63 குழந்தைகள் பள்ளி சென்றனர் என்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது. இதிலிருந்து அரசியல் சட்டத்தில் கூறிய பணியை அரசாங்கம் செய்து முடிக்க இன்னும் எவ்வளவு காலம் ஆகும் என்று நாமே யூகித்துக் கொள்ளலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகை 169 கோடி ரூபாய். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிடப்பட்ட தொகை 307

கோடி ரூபாய். ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துதல், மாணவர்கள் ஒழுக்கம், கல்வியோடு தொழிலையும் இணைத்தல் போன்ற சில சீர்திருத்தங்களை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

கால்நடை அபிவிருத்தி, சுகாதாரம், அணுசக்தி, துறைமுக அபிவிருத்தி போன்ற இன்னும் பல துறைகளில் திட்டங்களின் மூலம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமானல் மக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை. அரசாங்கத்தையும், அரசாங்க அதிகாரிகளையும் இந்தத் திட்டங்களின் கைகள் என்ருல் மக்களை மூச்சு எனக் கூறலாம். மேல் நாடுகள் இந்தியாவை ஜனநாயகத்தின் வழிகாட்டி என்றும், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடு என்றும் கூறுகின்றன. பின்னே சொல்லப்பட்ட குறையை நீக்க ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரிதும் உதவும் என்று நாம் நம்புவோமாக.

அருஞ்சொற் பொருள்

செம்மை—பெருமை. கணித்தனர்—மதித்தனர். பொறியியல்—இயந்திரம் பற்றிய கலை. யூகித்தல்—அனுமானித்தல்.

வினக்கள்

1. சுதந்திரம் அடைந்த அன்று நம் நாட்டிலிருந்த பொருளாதாரச் சிக்கல்கள் யாவை?
2. ஐந்தாண்டுத் திட்டங்களின் பெரு நோக்கங்கள் யாவை?
3. சிறு குறிப்பு வரைக :—
முதலாளித்துவக் கொள்கை, கம்யூனிஸக் கொள்கை.
4. நம் நாட்டு அரசாங்கம் ஏன் சோஷலிஸக் கொள்கையையே விரும்புகின்றது? சோஷலிஸக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் யாவை?

5. தொழில் துறையில் ஏற்பட்ட இரு தொகுதிகள் யாவை? ஒவ்வொன்றிலும் அடங்கும் தொழில்கள் யாவை?

6. நம் நாட்டு ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பொருளுதவி அளித்த நாடுகள் யாவை?

7. நமது அரசாங்கம் மூலதனத்தைச் சேகரிக்கக் கையாண்ட வழிகள் யாவை?

8. ஐந்தாண்டுத் திட்டங்களினால் விளைந்த நன்மைகள் யாவை?

9. ஐந்தாண்டுத் திட்டங்களால் தொழில் துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகள் யாவை?

10. தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் யாவை?

பயிற்சி

1. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—

ஏறக்குறைய, உருப்பெற்றன, வியக்கும்படியான, மகத்தான, நிர்மாணித்தல்.

2. இந்தியா ஒரு விவசாயநாடு என்பது எவ்வாறு பொருந்தும்? ஆராய்க.

3. ஐந்தாண்டுத் திட்டங்களின் நன்மைகளைப் பற்றி இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக.

18. வீரர்களும் வீரச்செயல்களும்

(நாட்டுப் பற்று)

திரு. G. அங்கமுத்து B. A.,
துணை ஆசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, இருகூர்.

பாரத நாடு

''பாரத நாடு பழம்பெரும் நாடே, பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே'' என்றார் பைந்தமிழ்ப் புலவர் பாரதியார். மாரத வீரர் மலிந்ததும், மாமுனிவோர் பலர் வாழ்ந்ததும், புத்தர் பிரான் பிறந்ததும், சத்திய மூர்த்தியாம் காந்திமகான் வாழ்ந்து மறைந்ததும் இப்பொன்னொளிர் பாரதத்தில்தான். கன்னலும் செந்நெலும் கனியும் கதலியும் கொடுக்கும் உன்னத நாடு நம் பாரத புண்ணிய பூமி. அறிஞர்களையும், கலைஞர்களையும், காவிய விற்பன்னர்களையும், அரசியல் மேதைகளையும், அன்பு வழி காத்த அருளாளர்களையும் சிந்தனைச் சிற்பிகளையும், செயற்கரிய செய்த பெரியவர் களையும் ஒருங்கே ஈன்றெடுத்த பெருமை நம் பாரதத்திற் குண்டு. தீரத்திலும், படை வீரத்திலும், நெஞ்சில் ஈரத் திலும், உபகாரத்திலும் சிறந்த நாடு. ஆக்கத்திலும் தொழில் ஊக்கத்திலும், புயவீக்கத்திலும், உயர் நோக்கத் திலும் சிறந்த நாடு. உண்மையிலும் உளத்திண்மையிலும், மனத்தண்மையிலும் உயர்ந்தவர்களைப் பெற்ற நாடு நம் பாரத நாடு.

சுதந்தர வேட்கை

இத்தகைய சிறப்புடைய நாடு—செல்வம் கொழித்த நாடு—கடந்த இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட் பட்டு அல்லலுற்றது. பாரதத்தாயின் கரங்களைக் களங்கப் படுத்திய அடிமை விலங்குகளைக் களைந் தெறியப் பாடுபட்ட வீரர்கள் பலர். கயத்தாற்றுப் புளிய மரத்தில் தொங்கி உயிர் நீத்த வீரபாண்டிய கட்டபொம்மன்

முதல் காந்திமகான் வரை தாய் நாட்டின் சுதந்தரம் காணத் துடித்த பெருமக்கள் உற்ற துன்பங்கள் சொல்லுந்தரமன்று. அப்பெருமக்கள் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத் தையும் அளித்து, வாங்கித்தந்த சுதந்தரத்தை நிரந்தர மாக்குவது தான் நம் நாட்டிலுள்ள ஒவ்வோர் இளைஞனது முக்கிய கடமையாக இருக்க வேண்டும்.

வீரச் செயல்கள்

தாய் நாட்டின் நலங்கருதி உழைத்த பெருமக்களையும், அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட வீரர்களையும் முதன் முதலில் நம் நினைவிற்குக் கொண்டு வருதல் வேண்டும். சுதந்தர பாரதத்தில் நாம் இப்பொழுது பெற்றி ருக்கும் உரிமைகளை நினைக்கும் பொழுது மகாராஷ்டிர மா வீரன் சிவாஜியின் தீரமும், பெண்ணுகப் பிறந்தும் அந் நியர் ஆதிக்கத்தை ஆண்மையோடு எதிர்த்துப் போரிட்டு மறைந்த ஜான்சி ராணியின் வீரமும், 1857 இல் நடை பெற்ற சுதந்திரப் போரில் ஈடுபட்டு உயிர் நீத்த வீரர்களின் துணிவும், பஞ்சாப் படுகொலையில் இறந்து போன எண்ணற்ற வீரர்களின் நினைவும், 1942 ஆகஸ்டுப் புரட்சியில் துயருற்ற தியாகிகளின் வீரச் செயல்களும் நம் மனக் கண்ணின் முன் வந்து நிற்க வேண்டும். 1962 ஆம் ஆண்டில் நம்மைத் தாக்கிய சீனர்களை எதிர்த்து லடாக்கிலும், நெபாப் (nefa) பகுதியிலும் இமாலயத்தின் அடிவாரத்திலும், பனித்தரையிலும், போரிட்ட மாவீரர் பலரையும் நம் நாட்டு ஒவ்வோர் இளைஞனும் நினைத்துப் பார்க்க வேண்டும். அப் பொழுதுதான் நாம் பெற்றிருக்கும் சுதந்தரத்தின் பெருமையும், அதை நிரந்தரமாக்க நாம் ஆற்ற வேண்டிய கடமையும், நம் நாட்டின் உண்மையான நிலைமையும் தெற்றென விளங்கும்.

நாட்டுப் பற்றும் இளைஞர் கடமையும்

இன்றும் நாம் பல விரோதிகளைப் போர்க் களத்தில் சந்திக்க வேண்டிய நிலையில்தான் இருக்கின்றோம். சீனு நம்

நாட்டை ஆக்கிரமிக்கத் திட்டமிட்டு சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது. நமது அண்டையிலேயிருக்கும் பாகிஸ்தான் நேர்மையற்ற முறையில் நம் நாட்டின் மீது படையெடுத்து குடிமக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும், ஆலயங்கள் மீதும், மருத்துவ மனைகள் மீதும் குண்டு போட்டும், முறையற்ற முறையில் தாக்கியும் மக்களுக்கும் நாட்டிற்கும் தொல்லை கொடுத்தும் வருகின்ற இந்நேரத்தில் பாரதத்திலுள்ள ஒவ்வோர் இளைஞனது கடமை என்ன என்று ஆய்ந்து பார்க்க வேண்டும். இளைஞர்கள் எல்லாம் நாட்டின் பால் வேட்கை கொண்டு தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் தாயகம் காக்க முன் வர வேண்டும். நாடு காக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் ஒவ்வோர் இளைஞர், முதியோர், ஆடவர், பெண்டிர் அனைவருடைய நாடி நரம்புகளிலும் ஊடுருவிப் பாய்ந்து ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே''

எனப்பாடிப் போந்த பாரதப் புலவர் பாரதியின் பாடல் ஒவ்வோர் இளைஞனது இதயத்திலும் ஆழப்பதிந்திருக்க வேண்டும். நாட்டின் எல்லைப் பகுதிகளில் அமைதியை நிலை நாட்டிய பின்னர்தான், நம் இல்லங்களுக்கு வரும் உள்ளத் திற்கினியாருடன் கனிவுமொழி பேசி மகிழ முடியும். பாரதத்திலே அமைதி நிலவிய பிறகுதான் நாம் குழந்தைச் செல்வங்களுடன் கூடி மகிழ்ந்து மழலை இன்பத்தில் திளைக்க முடியும். அந்நியர் தாக்குதலினின்றும் தாயகத்தை நம்மால் காக்க முடியும் என்ற பரிபூரண நம்பிக்கை ஏற்பட்ட பின்னர்தான் நம் அரசியலாரால் உருவாக்கப் பட்டு வரும் நாட்டு நலத் திட்டங்கள் வெற்றி பெறும். ஆகவே நாட்டுப் பற்றுதான் ஒவ்வொருவருக்கும் தற்போது இன்றியமையாத ஒன்ருக இருக்கின்றது.

இந்திய இராணுவம்:

தாய் நாட்டுப் பற்றால் உந்தப்பட்டு நாடு காக்க முன் வரும் இளைஞர்களை உருவாக்க நம் அரசாங்கம் பல படை களை அமைத்திருக்கின்றது. அவற்றில் சேர்ந்து பயிற்சி பெறுவதுதான் நமது முக்கிய இலட்சியமாக இருக்க வேண்டும். நமது ஆயுதம் தாங்கிய படைகள் 1. தரைப் படை, 2. கடற்படை, 3. விமானப்படை என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இம்மூன்று படைகளுக்கும் பூனாவில் ''கடக்வாசல்'' என்ற இடத்தில் ஆட்கள் தேர்ந்து எடுக்கின்றனர். இந்தியாவின் தரைப் படை இராணுவத்திற்கு டேராடூனிலும், கப்பற்படை வீரர் களுக்கு ஆஸ்வினி, வால்சுரா, கருடா ஆகிய கப்பல்களி லும், விமானப்படை வீரர்களுக்கு டேராடூனிலுள்ள கல்லூரி யிலும் (Flying College) பயிற்சியளிக்கப்படுகிறது. இவற் றின் தலைவர்கள் முறையே ஜெனரல், அட்மிரல், ஏர்மார்ஷல் என்று அழைக்கப்படுகின்றனர். இவற்றில் ஏதாவது ஒன் றில் சேர்ந்து நம் நாட்டைப் பாதுகாக்க இளைஞர்கள் முன் வரவேண்டும்.

மனிதத் தன்மை:

தாய் நாட்டுப் பற்றால் ஏற்பட்ட தைரியமும் தன்னம் பிக்கையும் மனிதத் தன்மையுடனும் அன்புணர்வுடனும் கலந்ததாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தீயசக்தி களை நம்மால் களைந்தெறிய முடியும். தூய உணர்வுடைய வாலிபர்களை உருவாக்க முடியும். தருமத்தின் வாழ்வைச் சூது மறைக்கலாம்; ஆனால் தருமம் மறுபடியும் வெல்லும் என்ற நம்பிக்கையுடன் நம்பணியை யாற்ற முன்வர வேண்டும்.

அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டு, இந்த அவனி யில் அழியாப் புகழ் பெற்ற அண்ணல் காந்தியையும் அவ

ரது வாரிசான அமரர் நேருவையும் இப்பொழுது நம் நினை விற்குக் கொண்டுவர வேண்டும். அந்நியரது ஆக்கிரமிப் பையும் காலனி ஆதிக்கத்தையும் அடிமை என்னும் கொடு மையையும் ஒழிக்க அப்பெருமக்கள் பட்ட துன்பம் சொல் லுந்தரமன்று. இருப்பினும் அன்புவழியினின்றும் அறவழி யினின்றும் அகிம்சை வழியினின்றும் அணுவளவும் பிறழாது தங்களது அரிய பணிகளை ஆற்றிப் போந்தனர் அத்தெய்வப் பிறவிகள்! மனிதாபிமானத்தையும் அன்பையும் தங்களது ஆயுதங்களாகக் கொண்டு இந்த அகிலத்தையே திருத்த அவர்கள் முற்பட்டனர். அதனுற்றான் வையகத்தே பிறந் தும் வானகத்தே உறையும் தெய்வங்களாக அவர்கள் மதிக் கப்படுகின்றனர்.

சர்வாதிகாரத்தின் வீழ்ச்சி :

இத்தாலியை உருவாக்கிய முசோலினியும், ஜெர் மனியை உயர்ந்ததாக்கிய ஹிட்லரும், ருஷ்யாவைப் பொது வுடைமைப் பூங்காவாக்கிய ஸ்டாலினும் உலக சரித்திரத்தில் தங்களது பெயர்களை ஆழப் பதிய வைத்திருந்தாலும் எதிர் காலம் அவர்களை மறப்பது உறுதி. அவர்கள் அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொள்வதற்குப் பதிலாக அதிகாரத்தை — சர்வாதிகாரத்தை — அடிப்படையாகக் கொண்டுதான் தங்கள் நாடுகளை உருவாக்கினர். அன்பு அறம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் படாதவை அனைத்தும் அழிவது உறுதி. இது உலகறிந்த உண்மை. ஆகவே மனிதாபிமானமும் உலகம் உய்ய வேண்டுமென்ற நல்லெண்ணமும் உடையவர்கள்தாம் சிறந்தவர்களாக மதிக்கப்படுவர்.

விருதுகளும் பரிசுகளும் :

நம் நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மேற் கூறிய படைகளில் சேர்ந்து பயிற்சி பெற்ருலொழிய நம் நாட்டைக் காப்பது இயலாது. ஓயாது உழைக்கும் வீரர் களை ஊக்குவிக்க நமது அரசாங்கம் விருதுகளையும் பரிசுகளை

யும் அளித்துச் சிறப்பிக்கின்றது. எதிரிகளை எதிர்த்துப் போரிட்டு, அவர்களைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்த வீரர்களுக்கு நம் ஜனுதிபதி பரம வீரச் சக்கரம், மகாவீரச் சக்கரம், வீரச்சக்கரம் போன்ற வீரப் பதக்கங்களைக் கொடுத்துச் சிறப்பிக்கின்ருர். போரில் இறந்துபட்ட வீரர்களின் மனைவிமார்களுக்கும் குழந்தைகளுக்கும் அரசியலார் பல நன்மைகளைச் செய்கின்றனர். நம் அண்ணல் காந்திமகான் அமரரான ஜனவரி மாதத்தின் இறுதிவாரம் தியாகிகளின் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

அயல்நாடுகளில் சேவை:

நம் நாட்டு வீரர்கள் தாய்நாட்டைப் பிறர் தாக்குதலினின்றும் காக்கப் பணியாற்றுவதுடன் உலகெங்கும் அமைதியை நிலை நாட்டவும் பாடுபடுகின்றனர். ஐக்கிய நாடுகளின் சபையின் சார்பாக எகிப்தில் காஜா என்ற இடத்திலும், காங்கோவில் லியோபால்டுவில்லி என்ற இடத்திலும், வியட்னுமிலும், லாவோஸிலும் மகத்தான பணிகளைப் புரிகின்றனர். இவ்வாறு நம் வீரர்கள் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாது இத்தரணியின் அமைதிக்காகவும் பணி புரிந்து அனைவராலும் போற்றப்படுகின்றனர்.

முடிவுரை

ஆகவே பாரத நாட்டிலுள்ள ஒவ்வொரு வாலிபனும் நாட்டின்பால் வேட்கை கொண்டு தைரியத்துடனும் தன்னம்பிக்கையுடனும் நாடு காக்க முன்வரவேண்டும். அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்த அகிலத்தில் அமைதியை நிலை நிறுத்தவும், உலக ஒற்றுமையை நிலை நாட்டவும், சமூக ஏற்றத் தாழ்வுகளைப் போக்கவும் இந்தியப் படைகளில் சேர்ந்து மகத்தான பணிகள் பல புரிய முன்வரவேண்டும். அப்பொழுதுதான் பாரதத்தாயின் உண்மைப் புதல்வர்கள் என்ற இறுமாப்புடன் குமரி முதல் இமயம் வரை ஏறு போல் பீடுநடை போட முடியும்.

குறிப்புரை

அருஞ்சொற்பொருள்

கன்னல் - கரும்பு; கதலி - வாழை; மாரதவீரர் - பெரிய தேரினையுடைய வீரர்; வண்மை - வள்ளல்தன்மை; திண்மை - வலிமை; வேட்கை - விருப்பம்; தெற்றென - தெளிவாக; அவனி - உலகம்; அகிலம் - உலகம்.

வினாக்கள்

1. பாரத நாட்டின் சிறப்பியல்புகளைக் கூறுக.
2. நாம் பெற்ற சுதந்தரத்தையும் உரிமைகளையும் நினைக்கும்போது நம் மனக்கண்முன் வருவன யாவை?
3. நம் நாட்டு வாலிபர்களது கடமைகள் யாவை?
4. ''இந்திய இராணுவம்''—சிறு குறிப்பு வரைக.
5. மகாத்மாவும் நேருவும் தெய்வங்களாக மதிக்கப்படுவதற்குரிய காரணங்கள் யாவை?
6. நம் அரசாங்கம் போர் வீரர்களை எவ்வாறு ஊக்குவிக்கின்றது?
7. நம் வீரர்கள் உலகின் பல பாகங்களிலும் பொது நலப் பணியாற்றுகின்றனர் என்பதற்குச் சான்றுகள் கூறு.

பயிற்சி

1. இந்திய நாட்டு இராணுவப் பயிற்சி என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுது.
2. இராணுவத்தில் சேர்வதற்குரிய தகுதிகளைக் குறிப்பிடு.

செய்யுட் பகுதி

குறிப்புரை

வாழ்த்துப் பகுதி

1. கடவுள் வாழ்த்து

ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : இராமலிங்க சுவாமிகள்

சிறப்புப் பெயர் : திருவருட் பிரகாச வள்ளலார்

தந்தை : இராமையப்பிள்ளை ; தாய்: சின்னம்மையார்

பிறப்பிடம் : சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூர்.

குலம் : கருணீகர்

காலம் : கி. பி. 1823—1873.

இயற்றிய நூல்கள்: திருவருட்பா, சீவகாருண்ய ஒழுக்கம், மநுமுறை கண்ட வாசகம், சன்மார்க்க விண்ணப்பங்கள் முதலியன.

திரு + அருள் + பா, இறைவன் திருவருளினால் தோன்றிய பா எனவும், இறைவன் திருவருளைப் பெறப்பாடிய பா எனவும் பொருள்படும்.

அருஞ்சொற் பொருள்

பேதமுறுது - வேறுபாடு கொள்ளாமல் ; உவக்கின்றார் - மகிழ்கின்றவர் ; - சுத்த - தூய்மையான ; சித்து - அறிவு; வித்தகர் - பேரறிஞர் ; ஏவல் - தொண்டு ; விழைந்தது - விரும்பியது.

இலக்கணம்

எ + துணை - எத்துணை ; ஒத்துரிமை - ஒத்து + உரிமை ; சித்துருவாய் - சித்து + அறிவாய்.

உறுது - எதிர்மறை வினையெச்சம், ஏவல் - தொழிற் பெயர்; விழைந்தது - விழை + த்(ந்) + த் + அ + து. விழை - பகுதி ; த் - சந்தி ; த்,ந் ஆனது விகாரம் ; த் - இறந்த கால இடை நிலை ; அ - சாரியை ; து - ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

வினாக்கள்

1. இராமலிங்க அடிகள் இறைவன் நடம்புரியும் இடம் என்று எதனைக் கூறுகின்றார் ?
2. இராமலிங்க அடிகள் தம்முடைய சிந்தை மிக விரும்புவதாக எதனைக் கூறுகின்றார் ? ஏன் ?

2. தமிழ்மொழி வாழ்த்து

ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.
பெற்றோர் : பெருமாள்பிள்ளை, மாடத்தியம்மாள்
ஊர் : கேரளத்திலுள்ள ஆலப்புழை
மரபு : வேளாளர்
காலம் : கி. பி. 1855—1897

வாழ்க்கை : சுந்தரம்பிள்ளை அவர்கள் M.A., பட்டம் பெற்றவர் ; திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றியவர். கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் இவருக்கு ஆசிரியராக விளங்கினார்.

வேறு நூல்கள் : நூற்றொகை விளக்கம், திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி முதலியன.

இப்பாடல் இவர் எழுதிய மனோன்மணீயம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

அருஞ்சொற் பொருள்

படைத்து - உண்டாக்கி ; அளித்து - காத்து ; துடைக்கினும் - அழித்தாலும் ; கவின் - அழகிய ; உதரம் - வயிறு ; ஆரியம் - சமஸ்கிருதம் ; சிதையா - கெட்டுப் போகாத ; வாழ்த்துதும் - வாழ்த்துவோம்.

இலக்கணம்

பல்லுயிர் - பல + உயிர் ; சிதையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வாழ்த்து + தும்; வாழ்த்து - பகுதி ; தும் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி ; எதிர்காலங் காட்டிற்று; மறந்து - மற + த்(ந்) + த் + உ. மற - பகுதி ; த்-சந்தி; த் - ந் ஆனது விகாரம் ; த் - இறந்த கால இடைநிலை; உ - வினையெச்ச விகுதி.

வினாக்கள்

1. தமிழ்த் தாயின் சீரிளமைத்திறனைச் சுந்தரம்பிள்ளை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

3. நாட்டு வாழ்த்து

ஆசிரியர் வரலாறு

ஆசிரியர்: அமரகவி சி. சுப்பிரமணிய பாரதியார்

ஊர்: பாண்டிய நாட்டில் உள்ள எட்டையபுரம்.

பெற்றோர்: சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள்

காலம்: கி.பி. 1882—1921

இயற்றிய நூல்கள்: கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலியன.

இப்பாடல்கள் இரண்டும் 'பாரதியார் கவிதைகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டன.

அருஞ்சொற் பொருள்

1. பார் - உலகு; தமிழ்நாடு - தமிழ் வழங்கும் நாடு; புகழ்க்கம்பன் - புகழையுடைய கம்பன்.
2. வள்ளுவன்தன்னை - திருக்குறளை; வான்புகழ் - மிகச் சிறந்த புகழ்; நெஞ்சை அள்ளும் - உள்ளத்தைக் கவரும்; ஓர்-ஒப்பற்ற; மணியாரம் - மணிமாலை.

இலக்கணம்

பிறந்த - இறந்த காலப் பெயரெச்சம்; பிற + த்(ந்) + த் + அ. பிற-பகுதி; த்-சந்தி; த்-ந் ஆனது விகாரம்; த்-இறந்த கால இடைநிலை; அ - பெயரெச்ச விகுதி; வீசும் - செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்; தந்து - இறந்த கால வினையெச்சம்; தா(த) + த்(ந்) + த் + உ. தா - பகுதி, த - எனக் குறைந்து நின்றது. த் - சந்தி, த்-ந் ஆனது விசாரம். த்- இறந்த கால இடை நிலை; உ -வினையெச்ச விகுதி; வள்ளுவன்- கருத்தாவாகு பெயர்; வான் புகழ் - உரிச்சொல் தொடர்.

வினாக்கள்

1. பாரதியார் கூறும் தமிழ் நாட்டின் சிறப்புக்கள் யாவை?

II அறவுரை

1. திருக்குறள்

பெயர்க்காரணம்: மேன்மை பொருந்திய குறள் வெண் பாக்களால் ஆகிய நூலாதலால் திருக்குறள் எனப்பெயர் பெற்றது.

அமைப்பு: திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களையுடையது. 133 அதிகாரங் களையும், அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 1330 பாடல்களையும் கொண்டது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

பெருமைகள்: இந்நூல் (1) தலைசிறந்த ஒரு சமயப் பொது நூல். (2) ஆங்கிலம், இலத்தீன் போன்ற உலகப் பெரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (3) குறட் பாக்களை வள்ளுவருக்குப்பின் வந்த புலவர் அனைவரும் தம் நூல்களில் கையாண்டுள்ளனர். (4) ''ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி'' என்னும் பழ மொழி இந்நூலின் பெருமையை விளக்கும்.

ஆசிரியர் குறிப்பு:

பெயர்—திருவள்ளுவர்; பெற்றோர்—ஆதி, பகவன்; ஊர்—சென்னையிலுள்ள மயிலாப்பூர்; மதுரை என்றும் சிலர் கூறுவர்; மனைவி—வாசுகி அம்மையார்; தொழில் —நெசவு; அரசர்க்குரிய உட்படு கருமத் தலைவராய்ப் பணி யாற்றி வந்தனர் என்றும் சிலர் கூறுவர். காலம்—கி. பி. இரண்டாம் நூற்றாண்டு. வேறு பெயர்கள்:— முப்பால், உத் தரவேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை.

உரையாசிரியர்கள்: பரிமேலழகர், தருமர், மணக் குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப் பெருமாள், காளிங்கர்.

அருஞ்சொற் பொருள்

1. வேண்டுதல்—விருப்பு; சேர்ந்தார்க்கு—பொருந்தி நினைக்கின்றவர்க்கு; இடும்பை—துன்பம்; வேண்டுதல்—தொழிற் பெயர்.

2. விசும்பு—வானம்; துளி—மழைத்துளி; காண்பரிது—காணமுடியாது; மற்று—(வீழா தாயின்)—வினைமாற்றின் கண் வந்தது.

3. இருமை—இரண்டிரண்டாக உள்ளவை; வகை—கூறுபாடுகள்; ஈண்டு—இம்மை. பிறங்கிற்று—உயர்ந்தது; பூண்டார்—வினையாலணையும் பெயர்.

4. ஈனும்—அளிக்கும்; ஆக்கம்—நன்மை, மேன்மேல் உயர்தல்.

5. ஒல்லும்—செய்யக்கூடிய; செயல்—செய்யவேண்டும்; ஓவாது—இடைவிடாமல்; எதிர்மறை வினை யெச்சம்.

6. புறத்தாறு—வேறுநெறி; பெறுவதெவன் — பெறத் தக்கது என்ன? போஒய்—இசைநிறை அளபெடை.

7. திண்மை—உறுதி நிலை; பெருந்தக்க—பெருமையுடையவை.

8. எவன் செய்யும்—என்ன பயனை உண்டாக்கும்; தலை—சிறந்தது.

9. தம்மின்—தமக்கு இன்பம் பயப்பதைவிட; இனிது—இன்பம் பயப்பதாகும்; குறிப்பு வினைமுற்று.

10. சார்பென்ப—துணையாகும் என்று கூறுவர்; மறம்—வீரம்.

11. ஓம்பி—காத்து; வேளாண்மை—உதவி. ஓம்பு+இ; ஓம்பு—பகுதி; இ—வினையெச்ச விகுதி இறந்த காலம் காட்டிற்று.

12. ஈரம் அளை இ—அன்பு கலந்து; படிறு—வஞ்சம்; இன்சொல்—பண்புத்தொகை.

13. இனிய—இனிமை யுடைய சொற்கள்; அல்லவை—பாவங்கள்; பெருகும்—செய்யும் என்னும் முற்று.

14. ஆற்றல் அரிது—ஈடாக முடியாது; வையகம்—மண்ணுலகு; வானகம்—விண்ணுலகு.

15. நடு ஒரீஇ—நடுவு நிலைமை நீங்கி அல்ல—தவறு; அறிக—வியங்கோள் வினைமுற்று.

16. அதனின் ஊங்கு—அடக்கத்தின் மிக்க; இல்லை—எதிர்மறை குறிப்பு வினைமுற்று.

17. தகைத்து — போன்றதாகும். பணிதல் — தொழிற் பெயர்.

18. ஒன்றுக வையார்—ஒரு பொருளாக மதியார்; வை+ப் ப்+அர். வை—பகுதி; ப்—சந்தி' ப்—எதிர்கால இடைநிலை; அர்—பலர் பால் வினை முற்றுவிகுதி.

19. ஏதம்—துன்பம்; படுபாக்கு—ஏற்படுதல்; அழுக்காறு —பொறாமை.

20. வெஃகாதான் செல்வம் அஃகாதென்பதாயிற்று; அஃகுதல்—சுருங்குதல்.

21. தக்கது உடைத்து—தகுதி யுடையதாகும்; கேடு, கோள்—முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள்.

22. குறியெதிர்ப்பு—பயனை எதிர்பார்த்துக் கொடுத்தல்; நீரதுடைத்து—தன்மை உடையது.

23. எவ்வம் — துன்பச்சொல், குலனுடையான் — நல்ல குடிப்பிறப்புடையவன்.

24. வைப்புழி—சேர்த்து வைக்கும் இடம். அழிபசி—வினைத்தொகை.

25. பொன்றுது—அழியாமல்; ஒன்று—ஒப்பற்றதாக;

26. வசை—பழி; இசை—புகழ்; என்ப—பலர்பால் எதிர் கால வினைமுற்று.

27. ஊண்—உடம்பு; எங்ஙனம் ஆளும் அருள் ? என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

28. ஈண்டு—இல்லற வாழ்க்கையிலும்; செய்தவம்—வினைத்தொகை.

29. மழித்தல்—மொட்டை அடித்தல்; நீட்டல்—சடை வளர்த்தல்.

30. இதனால் நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது. சொலல்—சொல்லும் அறமாகும்.

31. கொல்லும் - அழித்துவிடும் ; சினம் - கோபம் ; காக்க-வியங்கோள் வினை முற்று.

32. நோய்-துன்பம் ; மேலவாம்-சார்வன ; இது சொற் பொருட் பின்வரு நிலையணி.

33. நெருநல்-நேற்று; பெருமை-நிலையாமை மிகுதி.

34. யார் யார் வாய்-யார் யாரிடம்; மெய்ப்பொருள்-மெய் யாய பயனை ; காண்பது-காணவல்லது ;

35. காமம்-விருப்பு ; வெகுளி-கோபம், வெறுப்பு ; மயக்கம்-அறியாமை ; நாமம்-பெயர்.

36. தகைமை-மதிப்பு ; தலைப்பெய்து-கற்றவரிடம் கூடி ; சோர்வுபடும்-கெடும்.

37. நன்று-நல்வினை; அன்று-தீவினை; எவன்-ஏன்.

38. காட்சிக்கு - காண்பதற்கு ; மீக்கூறும் - (உலகம்) புகழும்; மன்னன் நிலம்-ஆறும் வேற்றுமைத் தொகை.

39. இவ்விரண்டும் - இருவகைக்கலைகளையும். என்ப - என்று கூறுவர்; எண்-கணிதம்; எழுத்து-சொல்.

40. உவப்ப-மகிழும்படியாக; அனைத்து-அத்தன்மைத்து.

41. ஏனையவர்-கல்லாதவர்; அனையர்-அவ்வளவு வேற் றுமை உடையவர்.

42. நுணங்கிய-நுட்பமான; அரிது-முடியாது.

43. அவ்வது-பொருந்திய வகையில்; எவ்வது உறைவது-எவ்வாறு நடைபெறுகின்றதோ.

44. தமர்-சுற்றம்; வன்மை-வல்லமை; தலை-சிறந்தது.

45. ஏமரா-காவலற்ற ; இடிப்பார்-கடிந்து அறிவுரை கூறும் பெரியார்; இல்லாத-எதிர் மறைப் பெய ரெச்சம்.

46. ஆக்கம்-(பின் விளையும்) ஊதியம்; ஊக்கார்-மேற் கொள்ள மாட்டார்.

47. பண்பு-இயல்பு ; நன்று-நன்மை ; ஆற்றுக் கடை-செய்யா விட்டால்.

48. அஃதிறந்து-அதையும் கடந்து; ஊக்கின்-மேலும் ஏற முனைந்தால்; இது பிறிது மொழிதல் அணி.

49. ஆகாறு-வருவாய்; போகாறு-செலவு.

50. அருவினை-அரிய செயல்கள்; செயின்-செய்தால்.

வினாக்கள்

1. யாண்டும் இடும்பை இல-எவர்க்கு ?
2. வான் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
3. உலகு பிறங்கிற்று-எதை ?
4. அறனை வள்ளுவர் வலியுறுத்துவது எங்ஙனம்?
5. வாழ்க்கைத்துணையின் சிறப்புக்கள் யாவை?
6. இன் சொல்லின் இலக்கணம் யாது?
7. ஈகையின் சிறப்புக்களாகக் கூறப்படுவன யாவை?
8. பொன்ருது நிற்பது எது?
9. வாய்மையின் இலக்கணம் யாது ?
10. இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய் - அம் மூன்று யாவை ?
11. புலவர் தொழில் யாது ?
12. விலங்கொடு...ஏனையவர் - பொழிப்புரைதருக.
13. ஏன் பெரியாரைத் துணையாகக் கொள்ள வேண்டும்?
14. ஊக்கார் அறிவுடையார் - எதனை?
15. வலியறிதல், காலம் அறிதல் இவைகளிலுள்ள குறட் கருத்துக்கள் யாவை ?

பயிற்சி

1. பாடப் பகுதியில் வந்துள்ள அணிகளைத் தொகுத் தெழுதுக.
2. வினையாலணையும் பெயர், தொழிற்பெயர், குறிப்பு வினைமுற்று, வினைத்தொகை-இவைகளை விளக்கி வகைக் கொரு உதாரணம் தருக.
3. உறுப்பிலக்கணம் தருக: கெடுவல், காக்க, வையார், வைப்பர், பொதிந்து, கெட்ட.
4. திருக்குறளின் சிறப்புக்கள் யாவை ?

2. ஏலாதி.

நூற் குறிப்பு

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. 82 செய்யுட்களைக் கொண்டது. ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறுவகைப் பொருள்களால் செய்யப்பட்ட மருந்துக்கு ஏலாதி சூரணம் என்று பெயர். இம் மருந்து உடலுக்கு உறுதி பயப்பதுபோல் இந்நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படும் ஆறு, ஆறு கருத்துக்கள் மக்களின் அறியாமையைப் போக்கி நன்மை பயப்பனவாகும். செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் ஆறு அல்லது ஏழு செய்திகள் தரப்பட்டுள்ளன.

ஆசிரியர் : கணி மேதாவியார்.

காலம் : கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

அருஞ்சொற் பொருள்

1. புலாற்கண் - புலால் + கண்; வேயன்ன - வேய் + அன்ன. வேயன்ன தோளாய் - மகடூஉ முன்னிலை; நிறை, பொறை, மறை - தொழிற் பெயர்கள்; வேய் - மூங்கில்; நிறையுடைமை - மன அடக்கம் பெற்றிருத்தல்; நீர்மை - நல்லியல்பு.

2. பொய்யான் - பொய் பேசாதவன் ஆதல் ; பிறர்மனை - பிறருடைய மனைவி ; மறை - இரகசியம் ; மூங்கை - ஊமையாயிருத்தல் ; இறை - பெருந்தன்மை. தீச்சொல் - பண்புத் தொகை ; சிறியாரினம் - ஆறும் வேற்றுமைத் தொகை.

3. கூந்தல் - தோகையையுடைய ; வையான் - இகழ்ந்து கூறுதவன் ; எய் - தன் ஏழ்மை ; வான்குழீஇய - மேலுலகத்தில் கூடி ; குழீஇய - சொல்லிசை அளபெடை. ஆம் - ஆகும் என்பதன் தொகுத்தல் விகாரம்.

வினாக்கள்

1. எத்தன்மையாளனைத் தாயன்னன் எனத் தகும்?
2. இறையில் பெரியாருக்குரிய தன்மைகள் யாவை?
3. விண்ணவர்க்கு வேந்தனுவான் எத்தகைய பண்புகளை யுடையவனுவான்?

3. சிறு பஞ்ச மூலம்

நூற் குறிப்பு

மூலம் - வேர் ; பஞ்ச மூலம் - ஐவகை வேர்கள்; அவை சிறு பஞ்ச மூலம், பெரும் பஞ்ச மூலம் என இருவகைப்படும். சிறு வழுதுணை, நெருஞ்சி, சிறு மல்லி, பெருமல்லி, கண்டங் கத்திரி என்பவற்றின் வேர் சிறு பஞ்ச மூலம் எனப்படும். இச் சிறு பஞ்சமூலங்களாலான மருந்து, மக்களை உடற்பிணி தீர்த்து மகிழ்விப்பது. அதுபோல ஒவ்வொரு செய்யுளும் உயர்ந்த ஐந்து பொருள்கள் வாய்ந்ததாக இயற்றப்பட்ட இந்நூல், மக்கள் மனத்து நிகழும் அறியாமை முதலிய நோய்களை நீக்கி வாழ்விப்பது ஆதலின் சிறு பஞ்ச மூலம் என்னும் பெயர் பெற்றது. நூறு வெண்பாக்களைக் கொண்டது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

ஆசிரியர் : காரியாசான்; சைன சமயம்.

அருஞ்சொற் பொருள்

1. பொய்வாய் - பொய் கூறும் வாயால் விளையும் தீமைகளைக் கூறுவது; இம்மை - இவ்வுலகு; எச்சம் - சந்ததி; அம்மை - மறுமையில்; அருநரகு - கொடிய நரகு; அலர் மகள் - திருமகள்; அருநரகு - பண்புத் தொகை-; அலர் மகள் - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

2. இறைமாட்சி - அரசன் பெருமை. அதாவது அவன் தன் நற்குண நற்செய்கைகள்; வார் சான்ற - நீட்சி மிகுந்த வைகலும் - நாள்தோறும்; தாவா-அழியாத; ஓவாது - இடைவீடாமல்; வார்சான்ற கூந்தல் - மகடூஉ முன்னிலை; சால் (ன்) + ற் + அ; சால் - பகுதி. ல், ன் ஆனது விகாரம்; ற் - இறந்த கால இடைநிலை; அ - பெயரெச்ச விகுதி; உலகு - இட வாகுபெயர்; தாவா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

வினாக்கள்

1. மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய் விளைப்பன யாவை ?

2. உலகு ஓவாதுரைப்பதாகச் சிறு பஞ்ச மூலம் கூறுவ தென்ன ?

4. நாலடியார்

நூற் குறிப்பு

நான்கு அடிகளை உடைய வெண்பாக்களால் ஆகிய நூலாகையால் இது நாலடியார் என்னும் பெயரை உடையதாயிற்று. இதற்கு நாலடி, நாலடி நானூறு, வேளாண் வேதம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இந் நூலும் திருக்குறளைப்போலவே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பெரும் பிரிவுகளை உடையது. அதிகாரத்துக்குப் பத்துப் பாடலாக நாற்பது அதிகாரங்கள் இருக்கின்றன. இந் நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

ஆசிரியர் : சமண முனிவர்கள்.

காலம் : கடைச் சங்க காலம். கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டு.

தொகுத்தவர் : பதுமனுர் என்னும் கடைச் சங்க காலத்துப் புலவர்.

அருஞ்சொற் பொருள்

1. இம்மை - இவ்வுலக இன்பங்களை; விளக்கும் - விளங்கச் செய்யும்; மம்மர் - மயக்கம்; கேடு - முதனிலை திரிந்த தொழிற் பெயர்; காணேம்- காண் + ஏ + ஏம்; காண் - பகுதி ; ஏ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது; ஏம் - தன்மைப் பன்மை வினை முற்று விகுதி.

2. கீழ் இடுவானும் - கீழ் நிலைக்குத் தாழ்த்திக் கொள்பவனும்; நிறுப்பானும் - நிலை நிறுத்திக் கொள்பவனும்; நன்மை + நிலை - நன்னிலை; நிறுப்பான், செய்வான் - வினையாலணையும் பெயர்கள்; மேன்மேல் அடுக்குத் தொடர்.

3. நீண்ட - வளர்ந்துவிட்ட; இடைப்புக்கு - நடுவிலே நுழைந்து; மெல்ல இருப்பினும் - அடக்கமாக இருந்தாலும்; கல்லாது - எதிர்மறை வினையெச்சம்; இராஅது - இசை நிறை அளபெடை; புக்கு - புகு + உ; புகு - பகுதி; உ - வினையெச்ச விகுதி; பகுதியில் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று; அற்று - குறிப்பு வினை முற்று.

வினாக்கள்

1. கல்வியின் சிறப்புக்கள் யாவை?
2. ஒருவன் பெருமைக்கும் சிறுமைக்கும் காரணமாயிருப்பது எது? விளக்குக.
3. கல்வியறிவில்லாதவரை நாலடியார் எவ்வாறு இழித்துக் கூறுகிறது? அதில் அமைந்த அணி யாது?

5. சிலப்பதிகாரம்

நூற் குறிப்பு

சிலம்பினது அதிகாரித்தலையுடைய நூல். கண்ணகியின் சிலம்பு காரணமாக விளைந்த கதையைக் கூறுதலால் இந்நூல் சிலப்பதிகாரம் என்னும் பெயர் பெற்றது. இது ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று.

ஆசிரியர்: இளங்கோவடிகள், ஊர்: வஞ்சிமா நகரம்.

பெற்றோர்: சேர வேந்தனான நெடுஞ் சேரலாதன், நற்சோணை.

மதம்: சமணம். காலம்: கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
சமகாலப் புலவர்: மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

பாடப் பகுதி

ஆசிரியர் இளங்கோவடிகள், நூலின் முடிவில் பொதுவான அறவுரை கூறுகிறார். இது முப்பதாவது வரந்தரு காதையின் இறுதியில் உள்ளது.

அருஞ்சொற் பொருள்

மல்லல் - வளப்பம்; பரிவு - கவலை; இடுக்கண் - துன்பம்; பாங்குற - நன்றாக; பேணுமின் - போற்றுங்கள்; போற்றுமின் - பாதுகாத்துக் கொள்ளுங்கள்; ஊன் ஊண் - புலால் உண்ணுதல்; தாங்குமின் - கடைப்பிடியுங்கள்; கொல்லன்மின் - மறவாதிருங்கள்; பொய்க்கரி - பொய்ச்சாட்சி; அணுகுமின் - சேர்ந்திருங்கள்; பிழைத்துப் போமின் - தப்பிச் செல்லுங்கள்; பிழை உயிர் - துன்பம் அடைந்த உயிர்கள்;

மனை அறம் - இல்லறம்; அல்லவை - பாவங்கள்; வெள்ளைக் கோட்டி - பயனில்லாதவற்றைப் பேசும் கூட்டம்; விரகு - தந்திரம்; ஒல்லுவது - பொருந்துதற்குரியது; செல்லும் தேஎத்துக்கு - செல்லும் மறுமை உலகத்திற்கு; உறுதுணை - நல்லறங்களை; உரிச்சொல் தொடர்; தேஎத்துக்கு - இசைநிறை அளபெடை; அஞ்சு + மின் - அஞ்சு; பகுதி மின் - ஏவற் பன்மை வினைமுற்று விகுதி; நீங்கு + அல்(ன்) + மின்; நீங்கு - பகுதி ; அல் - எதிர்மறை இடைநிலை; ல், ன் ஆனது விகாரம்; மின் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி.

வினாக்கள்

1. இளங்கோவடிகள் உலகோர்க்குக் கூறிய அறவுரைகள் யாவை?
2. சிலம்பு ஆசிரியரைப் பற்றிச் சிறு குறுப்பு எழுதுக.

III தொடர்நிலைச் செய்யுள்

1. சிலப்பதிகாரம்

அடைக்கலக்காதை

நூற் குறிப்பு

சிலப்பதிகாரம் : சிலம்பு + அதிகாரம் ; சிலம்பால் அதிகரித்த வரலாற்றைக் கூறும் நூல். கண்ணகியின் சிலம்பினால் விளைந்த கதையை முக்கியமாகவுடையது என்பது கருத்து. சிலம்பு - மகளிர் பண்டைக் காலத்தில் காலில் அணியும் ஒருவகை அணி.

இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று.

இந்நூல் அறிவிக்கும் நீதிகள் : 1. அரசர் நீதியிற் சிறிது தவறினாலும் அவரை அறக்கடவுள் கொல்லும் ; 2. கற்புடைய மகளிரை உயர்ந்தோர் ஏத்துதல் இயல்பு ; 3. ஊழ்வினை செய்த முறையே செய்தவரை நாடிவந்து தன் பயனை யளிக்கும் என்பன இந்நூல் அறிவிக்கும் நீதிகளாம்.

நூலாசிரியர் குறிப்பு

இந்நூலைச் செய்தவர் இளங்கோவடிகள். இவர் சேர நாட்டின் தலைநகராகிய திருவஞ்சைக் களத்தில் நெடுஞ் சேரலாதனுக்கும் நற்சோணைக்கும் மகனாய்த் தோன்றினார். செங்குட்டுவனின் தம்பியாவார். சீத்தலைச் சாத்தனார் இவரது சம காலப் புலவர். இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

பாடப்பகுதி : அடைக்கலக்காதை

கண்ணகியைக் கவுந்தியடிகள் மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் அடைக்கலமாகக் கொடுத்த வரலாற்றைக் கூறும் பகுதி ; இப்பகுதி சிலப்பதிகாரத்தின் இரண்டாங் காண்டமாகிய மதுரைக் காண்டத்தில் உள்ளது.

அடிகள் 1—15. மாடல மறையோன் கோவலனை 'இல்லோர் செம்மல்' எனப் புகழ்தல்

படிறு உரை - பொய்ப்பழி ; கரி - சான்று ; தவ்வை - தாய் ; நரகன் - கீழோன் ; பரகதி - மேலான கதி ; இளைஞர் - உறவினர் ; புரந்த-பாதுகாத்த ; இல்லோர் செம்மல்-வறியோர் தலைவனே ; படிற்றுரை - படிறு + உரை ; பல்லாண்டு - பல + ஆண்டு; படுதுயர் - வினைத்தொகை; பசிப்பிணி - உருவகம்.

அடிகள் 16—19. ''நீ கண்ணகியுடன் இவ்வாறு செல்லக் காரணம் முற்பிறப்பிற் செய்த தீவினைப் பயனே'' என மாடலன் கேட்டல்.

விருத்த கோபால - ஞானத்தில் முதிர்ந்த கோவலனே ; இம்மை - இப்பிறவியின்கண் ; மாமணிக் கொழுந்து - கண்ணகி ; உம்மைப் பயன் கொல் - நீ முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனே; ஒரு தனி - ஒரு பொருட் பன்மொழி; மாமணி - உரிச் சொற்றொடர்.

அடிகள் 20—31. கோவலன் தான் கண்ட கனவினை மாடலனிடம் கூறுதல்

குறுமகன் - கீழ்மகன் ; கடிநகர் - மதுரை ; உரிச்சொல் தொடர்; கூந்தல் - கூந்தலையுடைய கண்ணகி ; அன்மொழித் தொகை; கூறை - ஆடை ; கோட்டுமா - கொம்புகளுடன் கூடிய பன்றி ; அணிதகு - அழகு மிக ; காமக் கடவுள் - மன்மதன் ; கையற்று - செயலற்று ; நாறைங் கூந்தல் - நாறு + ஐந்து + கூந்தல் ; கண்டேன் - காண் (கண்) + ட் + ஏன் காண் - பகுதி, கண் எனக் குறைந்து நின்றது; ட் - இறந்த கால இடைநிலை; ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

அடிகள் 32—39. மாடலனும் கவுந்தியடிகளும் கோவலனுக்குக் கூறியது

புறம் சிறை இருக்கை - சமணப் பள்ளியில் தங்கியிருத்தல்; அரைசர் பின்னோர் - அரசர்கட்கு அடுத்த நிலையிலுள்ள வாணிகர்கள்; உரை - புகழ் ; கதிர் செல்வதன் முன் - ஞாயிறு மறைவதற்கு முன்னர் ; இருக்கை - தொழிற்பெயர்.

அடிகள் 40—44. இயக்கி எனும் தெய்வத்திற்குப் பால்மடை கொடுத்து மாதரி திரும்பல்

பால்மடை - பால் சோறு ; அறவோர் - முனிவர்கள் ; மூதூர் - பண்புத்தொகை ; முதுமை + ஊர்.

அடிகள் 45—49. மாதரியிடம் கண்ணகியை ஒப்படைக்கலாம் எனக் கவுந்தியடிகள் எண்ணுதல்

ஆகாத்து - பசுக்களைப் பாதுகாத்து ; கோவலர் - ஆயர் ; செவ்வியள் - மனக் கோட்டம் இல்லாதவள் ; ஏதம் - இடர்ப்பாடு ; இவள் - பெண்பால் குறிப்பு வினைமுற்று.

அடிகள் 50—55. கண்ணகியின் பெருமையைக் கவுந்தியடிகள் மாதரியிடம் கூறுதல்

பெறுநரின் - பெற்றவர்களைப் போன்று ; கருந்தடங் கண்ணி - கண்ணகி ; வாணர் - வாழ்நர் என்பதன் மரூஉ மொழி.

அடிகள் 56—61. கண்ணகியைப் போற்றிப் பாதுகாத்தல் நின்கடன் எனக் கூறுதல்

அஞ்சனம் - மை ; பெய்து - சூடி ; உடீஇ - உடுத்து ; ஆயம் - தோழி ; தாங்கு - காப்பாற்றுவாயாக; உடீஇ - சொல்லிசை அளபெடை; தாங்கு - ஏவல் ஒருமை வினைமுற்று;

அடிகள் 62—75. கண்ணகியின் பெருமையைக் கவுந்தியடிகள் கூறுதல்

போந்த - கூடிவந்த ; வண்ணம் - அழகிய ; தகைசால் - தகுதிகள் மிக்க ; பொற்பு - பொலிவு ; கொற்றம் - வெற்றி ; அடைக்கலம் - அடைக்கலப் பொருள் ; சீறடி - சிறுமை + அடி ; பண்புத்தொகை ; கண்டிலம் - தன்மைப் பன்மை எதிர் மறை வினைமுற்று.

வினாக்கள்

1. சிலப்பதிகாரம்—நூற் குறிப்பும் ஆசிரியர் குறிப்பும் வரைக.
2. மாடல மறையோன் கோவலனை இல்லோர் செம்மல் எனப் புகழ்ந்துரைத்தது ஏன் ?
3. கோவலன் கண்ட கனவு யாது ?
4. கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியுடன் இருத்துதற்கு ஏதம் இன்று என எண்ணியது ஏன் ?
5. கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலந் தந்து கூறியனவற்றைத் தொகுத்து எழுதுக.

6. ''வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்''—நிகழிடமும் பொழுதும் காட்டி விளக்கவுரை தருக.
7. பிரித்துக் காட்டுக: கோட்பட்டு, நீணில வேந்தர், ஆகாத் தோம்பி, செங்கயல்.
8. இலக்கணக் குறிப்பு தருக: படுதுயர், நள்ளிருள், அரைசர்
9. உறுப்பிலக்கணம் தருக: எய்தி, கொள்வர், பூண்ட.

2. மணிமேகலை

நூற் குறிப்பு

கோவலன் மாதவி இருவருக்கும் பிறந்த மகள் மணிமேகலை. அவளுடைய வரலாற்றைக்கூறும் நூலாதலின் இந்நூல் மணிமேகலை என்னும் பெயர் பெற்றது. இது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இது பௌத்த சமயச் சார்புடையது. எளிய நடையில் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்து சரித்திரத்தை நேரில் காண்பது போலக் கூறுவதில் மணிமேகலை மிகச் சிறந்ததாகும்.

ஆசிரியர்: மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

ஊர்: திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள சீத்தலை.

தொழில்: மதுரையில் கூல (தானிய) வாணிகம்.

மரபு: வணிகர்; சமயம்: பௌத்தம்.

காலம்: கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

பாடப் பகுதி

மணிமேகலை, மணிபல்லவம் என்னும் தீவில் தனியே துன்பமுற்ற வரலாற்றைக் கூறும் பகுதியாகும். காதை-பாட்டு.

அருஞ்சொற் பொருள்

அடிகள் 1—12. மணிபல்லவத்தின் இயற்கை வளம்

ஈங்கிவள் - காவிரிப்பூம்பட்டினத்தில் சுதமதி; வாங்கு திரை - வளைந்து வளைந்து வருகின்ற அலை; தொடுப்பில் - கீற்றுக்களில்; முரி - பின்னிக்கிடக்கும்; ஞாழல் - புலி நகக் கொன்றை; அசும்பு - சேறு; ஆம்பல் - அல்லி; குவளை - நெய்தல்; இலஞ்சி - பொய்கைக்கரையில்; துஞ்சு துயில்-மிக்க உறக்கம்; அம்சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலையுடைய

மணிமேகலை; வாங்குதிரை, விளை கழனி - வினைத்தொகைகள்; மடல் பூ-இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; நிலாமணல்-உவமைத்தொகை; செம்பவளம்-பண்புத்தொகை; துஞ்சு துயில் - ஒரு பொருட்பன்மொழி; துயிலெழூஉம் - இன்னிசை அளபெடை.

அடிகள் 13—18. கடலும் கதிரவனும் கண்டு மயங்குதல்

கடைகொள - முடிவை அடைய; பண்டறி கிளையொடு-முன்புதான் அறிந்த உறவினரும்; காணு - கண்டு; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் உடன்பாட்டுப் பொருளில் வந்தது; வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று - ஓர் உடம்பினின்று பிரிந்த உயிர் வேறோர் உடம்பில் வேறோர் இடத்தில் தோன்றினாற் போல மயக்கமடைந்து; காணுள் - முற்றெச்சம்; மாக்கடல் - உரிச்சொல் தொடர்.

அடிகள் 19—27. சுதமதியின் பிரிவால் வருந்திப் புலம்பல்

நனவோ - உண்மையான நிகழ்ச்சியோ; மாற்றம் தாராய் - மறுமொழிகளைக் கூறுவாயாக; வல்லிருள் - நெருங்கிய இருள்; திருவே - இலக்குமி போன்றவளே; எல்வளை-ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த பெண்ணே; செய்தனை - செய்+த்+அன்+ஐ; செய்—பகுதி; த் - இறந்த கால இடைநிலை; அன் - சாரியை; ஐ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி; நடுக்குறூஉம் - இன்னிசை அளபெடை; மயங்கும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; திரு - உவமையாகு பெயர்.

அடிகள் 28—35. மணிமேகலை சுமதியைத் தேடுதல்

சில்லை - ஒருவகை நீர்ப்பறவை; முழுவல் - முழுவல் என்னும் பறவை; அன்னச்சேவல்-ஆண் அன்னம்; பாசறை-படைவீடு; திரிவோள்-தேடித்திரிபவளாகிய மணிமேகலை; வினையாலணையும் பெயர்; தவழ்பறவை, விரிசிறை - வினைத்தொகைகள்.

அடிகள் 36—43. தந்தை கோவலனை நினைந்து துயறுருல்

குரல் தலை - பூங்கொத்தைத் தன்னிடத்தே யுடைய; கூஉய் - கூவி; சொல்லிசை அளபெடை; விழுமம்-துயரம்; கிளவி - சொல்; உள்ளி - நினைத்து; உருப்ப-முதிர்ச்சியடைய; கோல்தொடி - சங்குவளையல்; வேற்று நாடு-பாண்டியநாடு; வைவாள் உழந்த - கூர்மையாகிய வாளினால் மரணத்துயரை அடைந்த; அகலம் - மார்பு; அழுவோள் - மணிமேகலை; வீழ - செய என்னும் வாய்பாட்டு

வினையெச்சம்; ஏங்கி - இறந்த கால வினையெச்சம்; ஏங்கு - பகுதி; இ - வினையெச்ச விகுதி இறந்த காலம் காட்டிற்று; வைவாள் - உரிச்சொல் தொடர்.

அடிகள் 44-53. புத்த பீடிகையின் பெருமை

உரைபெறும் - சிறப்பாகக் கூறத்தக்க; திசை தொறும் - நான்கு பக்கங்களிலும்; விதி மாண் - முறைப்படி மாட்சிமைப் பட்ட; குயின்று - செய்யப்பட்டு; பதுமம் - தாமரை; மாமணி- மிக அழகிய; அவிர் ஒளி - மிக்க ஒளி; அறத்தகை - புத்த தேவன்; முதிர் - நன்கு வளர்ந்த; அதிராது - ஒலிக்காது; மும்முழம் - மூன்று+முழம்; மீமிசை - ஒரு பொருட்பன்மொழி; முதிர் சிறை - வினைத்தொகை; நறு மலர் - பண்புத்தொகை;

அடிகள் 54-63. நாக நாட்டரசர் செயலும் புத்தர் அறமும்

கீழ் நிலம் - கிழக்குத் திசை; ஆற்றூர் - வல்லமை இல் லாதவராய்; பற்று - விருப்பம்; உயிர்த்து - பெருமூச் செறிந்து; வெஞ்சமம் - கொடிய போர்; பண்புத்தொகை; முனிவன் - புத்ததேவன்; இருஞ்செரு - பெரியபோர்; பொரு வறு - ஒப்பற்ற பொருவு + அறு; புரையோர் - உயர்ந்தோர்; என்-அசை நிலை; அறமுரைக்கும் - இரண்டாம் வேற்றுமைத் தொகை; ஒழிமின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று.

திருவே வாவென்று அழுவோள் முன்னர் ஆங்குத் தரும பீடிகை தோன்றியது என்று கூட்டிப் பொருள் கொள்க.

வினாக்கள்

1. மணி பல்லவத் தீவின் இயற்கை வளத்தை விவரிக்க.
2. வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று—உவமையை விளக்குக.
3. மணி பல்லவத்தில் துயிலெழுந்த மணிமேகலையின் நிலையையும் அவள் கண்ட காட்சியையும் விளக்குக.
4. மணிமேகலை சுதமதியின் பிரிவால் வருந்திக் கூறி யன யாவை?
5. மணிமேகலை சுதமதியை எவ்விடங்களில் தேடினள்?
6. பாசறை மன்னர் பாடிபோல - இவ்வுவமையை உவ மேயத்துடன் பொருத்தி விளக்குக.
7. வைவாளுழந்த மணிப்பூண் அகலத்து ஐயாவோ - இடஞ்சுட்டி விளக்குக.

8. மணிமேகலைக்கு முன் காட்சியளித்த புத்த பீடிகை யின் பெருமைகள் யாவை?

9. இருஞ்செரு வொழிமின் எமதீது — சந்தர்ப்பம் கூறி விளக்குக.

10. உறுப்பிலக்கணம் தருக: அறியேன், காணுள், ஒளித்தாய், அகன்றனை, தோன்றியது.

11. இலக்கணக்குறிப்பு தருக: நிலாமணல், அறிகிலா, மயங்கும், வாராய், மலர்ப்பள்ளி, வல்லிருள்.

3. பெருங்கதை

நூற் குறிப்பு

பெருங்கதை யென்பது கவிஞர் பெருமானுகிய கொங்கு வேளிர் என்பவரால் இயற்றப்பெற்ற ஒரு தொடர்நிலைச் செய்யுள். இந்நூல் சொற்சுவை பொருட் சுவைகளிற் சிறந்தது. தெள்ளிய இனிய நன்னடை வாய்ந்தது. குருகுலத்திற் பிறந்தவனும் கௌசாம்பி நகரத்து அரசனுமான சதானிகனுடைய புதல்வன் உதயணது சரித்திரத்தை விரித்துக் கூறுவது. பிருகத்கதா என்னும் நூலை ஆதாரமாகக் கொண்டது. சைன சமயக் கோட்பாட்டையுடையது. இது கொங்குவேண் மாக்கதை யெனவும், உதயணன் கதையெனவும் கூறப்படும். உரையாசிரியர்கள் தம் உரைகளில் இந்நூலை எடுத்தாண்டுள்ளனர். இதன்பாலுள்ள பாக்கள் யாவும் நிலைமண்டில ஆசிரியப்பாவே. இதன்பாலுள்ள சிற்றுறுப்புக்கள் காதை யென்று வழங்கப்பட்டனவென்று தெரிகிறது. இதில் ஐந்து காண்டங்கள் உள்ளன. தமிழில் முதல் நூலாக இது கருதப்படினும் வடநூல் மொழி பெயர்ப்பாகத் தெரியவருதலின் வழி நூலின் பாற்படும்.

ஆசிரியர் : கொங்கு வேளிர்

நாடு : கொங்கு நாடு

ஊர் : விசய மங்கலம்

குலம் : வேளாளர்

சமயம் : சமணம்

காலம் : கி.பி. 6 அல்லது 7ஆம் நூற்ருண்டு.

பாடப்பகுதி

முதற் காண்டமாகிய உஞ்சைக் காண்டத்தில் 51-ஆவது காதையாகிய நருமதை கடந்தது. இதன்கண் நருமதை வருணனை, மரங்கள் விலங்குகள் முதலியன, வயந்தகன் வழிகாட்டல், உதயணன் நருமதை ஆற்றைக்கடந்து செல்லல் முதலியன கூறப்பட்டுள்ளன.

அருஞ்சொற் பொருள்

உச்சயினி நகரிலிருந்து உதயணன் வாசவதத்தையை அவன் பிடிமேலேற்றிச் செல்லும்போது நருமதையாறு குறுக்கிடுகிறது. நருமதை விந்திய மலையில் தோன்றும் ஆறு.

அடிகள் 1—3. நருமதை கடந்தது

இகந்த - கடந்த ; இயற்றமை - பண்ணுதல் அமைந்த ; மேல்தவிசு - முதலியவற்றைச் செவ்வனே அமைக்கப்பெற்ற; இரும்பிடி - பெரிய பெண் யானை ; குறிஞ்சி நிலத்தைக் கடந்த பிறகு இருபத்தைந்து எல்லை சென்றது; ஐநான்கு எல்லையொடு ஐந்து - இருபத்தைந்து; ஆறு - வழி.

அடிகள் 4—38. நருமதை வருணனை

மதியம் - சந்திரன்; உரைஞ்சும் - தேய்க்கும்; மால்வரை சென்னி - பெரிய மலையின் உச்சியில்; பொதுளிய - நெருங்கிய; (இச்சோலை. விந்தத் தடவியென்று பாராட்டப்படும்) ஓக்கம் - உயர்ச்சி; விஞ்சையம் பெருமலை - விந்தமலை; விந்தைக்கு இருப்பிடமாகிய மலை; நெஞ்சகம் - நடுவிடம்; கழுவா - கடைந்து சுத்தம் செய்யப்படாத; மாசறு - குற்றமற்ற, பசும் பொன் - பசுமை + பொன்; பண்புத்தொகை.

வேய் - மூங்கில்; வெதிர் - ஒருவகை மூங்கில், வேயிலிருந்து முத்தும், வெதிரிலிருந்து நெல்லும் உதிரும் என்பர்; மருப்பு-யானைத்தந்தம், பன்றிக்கொம்பு; மண்ணா-கழுவாத ; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வரை-மலை; வரன்றி - வாரிக்கொண்டு, அரித்துக்கொண்டு, முடந்தாள் - வளைந்த அடியையுடைய ; குடம்புரை அமிழ்தம் - குடம் போன்ற பலாக்கனி; நெய்படு-தேன் பொருந்திய; தேன் தொடையல்- தேனடை; நறவம் - குங்கும மரம் ; பரீஇய - அறுத்த ;

ஐவன நெல் - மலைநெல்; கைவளர் - மிகுதியாக வளர்ந்த; தினைக்குரல் - தினைக்கதிர் ; பெருந்தினை - ஒருவகைத் தினை; பிறங்கல் - திரட்சி; பாவை இஞ்சி - இஞ்சிக் கிழங்கைப் பாவையென்றல் மரபு; கூவைச் சுண்ணம்-கூவைக் கிழங்கு; இக்கிழங்கு மாப்போலிருத்தலின் இப்பெயர் பெற்றது; நாகத்து அல்லி - நாகப்பூவின் அகவிதழ்; ஏலம் - ஏலக்காய்ச் செடி; இணர்-கொத்து; கண்-கணு; சாலேகம்-சிறு தேக்கு; உள்காழ்-உள்ளே வைரத்தையுடைய; கறி - மிளகு; கிழங்கு மஞ்சள் - மஞ்சட் கிழங்கு; தகரம் - ஒருவகை மரம்; கடு - கடுக்காய் மரம்; சிற்றிலை - சிறுமை + இலை; பண்புத்தொகை; துணர் - பூங்கொத்து, பழக்குலை ; அரக்கின் கோல் - கொம்பரக்கு; நிலைவயின் வாழ்நர் - ஆங்காங்கு நிலைத்து வாழ்வோர் ; தலைவயின் உயக்கும் - கொண்டுபோய் கொடுக்கும்; விலை மாந்தரின் - விலைப்படுத்தும் வணிகர்களைப்போல; அமலை - ஆரவாரம்; தழீஇ - தழுவி; சொல்லிசை அளபெடை; தானை - சேனை.

அடிகள் 39—54. மரங்கள்

அதிரல் - மோசி மல்லிகை; மணிச்சை - ஒரு மரம்; மயிலை - இருவாட்சி; மௌவல் - செம்முல்லை; ஞாழல் - குங்கும மரம்; தடவு - தடாமரம்; பிடவு - பிடாமரம்; முளவு - முள்; முளவும், முருக்கும் - முள்ளி மரமும் முண் முருங்கையும்; புய்த்து - பெயர்த்து; சே - சேமரம்; நறை - சாதிக்காய் மரம்; வழை - சுரபுன்னை மரம்; கழை - மூங்கில்; துளக்கி - அசைத்து; ஏற்றி - மோதி; புன்கு - புன்க மரம்; கோடல் - காந்தள்; கொய்யல் - கொய்யா மரம்; அனிச்சம் - அனிச்ச மரம்; பனிச்சை, பயின் - மரவகைகள்; பறிய - கட்டவிழ; வள்ளியும் மரலும் - கொடிவகைகள்.

அடிகள் 55—79. விலங்கு முதலியன

புல்வாய் - கலைமான் ; ஆமா - காட்டுப் பசு; தாமாறு - தாவும்படி; பொறி - புள்ளி; போத்து - ஆண் மயில்; ஏனம் - காட்டுப் பன்றி; எண்கு - கரடி; இரிய - விலக; முசு - கருங் குரங்கு; வாவ - தாண்ட; சுரும்பு - ஆண் வண்டு; தும்பி - வண்டு; விரும்புபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; பல்லுயிர் - பல+உயிர்; புகன்று - புகல்(ன்)+ற்+உ; புகல் - பகுதி ; ல், ன் ஆனது விகாரம் ; ற் - இறந்தகால இடைநிலை; உ - வினையெச்ச விகுதி; படிவப்பள்ளி - முனிவர்

ஆச்சிரமம்; பாக்கம் - பக்கத்திலுள்ள இடங்கள்; கவ்வை - துன்பம்; ஓதம் - வெள்ளம்; உராய் - பெயர்ந்து; படர்ச்சித்தாகி - செல்லுதலையுடையதாய்; புகூஉம் - இன்னிசை அளபெடை; குருகு - நாரை; கம்புள் - சம்பங்கோழி; கழுமி - திரண்டு; பூணி - ஒரு பறவை; பேழ்வாய் - பெரிய வாய்; குளிவை - ஒரு பறவை; குளுவையென வழங்கும்; புதா - பெருநாரை; கயக்கோழி - நீர்க்கோழி; கெழீஇ - நிறைந்து; சொல்லிசை அளபெடை; நாளிரையாக - காலை இரையாக; அயிரை - ஒருவகைச் சிறுமீன்; அல்கிரை - மிக்க இரை; இராவுணவுமாம்; பார்ப்பு - குஞ்சுகள்; செகுத்து - கொன்று; பார்வலொடு - பார்த்தலுடன்; சும்மை அரு - ஒலி நீங்காத; கயம் - ஆழ்ந்த பள்ளங்கள்; சில்கி - சிலவாகி நண்ணிய - இறந்தகாலப் பெயரெச்சம்.

அடிகள் 80—86. வயந்தகன் வழிகாட்டல்

தலைப்பெருந்......தன்றென - முதல் முறையான வெள்ளம் வந்ததென்று சொல்லும்படி; நீணீர் - நீள்+நீர்; மாக்கடல் - உரிச்சொல் தொடர்; கடல் வரைப்பில் - பூமியில்; இழிதந்து - இறங்கி; கானிலை கொள்வுழி - கால் நிலைகொள்ளும் இடத்தை.

அடிகள் 87—91. உதயணன் செயல்

அனந்தர் - தூக்க மயக்கம்; திருமா......றழீஇ - வாசவதத்தையை உறுதியாகத் தழுவிக்கொண்டு; செல்விசை - பிடி செல்லும் வேகத்தை; அரிமா - சிங்கம்.

வினாக்கள்

1. பெருங்கதை—நூற்குறிப்பும் ஆசிரியர் குறிப்பும் வரைக.
2. நருமதை யாறு எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
3. ஆற்று வெள்ளத்தால் தாக்கப்பட்ட மரவகைகள் யாவை?
4. ஆற்று வெள்ளத்திற்கு அஞ்சியோடிய விலங்கு இனங்களும் பறவையினங்களும் யாவை? அக்காட்சியை விவரிக்க.

5. வயந்தகன் வழிகாட்டியதையும் உதயணன் ஆற்றைக் கடந்ததையும் கூறுக.

6. இலக்கணக் குறிப்பு தருக: இரும்பிடி, கொய்பூ, பூமரம், கழுவா, அளைஇ, ஒழியாது, அடக்குபு, புகூஉம், பைந்தார்.

7. உறுப்பிலக்கணம் தருக: எய்தி, இகந்த, கீண்டு, ஏறினன்.

பயிற்சி

1. உதயணன் வரலாற்றைப் படித்தறிக.

2. இப்பாடப்பகுதியிலுள்ள அளபெடைகளை இன்னின்ன அளபெடை என்று பிரித்தெழுதுக.

3. வரையே றரிமா போல—பொருளோடு பொருத்திக் காட்டுக.

4. பிரித்தெழுதுக: கொழுங்காற்றகரமும், தலைவயினுய்க்கும், தாமாரேருடி, உடைப்புனற்கிவர, எண்கினமிரிய, கால்கிளர்ந்துராய், படர்ச்சித்தாகி, நீணீர், சாற்றியதொப்ப, கானிலை, அனந்தரெய்திய.

4. பெரிய புராணம்.

இளையான்குடி மாறநாயனார் புராணம்

நூற் குறிப்பு

திருத் தொண்டர் புராணம் எனவும் பெயர் பெறும். பெருமைபெற்ற சிவனடியார் சரித்திரத்தை யுணர்த்தும் நூல். சிவனடியார், தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மருமாகிய எழுபத்திருவராவர். இம் மெய்யடியார்களின் பெருமைமிக்க பழைய வரலாறுகும் இந்நூல். புராணம்-பழமை. இது பழைய வரலாறு அல்லது கதை யென்னும் பொருட்டாய் நூலுக்குப் பெயராயிற்று. இந்நூல் பெரியபுராணம் என்றே வழங்கி வருகின்றது. இஃது ஒரு தனித் தமிழ்க் காப்பியம். தில்லை நடராசப் பெருமான் இதற்குப் பாட்டுடைத் தலைவர். செய்யுட்கள் எல்லாம் தெய்வ மணங்கமழும் தன்மையன. இந்நூல், சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு

பெயர் : சேக்கிழார்.

இயற் பெயர் : அருண்மொழித் தேவர்.

பிறப்பிடம் : தொண்டை நாட்டுக் குன்றத்தூர்.

குலம் : தொண்டை மண்டல வேளாளர் குலம்.

இவரை ஆதரித்தவர் : அநபாய சோழன்.

காலம் : கி. பி. 12 ஆம் நூற்ருண்டின் முற்பகுதி என்பர்.

பாடப் பகுதி

இளையான் குடியில் வாழ்ந்து வந்த மாறன் என்னும் திருத் தொண்டரது வரலாற்றைக் கூறுவது. இளையான்குடி சோழ நாட்டில் உள்ளதோர் ஊர். மாறன் வேளாளர் குலத்தில் பிறந்தவர். சிவ பெருமானிடத்தும், சிவனடியார்களிடத்தும் பேரன்பு கொண்டு விளங்கினர்.

அருஞ்சொற் பொருள்

1. அம்பலம் - சிதம்பரம்; அம்பொன் நீடிய - அழகிய பொன் வேய்ந்த; சால்பு - நற்குணங்கள்; இம்பர் ஞாலம் - இவ்வுலகம்; ஆடுவார் - வினையாலணையும் பெயர்; செய்தவம் - வினைத் தொகை.

2. வேணியார் - சடை முடியை யுடைய சிவபெருமான்; மன்னிய - நிலைபெற்ற; பெற்ற - பெறு+அ; பெறு - பகுதி; அ - பெயரெச்ச விகுதி; பகுதியில் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று.

3. என்பு ஆரம் - எலும்பு மாலை; பரிவெய்த - அன்பு கொள்ளும்படி; மதுரப் பதம் - இனிய சொற்கள்; செவிப் புலம் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

4. குலாவு - விளங்குகின்ற; அருச்சனை - பூசை; நாலு - நான்கு என்பதன் மரூஉ; இலா - ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்; விளக்கி-விளக்கு+இ; விளக்கு-பகுதி; இ - வினையெச்ச விகுதி; இறந்த காலம் காட்டிற்று.

5. நன்மையால் - சிவ புண்ணிய மிகுதியினுல்; அளகைக்கு இருத்திய தோழனுர் - அளகாபுரிக்கு அதிபதியாக வைத்த குபேரனைப் போல; மாநிதி - உரிச் சொற்றொடர்.

6. மெய்யினுல் - உண்மையான பக்தியினுல்; மல்லல் - வளப்பம்; நாடொறும் - நாள்+தொறும்; வறுமை பதம் புக - வறுமை நிலையடையும்படி; உன்னினுர் - பலர்பால் இறந்த கால வினைமுற்று.

7. இன்ன ஆறு - இவ்வகையாக; உள்ளன மாறியும் - தம்பொருள்களை விற்றும்; முதிர்ந்த கொள்கையர் ஆயினுர் - ஊக்கத்தோடு செய்வாராயினுர்; கடன் கக்கன - கடன்கள்+ தக்கன.

8. பேதையாள் - உமாதேவி; ஏனம் - பன்றி; பெற்றம் - காளை; நண்ணினுர் - நண்ணு+இன்+ஆர்; நண்ணு - பகுதி; இன் - இறந்த கால இடை நிலை; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி; திருமால் பன்றி உருவாகச் சிவனது பாதத்தையும், பிரமன் அன்ன உருவாகச் சிவனது முடியையும் காணச் சென்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

9. வேரித்தாரான் - இளையான்குடி மாற நாயனுர்; பாரித்து - பொறுத்துக் கொண்டு; விருந்து - பண்பாகு பெயர்; கொண்டனன் - ஆண்பால் இறந்தகால வினைமுற்று.

10. தாரமாதர் - மனைவி; தபோதனர் - அடியவர் (தவத்தையே தனமாக உடையவர்); இன்னமுது - இனிமை+ அமுது.

11. தகவுற - தகுதியாக; அமைக்கும் ஆறு - சமைக்கும் வகை; அடிசில் - உணவு; இமம் - தானியாகு பெயராய் இமவானை உணர்த்திற்று; கொடி - உவமையாகு பெயர்.

12. ஏதிலார் - அயலார்; காண்கிலேன் - அறியேன்; காண்கிலேன் - காண்+கு+இல்+ஏன்; காண் - பகுதி; கு - எழுத்துப் பேறு; இல் - எதிர்மறை இடைநிலை; ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

13. செல்லல் - துன்பம்; வல்ல ஆறு - தெரிந்த அளவில்; அமுது ஆக்கலும் - உணவு சமைக்கவும்; அயர்வுற - வருத்த மடைய.

14. மாற்றம் - சொல்; ஒருப்பட்டனர் - சம்மதித்தார்; ஒருப்படு+அன்+அர்; ஒருப்படு - பகுதி; அன் - சாரியை; அர் - பலர்பால் வினைமுற்று விகுதி; பகுதியில் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று.

15. நாப்பண் - நடுவிடம்; கங்குல் - இரவு; பிறங்க - மிகுதியாக; கணம் - தொகுதி; மையிருள் - உவமைத்தொகை.

16. துண் எனும்படி - திடுக்கிடும்படி; முன்தோய்ந்திடில் - முன்சென்ருல்; தோன்றி-தோன்று+இ; தோன்று - பகுதி; இ - வினையெச்ச விகுதி: இறந்தகாலம் காட்டிற்று; நண்ணல் - தொழிற் பெயர்.

17. இடா - இறைகூடை; கொண்டு-கொள்(ண்)+ட்+உ கொள் - பகுதி; ள், ண் ஆனது விகாரம்; ட் இறந்த கால இடைநிலை; உ - வினையெச்ச விகுதி.

18. சாலி - செந்நெல்; ஒல்லை - விரைவாக; சாந்தன - வினையாலணையும் பெயர்; மீண்டனர், மீள்(ண்+)ட்+அன்+அர்; மீள் - பகுதி, ள், ண் ஆனது விகாரம்; ட் - இறந்த கால இடைநிலை; அன் - சாரியை; அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

19. வாய்த்தலில் - வீட்டு வாயிலில்; அந்தமில் - அழகில்லாத; அலக்கினை - மூங்கில் வரிச்சுகளை; வெந்தழல் - பண்புத்தொகை.

20. இன் அடிசில் ஆக்கி - இனிய சோருகச் சமைத்து வைத்து; இறைஞ்சினுர் - வணங்கினுர்; செய்கோம் - தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று.

21. அழிவுறும் - துன்பப்படுவார்; செய்யுமென் முற்று. முதல் - வேர்; பறிப்பார் - வினையாலணையும் பெயர்; இது உவமையணி.

22. கைம்மை வினையினுல் - கைப்பழக்கத்தினுல்; வேறுவேறு - அடுக்குத் தொடர்; கறியமுது - இருபெயரொட்டுப் பண்புத் தொகை

23. இணையிலாதவரை - சிவனடியாரை; ஈண்ட - விரைந்து; ஒண்ணு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அகற்றல் - தொழிற்பெயர்; உற்ருர்-உறு+ஆர்; உறு - பகுதி; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி; பகுதியில் ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று.

24. தொழும்பனுர் - அடியவராகிய நாயனுர்; அருள்க - வியங்கோள் வினைமுற்று.

25. மாலயற்கு - திருமாலுக்கும் பிரமனுக்கும்; ஏலம் - நறுமணம். வார் - நீண்ட; அரிய நாதன் - பெயரெச்சத் தொடர்; மாலயற்கு - உம்மைத்தொகை.

26. அணங்கு - மனைவி; இருநிதிக்கிழவன் - குபேரன்; இருப்பீராம் - வாழ்வீராக; அன்பர் பூசை - அன்பர்க்குச் செய்யும் பூசை; நான்கன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வினாக்கள்

1. பெரிய புராணம் - நூலைப்பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் குறிப்பெழுதுக.
2. இளையான் குடி மாற நாயனாரது வாழ்க்கைச் சிறப்பினையும் அவர் சிவனடியார்க்குத் தொண்டு செய்து வந்த முறையினையும் புலப்படுத்துக.
3. சிவபெருமான் நாயனாரது அன்பை எங்ஙனம் வெளிப்படுத்தினார் ?
4. இளையான் குடி மாற நாயனார் சிவபெருமானுக்கு அமுது செய்வித்த வகையை 20 வரிகளில் எழுதுக.
5. சிவபெருமான் நாயனார்க்கு எவ்வாறு அருள் செய்தார் ?
6. பின்வரும் உவமைகளைப் பொருளொடு பொருத்துக:-
   1. கருகு மையிருளின் கணம் கட்டுவிட்டு உருகுகின்றது போல்.
   2. பாசப்பழி முதல் பறிப்பார்போல.
7. பின்வருவனவற்றிற்கு இடஞ்சுட்டி விளக்குக :
   1. போதும் வைகிற்றுப் போமிடம் வேறில்லை.
   2. இணையிலாதவரை ஈண்ட அமுது செய்விப்போம்.

பயிற்சி

1. பின் வரும் தொடர்களில் அமைந்துள்ள கதைக் குறிப்புக்களைப் படித்தறிக.
   1. நீரின் மல்கிய வேணியார்
   2. ஆரம் என்பு புனைந்த ஐயர்
   3. ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர்
   4. இமக் குலக் கொடி பாகர்.
2. பின்வரும் தொடர்களைப் பிரித்து எழுதுக.

   1. நற்குலம். 2. எண்தோள். 3. நாடொறும். 4. மாறி திருப்பணி. 5. இன்னமுது. 6. செழுந்திரு.

5. வில்லிபுத்தூரார் பாரதம்

வாசுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கம்

நூற்குறிப்பு

இது வில்லிபுத்தூரார் என்னும் புலவரால் இயற்றப்பட்ட பாரதம். ஆகையால் இது வில்லிபாரதம் எனப்பட்டது. தமிழில் பெருந்தேவனார் பாரதம், பாரத வெண்பா, நல்லாப் பிள்ளை பாரதம் என்னும் வேறு பாரத நூல்களும் உண்டு. பாரதம் முதன் முதலில் வேதவியாசரால் வடமொழியில் இயற்றப்பட்டது.

ஆசிரியர் வரலாறு

பெயர்: வில்லிபுத்தூரார்.

பெயர்க் காரணம்: இவர் தந்தையார், வில்லிபுத்தூ ராழ்வார் என்னும் மறு பெயரையுடைய பெரியாழ்வாரிடத்தில் கொண்ட அன்பு காரணமாக இவருக்கு இப்பெயர் இடப் பட்டது.

தந்தையார்: வீரராகவாச்சாரியார்.

குலம்: வைணவ அந்தணர்.

ஊர்: திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூர்.

புதல்வர்: வரந்தருவார்.

ஆதரித்தவர்: வரபதியாட்கொண்டான் (வக்கபாகை யின் சிற்றரசன்).

காலம்: கி. பி 15 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

ஆசிரியர் பெருமைகள்: இவர் சந்தக் கவிதைகள் பாடு வதில் வல்லவர். இவர் பாடல்கள் சொல்லழகும், பொருள ழகும், தொடையழகும், நடையழகும் வாய்ந்தவை. இவர், தம் காலத்துப் போலிப் புலவர்களை வென்று அவர்கள் காதுகளைக் குடைந்து தண்டித்ததாகக் கூறப்படுகிறது.

பாடப்பகுதி

வசுதேவரது குமாரனாகிய கண்ணபிரானை, நிகழப் போகும் பாரதப் போருக்குத் தத்தமக்குத் துணையாக ஆகும் படி துரியோதனனும் அருச்சுனனும் துவாரகைக்குச் சென்று அழைத்த வரலாற்றைக் கூறும் பகுதி. வாசுதேவன் - வசு

தேவரது குமாரன் ; இது திருமாலின் திருநாமங்களுள் ஒன்று. இச்சருக்கம் வில்லிபாரதத்தின் ஐந்தாவது பகுதியான உத்தியோக பருவத்தில் இரண்டாவது சருக்கமாகும்.

அருஞ்சொற் பொருள்

1. அடைவினில்-முறையே; வளர்மதில்-உயர்ந்தோங்கிய மதில்களையுடைய; துவரை-துவாரகை என்பதன் மரூஉ; எங்கெங்கும்-அடுக்குத் தொடர் பன்மை பற்றி வந்தது.

2. வியன்-விசாலமான; குடுமி-சிகரம்; காண்டகு-காண்+தகு - காணுதற்குத் தக்க; பதாகை ஆடை, கொடிச் சீலைகள்; எழிலி-மேகம்; போன்ற - ஒத்த; இது தற்குறிப்பேற்றவணி; எழிலி வண்ணன் - உவமைத் தொகை; அல்லால் - எதிர்மறை வினையெச்சம்.

3. அந்தன் மா மதலை-குருடனுகிய திருதராட்டிரனது மூத்த புதல்வனுகிய துரியோதனன்; சந்திரன் ஒடுங்கி நிற்ப-சந்திரகலை குறைந்து நிற்க; தபனனே சரிக்கும் ஆறு - சூரிய கலையே மிகுதியாக உலாவும் படி; மாமதலை - உரிச்சொல் தொடர்; அழைமின்-ஏவல் பன்மை வினைமுற்று.

4. அனிகம் நிற்ப - வாகனம் நிற்க; உற்பலம் - கருங்குவளை; சற்பம் - சர்ப்பம் என்னுஞ் சொல் எதுகை நோக்கி நின்றது; பள்ளி உணர்தரு காறும்-உறக்கத்தினின்றும் விழித்தெழும் வரை.

5. பந்தனை அகற்றும்-பற்றுக்களை அழிக்கும்; வான் துயில் - அறிதுயில்; கடிய - குறிப்புப் பெயரெச்சம்; வந்திலன் - வா(வ)+த்(ந்)+த்+இல்+அன்; வா-பகுதி, வ எனக் குறைந்து நின்றது; த் - சந்தி; த் - ந் ஆனது விகாரம்; த்-இறந்தகால இடைநிலை; இல் - எதிர்மறை இடைநிலை; அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

6. நின்றவன் - நின்ற அருச்சுனன்; இருந்த வேந்தன்-வீற்றிருந்த துரியோதனனது; நேமி-சக்கரம்; உரம்-மார்பு; புல்வி - தழுவி; புல்வி - புல்லு+இ; புல்லு-பகுதி; இ - வினையெச்ச விகுதி, இறந்தகாலம் காட்டியது; வரவு - தொழிற் பெயர்.

7. வாசம் மரு - மிக்க மணத்தையுடைய; ஆறு - காரியம்; பொருவு - ஒப்பு; செரு - போர்; இயம்புதிர் - இயம்பு+த்+இர்; இயம்பு - பகுதி; த் - எழுத்துப்பேறு; இர் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி.

8. அமர் - போர்; உதிட்டிரன் - தருமபுத்திரன்; விழிக்கு இலக்கு ஆனான் - என் கண்ணுக்குத் தென்பட்டான்; பற்றற - ஆசை நீங்கும்படி; செய்வான் - வானீற்று எதிர்கால வினையெச்சம்.

9. பன்னகம் - பாம்பு; துவசம் - கொடி; நேர்ந்து - இசைந்து; ஆண்மை - வீரச்செயல்; அறைதி - ஏவல் ஒருமை வினைமுற்று; முகில் உவமையாகு பெயர்; அடுபடை - வினைத்தொகை.

10. ஆழி - சக்கரப்படை; வரிசிலை - கட்டமைந்த வில்; வாங்கி - வளைத்து; பூதலம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை; துமிப்பன் - தன்மை ஒருமை எதிர் கால வினைமுற்று.

11. அடர்சிலை - போர் செய்யும் வில்; அமலன் - குற்ற மற்ற கண்ணன்; மிடை - நெருங்கிய; அமர் - போர்; நடை - தொழிற் பெயர்.

12. தாலகேது - பனைக்கொடி; எம்முன் - எமது தமையன்; யாதவர் - யதுவின்வமிசத்தோர் - தத்திதாந்த நாமம்.

13. மதுர வாய்மை - இன்சொற்கள்; வினயம் - சூழ்ச்சி; வருவன் - வா(வரு)+வ்+அன்; வா - பகுதி, வரு எனத் திரிந்து நின்றது; வ் - எதிர்கால இடைநிலை; அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

14. கட்டுரை - உறுதிமொழி; சங்கம் வண்ணன் - பல ராமன்; வருக - வியங்கோள் வினைமுற்று; வரு கென்றோதி - வருக+என்று+ஓதி.

15. தேறிய - மனந்தெளிவுற்ற; ஆறு இரு நாமத்தோன் - பன்னிரண்டு திருநாமங்களையுடைய கண்ணபிரான்; (அவையாவன : கேசவன், நாராயணன். மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பன). ஐயிரு நாமத்தோன் - பத்துப் பெயர்களையுடைய அருச்சுனன் (அவை யாவன : பார்த்தன், அருச்சுனன், கரியோன்,

விசயன், பாகசாதனி, சவ்விய சாசி, பற்குணன், தனஞ்செயன், கிரீடி, சுவேதவாகனன், என்பன); இருக்கை - தொழிலாகு பெயராய் இருப்பிடத்தை உணர்த்திற்று.

வினக்கள்

1. வில்லிபாரதம்—நூற்குறிப்பும் ஆசிரியர் குறிப்பும் எழுதுக.
2. துரியோதனன் தற்பெருமையுடையவன் என்பதை வில்லிபுத்தூரார் எங்ஙனம் புலப்படுத்துகிருர்?
3. நீ போரில் துணையாக வேண்டும் என்ற துரியோதனனுக்குக் கண்ணபிரான் கூறியதென்ன?
4. இப்படலச் செய்தியை 20 வரிகளில் சுருக்கி எழுதுக.
5. மருது போழ்ந்திட்ட செங்கண் மாதவன்—இத் தொடரில் அமைந்துள்ள வரலாற்றைத் தெரிவிக்க.
6. நிகழிடங்காட்டிப் பொருளை விளக்குக:-

   (1) மன்றலந் தொடையல் மார்பா வரவெமக்குரை செயாதென்

   (2) என்கை வரிசிலை குழையவாங்கி மணித்தலை துமிப்பன்

   (3) எண்ணருந் தொகைகொள் சேனை யாதவ குமரரோடே அண்ணலே வருக.
7. தற்குறிப்பேற்ற அணியென்ருல் என்ன? இப்பாடப் பகுதியிலிருந்து உதாரணந் தந்து விளக்குக.

6. மனேன்மணீயம்

நாஞ்சில் நாட்டு வளம்

நூற் குறிப்பு

சீவகன் என்னும் பாண்டிய நாட்டு மன்னனின் மகளான மனேன்மணி என்பாளின் வரலாற்றைக் கூறும் நாடக நூலாகும் இது. மனேன்மணி என்னும் பெயர் சிறிது வேறுபட்டு மனேன்மணீயம் எனும் அவள் வரலாற்றைக் கூறும் நூலுக்குப் பெயராய் வந்துள்ளது. இந்நாடக நூல் ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு என்பவர் இயற்றியுள்ள 'இரகசிய வழி' என்னும் நூலை

அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. ஆதலால் இதனை வழிநூல் எனலாம். இந்நூல் சிறந்த கற்பனைகளையும், இயற்கை வருணனைகளையும், தத்துவப் பொருள்களையும் உலகியல் உண்மைகளையும் கொண்டு விளங்குகிறது.

ஆசிரியர் குறிப்பு

பெயர் : பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை M.A.

ஊர் : திருவிதாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழை.

பெற்றோர் : பெருமாள்பிள்ளை, மாடத்தியம்மாள்.

குலம் : வேளாளர். மதம் : சைவம்.

ஞானாசிரியர் : கோடக நல்லூர்ச் சுந்தரசுவாமிகள்.

அலுவல் : திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவப் பேராசிரியராய் விளங்கினார்.

இயற்றிய நூல்கள் : நூற்றொகை விளக்கம், திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி முதலின.

காலம் : கி. பி. 1855—1897.

பாடப்பகுதி

நாஞ்சில் நாடு என்பது திருவாங்கூர் நாட்டைச் சார்ந்த நீர்வளமும் நிலவளமும் மிகுந்த மருத நிலப்பகுதி. இது நன்செய் நாடு எனவும், நாஞ்சி நாடு எனவும் இக்காலத்து வழங்கப்படுகிறது. இப்பகுதி, இந்நாடக நூலின் இரண்டாம் அங்கம், முதற் களத்தில் உள்ளது. குடிலன் சீவக பாண்டிய னுக்கு நாஞ்சில் நாட்டின் வளத்தை எடுத்துக் கூறுவது.

அருஞ்சொற் பொருள்

அடிகள் 1—5. நன்செய் நாட்டில் மருதமும் நெய்தலும் மயங்கி யுள்ளமை

வஞ்சி நாடு - சேரநாடு; தேயம் - நாடு; அந்தமில்-அள வற்ற; மயங்கி - கலந்து பெருகி; புரையறு - குற்றமற்ற; செந்தமிழ் - செம்மை + தமிழ் - பண்புத் தொகை.

அடிகள் 6—10. குருகின்மீது நுளைச்சியர் குழை எறிதல்

புலர்-உலர்கின்ற; மழலை-இளமையான; ஓம்புபு-அதனை ஓட்டுவதற்காக; நுளைச்சியர் - நெய்தல் நிலப் பெண்டிர்; குழை-காதணி; தாது-மகரந்தப்பொடி; புறம்-முதுகு; இரும் -

கரிய; அலக்கண்-துன்பம்; ஓம்புபு-செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

அடிகள் 11—13. தாராவின் செயல் கண்டு ஆம்பல் சிரித்தல்

கேதகை-தாழை; தாரா - மருத நிலத்துத் தாராக் கோழி; கோங்கு - கோங்கமரம்; மலர்நிழல் - ஆறும் வேற்றுமைத் தொகை.

அடிகள் 14—16. பருந்து முத்தினை முட்டையென்று எடுத்துச் செல்லுதல்

பருந்தினம்-கழுகுக் கூட்டம்; வால்வளை-வெண்மையான சங்குகள்; ஓதிமம் - அன்னம்; அடம்பு - அடப்பங்கொடி; பருந்தினம் - ஆறும் வேற்றுமைத் தொகை.

அடிகள் 17—19. எருமை கரும்பு ஆலைப்புகையைக் கன்றெனக் கருதிப் பால் சொரிதல்

அடு - காய்ச்சுகின்ற; மண்ட - நெருங்கிப்பரவ; கூம்பிய-வாடிப்போன; அகல்-செல்கின்ற; காரா-எருமை; மண்ட, குளிர-'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்.

அடிகள் 20—22. ஆமை குங்குமச் சேற்றில் ஒளித்தல்

இழைத்திடும்-கொள்ளுகின்ற; சேறு-குழம்பு; அலமுகம்-உழும் கொழுநுனி; அலமரும்-துன்பமடைந்த; சேற்றிடை-சேறு + இடை; அலமா (அலமரு) + உம்; அலமா - பகுதி, அலமரு என விகாரப்பட்டது; உம் - பெயரெச்ச விகுதி.

அடிகள் 23—24. நெய்தல் பறைகேட்ட அன்றில் உறங்காதிருத்தல்

சினை - கிளை; மருது - மருத மரம்; கோள்பறை - பிடிப்பதற்கு இசைவாக அடிக்கப்படுகின்ற பறை; உறங்கா - உறங்கமாட்டா; நளிமீன் - உரிச்சொல் தொடர்; கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

அடிகள் 25—26. நெல்லின் தாள்களில் படகுகள் கட்டியிருத்தல்

வேய் - மூங்கில்; சாலி-நெற்பயிர்; பஃறி-ஓடம்; நிறை - வரிசை; என-உவம உருபு.

அடிகள் 27—28. மாரியின் நிலை

தப்பினும்-மாறுபட்டு வந்தாலும்; தவறு-வழுவுதல் செய்யாது; தவறா-தவறு + ஆ + ஆ; தவறு-பகுதி; ஆ-எதிர்மறை

இடைநிலை புணர்ந்து கெட்டது; ஆ-பலவின்பால் வினைமுற்று விகுதி.

அடிகள் 29—31. பாண்டி நாட்டின் சாரல்

கொண்மூ - மேகம்; அமிழ்தனை - மழை நீரை; மிடி - வறுமை; கொள்கலம் - வினைத்தொகை.

அடிகள் 32—38. நாஞ்சில் நாட்டின் நீர்வளம்

நன்னீர்ப் பெருக்கு - ஆற்று வெள்ளம்; முந்நீர் - கடல்; வாய்த்தலை-கால்வாய்களினிடத்தே; தொனிக்கும் - கேட்கும்; இறந்து - கடந்து; ஓ - மதகுநீர் தாங்கும் பலகை; முந்நீர் - மூன்று+நீர் - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

அடிகள் 39—52. பல்வகை ஒலிகளின் கற்பனை

திரணம் - புல்; பழனம் - வயல்; தூமுகை - தூய அரும்பு; தூமமில் - புகையில்லாத; கவடி - சோழி; அலவன் - நண்டு; துகிர் - பவளம்; புகர் - புகர்நிறம்; கம்புள் - சம்பங்கோழி; கனை - உரத்த; பொய்யாப்புள் - சலாங்குப் பறவை; உள்ளான் குருகு - மீன் கொத்திப்பறவை; குழீஇ - கூடி; அந்தி அங்காடி - மாலைக்கடை; ஆர்தரும்- நிரம்பியிருக்கும்; துகிர்க் கால் - உவமைத்தொகை; குழூஉ - இன்னிசை அளபெடை.

வினாக்கள்

1. நன்செய் நாட்டில் மருதத்திணையும் நெய்தல்திணையும் மயங்கியுள்ள நிலையை விவரிக்க
2. நன்செய் நாட்டின் மழைவளம் எவ்வாறு புனைந்து கூறப்பட்டுள்ளது ?
3. நன்செய் நாட்டின் நீர்வளச் சிறப்பைக் கூறுக.
4. அந்தி அங்காடி எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
5. பிரித்து எழுது: நுண்தாது; சேற்றிடை; நன்னீர்; கோட்பறை; நானிறம்.

7. பாஞ்சாலி சபதம்

விதுரன் தூது செல்லுதல்

நூற் குறிப்பு

கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ள பாடல்களின் தொகுதி, பாரதியார் பாடல் என வழங்கப்படுகிறது. அதில்

ஒரு பகுதி பாஞ்சாலி சபதம் ஆகும். பாஞ்சாலியினது சபதம் எனப் பொருள்பட்டு சபதத்தை உணர்த்தும் நூலுக்கு ஆகிவந்தது. பாஞ்சால தேசத்து அரசன் பாஞ்சாலன் எனப்பட்டான். அவன் மகள் பாஞ்சாலி.

ஆசிரியர் குறிப்பு

நாட்டு வாழ்த்துப் பாடலில் கண்ட குறிப்புக்களைக் காண்க.

பாடப்பகுதி

திருதராஷ்டிரன் மக்கள் துரியோதனன் முதலிய நூற்றுவர்க்கும் கௌரவர் என்று பெயர். பாண்டுவின் மக்கள், தரும புத்திரன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற ஐவர்க்கும் பாண்டவர் என்று பெயர். இளமை முதலே கௌரவர் பாண்டவரிடம் பொறாமை கொண்டிருந்தனர். தரும புத்திரர் இந்திரப் பிரத்தத்தில் இராசசூய யாகம் செய்தார். எல்லா அரசர்களும் காணிக்கைகள் செலுத்தித் தரும புத்திரரைப் பெருமைப் படுத்தினர். இதனால் துரியோதனனுக்குப் பொறாமை அதிகரித்தது. அவன் சகுனி என்ற தன் மாமனுடன் கூடி ஆலோசனை செய்தான். முடிவில் பாண்டவர்களைச் சூதாட்டத்திற்கு அழைப்பதென்று முடிவு செய்தான், பிறகு திருதராட்டிரனிடம் தன் கருத்தைத் தெரிவித்தான். அவனுக்கு இதில் விருப்பமில்லை; என்றாலும் துரியோதனனுடைய வற்புறுத்தலின் பேரில் இணங்கினான். தன் தம்பியாகிய விதுரனை அனுப்பி பாண்டவர்களை அழைத்து வரச் செய்தான்.

அருஞ்சொற் பொருள்

விதுரனை வரவேற்றல்

1. செவியுற்று - கேள்விப்பட்டு; வீறு - பெருமை; சதுரங்கசேனை - நால்வகைச் சேனை; ஏந்தல் - பெருமையிற் சிறந்தோன்; பதமலர் - உருவகம்; குசலங்கள் பேசி - நலம் விசாரித்து; மதுரமொழி - உவமைத்தொகை.

2. கோமகன் - விதுரன்; வெம்மை + திறல் - வெந்திறல்; துருபதன் செல்வம் - திரௌபதி; வெள்கி - நாணி; மந்திரம் - ஆலோசனை; நின்றாள் - நில்(ன்) + ற் + ஆள்; நில் - பகுதி; ல், ன் ஆனது விகாரம்; ற் - இறந்தகால இடைநிலை; ஆள் - பெண் பால் வினை முற்று விகுதி.

3. தையல் - திரௌபதி; அங்கம் - உடல்; ஐயன் - விதுரன்; உற்ற - உறு + அ; உறு - பகுதி; அ - பெயரெச்ச விகுதி; பகுதியில் ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று.

4. மைவரை - பசுமையான மலை; பூமகள் - பூமாதேவி; நும்மை - உங்களை; நித்தம் - நாள்தோறும்; வாழ்த்தி - வாழ்த்து + இ; வாழ்த்து - பகுதி; இ - வினையெச்ச விகுதி இறந்தகாலம் காட்டியது.

5. அத்திபுரம் - அஸ்தினபுரம்; பெரு மண்டபம் - சபா மண்டபம்; எழில் - அழகு மிக்க; சமைத்தனர் - அமைத்துள்ளனர்; அங்கதன் - அங்கு + அதன்; கேளீர் - கேள் + ஈர்; கேள் - பகுதி; ஈர் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி; தம்பியர் - கௌரவர்.

6. வேள்வி - இராஜசூய யாகம்; மங்கை - திரௌபதி; நாயகன் - திருதராட்டிரன்; கேள்வி - கல்வி கேள்விகளில் சிறந்த; மிதிலாதிபன் - ஜனகன்; கேடற்ற - கெடுதியல்லாத; கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; இல்லை - எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று.

7. மக்காள் - விளிவேற்றுமை; தன்மை இழந்த - பண்பாடற்ற; சுயோதன மூடன் - துரியோதனன்; மந்திரம் - சூழ்ச்சி; வன்மம் - தீராப்பகை; அறிவித்தேன் - தன்மை ஒருமை இறந்தகால வினைமுற்று.

தருமபுத்திரன் பதில்

8. இயம்ப - சொல்ல; மன்று புனைந்தது - சபா மண்டபம் கட்டியது; உளைகின்றது - வருத்துகின்றது; ஐயம் - சந்தேகம்; அரிது - குறிப்பு வினைமுற்று; நம்பல் - தொழிற்பெயர்.

9. சதி - துரோகம்; அறியாயோ - அறிவாய்; சொல்லுதி - சொல்வாயாக; சூழ்ச்சி - உபாயம்; தெளிவெய்த - தெளிவு + எய்த.

வினாக்கள்

1. பாஞ்சாலி சபதம் நூற்குறிப்பும் ஆசிரியர் குறிப்பும் வரைக.

2. பாண்டவர்கள் விதுரனை எவ்வாறு வரவேற்றனர்?

3. விதுரன் பாண்டவர்களை அழைத்து யாது கூறினன் ?

4. தருமபுத்திரன் கூறிய பதிலுரை யாது ?

5. நிகழிடங்காட்டி விளக்குக :—

   1. வந்து விருந்து களித்திட நும்மை
      வாழ்த்தி அழைத்தனன் என்னரு மக்காள் !

   2. நம்பல் அரிது சுயோதனன் தன்னை.

   3. வெல்லக் கடவர் எவரென்ற போதும்
      வேந்தர்கள் சூதை விரும்பிடலாமோ ?

6. உறுப்பிலக்கணம் கூறு :—

   சேர்ந்தார், கண்டு, கொண்ட, அறிவித்தேன்.

பயிற்சி

1. பழங்காலச் செய்யுட்களுக்கும் பாரதியார் பாடல்களுக்கும் உள்ள வேறுபாடுகளை ஆராய்க.

2. பாஞ்சாலி சபதம் நூல் முழுமையும் படித்தறிக.

IV பல்சுவைப் பகுதி

1. வருணனை

கம்பராமாயணம்–மருத நிலவளம்

அருஞ்சொற் பொருள்

நானிலங்களுள் ஒன்ருகிய மருத நிலத்தின் இயற்கை எழிலைப் பற்றிய மூன்று பாடல்கள் கொடுக்கப் பட்டுள்ளன. சங்க முதலியவை நீர் முதலியவற்றுள் தங்கியிருத்தல்.

மேதி - எருமைகள்; தார் - மாலை; செய்யாள் - இலக்குமி; தூரிடை - புதர்களில்; போர் - நெற்போர்; தோகை - மயில்கள்; பொழில் - பூஞ்சோலை; உறங்கும் - செய்யுமென் முற்று.

தேனாறு

பலவகைத் தேன்கள்; கரும்பின் தேன் - கருப்பஞ் சாறு; பாளைத்தேன் - தென்னங்கள்; கனியின் தேன் - பழச் சாறு; வரம்பு - எல்லை; வங்கம் - அலை; வேலை - கடல்; வங்கவேலை - இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகை.

பண்ணை

வயலின் வருணனை: உண்ட - போன்ற; மால் உண்ட - பெருமை பொருந்திய; மழலைப் பிள்ளை - இளங்குஞ்சு; உள்ளி- நினைத்து; நளினப் பள்ளி - உருவகம்.

பெரிய புராணம்—நாட்டுவளம்

பெரிய புராண வரலாற்றைத் தொடர் நிலைப் பகுதியில் காண்க.

கா - சோலை; மாடு - பக்கம்; வளை - சங்குகள்; கோடு- கரைகள்; நீர்நாடு - சோழநாடு; கழைக் கரும்பு - இரு பெய ரொட்டுப் பண்புத் தொகை.

ஈங்கோய் எழுபது - வண்டும் மந்தியும்

ஈங்கோய்மலை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலையை அடுத்துக் காவிரியின் வடகரையில் உள்ளது. இதனை எழுதியவர் நக்கீர தேவர். இந்நூல் பதினோராந் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது.

வழகு - மென்மை; முது மந்தி - பெரிய குரங்கு; பழகி - பலமுறை; திங்கள் கொழுந்து - பிறைச் சந்திரன்; எழுந் தெழுந்து - அடுக்குத் தொடர்.

வினாக்கள்

1. கம்பர் மருத நிலத்தின் இயற்கை எழிலைக் கற்பனை செய்து கூறியவாறு வரைக.
2. மருத நிலத்திலிருந்து தேனாறு கடலிற் பாய்தலின் எழில் எவ்வாறு புனைந்துரைக்கப் பட்டுள்ளது?
3. பண்ணையின் இயற்கை எழிலைக் கம்பர் எவ்வாறு புனைந்துரைத்துள்ளார்?
4. சேக்கிழார் நீர் நாட்டின் இயற்கை எழிலை எங்ஙனம் சிறப்பித்துக் கூறுகிறார்?
5. ஈங்கோய் மலையில் மந்தி கை நெரித்தற்குக் காரணமாக ஆசிரியர் கூறுவது யாது?

2. சீட்டுக் கவி

நூற் குறிப்பும், ஆசிரியர் குறிப்பும்

கடிதமாக அமைந்த பாடலுக்குச் சீட்டுக் கவி என்று பெயர்.

ஆசிரியர் : அந்தகக் கவி வீரராகவ முதலியார்.

ஊர் : பூதூர். தொண்டைநாட்டுக் காஞ்சீபுரத்தை அடுத்துள்ளது.

தந்தையார் : வடுகநாத முதலியார்.

காலம் : கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இவர் பிறவிக் குருடர். தமது முதுகிலேயே எழுத்துக்களை எழுதுவித்துக் கற்றவர். இச்சீட்டுக்கவி குலசேகரன் என்னும் அரசனுக்குக் குதிரை வேண்டி எழுதியனுப்பியது.

அருஞ்சொற்பொருள்

ஏடு - நூல்கள்; விரகன் - சமர்த்தன்; சேது - இராமேசுவரம்; சேடாதிபன் - ஆதிசேடன்; திரிபதகை - கங்கை குலத்தில் தோன்றிய; தென்பாலே - தெற்குப்பகுதி; புரந்து - காப்பாற்றி; தாகம் தீர்த்த - துன்பத்தை நீக்கிய; எதிர் கொண்டு - வரவேற்று; கந்தருவம் - இசைப்பண்; கந்துகம் - பந்து; கோணம் - வாள்; கொக்கு - குதிரை; கோடை - குதிரை; குந்தம்-குதிரை; எழுதாது - எதிர்மறை வினையெச்சம்; காண்க - வியங்கோள் வினைமுற்று.

வினாக்கள்

1. வீரராகவ முதலியார் குதிரை வேண்டுமென்று எழுதியனுப்பிய செய்யுளின் பொருளையும் அதில் அமைந்த நயத்தையும் விளக்குக.

பயிற்சி

1. வீரராகவ முதலியாரின் மற்ற நூல்களையும் படித்துணர்க.
2. குதிரைக்கு அமைந்த வேறு பெயர்களைத் தொகுத்தெழுதுக.

3. சிலேடை

1. பாம்பும் எலுமிச்சம் பழமும்

காளமேகப் புலவர் திருமலைராய மன்னன் அவைக்களத்திற்குச் சென்றிருந்தபோது பாடியது. இவர் கும்பகோணத்தை அடுத்த நந்திக் கிராமத்தில் அந்தணர் குடியில் பிறந்தவர். இவர் வசைக்கவி பாடுவதில் வல்லவர். காலம்: கி. பி. 15 ஆம் நூற்றாண்டு. திருவானைக்கா உலா, சித்திர மடல் முதலிய நூல்களும், தனிப் பாடல்கள் பலவும் இவரால் பாடப் பெற்றுள்ளன.

பாம்பும் எலுமிச்சம் பழமாகும்; எவ்வாறெனில்: விடம் - விஷம், இடம்; பித்தர் - சிவபெருமான்; அரி - காற்று; பித்தர் - பித்துக்கொண்டவர்; அரியுண்ணும் - அரியப்படும். முன் இரண்டு அடிகளில் உள்ள சொற்கள் இருபொருள் படும்படி அமைந்துள்ளன. பெரிய+இடம், பெரிய+விடம்.

2. பாணனும் விறலியும்

அந்தகக் கவி வீரராகவ முதலியார் இராமன் என்னும் பிரபுவைப் பாடி யானைப் பரிசில் பெற்றுவந்தார். அதை இக் கவியில் ஒரு பாணனுக்கும் அவன் மனைவிக்குமிடையே நிகழ்ந்த உரையாடல் போல அமைத்துள்ளார்.

பாணி - பாணன் மனைவி; இம்பர் - இவ்வுலகம்; வான் - வானுலகம்; களபம் - சந்தனம்; வேழம்-கரும்பு; பகடு - எருது; கம்பமா - கம்பு தானியத்தின் மாவு; மாதங்கம் - உரிச்சொற்றொடர்.

வினாக்கள்

1. காளமேகப் புலவர் பாம்புக்கும் எலுமிச்சம் பழத் திற்கும் இரட்டுற மொழிதலாகக் கூறியுள்ள நயத் தைப் புலப்படுத்துக.
2. பாணனுக்கும் விறலிக்கும் இடையே நடந்த உரை யாடலிற் கண்ட சொல் நயத்தைப் புலப்படுத்துக.

4. சிறு பிரபந்தம்

திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம்

அம்மானை

திருப்பாதிரிப் புலியூரில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது பாடப்பட்ட கலம்பகமாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. திருப்பாதிரிப்புலியூர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊராகும். கலம்பகமாவது தமிழில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்ற பதினெட்டு வகையான துறைகளும் அமைய, நால் வகைப் பாக்களும், பாவினங்களும் கலந்து வர அந்தாதித் தொடையாகப் பாடப்படும் நூலாகும்.

ஆசிரியர்: தொல்காப்பியத் தேவர். கி. பி. 16 ஆம் நூற்றாண்டினர்.

அருஞ்சொற்பொருள்

அம்மானை என்பது தமிழ் நாட்டில் பெண்கள் ஆடும் ஒரு வகை விளையாட்டு. மூன்று பெண்கள் அமர்ந்து ஆடுவர். அப்படி ஆடும்போது பாடிக்கொண்டே விளையாடுதல் வழக்கம்.

திறம் - இயல்பு; மறை - வேதம்; துணிந்தில - முடிவாகக் கூறவில்லை; தோன்றாத் துணை என்பது இறைவன் பெயர். கன்னிவனம் என்பது அவ்வூரின் பெயர். காணார் — காண் + ஆ + ஆர்; காண் — பகுதி; ஆ — எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது; ஆர் — பலர்பால் வினைமுற்று விகுதி.

மறம்

மறக்குடியில் பிறந்த பெண் ஒருத்தியை மணக்க விரும்பி ஓர் அரசன் மணம் பேசத் தன் தூதுவர்களை அனுப்ப, அப் பெண்ணின் தந்தையாகிய மறவன் அரசர்க்கு மகளைக் கொடுக்க இசையாமல் அத்தூதுவரை நோக்கித் தன் வீரம் தோன்றக் கூறுவது மறம் என்னும் துறையாம்.

அருஞ்சொற் பொருள்

மறம்-வீரம்; சருகு-ஓலை; திருமுகம்-மண ஓலை; விழி-கண்கள்; அவனி - உலகு; கன்னிகாப்பு - திருப்பாதிரிப் புலியூரில் எழுந்தருளியுள்ள; கருவேடன் மகன் - முருகன்; பெருவேடன் பெண் - வள்ளி; சிலை - வில்; கயல்விழி, வாள்விழி - உவமைத் தொகைகள்; குயில் — உவமையாகு பெயர்; அறிந்திலன் — அறி + த் (ந்) + த் + இல் + அன்; அறி - பகுதி; த் - சந்தி; த் - ந் ஆனது விகாரம்; த் - இறந்தகால இடைநிலை; இல் - எதிர்மறை இடைநிலை; அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

வினாக்கள்

1. அம்மானை ஆடும் பெண்கள் இறைவனின் எத் தன்மைகளைப் பாராட்டுகின்றனர்?
2. மறவர் குடிப் பிறந்த மகளை மணம் பேச வந்த தூதுவனிடம் மறவர் தலைவன் கூறிய மொழிகள் யாவை?

5. வழிபாட்டுப் பாடல்கள்

தேவாரம்—திருநாவுக்கரசர்

இவர் நடுநாட்டில் திருவாமூரில் வேளாளர் மரபில் புகழனாருக்கு மாதினியாரிடம் தோன்றியவர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருள்நீக்கியார். இறைவன் அளித்த பெயர் நாவுக்கரசு.

காலம்: கி. பி. ஏழாம் நூற்றாண்டு.

அருஞ்சொற் பொருள்

அத்தா - என் தந்தையே; ஆர்த்தாய் - பிணித்தாய்; பேதையேன் - அறிவில்லாதவன்; பிழைத்தனகள் - தவறுகள்; ஆர்த்தாய் - முன்னிலை ஒருமை இறந்தகால வினைமுற்று.

சீவகசிந்தாமணி

இச்செய்யுள் சீவகசிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்தில் உள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுள். இதனை இயற்றியவர் திருத்தக்கத் தேவர். இவர் துறவு பூண்டு சமண சமய நூல் பலவுங் கற்றுச் சீரிய சமண முனிவராய்த் திகழ்ந்தவர். இவரது காலம் கி. பி. 5 ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற் பொருள்

பயந்தோய் - தோற்றுவித்தவன்; அலர்பெய்மாரி - தேன் மாரி; நீதிநெறி - நல்வழி; காட்சி - ஞானம்; படுவோய் - படிந்திருப்பவன்; நவை - குற்றம்; பாதகமலம் - திருவடித் தாமரை—உருவகம்; பசையாப்பு - உலகப் பற்றாகிய தளை; பணியாய் - திருவருள் புரிவாயாக.

சீறாப் புராணம்

இச்செய்யுள் முகம்மது நபியின் வரலாற்றைக் கூறும் சீறாப் புராணம் என்னும் நூலில் உள்ளது. இந்நூலை இயற்றிய ஆசிரியர் உமறுப் புலவர். தந்தை—சேகு முதலியார். இவர் எட்டையபுர சமஸ்தான வித்துவானாக விளங்கினார். இவரை ஆதரித்தவர் கொடைவள்ளலாக விளங்கிய சீதக்காதியின் அமைச்சராகிய அப்துல் காசிம். காலம்: கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற் பொருள்

இதயஆசனம் - இதயமாகிய ஆசனம்; உறைந்து - பொருந்தி; மதிமறந்தவர் - அறிவிழந்தவராவர்; இன்ப துன்பம், பிறப்பிறப்பு - உம்மைத் தொகைகள்; மனத்தளவு - மனம் + அத்து + அளவு.

தேம்பாவணி

வாடாத பூமாலையைப் போன்ற பாமாலை. இந்நூல் ஒரு கிறித்தவக் காப்பியம். ஏசுநாதரின் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைக் கூறுவது.

ஆசிரியர்: வீரமாமுனிவர்.

இயற்பெயர்: ஜோசப் பெஸ்கி.

மறுபெயர்: தைரியநாதர்.

சமயம்: கத்தோலிக்கக் கிறித்துவம்.

பிறப்பிடம்: இத்தாலி.

காலம்: கி. பி. 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

சென்னை-600 008.
139700

அருஞ்சொற் பொருள்

பிறந்தாய் - நீ எங்கள் அருமை மகவாக அவதரித்துள்ளாய்; துறந்தாய் - போக்கிறாய்; சிறை - பிறவியாகிய சிறை; துகள் - பாவம்; உயர்வீடு - மோட்சம்; திறன் செய்து - வலிமையைக் காட்டி; தாய்தந்தை - உம்மைத்தொகை.

பெருமாள் திருமொழி

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய குலசேகரப் பெருமாள் அருளிய அருட்பாடல்களைக் கொண்ட பகுதியாதலின் இஃது பெருமாள் திருமொழி எனப்பட்டது. பெருமாள் என்பது குலசேகர ஆழ்வாரின் மறுபெயர். இஃது ஆழ்வார்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதல் ஆயிரத்திலிருந்து தொகுக்கப்பட்டது.

ஆசிரியர் : குலசேகரப்பெருமாள்.

தந்தை : திடவிரதன்.

ஊர் : திருவஞ்சிக்களம் (சேர நாட்டில் உள்ளது).

மரபு : அரசர்.

சமயம் : வைணவம்.

காலம் : கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

T3
031, 6(91)
N65

அருஞ்சொற் பொருள்

திருவரங்கம் - ஸ்ரீரங்கம்; இரிய - நீங்க; இமைக்கும் - பிரகாசிக்கின்ற; துத்தி - புள்ளி; பணங்கள் - படங்கள்; ஆர்ந்த - பெற்ற; அநந்தன் - ஆதிசேடன்; அணை - படுக்கை; மேவி - பொருந்தி; பொன்னி - காவிரி; திரை - அலை; கோமளம் - திருவரங்கநாதன்; என்று கொல் - என்று வாய்க்குமோ? திரைக்கை - உருவகம்; தெண்ணீர் - தெள் + நீர்.

வினாக்கள்

1. திருநாவுக்கரசர் சிவபெருமானது கருணைத் திறத்தை வியந்து கூறியவாறு வரைக.
2. திருத்தக்கதேவர் கூறும் இறைவனது இயல்புகளையும் அவன்பால் அவர் வேண்டுவதையும் வரைக.
3. இறைவனது இயல்புகளாக உமறுப் புலவர் கூறுவனவற்றை வரைக.
4. வீரமாமுனிவர் ஏசுநாதரை எவ்வாறு போற்றுகின்றார்?
5. திருமால் பள்ளிகொண்டுள்ள காட்சியைக் குலசேகரப் பெருமாள் எங்ஙனம் கூறியுள்ளார்?

———

RTR
890

KALAIMAGAL

SENTHAMIZH SOLAI

By
Vidwan M. NARAYANAVELU PILLAI
AND
G. ANGAMUTHU, B.A.,
Board High School, Irugur, (Coimbatore Dist.)

Publishers :
SOUTH INDIA PUBLISHING HOUSE
5, THAMBU CHETTY STREET, MADRAS-1

Copyright] [*Price Rs.* 2 -

Wrapper Printed at Super Power Press, Madras-1